2837

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL. V NO. 2 & 3

April 4th 1985

April, 8th –

D
V211, 31 N85
N85. 5.2 & 3
136431

30/85

வெளியீடு 26-10-1985

Issued 26—10—1985

2837

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 4, 1985 - தொகுதி V எண் 2

Thursday the 4th April 1985 - Volume V No. 2


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009,

Legislative Assembly Secretariat, Fort St. George,

Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்

Price Rs. 3-50 paise

D
V211,31'N85
N85.5.2 f3
138431

உள்ளடக்கம்

4—4—1985

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்
உடுக்குறியிட்ட வினாக்கள் 131—158

2. தகவல் கோரல்—
இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நடைபெறும் அனைத்துக் கட்சிக் கூட்ட விவரம். 158—159

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—
எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து. 159—169

4. அறிவிப்புகள்—
(அ) அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் தேர்தல் .. 169
(ஆ) பேரவை அலுவல் .. 241—242

5. கவன ஈர்ப்புகள்—
(அ) கோவை மாவட்டத்தில் பல ஆலைகள் மூடப்பெற்றுள்ளதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பெற்றுள்ளது .. 170—176
(ஆ) கோவை மாநகராட்சி விதித்துள்ள கூடுதல் தண்ணீர் வரி .. 176—181

6. வரவு-செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம்—(தொடர்ச்சி) 181—241
திரு. த. புஷ்பராசு 181—189
திரு. ஏ. பாலுச்சாமி 189—192
திரு. ப. பொன்னுரங்கம் 192—203
திரு. எம். அண்ணாதாசன் 203—209
திரு. தமிழ்மணி 209—213
திரு. சி. பழனிமுத்து 213—220
திரு. கு. சுப்பராயன் 220—225
திரு. எ. வச்சிரவேலு 226—230
திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் 232—235
திரு. க. நரசிம்மபல்லவன் 235—238
திரு. ஜி. கே. ஜெ. பாரதி 239—241

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 242—243

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### 1985, ஏப்ரல் 4, வியாழக்கிழமை.

### பங்குனி 22, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016.

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில். மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்"*

*தக்க வழியில் செய்யப்படாத முயற்சி பலர் துணையாக நின்று (அதை முடிக்குமாறு) காத்தபோதிலும் குறையாகி விடும்.*

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### நெல் கொள்முதலில் விவசாயிகள் ஊக்குவிப்பு.

*45—(* வினா எண் 51)*—**திரு. ந. சிவஞானம், திரு. இரா. தாமரைக்கனி :** *மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*நெல் கொள்முதல் நிலையத்தின் மூலமாக தமிழக விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு உரமாக ரூ. 15 வீதம் வழங்கியதில் டிசம்பர் முடிய மாநில அரசு வழங்கிய தொகை எவ்வளவு?*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** *தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல் வழங்கும் விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 பெறுமான உரம் வழங்குவதற்கென 1984-ம் வருடம் குறுவை பருவத்திற்கு இவ்வரசு மொத்தம் ரூ. 8 கோடி ஒதுக்கீடு செய்திருந்தது. 31–12–1984 முடிய ரூ. 7.51 கோடி மதிப்புள்ள உரம் பெறுவதற்கான கூப்பன் வழங்கப்பட்டு, ரூ. 7.31 மதிப்புள்ள உரம் வழங்கப்பட்டு விட்டது. உரம் பெறுவதற்கான காலம் 31–3–1985 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.*

**திரு. இரா. தாமரைக்கனி :** *பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் விலையை எவ்வளவு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று மத்திய அரசை நாம் கேட்டோம். மைய அரசு எவ்வளவு கொள்முதல் நிர்ணயம் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** *பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ரகத்திற்கு ரூ. 125.57 என்று நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டோம். அவர்கள் ரூ. 137 என்று நிர்ணயித்து இருக்கிறார்கள்.*

திரு. கி. வெங்கடாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையம் மூலமாக தமிழக விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றிற்கு ரூ. 15 வீதம் வழங்குவதை சிறிய மிகச் சிறிய விவசாயிகளும் பயன் அடைகின்ற விதத்தில் உரத்திற்கு பதிலாக பணமாக கொடுக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பணமாகக் கொடுக்கக்கூடாது என்று மைய அரசு தெரிவித்து இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே. கோதுமைக்கு கொள்முதலுக்கு எவ்வளவு விலை நிர்ணயம் செய்கிறது? அரிசிக்கு எவ்வளவு விலை நிர்ணயம் செய்கிறது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரிசியைவிட கோதுமைக்கு அதிகம். அதைப்பற்றிய தகவல் இப்போது இல்லை.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற போது 31—3—1985 வரைக்கும் உரத்திற்கான காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்கள். உரத்திற்குள்ள கூப்பன்களை விவசாயிகள் கையிலே வைத்து இருக்கிறார்களே, இப்போது விவசாயம் கிடையாது. ஆகவே, தண்ணீர் வந்தாலும் அதை உபயோகிப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா? மைய அரசையே சொல்லிக் கொண்டு இருக்காமல் இன்றுள்ள விலைவாசி ஏற்றத்தை கணக்கில் கொண்டு எதிர்காலத்தில், அடுத்த பருவத்தில் இந்த விலையை குவிண்டாலுக்கு ரூ. 200 என்று உணர்த்திக் கொடுப்பதற்கு தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசை நாம் சொல்வதற்கு காரணம், இதற்கு கொள்முதல் செய்வதற்கான கடனை ரிசர்வ் வங்கியிலிருந்து பெறுகிறோம். ரூ. 110 கோடி பெறுகிறோம். ஆகவே இதை நாமாகவே முடிவு செய்யக்கூடிய கட்டத்தில் நிச்சயமாக இல்லை. மைய அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு மேலே நாம் கடன் கேட்பது சரியில்லை. மைய அரசு கண்டித்து இருக்கிறது. ரிசர்வ் வங்கியிடம் நாங்கள் கடன் கேட்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் கொடுக்கப்படுகிறது. அது உண்மையா? அப்படியென்றால் ஏன் மற்ற மாவட்டங்களிலும் கொள்முதல் செய்கின்ற நெல்லுக்கு இந்த ஊக்குவிப்புத் தொகை கொடுக்க அரசாங்கம் முன்வரக்கூடாது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நாம் ஏகக் கொள்முதல் என்று சொல்லுகின்ற கட்டத்தில் மற்ற மாவட்டங்களிலிருந்து நெல்லை கொள்முதல் எடுக்கின்றோம். இப்போது எங்கெங்கே நெல்லை கொள்முதல் எடுக்கின்றோமோ அங்கெல்லாம் இதையெல்லாம் வழங்குகிறோம்.



திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு போர்வெல் டிரில்லர்களின் ஒரு நாள் வாடகை ரூ. 35-லிருந்து திடீரென்று ரூ. 250-க்கு உயர்த்தப்பட்டது அதிகம் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். குறைக்கப்படுமா? டெபாசிட் தொகை டிரில்லருக்கு ரூ. 800-லிருந்து ரூ 3,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. குறைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு தலைவர் பேரவைத் அவர்களே, விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய இடுபொருளாகக் கொடுக்கக் கூடியதை இப்போது விவசாயிகள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அதற்குப் பதிலாக ரொக்கமாகக் கொடுக்க அரசு முன்வருமா ? சென்ற ஆண்டு கொடுத்த அளவுக்கு மேல் உயர்த்தி 35 ரூபாயாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த சம்பாப் பருவத்திற்கும் கொடுக்கப்பட இருக்கிறது. அதற்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ரொக்கமாகக் கொடுப்பதிலே இருக்கிற சிக்கலைத்தான் ஏற்கெனவே சொன்னேன். ப்படிக் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு அறிவுறுத்தியிருக்கிறது.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த ஊக்க போனஸாகத் தருகிற பணத்தை விவசாயிகளுக்கு மானியமாகத் தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, உரம் என்பதே மானியமாகத்தான் தருகிறோம்.

திரு. செ. செம்மலை; தலைவர் அவர்களே, ஒரு பக்கம் நெல் கொள்முதலைக் கூடுதலாக்குவதற்கு நெல் உற்பத்திக்கு அதிக அளவிலே முயற்சிகளை மேற்கொண்டிருக்கிற அதே சமயத்திலே நெல் மட்டுமே விளையக் கூடிய விளை நிலங்களை, வீட்டு மனைகளாகப் பிரித்து விற்கப்படுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, அதுபற்றிக் கட்டுப்பாடு விதித்து ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை வெளியிட்டிருக்கிறார்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்; தலைவர் அவர்களே, நீலப்பச்சை பாசி என்ற தாவர உரத்தைத் தமிழக அரசு மிகச் சிறந்த முறையிலே பயன்படுத்தி வருகிறது. அதைக் கண்டுபிடித்த விஞ்ஞானி தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்தவர்தான் என்பது நமக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதாகும். எனவே அந்த நீலப் பச்சைப் பாசி உரத்தை இதுபோன்று இலவசமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, தேவைப்படுகிறபோது அரசு யோசிக்கும்.

திரு. எஸ். சிவராமன்; தலைவர் அவர்களே, நெல் குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் மதிப்புள்ள உரம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதோடு இன்றைய தினம் கள்ளக்குறிச்சி தாலுகாவிலே நெல் லெவி கொடுக்க வேண்டுமென்றால் தரமான நெல்லைக் கொடுக்க வேண்டும், இல்லையென்றால் திருப்பிவிடுகிறார்கள். அங்கே தரம் பார்க்கக் கூடியவர்கள் ஒரு மூடைக்கு 2 ரூபாய் கமிஷன் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இல்லையென்றால் ஈரப்பதமாக இருக்கிறது என்று சொல்லி மறுக்கிறார்கள். அது மட்டுமல்ல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக கொள்முதல் செய்து ஏற்றிச் செல்கிற நிலையில் லாரிகள் கொடுப்பதில்லை, வியாபாரிகளே லாரிகளில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி அவர்கள் எடுத்துச் சென்றால் அதற்கான வாடகையைக் கொடுப்பதில்லை. இதனால் நெல் கொடுப்பதற்கு விவசாயிகள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் குறைகளைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. பழனி ; தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு காவிரி நீர் பாய்கின்ற இடங்களிலே எல்லாம் ஆற்று நீரைப் பயன்படுத்துகின்ற இடங்களில் எல்லாம் 15 ரூபாய் போனஸ் வழங்குகிறார்கள். கிணற்று நீர் பயன்படுத்துகின்ற வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலே உள்ள விவசாயிகளுக்கு போனஸ் தொகை போதாது, ஆகவே மேலும் அதை 50 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே. அன்பழகன் ; தலைவர் அவர்களே, விவசாயிகள் வறட்சி, வெள்ளம் ஆகியவற்றினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதாலே அவர்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு கட்டுப்படியான விலை கொடுத்தாக வேண்டும். இதை இந்த அரசு ரிசர்வ் வங்கிக்கு எடுத்துரைத்து கட்டுப்படியான விலையைக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, மைய அரசினுடைய விலை நிர்ணயக் குழுவிடம் நாம் தொடர்ந்து இதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். என். இராமசாமி ; தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யக்கூடிய நெல் ஒன்றுக்குத்தான் விலை குறைவாக இருந்து வருகிறது. குவிண்டால் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் விலை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, நாட்டினுடைய உற்பத்திச் செலவு இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டால் 175 ரூபாய் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசை நாம் வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசு கொடுப்பதாக இல்லை.

திரு. மா. மணிமாறன் ; தலைவர் அவர்களே, மானியமாகக் கொடுக்கிற உரத்தினை இப்போது விவசாயிகள் வாங்கி வைத்திருக்கிறார்கள். பின்னாலே விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கம் மூலமாக கொடுக்கிற நேரத்திலே அவர்கள் உரத்தை வாங்கி செலவழிக்க முடியாத நிலைமை வரும். ஆகவே கூட்டுறவுச் சங்கம் மூலமாக கொடுக்கப்படுகிற பயிர்க் கடனை பின்னாலே பணமாகக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சரிடத்திலே அதைக் கேட்கலாம்.

(முற்பகல் 9—10)

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெல்லுக்கு விலை உயர்வு நிர்ணயிப்பது அதனுடைய உற்பத்தியின் செலவின் அளவைக் கொண்டுதான் விலை உயர்த்தப்படுகிறது என்ற ஒரு நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு, கோதுமைக்கு உற்பத்திச் செலவு குறைவாகவும், நெல்லுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகவும் இருக்கிற நேரத்தில், குறைவாக உற்பத்தி செலவு ஆகிற கோதுமைக்கு அதிகமான விலை நிர்ணயிப்பதும், அதிகமாக உற்பத்தி செலவு ஆகிற நெல்லுக்கு குறைவாக விலை நிர்ணயிப்பதுமாக இருக்கிறார்கள். இவைகளை எல்லாம் மனதில் வைத்து மீண்டும் மத்திய அரசை வற்புறுத்தி உற்பத்தி செலவினுடைய வகையில் விலையை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் உற்பத்திச் செலவை விட கோதுமை உற்பத்திச் செலவு குறைவுதான் என்பதை நாம் சுட்டிக்காட்டி

இருக்கிறோம். இருந்தாலும் கோதுமைக்கு கொடுக்கிற அளவுக்கு நெல்லுக்கு கொடுக்கவில்லை என்ற மனக் குறையை நாம் தெரிவித்து இருக்கிறோம். அதற்கு காரணம் என்ன என்று புரியவில்லை. கோதுமை ஒருவேளை வட நாட்டில் விளைகிறது என்பது காரணமாக இருக்கலாம்.

திரு சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் அளவில் உரமாக கொடுக்கிறார்கள். இப்போது நெல் பயிர்களில் ஏராளமான நோய்கள் தாக்கப்படுவதால், இதை மாற்ற பூச்சி மருந்து மற்ற மருந்துகள் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் வேறு வகையில் நாம் ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருக்கிறோம்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு 200 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று தமிழக அரசு பரிந்துரை சிபாரிசு செய்த பிறகும் இன்றைக்கு 137 ரூபாய் மற்றும் 15 ரூபாய் மட்டும் தான் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசிடம் மீண்டும் இதை நிர்ப்பந்தித்து இந்த நிலையை வற்புறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து அந்த விலை நிர்ணயக் குழுவிடம் நம்முடைய அரசின் சார்பில் கருத்துக்களைத் தெரிவிக்கிறோம். தொடர்ந்து வற்புறுத்துகிறோம். வேறு ஏதாவது வழியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதையும் பரிசீலிக்கலாம்.

திரு சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரத்திற்குப் பதிலாக பணமாகக் கொடுப்பதற்கு பதிலாக மற்ற விவசாய இடுபொருட்கள் கொடுக்கிற எண்ணம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரமே இடு பொருள் தான்.

திரு. ஆனந்த கிருஷ்ணா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமைக்கு குறைவாக உற்பத்திச் செலவு ஆனாலும் அதிகமாக அதற்கு விலை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கே பல மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், பஞ்சாபில் கூட அதிகமான அளவுக்கு நெல் உற்பத்தி ஆகிறது. அந்த மாநிலங்களோடு கலந்து மத்திய அரசு விலையை அதிகப்படுத்துவதற்கு தமிழக அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன் ?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பஞ்சாப் போன்ற மாநிலங்களில் நெல் என்பதை பணப் பயிராகத்தான் அவர்கள் பயிரிடுகிறார்கள். உணவுப் பயிர் என்ற வகையில் அதை கருதவில்லை. ஆகவே, நிச்சயமாக நமக்கு வட மாநிலங்கள் துணையாக வராது.

திரு எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நெல் உற்பத்தியை அதிகமாக நம்பியிருக்கிறது. நெல் கொள்முதல் விலையை அதிகமாக நீட்டித்து தரவேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை நீண்ட காலமாகக் கேட்டும் அது ஏற்காமல் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட மாநிலத்தில் விளைவதால் கோதுமைக்கு அதிக விலை கொடுக்கிறார்கள் என்ற எண்ணத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து நீண்ட காலமாக விவசாயத்துறையில் இந்த நெல்லை அந்த விவசாயிகள் அதிகமாக பயிரிடுகிறார்கள் அதிகமான விலை கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கை கொடுத்துக் கொண்டு இருந்தும் இது காறும் அதை ஏற்காமல் மறுப்பதன் அர்த்தம் என்ன? இவ்வளவு காலமாக கேட்டுக்கொண்டு இருக்கிற அந்த கோரிக்கையை இனி மேலாவது அதை கவனித்து நெல்லுக்கு அதிக விலை நிர்ணயம் செய்ய மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு தான் நாம் மாநில தன்னாட்சி என்பதை வற்புறுத்துகிறோம்.

திரு மு. ஜான் வின்சென்ட் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவிண்டாலுக்கு 15 ரூபாய் அதிகமாகக் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். அந்த விலை ஆற்றுப் பாசனத்தில் விளைவதற்கு கட்டுப்படியாகும். ஆனால் மோட்டார் பம்பு செட்டு வைத்து ஆயில் இன்ஜின் மூலமாக விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு இந்த 15 ரூபாய் கட்டுப்படியாகாமல் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் ரிபசீலனைச் செய்து கூடுதலாக கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்று நீரா. கிணற்று நீரா என்பது பிரச்சினை இல்லை. கொள்முதல் செய்வதற்கான நெல்லுக்குத் தான் கொடுக்கிறோம்.

### தஞ்சை மாவட்டத்தில் சம்பா தாளடியில் பூச்சி

46—(* வினா எண். 240)—திரு மா. மணிமாறன் ; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா தாளடி பூச்சியால் பாதிக்கப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனால் ஏற்பட்ட இழப்பு விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) பூச்சியால் பெரும் பாதிப்பு ஏதும் இல்லை. ஆனால் நெல் பயிரில் மஞ்சள் நிறம் படர்ந்து பயிர் பாதிக்கப்பட்டது.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் 24,000 ஏக்டேர் பரப்பில் மஞ்சள் நிறம் படர்ந்து பயிர் பாதிப்பு ஏற்பட்டது. அதில் 14,000 எக்டேரில் மஞ்சள் நிறம் மழை பெய்தவுடன் மறைந்து விட்டது. மீதமுள்ள 10,000 எக்டேரில் ஒரு எக்டேருக்கு சராசரியாக 1 மெ. டன் வரை விளைச்சல் இழப்பு ஏற்பட்டது.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, பாதிப்பு அதிகம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இன்றுவரையில் ஒரு நெல்கூட அறுவடை ஆகவில்லை. ஆகவே, கண்டு முதல் என்னவென்று முறையாக ஆய்வு செய்வதற்கு அரசு என்ன முறைகளைக் கையாண்டது? அரசுக்கு இப்படிப்பட்ட தவறான தகவலைத் தந்தவர்கள் யார்? இப்படி அரசுக்குத் தவறான தகவல்களைத் தந்து, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குத் தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்துவது நியாயம் தானா? எனவே, இதை மறுபரிசீலனை செய்து, வாய்தா போன்ற நிலையில் உள்ள கிஸ்திகளைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை போன்றவைகள் கொடுக்கின்ற விவரங்களின் அடிப்படையில்தான் தகவல்களைத் தெரிவிக்க முடியும். அந்த அடிப்படையில், அவர்கள் எடுத்த கணக்கின்படி தெரிவித்திருக்கிறார்கள். விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டு உதவி செய்வது, அரசு பல்வேறு நிவாரணப் பணி களைச் செய்வது போன்றவற்றிற்குச் சில விதிமுறைகள் இருக் கின்றன. அதற்கு உட்பட்டு நிவாரணம் வழங்குவதில் எந்த விதமான தடையும் இருக்காது.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, மஞ்சள் நோய் கண்டதன் காரணமாகக் குறுவைப் பட்டத்தில் மதுரை போன்ற மாவட்டங்களில் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கடுத்து தஞ்சை மாவட்டத்தில் சம்பா தாளடிப் பட்டங் களில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, அங்கே குறுவைப் பட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டபொழுது, அதை முன்னுதாரண மாகக் கொண்டு அந்தப் பாதிப்பிற்கான காரணங்களைக் கண்டு பிடிக்க, அதைப்பற்றி ஆய்வு செய்ய அரசு தவறி விட்டதா? இல்லையென்றால், இந்தப் புள்ளி விவரங்கள் தவறு என்பதை சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சொல்கின்ற நேரத்தில், அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய, மறு ஆய்வு செய்ய அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் தெரிவிக்கின்ற கருத்துக் களின் அடிப்படையிலே நாம் திரும்ப விளக்கம் கேட்பதற்கும், ஆய்வு செய்வதற்கும் தயாராக இருக்கிறோம். ஆனால் பெரும் பாதிப்பு இல்லை என்ற தகவலைத்தான் துறை வழங்கியிருக் கிறது. அதற்குரிய அளவிற்கு அவர்கள் பாதிக்கப்பட்டு இருக் கிறார்கள் என்று அரசுக்குத் தெரிவிக்கப்பட்டால் உரிய நிவாரண நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக மேற்கொள்ளும்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 24,000 எக்டேர் பரப்பில் பாதிப்பு ஏற்பட்டது என்று தகவல் வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். குறுவை அறுவடையைச் செய்து, அதிலிருந்து வருகின்ற வருமானம் தாளடிப் பயிருக்கே அதிகமாகச் செலவு ஆகிவிடுகின்றது. அப்படிச் செலவு செய்தும், தாளடிப் பயிர் இந்த ஆண்டு மஞ்சள் நோயினால் பெரும்பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதற்கு ஒரு காரணம் என்னவென்றால், 6 அணாவிற்குக் கீழே பாதிக்கப் பட்டவர்களுக்கே நிவாரணம் என்று ஒரு காலத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டுதான், இப்பொழுது உள்ள அதிகாரிகள் அந்தக் கணக்கின் அடிப் படையில் அரசுக்குக் கணக்கைக் கொடுத்துக்கொண்டிருக் கிறார்கள். எனவே, பழைய விதிகளை மாற்றி தற்போது பாதிக்கப்படும் விவசாயிகளைப் பொறுத்தவரையில், அரசே நேரடியாகப் பார்வையிட்டு, இப்படிப் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் இந்த ஆண்டிற்காவது அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கிஸ்தியைத் தள்ளுபடி செய் வதற்கும், வரக்கூடிய ஆண்டிற்கு அவர்களுக்குப் பூச்சி மருந்து களை இலவசமாகக் கொடுப்பதற்கும் மறுபரிசீலனை செய்து ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, வருவாய்த் துறையோடு கலந்து ஆலோசித்து முடிவு செய்யலாம்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள், 24,000 எக்டேர் பரப்பில் பாதிப்பு ஏற்பட்டது என்று தகவல் வந்திருப்பதாக, ஆனால், சம்பா தாளடி பட்டங்களில் ஏறக்குறைய நான்கைந்து இலட்சம் ஏக்கர்களில் பாதிப்பு ஏற்பட்டு, அதனால் மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் சொன்ன விவரத்தின் படியே பார்த்தாலும்கூட, ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 1 மெட்ரிக் டன் வரை விளைச்சல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் பெருமளவிற்குப் பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஒன்று, மதுரை மாவட்டத்திலே குறுவை யிலே பாதிப்பு ஏற்பட்டவுடன் தமிழகத்தில் உள்ள மற்ற இடங்களில் அந்த நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக் கையுடன் நடவடிக்கை எடுப்பதுடன், இப்பொழுது பாதிக்கப் பட்டு இருப்பவர்களுக்கு உரிய அளவிற்கு நிவாரணம் வழங்கு

வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, பாதிப்பைப் பற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து நிபுணர்களை வரவழைத்து அதுபற்றி என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம், எதிர்காலத்தில் வராமல் தடுக்க கட்டுப்பாடுகளைச் செய்யலாம் என்பது குறித்து துறை அளவில் மேற்கொண்டிருக்கிறோம். பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு உரிய நிவாரணத்தை எந்த வகையிலே வழங்கலாம் என்பது இந்தத் துறை மட்டுமே முடிவு செய்யப்படக்கூடியது அல்ல; அதை வருவாய்த் துறை, நிதித் துறை போன்றவைகளோடு கலந்து நிச்சயமாக முடிவு செய்யும். பாதிப்பு அதிகமாக இருக்கிறது என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி மறு விளக்கத்தை அரசு கேட்கும்.

(முற்பகல் 9-20)

**திரு. நே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மஞ்சள் நோய் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள விவசாயத்தைக் கூட தாக்கியிருக்கின்றது. எங்களுடைய மாவட்டத்தில் ஆற்று நீரைக் கொண்டு விவசாயம் செய்கின்ற வசதி இல்லை. நாங்கள் எல்லாம் மின்சார மோட்டாரை வைத்துத்தான் விவசாயம் செய்கிறோம். எனவே எங்களுடைய மாவட்டத்தில் இவ்வாறு இந்த நோயால் தாக்குதல் பயிர்களில் ஏற்பட்டுள்ளதால் இலவசமாக மருந்து தெளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே இந்த மஞ்சள் என்பது ஒரு நோயா அல்லது ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படக்கூடிய ஒன்றா என்பதைப் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே அதுபற்றிய முழு விவரமும் கண்டறிந்த பிறகு என்ன ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. க. பாரமலை:** பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் நோய் கண்ட இடங்களில் எல்லாம் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் கண்டுமுதல் மிகவும் குறைந்திருக்கின்றது. 20, 25 மூட்டை கிடைக்கக் கூடிய இடத்தில் 2 மூட்டைகள்தான் கிடைக்கின்ற நிலைமை இருக்கின்றது; அந்த அளவுக்கு மஞ்சள் நோய் கடுமையாகப் பாதித்திருக்கின்றது. அப்படிப்பட்ட இடங்களில் அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது. மேலும் அறுவடை நடந்த பிறகு பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிந்த இடங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி விரைவாக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க என்ன ஏற்பாடுகளை அரசு செய்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, நெல் ஆராய்ச்சி நிபுணர்களை வைத்து இதை ஏற்றவகையில் தடுக்க ஆலோசனைகளை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் மழை பெய்கின்றபோது இந்த மஞ்சள் பல இடங்களில் மறைந்துபோய் இருக்கின்றது. இது பற்றிய முழு விவரத்தையும் ஆராய்ந்து உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் இது மஞ்சள் நோய் என்று தெரியாத நிலையிலே இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அதாவது நெல் மணிகள் நன்றாகப் பிடித்திருக்கின்ற நிலையில் அந்த மணிகள் நன்றாக இருக்கின்றது என்று கருதிவிடுவதும் உண்டு. அப்படி அது மஞ்சள் நோய்தான் என்று தெரிந்து அதற்கு மருந்து அடித்தாலும் அதற்கு சரியான பலன் கிடைக்கவில்லை. இந்த பாதிப்பு ஏற்படுகின்ற போது 200 மூட்டை விளையக்கூடிய இடத்தில் 20 மூட்டை கூட கிடைக்காத அளவில் அத்தனை நெல் மணிகளும் சாவியாகி விடுகின்றது. இது பற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி என்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, கவனத்திற்கு வந்ததால்தான் அரசு முழு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்துக்களையும் ஆராய்ந்து அரசு உரிய நடவடிக்கையை எதிர்காலத்தில் மேற்கொள்ளும்.

**திரு. கு. சுப்பராயன்;** பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சிகளால் ஏற்படுகின்ற தாக்குதலுக்கு விவசாயிகள் ஒரு போதும் காரணமாவதில்லை. எனவே பூச்சிகளால் ஏற்படக் கூடிய தாக்குதலை ஈடுகட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காடாவது நஷ்டத்தை ஈடுகட்டக்கூடிய வகையில் விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சிகளால் ஏற்படுகின்ற தாக்குதலுக்கு அரசாங்கமும் காரணம் அல்ல. அது விவசாயத்திலே தொடர்ந்து ஏற்படக்கூடிய ஒன்று, அதாவது விவசாயத்திலே உரமிடுவது, தண்ணீர் பாய்ச்சுவது என்ற வகையில ஒரு கட்டம் பூச்சிமருந்து அடிப்பதுமாகும். அதிக அளவில் அதில் பாதிப்பு ஏற்படுகிற போது அரசு உரிய நிவாரண நடவடிக்கைகளை நிச்சயமாக மேற்கொள்ளும்.

திரு. ஆர். ஈஸ்வரன்: பேரவைத் தலைவர் அவர்களே விவசாயிகளுக்கு, மழை இல்லாததன் காரணத்தாலும், மின்சாரம் பற்றாக்குறையின் காரணத்தாலும் ஆயில் இன்ஜின் வைத்து விவசாயம் செய்பவர்களாக அவர்கள் இருப்பதன் காரணத்தாலும் டீசலைப் பாதி விலையில் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இது மஞ்சள் நோயைப்பற்றிய கேள்வியாகும்.

திரு. எஸ். என். இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர். 20 விவசாயிகளின் நெற்பயிர் இந்த மஞ்சள் நோயால் நெல்லை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நோய் காரணமாக ஏக்கர் ஒன்றுக்கு 20 மூட்டை வரவேண்டிய நெல் 4 மூட்டை 5 மூட்டைதான் வருகின்ற நிலை இருக்கின்றது. அதன் காரணத்தால் அவர்கள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்வதை ஓராண்டு நிறுத்தி வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றியெல்லாம் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே ஏற்கெனவே விரிவாக விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே நான் அதிலே தலையிட விரும்பவில்லை.

திரு. மு. இராசாங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மஞ்சள் நோயால் இதுவரையில் கண்டிராத அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கடந்த பிப்ரவரி 24, 25 மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிக்கை வெளியிடப்பட்டது. அது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு ஏதாவது பரிந்துரை செய்திருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அதுபற்றிய தகவல் இல்லை.

திரு எம். அண்ணாதாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகின்ற தஞ்சை மாவட்டத்திற்கு அருகாமையில்தான் திருச்சி மாவட்டம் வருகின்றது. அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதி அந்த பார்டரிலே இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். மஞ்சள் நோய் என்பதைப் பொறுத்தவரையில் நாங்கள் நேரடியாகப் பார்த்ததைச் சொல்கிறேன். பச்சை நிறத்தில் விட்டில் பூச்சி போன்று இருக்கின்றது. அதற்குரிய மருந்தைத் தெளித்தாலும் கூட அது சாக வழியில்லை. இதன் காரணத்தால் என்னுடைய தொகுதியில் விவசாயிகளுக்கு உற்பத்தி அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. எனவே அரசு நடவடிக்கை எடுக்கின்ற வகையில் வரி வசூல் செய்வதிலிருந்து அந்த விவசாயிகளுக்கு விதிவிலக்கு அளிப்பதோடு அரசுக்கு நெல் அளப்பதிலிருந்தும் விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது அண்ணாதாசன் தொகுதி பிரச்னை மட்டுமல்ல, பொதுவான பிரச்னை இது. ஆகவே உரிய வகையில் ஆழ்ந்து பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, நெற்பயிர்களுக்கு சமீப காலங்களில் இதுபோன்ற புதிய, புதிய வியாதிகள் வந்து விவசாயிகளை அதிகக் கஷ்டத்திற்கு உள்ளாக்குவதற்கு முக்கிய காரணம் அதிகமான அளவில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதுதான் என்ற ஒரு பொதுவான கருத்து விஞ்ஞானிகளிடையே அழுத்தமாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா? ஆகவே இரசாயன உரங்களின் உபயோகத்தைக் குறைத்து தாவர இயல் உரங்களை அதிகப்படுத்த அரசு ஏதாவது திட்டங்களை வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற ஆராய்ச்சிக் கருத்துக்கள் ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

திரு. எஸ். சிவராமன்; தலைவர் அவர்களே, இந்த மஞ்சள் நோய் பற்றி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டன. பொதுவாக இந்த மஞ்சள் நோய் வருவதற்கு அடிப்படைக் காரணம் பூச்சி மருந்து சரி இல்லை என்பது தான், என் வாதம். காரணம் என்னவென்றால் அந்த நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய சக்தி இந்த மருந்துக்குக் கிடையாது. இதுபோன்ற நிலைமை என் வயலிலும் இருந்தது. ஒரு ஏக்கருக்கு 40 மூட்டை கண்டுமுதல் இருக்க வேண்டியது நான்கு மூட்டை அளவிற்குத்தான் கண்டுமுதல் இருந்தது. ஆகவே பூச்சிக்கொல்லி மருந்து சரியாக இல்லை என்பதுதான் என் கருத்து. எனவே நல்ல தரமான மருந்தை ஒழுங்காக நிர்ணயிப்பதற்கு அமைச்சர் அவர்கள் சற்று கவனம் செலுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தற்போது முழுக்கவனத்தையும் செலுத்திக்கொண்டிருக்கிறோம். இதுபற்றி சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் இருக்கக்கூடிய பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு அனுப்பியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள அந்த ஆராய்ச்சிக் கருத்தையும் நாம விஞ்ஞானிகளுக்கு எடுத்துச் சொல்லி அதன் மூலம் அவர்கள் என்ன புதிய முடிவைத் தெரிவிக்கிறார்களோ அதையும் நாம் கவனித்து அதைச் செயல்படுத்தலாம்.

திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா: தலைவர் அவர்களே, எங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்த நோய் காரணமாக பெருவாரியான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி நிவாரணம் அளிக்கப்படவில்லை என்றால் அவர்களுக்கும் நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா? அதுமட்டுமல்ல. மாண்புமிகு

உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கேட்கிறபோது எல்லோருக்கும் நிவாரணம் அளிக்க முடியாது என்று சொன்னார்கள். உணவு உற்பத்திக்கு நாம் விவசாயிகளைத்தான் நம்பியிருக்கிறோம் ஆகவே பயிர்களுக்கு நோய் ஏற்படும்போது ஒரு 'இன்சென்டிவாக' அரசாங்கமே ஏதாவது நிவாரணம் கொடுத்து அல்லது நஷ்டயீடு கொடுத்து அதைச் சரிப்படுத்த முன்வர வேண்டும் என்ற யோசனையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற இந்தக் கருத்தின் அடிப்படையில் தான் விவசாயப் பெருமக்களுக்கு எந்தளவிற்கு சலுகைகள் வழங்க முடியுமோ அந்த அளவிற்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த மஞ்சள் நோய் பற்றிய முழுமையான விவரங்களை நாம் கண்டறிந்து இதில் பாதிப்பு எந்தளவிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்து நாம் நிவாரணம் செய்வதற்குரியவகையில் விதிகளுக்கு உட்பட்டிருந்தால் நிவாரணம் வழங்குவதில் எந்தவிதமான சிக்கலும் இருக்காது.

**திரு. செ. தங்கராசு:** தலைவர் அவர்களே, நெல் அதிகமாக உற்பத்தியாவது திருச்சி தஞ்சை மாவட்டங்களைவிட தென் ஆற்காடு மாவட்டத்தில்தான் அதிக அளவிற்கு உற்பத்தியாகிறது. ஆனால் தென்ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு போக விளைச்சலுக்குத் தகுந்தாற்போல்தான் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. தண்ணீர் தீர்வையைப் பொறுத்தவரையில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களைவிட தண்ணீர் தீர்வை அங்கு அதிகமாக இருக்கிறது என்று விவசாயிகள் என்னிடம் புகார் செய்கிறார்கள். ஆகவே திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் இருப்பதைப்போல் தென் ஆற்காடு மாவட்டத்திலும் தண்ணீர் தீர்வையை சரிசமமாக அல்லது அதேபோல் குறைக்கப்படுமா என அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்தை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. அங்கேயும் எந்தளவிற்கு சலுகைகள் செய்யவேண்டுமோ அந்தளவிற்கு செய்துகொண்டிருக்கிறோம். மின்துறை அமைச்சர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான். ஆகவே எந்தளவிற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ அதை நிச்சயமாக எடுப்போம். தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்குக் காட்டப்படுகிற சலுகை தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் காட்டப்படுவதற்கு உரிய வகையில் அரசு முயற்சியை மேற்கொள்ளும்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, எங்கள் நெல்லைப் பகுதியில் செந்தாழை என்ற நோய்வந்து 10% தான் விளைச்சல் ஏற்படுகிறது. அதுவும், இதுவும் ஒன்றா அல்லது அது வேறு இது வேறா? இது வேறு என்றால் அதைக் கவனித்து சர்க்கார் தனி நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே அது வேறு இது வேறு. இருந்தாலும் அதையும் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வி. தங்கவேலு:** தலைவர் அவர்களே, நெல்லுக்கு மஞ்சள் நோய் கண்டிருக்கிறது என்று நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த மஞ்சள் நோய் முதன்முதலாக தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படக்கூடிய நெல்லுக்கு எப்போது வந்தது? இந்த நோய்க்கு கண்டுபிடித்திருக்கக்கூடிய மருந்து கலப்படம் செய்யப்பட்ட மருந்தா அல்லது நல்ல மருந்தா என்பதை அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.30)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நோய் எப்போது வருகிறது என்று தெரியவில்லை. பாதிப்பு வருவதை அறிந்து அதிலே இருந்து விவசாய பெருமக்களை எப்படி பாதுகாப்பது என்ற வகையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. க. பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு பயன்படுத்துகின்ற உரம், பூச்சி மருந்து போன்றவைகள் நீண்ட நாட்களாக கிடங்குகளில் கிடப்பதனால் அவைகளுடைய உயிரோட்டம் அற்றுப் போய் விடுகிறது. ஆகவே, அவைகளைப் பயன்படுத்துவதனால், விளைச்சல் குறைந்து வருகின்றது என்ற கருத்து நிலவி வருகிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நீண்ட காலத்திற்கு அவைகளை வைத்துக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்காது. அப்படி ஒரு வேளை சில பகுதிகளில் இருக்குமானால், அரசு அதுபற்றி கவனிக்கும்.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு பூச்சியினால் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு மாவட்ட வாரியாக நிபுணர்குழு, மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு நிபுணர்குழு ஏற்படுத்தப்பட்டு, அதன்மூலமாக நிவாரணம் அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அதற்குத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு சட்டப் பேரவை தலைநாயகர் அவர்களே, வேளாண்மைத் துறையில் மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்டு, அந்த மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்ட தாளடி வைக்கோலை கால்நடைகள் சாப்பிடுவதால், கால்நடைகள் பாதிக்கப்படுவதாக எங்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலே இருந்து தெரியவருகிறது. அப்படி பாதிக்கப்படுகின்ற வேளாண்மை மக்களுக்கு இந்த அரசு ஏதாவது நிவாரணம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தகவல் இல்லை. புதிதாக ஒரு சிக்கலை உருவாக்கி ஒரு அர்சுறுத்தலை உண்டாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. எம். வெங்கடாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தற்போது இந்த விவசாய மருந்துகள் குறைந்த அளவிலே வேலைசெய்வதாகக் கருதுகிறார்கள். எனவே, நல்ல மருந்துகளைக் கொடுத்து, அந்த நோய் வந்தால் உடனடியாக அதைக் கட்டுப்படுத்துகின்ற அளவிலே செய்வதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உரிய தகுதியான மருந்தைத் துறையின் மூலமாகத் தரவேண்டுமென்று பரிந்துரை செய்கிறோம். இருந்தாலும், ஒவ்வொரு முறையும் ஒரு பூச்சைக் கட்டுப்படுத்துகிறபோது, அந்த மருந்தை பயனற்ற முறையில் செய்ய பூச்சிகளும் திட்டமிடுகின்றன. ஆகவே, புதிதாக, தொடர்ச்சியான சில முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறோம். அந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைமுறையில் இருக்கின்ற வித்துக்கள் எல்லாம் அதிகமாக நோயினால் பாதிக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. நோய் பாதிக்கப்படாத புதிய வித்துக்களை கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதற்கென விதை சான்றிதழ் தரும் ஒரு தனித் துறை வைத்திருக் கிறோம். அப்படி சான்றிதழ் பெற்ற பிறகுதான், அத்தகைய வித்துக்களைத் தான் விவசாய பெருமக்களுக்கு வழங்கியிருக் கிறோம். இருந்தாலும், அங்கே குறையிருக்குமானால், அதைக் களைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் மட்டும் அல்ல; தமிழ்நாடு பூராவும் இந்த மஞ்சள் நோய் கண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதில் இருந்து தெரிகிறது. ஆதலால் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு எப்படி ஹெலிகாப்டர் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறதோ, அவ்வாறு போர்க்கால நடவடிக்கையாக ஹெலிகாப்டர் மூலமாக எல்லா இடங்களிலும், இந்த பூச்சி மருந்தைத் தெளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அப்படி தெளித்து, நன்றாக இருக்கும் பயிர்களை கெடுத்து விடக்கூடாது. எங்கு பாதிப்பு இருக்கிறதோ, அங்கு நிச்சயமாக நடவடிக்க மேற்கொள்ளப்படும்.





திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விவசாயத்தைப் பொறுத்தவரையில் இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. வெள்ளத்தால், புயலால் வறட்சியால் அந்த பாதிப்பு ஏற்படுகிறது. அது சமயத்தில் அரசு எவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்கிறதோ, அதேபோன்று பூச்சியினால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க ஒரு கொள்கை அறிவிப்பு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பாதிப்பு இயற்கை சீற்றத்தாலா அல்லது பூச்சியினாலா என்பதல்ல. பாதிப்பு பெருமளவில் இருக்குமானால், அதற்குரிய நடவடிக்கையை எடுக்கிறோம். அளவுதான் முக்கியம். எதனால் பாதிப்பு ஏற்பட்டது என்பது முக்கியமல்ல.

### சைதை தொகுதிக்கு நீர் வழங்கல்

47—(*வினா எண். 302) திரு. சா. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டுக்காட்டிலிருந்து குழாய் மூலம் பெறப்படும் தண்ணீரை சைதை தொகுதியில் மடுவின்கரை, நேரு நகர், காமராஜர்புரம், ஐந்து பர்லாங்கு சாலை, ரேஸ் வியு காலனி போன்ற பகுதிகளுக்கு பயன்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியம் ஆலந்தூர் பேரூராட்சிக்கு முட்டிக்காட்டிலேயிருந்து தண்ணீர் வழங்கி கொண்டு இருந்தார்கள். இன்றைக்கு பாலாற்றிலே இருந்து லந்தூருக்குத் தண்ணீர் வழங்குகிறார்கள். ஆகவே, முட்டுக்காடு தண்ணீர் ஆலந்தூருக்குச் செல்லவில்லை. எனவே, இந்தத் தண்ணீரைச் சென்னை குடிநீர் வழங்கு வாரியம் தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியத்திடமிருந்து வாங்கி வழங்கினால் நலமாக இருக்கும் குறிப்பாக, கணேஷ் நகர், செக்கரட்டேரியட் காலனி, மடுவன்கரை, நேரு நகர், காமராஜர்புரம், ஐந்து பல்லாங்கு சாலை, ரேஸ் வியூ காலனி போன்ற பகுதிகள் வழியாகத்தான் அந்தக் குழாய்கள் செல்கின்றன. அந்தப்பகுதிகளுக்கெல்லாம் இப்பொழுது லாரிகள் வாயிலாக நீர் வழங்கப்படுகிறது. அதனால் அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. அதைத் தவிர்க்கவும் மக்களுக்கு அந்தத் தண்ணீரை முறையாக விநியோகிக்கவும் அரசு இதில் அக்கறை எடுத்துக் கொண்டு, உடனடியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து சென்னைப் பெரு நகர குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்ற துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருப்பதைப் போல இப்பொழுது அந்தப் பகுதிகள் குடிநீர்ப் பெறாமல் இல்லை. அங்கே ஊர்திகள் மூலமாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். சில பகுதிகளிலே புதிதாகக் குழாய்களும் போடப்பட்டிருக்கின்றன. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற அந்தக் கருத்தினுடைய அடிப்படையிலே உரிய நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னை மாநகரில் கடுமையான வறட்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, சென்னை மாநகரத்திற்குத் தேவையான குடிநீர் இருக்கிறதா? கடந்த ஆண்டைப் போலவே வழங்குகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். இந்த முட்டுக்காடு தண்ணீரை வெகு விரைவாக இந்தப் பகுதிக்கு வழங்கினால் ஏறத்தாழ 20.000 குடும்பங்கள் பலன் பெறக் கூடிய வகையில் அமையும். ஆகவே, அந்தத் திட்டத்தை வெகு விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கக். காளிமுத்து: தலைவர் அவர்களே எத்தகைய வறட்சி ஏற்பட்டாலும் தண்ணீர் பற்றாக்குறை நிச்சயமாக ஏற்படாது என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே போதுமான அளவிற்குத் தண்ணீர் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கிற அந்தக் கருத்தினுடைய அடிப்படையிலும் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்,

திரு. எல்ல. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, முட்டுக்காட்டிலிருந்து தாம்பரம் தொகுதியின் வழியாகத்தான் சென்னைக்கு இந்த தண்ணீர் வருகிறது. வருகின்ற வழியில் உத்தண்டி, குடுமியாண்டி, ஈஞ்சம்பாக்கம், பாலவாக்கம் நீலாங்கரை போன்ற தண்ணீர் பற்றாக்குறை உள்ள கிராமங்களுக்கு இந்த நீர் வழங்கும் துறையின் மூலமாக ஏற்பாடு நடந்து கொண்டிருப்பதாக அறிகிறோம், அது எப்பொழுது நடைபெறும் என்பதை விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர். கா. காளிமுத்து: தலைவர் அவர்களே அங்கே தண்ணீர் பற்றாக்குறை நிலவுமேயானால் வேறு ஏற்பாடு எதுவும் இல்லையானால் இந்தத் திட்டத்தின் மூலம் தண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்னையை தீர்க்க வேண்டுமென்பதில் மாண்புமிகு அமைச்சருக்கு இருக்கக்கூடிய ஆர்வம், வேகம்; ஆகியவற்றிற்கு இணையான அளவில் கிராமப் புறங்களிலே



குடிநீர்த் திட்டப் பணிகள் துரிதமாக இல்லை என்பதால் குடிநீர்த் திட்டங்களை விரைவாக முடிப்பதற்கு கால நிர்ணயம் செய்ய அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது நாமாகவே கால நிர்ணயத்தை செய்து முடித்து விடக் கூடியது அல்ல. ஆயுள் காப்பீட்டுக் கழகங்கள் போன்றவற்றிடமிருந்தெல்லாம் நாம் கடன் பெறவேண்டியிருக்கிறது. சிலபெரிய திட்டங்களுக்கு உலக வங்கியிடத்திலேயிருந்து கடன் பெற வேண்டியிருக்கிறது. அவைகளை எல்லாம் விரைவிலே பெறுவதற்குரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாமே தவிர, கால வரையறை செய்வது என்பது இயலாது. இருப்பினும் தண்ணீர் பற்றாக்குறை தமிழகம் முழுவதும் எங்கும் நிலவாத அளவுப் பார்த்துக் கொள்வதற்கு அரசு உரிய முயற்சி மேற்கொள்ளும்.

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே குடிதண்ணீர் 30 பைசா, 40 பைசா என்று விற்கப்படுகிறது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அது தவறான தகவல்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டுக்காட்டிலிருந்து குடிதண்ணீர் எடுக்கும் திட்டத்திற்கு அரசு செலவு செய்ய திட்டமிட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? அதில் பெறப்படும் தண்ணீர் விவசாயத்திற்குப் பயன்பட அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது மூலக் கேள்வியோடு தொடர்புடையது அல்ல.

திரு வி எஸ். டி. சம்சுல் ஆலம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிநீருக்காக ஒதுக்கப்பட்ட தொகையிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்திலே, கோடை காலத்திலே அந்த வேலைகள் தாமதமாக நடப்பதாக தகவல் இருக்கிறது. ஆகவே, இந்தக் கோடைக்காலத்தை ஒட்டி அந்த குடிநீர் வழங்கும் நடவடிக்கையை துரிதமாக்க மாண்புமிகு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் கா காளிமுத்து: தலைவர் அவர்களே, மிக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் குடிநீர்த் திட்டம் என்பது பாலாற்று குடிநீர்த் திட்டம். அது முந்தைய அரசு காலத்தில் போடப்பட்டது. ஆனால் இன்றுவரையில் அது சரியாக நிறைவேற்றப் படாமல் மக்கள் குடி தண்ணீருக்காக அல்லல்படுகிறார்கள்.

[1985 ஏப்ரல் 4

வீதிகளில் இன்னும் குழாய்கள் கூட சரியாக போடப்படவில்லை. பொதுமக்களும், வடிகால் வாரிய அதிகாரிகளும் இதன் காரணமாக வீதிகளில் மோதுகிற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே மக்களுக்கு உடனடியாக தண்ணீர் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, சில திட்டங்கள் தவறான அடிப்படையில் போடப்படுகிற நேரத்தில் தாமதம் ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருப்பினும் எந்த வகையிலும், எந்தப் பகுதியிலும் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்பதுதான் அரசினுடைய முக்கியமான நோக்கம். ஆகவே அந்த அடிப்படையில் வேறு வகையில் காலதாமதம் இருக்குமானால் அந்தத் தாமதத்தை களைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எ. வச்சிரவேலு: தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் 50 லட்சம் ரூபாய் செலவில் குடிதண்ணீர் திட்டம் துவங்குவதாக வாரியத்தின் தலைவர் ஆறு மாதத்திற்கு முன்னாலே தெரிவித்து வந்தார்கள். அந்தத் திட்டம் ஆய்வில் இருக்கிறதா எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, திருவண்ணாமலையின் மீது அக்கறை கொண்டிருக்கிற உறுப்பினர் அவர்கள் அதற்காக தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே. பல இடங்களில் குறிப்பாக என்னுடைய வில்லிவாக்கம் தொகுதி உள்பட சென்னை நகரத்தின் பல பகுதிகளில் குழாய்கள் அமைக்கப்பட்டு, தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டும், வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மெட்ரோ அதிகாரிகளிடம் ஒப்படைக்காத காரணத்தால் குடிதண்ணீர் வழங்குவதில் பல இடங்களில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதை தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் அவசர நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் அதை கவனத்தில் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, குடிதண்ணீர் பிரச்னை தமிழகம் முழுவதிலும் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக என்னுடைய தர்மபுரி மாவட்டத்தில் குடிநீர் பிரச்னை பெரிய அளவில் இருந்து வருகிறது. அது சம்பந்தமாக அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தும், மாவட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆங்காங்கு பழுதடைந்திருக்கிற குழாய் கிணறுகளை சரி செய்வதற்கு அவசரகால அடிப்படையில் நடவடிக்கை



1985 ஏப்ரல் 4]

எடுத்து குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்தும் இன்னும் சரியான நடவடிக்கைகள் இல்லாமல் இருக்கிறது. பழுதடைந்திருக்கிற குழாய் கிணறுகளை சரி செய்வதற்கு வேண்டிய கருவிகள் கிடைக்காமல் இருக்கிறது. என்னுடைய மாரப்பூர் தொகுதியில் நூற்றுக்கணக்கான குழாய்க் கிணறுகள் பழுதடைந்திருப்பதாக கணக்கு எடுத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால் அதற்கு தேவையான கருவிகளும், சாதனங்களும் தங்களிடத்தில் இல்லையென்று தெரிவிக்கிறார்கள். அவற்றை வெளியிலேயிருந்து தருவிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே அரசு இந்த நிலையை கவனித்து வேண்டிய கருவிகளைக் கொடுத்து இந்த குடிதண்ணீர் பிரச்னையைப் போக்குவதற்கு தீவிர நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்தக் கருத்தின் அடிப்படையில் எனக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது, குடிதண்ணீர் வடிகால் வாரியத்திடம் இதற்கு போதுமான அளவிற்கு கருவிகள் இல்லாமல் இருக்குமானால், வேளாண்மை பொறியியல் துறையில் இருக்கிற கருவிகளை அதற்கு மாற்றி உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு கே. பாலாஜி: தலைவர் அவர்களே, சென்னை நகரத்தின் குடிதண்ணீர் பிரச்னைக்கு இவ்வளவு வேகமாக கவனத்தைச் செலுத்துவதைப் போல காஞ்சிபுரத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விகள் மூலக் கேள்வியை ஒட்டி எழுப்பப்பட வேண்டும்.

திரு. கே. பாலாஜி: தலைவர் அவர்களே, மூலக்கேள்வியை ஒட்டித்தான் கேட்கிறேன். 3 கோடி ரூபாய் அளவில் காஞ்சி மாநகரத்திற்கு ஒரு திட்டத்தைப் போட்டு, ஆய்வு செய்து, 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பணத்தை கட்டி ஒரு ஆண்டு காலமாகியும் அந்தத் திட்டம் இன்னும் துவக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக அந்தத் திட்டத்தை துவக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தைப் பற்றி உரிய தகவலைக் கேட்டு, உரிய நடவடிக்கையை நான் நிச்சயமாக எடுக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டுவதற்கு எத்தனை 'ரிக்குகள்' இருக்கின்றன? இருக்கின்ற 'ரிக்குகளை' வைத்து இந்த வறட்சி நேரத்தில் தமிழகம் முழுவதிலும் ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்ட முடியுமா? அப்படி முடியாவிட்டால் ரிக்குகளை வாடகைக்கு எடுத்தாவது குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வாடகைக்கு எடுப்பதற்கு தேவையில்லை. நம்முடைய துறையில் இருக்கிற கருவிகள், வேளாண்மை பொறியியல் துறையில் இருக்கிற கருவிகள், இவைகள் அனைத்தையும் பயன்படுத்தி உரிய ஏற்பாட்டை நிச்சயமாக செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

48—

பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிப் பள்ளிகள்.

*வினா எண். 600 திரு சா. துரைசாமி : திரு செ.செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடத்தில் ஆரம்பிக்கப் படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை, ஈரோடு, கன்னியாகுமரி, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் நிறுவிட ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. சா. துரைசாமி: தலைவரவர்களே, இதுவரையில் மல்டி பர்ப்பஸ் ஒர்க்கர்ஸ் எவ்வளவு பேர் எடுக்கப்பட்டுள்ளனர்? இதுவரையில் தாய்சேய் நல விடுதிகள் எத்தனை ஏற்படுத்தப் பட்டுள்ளன என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இது வரையில் தாய்சேய் நல விடுதிகளைப் பொறுத்தவரையில்— அதற்கு இன்னொரு பெயர் சப் சென்டர்ஸ்—மொத்தம் 5,837 ஏற்படுத்தப்பட்டுள்ளன. மல்டி பர்ப்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸை பொறுத்தவரையில் இதுவரையில 4,870 பேர்களை நாம் தேர்ந் தெடுத்திருக்கிறோம். அவர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறேம்.

திரு. சா. துரைசாமி: தலைவரவர்களே, கிராமப்புறங்களில் அவர்களுக்கு பயிற்சி கொடுக்க ஏதேனும் பள்ளிகள் உண்டா? அப்படி என்றால் அவை எத்தனை?

மாண்புமிகு எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்த மல்டி பர்ப்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸைப் பொறுத்தவரையில் மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் முதலில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. அதன் பிறகு ஆர்.எச்.டி.ஒ. (ரூரல் ஹெல்த் ட்ரெயினிங் சென்டர்ஸ்) என்று கிராமப்புறங்களில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஒட்டி இருக்கக்கூடிய பயிற்சி நிலையங்களில் மீண்டும் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இப்படிப் பட்ட நிலையங்கள் 51 ஏற்படுத்தியிருக்கிறோம். அதில் 49 முடிக்கப்பட்டுவிட்டன, இன்னும் இரண்டு மையங்கள் வெகு விரைவில் தொடங்கப்படும்.



திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, இந்தப் பயிற்சிக் கான பயிற்சி நிலையங்கள் எத்தனை இருக்கின்றன என்ற விவரத்தோடு புதிய மையங்கள் இரண்டு ஏற்படுத்த இருப்பதில் ஒன்ற சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தகவலுக்சாகச் சொல் கிறேன். ஏற்கெனவே 1979 ஆம் ஆண்டுக்கு முன்னால் திண்டுக்கல், சேலம், வேலூர், திருச்சி ஆகிய நான்கு மாவட்டங்களில் தொடங்கியிருக்கிறோம். அதிலே சேலம் இடம் பெற்றிருக்கிறது. அது மட்டுமல்ல. அடுத்தபடியாக 4-10-1979-ல் மேலும் 5 இடங்களில் அதாவது காஞ்சிபுரம், கடலூர், நாகப் பட்டிணம், இராமநாதபுரம். திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆக, 9 இடங்களில் இப்போது செயல் பட்டு வருகிறது. இப்போது புதிதாக மேலும் இரண்டு இடங் களில் ஆரம்பிக்க இருக்கிறோம்.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, மற்ற மாவட்டங் களை விட சேலம் மாவட்டத்தில் இப்படிப்பட்ட பள்ளிகளைக் கூடுதலாக ஆரம்பிக் வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் 'டேனிடா' திட்டத்தின் கீழ் அதிகமான துணை சுகாதார நிலையங்கள் அங்கே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கே பணி யாற்ற போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நாங்கள் இந்த கோரிக்கையை விடுகிறோம். ஏற்கெனவே சேலம் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கிராமப்புறங்களில் பணியாற்றுகின்ற இந்தப் பணியாளர்களுக்கு கிராம சூழ்நிலையில் பயிற்சி பெற ஏற்பாடு செய்கிற வகையில் இன்னொரு பயிற்சி நிலையத்தை சேலம் மாவட்டத்தில் கிராமப்புறத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, ஏற்கெனவே சேலத்தில் நாம் தொடங்கியிருக்கிறோம் என்று சொன்னேன் அது மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் தகவலுக்காக இன்னொரு புள்ளி விவரத்தையும் கூற விரும்புகிறேன். 1979 ஆம் ஆண்டுக்கு முன்னால் திறக்கப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் செமஸ்டர் முறையில் 60 பேர்களை எடுத்து பயிற்சி கொடுத்தார்கள். அந்த அடிப்படையில் 1979—ல் 660 பேர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறோம். அடுத்தபடியாக 1981 ஆம் ஆண்டு 773 பேர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறோம். அதன்பிறகு 1982—ல் 770 பேர்களுக்கும், 1983—ல் 906 பேர்களுக்கும் பயிற்சி கொடுத்திருக்கிறோம்.

1984 ஆம் ஆண்டு. 1,070. பெப்ரவரி மாதத்தில், இந்த ஆண்டு, 540 பேர்களுக்கு நாம் கொடுத்திருக்கிறோம். சேலம் ஹெட் குவார்டர்ஸ் ஆஸ்பத்திரியில் நாம் பயிற்சி கொடுத்தபிறகு,

நான் ஏற்கனவே சொன்ன மாதிரியாக அந்த 51 என்று சொன்னேனே, ஆர்.எச்.டி.சி. யைதைப் பொறுத்தவரையிலும், உலக வங்கி நிதி உதவி மூலமாக அந்த மையங்களை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே சேலம் தலைமை மருத்துவ மனையில் ஒரு வருஷம் பயிற்சி கொடுத்த பிறகு, இந்த 51 இடங்களில் நாம் ஏதாவது ஒரு இடத்தில் அவர்களை அமர்த்தியிருக்கிறோம். ஆகவே அவர்களைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில் பயிற்சி கிடைக்கிறது. அதே நேரத்தில் ஹெட் குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும் பயிற்சி கிடைக்கிறது.

சேலத்திலே இன்னொன்று ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இன்னும், 4, 5 இடங்களில் மாவட்ட தலைமை மருத்துவமனைகளை ஆரம்பித்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மருத்துவமனைகளில் அந்தப் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே முதல் கட்டமாக மாவட்ட மருத்துவமனைகளில் ஆரம்பித்த பிறகு, இரண்டாவது பிரச்சனையைப்பற்றி யோசிப்பதற்கு நியாயமாக இருக்கும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய தமிழகத்தில் சேலம், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் தான் இந்த 'டானிடா' திட்டத்தின் கீழ் துணை மருத்துவ நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. அந்த மருத்துவ நிலையங்களில் மருத்துவர்களை நியமித்து, கிராமப்புற மக்களுக்கு நவீன வைத்தியம் கிடைக்க வழிவகை செய்யப்படுமா? இந்த ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற தாய் சேய் நல விடுதிகளில் பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் எல்லாம், அந்தக் கிராமங்களில் தங்கி பணியாற்றுவது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதை நிவர்த்தி செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளை இணைத்து கேட்டு இருக்கிறார்கள். முதலாவதாக, இந்த தாய்-சேய் நல விடுதிகளில் மருத்துவர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். உலக சுகாதார நிறுவனம் கூட சொல்லியிருக்கிறது. அந்த இடங்களில் டாக்டர்களை நியமிக்கும் சாத்தியக்கூறு இல்லை, தேவையும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்தில், பிரைமரி ஹெல்த் கேர் பார் மதர் அன்ட் சைல்ட் என்ற அந்த வகையில் நாம் கவனித்து செய்கிறோம்.

அடுத்த கேள்வி, அங்கே பணியாற்றுகின்ற பலநோக்கு சுகாதார பயிற்சி பெற்றவர்கள் அங்கேயே இருக்கவேண்டும் என்பது. அந்த இடத்திலே அவர்கள் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாம் இரண்டு அறைகளை — ஒன்று சமையல் அறை, மற்றொன்று தங்குவதற்கான அறை — அவர்கள் அங்கே நல்லபடி வசிப்பதற்கு வசதியாக நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்.



திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மல்டி பர்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் ட்ரெயினிங் எடுத்த சில ட்ரெயினிஸ்க்கு இன்னும் வேலை இல்லாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதே நேரத்தில் அந்த மாவட்டத்தில் மலைப் பகுதியில் பேசிக் ஹெல்த் பெசிலிட்டிஸ் கூட இல்லாத நிலையிருக்கிறது. ஆகவே அந்த மலைப் பகுதிகளில் சில சென்டர்களை ஓப்பன் செய்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அந்த மல்டி பர்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் பற்றிச் சொன்னார்கள். அந்த ஒர்க்கர்சைப் பொறுத்தவரையில் அந்த பயிற்சி கொடுத்த உடனே, அவர்களுக்கு வேலை கிடைத்துவிடும். ஏன் என்றால், பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு உடனடியாக வேலை கிடைத்து விடுகிறது. அதிலே ஒரு சிக்கல் என்னவென்றால், அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலேயே வேலை வேண்டும் என்று கேட்கிறார்கள். எல்லோருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலை கொடுக்கின்ற சாத்தியக்கூறு இல்லை. ஆகவே அவர்களை வேறு இடங்களுக்கு அனுப்புவார்கள். அவர்கள் அங்கே செல்ல தயாராக இருக்கவேண்டும்.

இன்னும் தாய்-சேய் நல விடுதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று சொன்னார்கள். அது நியாயமான யோசனை. அதைப் பொறுத்தவரையில் நான் ஏற்கனவே சொன்னமாதிரி, இப்போது தமிழகத்தில் 5,837 தாய்-சேய் நல விடுதிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த புள்ளி விவரத்தைப் பார்க்கிறபோது, அகில இந்தியாவில், நாம்தான் முதலாவதாக இருக்கிறோம். அதனால் நாம் மன நிறைவு அடைந்து சும்மா இருக்க முடியாது. இன்னும் தீவிரமாக பணியாற்றும் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய கருத்தும், பரிசீலனைக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள மருத்துவமனைகளில் உள்ள செவிலியர்கள் பற்றாக்குறையால், சரியாக வேலைக்கு வராத காரணத்தால், அந்த செவிலியர்களுக்குப் பதிலாக இந்த ஆரம்ப பலநோக்கு சுகாதார பயிற்சி படித்தவர்களை வேலைக்கு அமர்த்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற அந்த பயிற்சி முழுக்க முழுக்க வேறு விதமான பயிற்சி. The training component is entirely different from the training component given to the multipurpose health workers' அந்த மல்டி பர்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் பொறுத்தவரையில், 1½ ஆண்டுக்காலம் பயிற்சி கொடுக்கப்படுகிறது. எல்லா விஷயங்களிலும், அதாவது மலேரியாயல் பெரசைட், தொழுநோய், போன்ற சில விஷயங்

களைப் பற்றியும் கொஞ்சமாகச் சொல்லிக் கொடுத்து. அந்த கிராமங்களில் எங்கே வியாதி இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்து மருத்துவர்களுக்கு எடுத்துக் கொடுப்பதற்காக (to bring this to the attention of the Medical Officers) அதற்காக அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, செவிலியர்களுடைய பணியை மல்டி பர்ப்பஸ் ஹெல்த் சர்வீஸ் வொர்க்கர்ஸ்களால் செய்ய முடியாது. மல்டி பர்ப்பஸ் ஹெல்த் சர்வீஸ் வொர்க்கர்ஸ் பணியை செவிலியர்களால் செய்யமுடியாது. இது வேறு அது வேறு. செவிலியர்களைப் பொறுத்தவரையில் ஆண்டு தோறும் நாம் எவ்வளவு எடுத்துக் கொண்டிருந்தோம் என்றால் 350 பேர்களுக்கு பயிற்சிக் கொடுத்துக் கொண்டிருந்தோம். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தற்குப் பின்னால், அது நீண்ட நாட்களாக குறைவான எண்ணிக்கையிலேயே இருக்கிறது என்பது உணரப்பட்டு, தற்போது 690 பேர்களுக்கு ஆண்டுதோறும் பயிற்சி அளிக்கின்ற வாய்ப்புக்களை உயர்த்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்நோக்கு சுகாதாரப் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்கள் அரசுப் பணிகளில் வேலை செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறதே, எனவே They are also eligible for Government jobs என்ற அளவில் அரசு ஆணை இடுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு தலைவர் அவர்களே. ஒட்டன்சத்திரத்தில் இருக்கக்கூடிய அந்தப் பகுதியைப் பற்றி சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கே ஒரு ஆண்டுக்கு 20 பேர்களுக்குத்தான் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நமக்கு இருக்கக்கூடிய சிக்கல் எல்லாம் நாம் ஏற்கெனவே அரசாங்கத்தின் மூலமாக நம்முடைய வரிப்பணத்தை செலவழித்து பயிற்சி கொடுத்தவர்களுக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு முதலிடம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு நிச்சயமாக இவர்களுக்கு கொடுக்கக்கூடிய அந்த வாய்ப்பை பரிசீலிக்கலாம். ஆனால் அம்பலிங்கம் என்ற ஊரில் நடக்கும் அந்தப் பயிற்சிப் பள்ளியில் இந்த 20 பேர்கள் கூட, மற்ற வேலை வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய வழி முறைகள் இருப்பதால், பயிற்சி பெற வருவதில்லை என்று கேள்விப்பட்டேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழு விவரம் கொடுத்தால் அரசு அதை பரிசீலிக்கும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பள்ளிகள் மாவட்ட அளவிலேதான் இருக்கின்றன. அதனை கிராமப் புறங்களுக்கும் மாற்றும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அதைத்தான் இங்கே எடுத்துக்கூறியிருக்கிறேன். மாவட்ட மருத்துவமனையிலே ஒரு ஆண்டு அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படும். 12 மாதங்கள் டிரெயினிங். ஆர்.எச்.டி.சி. என்று சொல்லக்கூடிய ரூரல் ஹெல்த் டிரெயினிங் சென்டர் என்ற வகையில் 59-லே 49-ஐ நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த இடங்களிலே 6 மாதம் டிரெயினிங். இந்த இடங்கள் எங்கேயிருக்கின்றன என்றால், ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டிடத்தை ஒட்டித்தான் இந்தக் கட்டிடம் இருக்கிறது. அதே நேரத்தில், exposed to rural atmosphere என்று சொல்லத்தடிய அளவுக்கு அந்த மருத்துவமனையில் ஒரு ஆண்டு பயிற்சி கொடுத்த தற்குப் பிறகு, ஆர். எச். டி. சி. என்கிற இந்தப் பயிற்சி தரப் படும். அப்படி கிராமப் பகுதியிலே நல்ல வகையிலே இந்தப் பயிற்சி தரப்படுகிறது.

திரு, ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திண்டுக்கல்லில் ஆரம்பிக்கப்பட்ட பல்நோக்கு சுகாதாரப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சியாளர்கள் எண்ணிக்கை எத்தனை? அது இன்னும் கூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சராசரியாக ஒவ்வொரு ஆர். எச். டி. சி. சென்டரிலும் நாம் 20 பேர்களுக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைக் கூட்டவேண்டும் என்றால் கட்டிடத்தின் அமைப்பை பொறுத்திருக்கிறது, திடீர் என்று செய்யமுடியாது. அத்தோடு நாம் கூட்டிவிட்டோம் என்றால், அந்தப் பயிற்சியின் தரமும் குறைந்துவிடும். ஆகவே இவ்வளவையும் மனத்திலே கொண்டுதான் நாம் எச்சரிக்கையாகச் செய்ய வேண்டும்.

திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பயிற்சி பள்ளி கட்டிடத்திற்கு எவ்வளவு செலவு ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் கட்டயிருக்கிற இந்த நான்கு இடங்களுக்கு சராசரியாக ஒரு இடத்திற்கு 8 லட்சம் ரூபாய் செலவாகும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமபுறங்களில் வைத்தியப் பணிகளை விஸ்தரிப்பதற்காக, அரசு எடுத்துக் கொண்டிருக்கும் திட்டங்களில் ஒன்றாக, வைத்தியர்கள் கிராமப் பகுதிகளுக்குச் செல்வதற்கு தயாராக இல்லை என்ற எண்ணத்தையும் மனத்திலே கொண்டு, அரசு மானியம் பெற்று, அரசு கடன் பெற்று படிக்கக் கூடிய வைத்தியக் கல்லூரி மாணவர்களிடத்தில், கிராமப்புறங்களில் இத்தனை காலம் வைத்தியம் செய்யவேண்டும் என்ற ஒப்பந்தம் பெறுவதற்கான திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 18

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் பிரச்னை அகில இந்திய சுகாதார அமைச்சர்கள் மாநாட்டிலே விரிவாகப் பேசப்பட்டது. அங்கே நான் ஒரு யோசனை சொன்னேன். இந்தக் கமிட்டிக்கு அப்போது நான்தான் தலைவராக இருந்தேன். அந்த நேரத்தில் ஒட்டு மொத்தமான ஒரு யோசனையைச் சொன்னேன். கிராமப் பகுதியில் பணியாற்றக் கூடிய டாக்டர்களுக்கு, ஒரு மானியமாக, ஆல் இந்தியா பேசிஸ்லே மத்திய அரசாங்கம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னோம். ஏனென்றால் ஒவ்வொரு மாநிலத்திலும் இது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வரை டாக்டர்ஸ் போஸ்ட்ஸ் ஒவ்வொரு மாநிலத்திலும் கிராமப்பகுதிகளில் காலியாக இருக்கிறது என்ற பிரச்னை அப்போது எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல செய்தி. 300 டாக்டர்கள், 400 டாக்டர்கள் போஸ்ட்ஸ் காலியாக இருந்த நிலையை மாற்றி அதை தற்போது 45 ஆகக் குறைத்திருக்கிறோம். அதுகூட லீவிலே போனதனால் ஏற்பட்ட வேகன்சி. சாதாரணமாக இந்த 45 என்பது எல்லா இடத்திலும் இருப்பது. ஆகவே, முழுக்க முழுக்க இதில் தமிழகம் வெற்றி கண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10.00)

## 2. தகவல் கோரல்

### இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நடைபெறும் அனைத்துக் கட்சி கூட்ட விவரம்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசாங்கத்திடம் ஒரு முக்கியமான தகவல் அறிய விரும்புகிறேன். அரசாங்கம் இலங்கைத் தமிழர் பிரச்சனைகள் என்று அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி சில முடிவுகளை எடுத்து இருப்பதாகத் தெரிகிறது. சபை நடந்துகொண்டிருக்கிறது. அதுபற்றிய விவரங்களை அரசு அறிவிக்க வேண்டும். ஏற்கனவே சர்வ கட்சிக் கூட்டம் ஏற்பாடு செய்து அனைத்துக் கட்சிப் பிரதி நிதிகளினால் ஒரு மகஜர் டெல்லியிலே கொடுக்கப்பட்டது. அதில் பல கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை என்னவாயிற்று? மத்தியசர்க்கார் இலங்கைக்குஇராணுவத்தை அனுப்புகின்ற கோரிக்கையை இந்த அரசு வலியுறுத்துகிறதா என்பதை சபைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். (குறுக்கீடுகள்



1985 ஏப்ரல் 4] [திரு.அ. ரகுமான்கான்]

மன்றத்தலைவர் அவர்களே, இங்கு உள்ள உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். சபை நடந்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் அதிலே சம்பந்தப் பட்டிருக்கிறது. அது என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை சபை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தக் கூட்டத்திலே பல்வேறு கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டு இருக்கலாம். என்றாலும் சபைக்குத் தெரிவிக்கவேண்டும். அது பற்றிய விவரம் வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஏதேனும் ஒரு விதி முறையின அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் கேட்க வேண்டும். இதனை ஒரு ஸீரோ அவரில் எடுத்துக்கொண்டு, எதையும் கேட்கலாம் எதற்கும் பதில் சொல்லலாம் என்று உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. மற்ற அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இடம் பெற்றிருக்கிறார்கள். இன்னும் முடிவு அடையவில்லை. முடிவு அடைந்ததற்கு பிறகு எடுக்கப்பட்டுள்ள முடிவுகளை அவைக்கு இந்த அரசு அளிக்கும்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி. தங்கவேலு, மு. இராமநாதன், குமரி அனந்தன், எஸ்.என். இராமசாமி, டி. ஆர் வேங்கடரமணன், கு. சுப்பராயன், பொ. உத்திராபதி, பொன். முத்துராமலிங்கம், ந. சிவஞானம், சே.எம். தங்கமணி, சி. பழனி முத்து, சு. பாலன், வி.பி. சிந்தன், கோ. வீரய்யன், கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன், ஜி கே.ஜெ. பாரதி, சு.சிவராஜ், சா. ஜெயச்சந்திரன ஆகியோர் ''எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனில் பாய்லர் உடைப்பு (பாய்லர் பர்ஸ்ட்) காரணத்தால் சுமார் 17 நபர்கள் ஸ்டான்லி மருத்துவ மனையில் 1-4-1985ல் சுமார் 11.30 மணி அளவில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் மூவரின் உயிர் ஊசலாடுகிறது. என்ற நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு வி. தங்கவேலு:

''சமன்செய்து சீர்தூக்குங்கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கணி''

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க இந்த மன்றத்தில் அமர்ந்து இருக்கக்கூடிய பேரவைத் தலைவர் அவர்களே, மற்றும் இங்கு இருக்கக்கூடிய உறுப்பினர்களே, இந்த அனல் மின்சாரத் தாலே . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இங்கே என்னை மட்டும் தான் அட்ரஸ் பண்ண வேண்டும்.

திரு. வி. தங்கவேலு: அனல் மின் நிலையத்திலே நடந்த நெருப்பு மழை பெய்த நிகழ்ச்சிகளை உங்களுக்கு வரிசைப்படி எடுத்துச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அனல் மின்நிலையம் என்று சொல்லக்கூடிய நிலையத்தில் நடந்த நிகழ்ச்சி எப். டி. பொறியாளர் சவனக்குறைவு என்று சொல்லக்கூடிய முறையிலே நடந்திருக்கிறது. அங்கே இருக்கிற அதிகாரிகளைப்பற்றிச் சொல்கிறபோது சி.இ.யாக இருப்பவர் திரு ராமன்குட்டி, எஸ்.இ.யாக இருப்பவர் திரு சண்முகம், திரு கிருஷ்ணராஜ் அவர்களும் திரு. வரதராஜ் அவர்களும் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு அங்கே முக்கிய அதிகாரிகளாக இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 110 அடி உயரமுள்ள அந்தக் கட்டத்தை அண்ணாந்து பார்க்கிறபோது நம்முடைய தலையிலேயே விழக்கூடிய துருப்பிடித்த நிலையில் தான் அந்தக் கட்டிடத்தின் நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் அந்த அனல் மின்நிலையம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. அங்கே பணிசெய்யக்கூடியப் பணியாளர்களைக் கேட்கிறபோது அவர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது, டாய்லட் கிடையாது ரெஸ்ட் ஹவுஸ் கிடையாது, 100 பெண்களுக்கு மேலாக அங்கே வேலை பார்க்கிறார்கள். தனியாக அவர்களுக்கு என்று டாய்லட் கிடையாது, குழந்தைகள் காப்பகம் கிடையாது, ஆம்புலன்ஸ் கிடையாது, இப்படி எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லக்கூடிய நிலையிலேதான் அந்த அனல் மின் நிலையம் இருக்கிறது. பாரதிதாசன் சொல்வான் "காண்பதை எல்லாம் தொழிலாளி செய்தான், அவன் காணத்தகுந்தது வறுமையாம் அவன் பூணத் தகுந்தது பொறுமையாம்" என்று. அதைப்போல அங்கே இருக்கிற அதிகாரிகள் அந்தத் தொழிலாளர்களின் கழுத்தை நெரித்துவிட்டு அவர்கள் உள்ளக் குமுறலைச் சொல்ல முடியாத அளவுக்கு அந்தத் தொழிற்சாலை, இயந்திரங்கள் இருக்கின்றன என்றால் அதைப்பற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

நான் அங்கே இரண்டு முறை சென்று பார்த்தேன். நாம் பார்ப்பதற்கு நன்றாக இல்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. முதல் உதவி அகம் என்று போர்ட் போடப்பட்டிருக்கிறது. முன்னாலே வாசல் கதவு வைத்து பர்ஸ்ட் எய்ட் ரூம் என்று போடப்பட்டிருக்கிறது, ஆனால் பின்னாலே போய் பார்த்தால் சிவில் எஞ்சினியர்கள் ஹவுஸ் என்று 5, 6 பொறியியல் வல்லுநர்கள் வேலை பார்த்துக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. பர்ஸ்ட் எய்ட் ரூம் என்று போர்டு வைத்தாலும் கூட உள்ளே சென்றால் அப்படிப்பட்ட உதவிக்கு யாரும் அங்கே இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே 700 பேர்களுக்கு அதிகமானவர்கள் வேலைபார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கான்ட்ராக்ட் லேபரர்ஸ், தற்காலிகமாக வேலைசெய்யக்கூடிய சூழ்நிலையைப் பெறுகிறார்கள். கிட்டத்தட்ட 7 ஆண்டுக்காலமாக மின்சார போர்டிலே தாழ்த்தப்பட்ட மலைசாதி சிறுபான்மை மக்களுடைய தொழிற்சங்கத் தலைவன் என்ற அந்த முறையிலே நான் பல கருத்துக்களை அங்கே உள்ள அதிகாரிகளைச் சந்தித்து எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.





Contract labour system should be abolished in Tamil Nadu என்று பல முறைகள் விண்ணப்பமாக எடுத்துச் சொல்லியுங்கூட அந்த கான்ட்ராக்ட் லேபர்ஸ் பற்றி கவனிக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. இப்படி அந்த இலாகாவிலே ஒரு துர்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தற்காலிக ஊழியருக்கு 7.05ரூபாய் சம்பளம் கொடுத்து விட்டு the intermediaries who are in the name of contractors in this Thermal Station are earning a lot of profit என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே 30 பேர்கள் கான்ட்ராக்டர்கள் இருக்கிறார்கள் என்றால் அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கிறபோது 42 கோடி ரூபாய் சென்ற ஆண்டு மத்திய அரசு கொடுத்திருக்கிறது.

The Central Government had given Rs. 42 crores, but this Rs. 42 crores has not yet been properly utilised by this Thermal Station for the welfare of the workers. அப்படி 42 கோடி ரூபாயைப் பெற்றுள்ள இந்த அனல் மின்நிலையமானது தொழிலாளர்களுக்கு பாதுகாப்புத்தராத சூழ்நிலை இருக்கிறது, இப்படி எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகள் தொடர்கதையாக இருக்கிறது. சம்சாரம் இல்லாமல் கூட நாம் வாழ்ந்துவிடலாம், ஆனால் அதே நேரத்திலே மின்சாரம் இல்லாமல் வாழமுடியாது என்ற சூழ்நிலையை நாம் பெற்றிருக்கிறோம். இது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், மத்திய அமைச்சருக்கும் தெரியும்,

(முற்பகல் 10-10.)

அதே நேரத்தில் நம்முடைய மின்சாரத் துறை வளர்ந்து வரும் ஒரு நல்ல சூழ்நிலையைப் பெற்றிருக்கிறது. இந்த மின்சாரத் துறையில் இன்றைக்கு நேற்றைக்கு இப்படிப்பட்ட நெருப்பு மழை அனல் மின் நிலையத்தில் ஏற்படவில்லை. உதாரணமாக எடுத்துக் கொண்டால் இப்படிப்பட்ட ஒரு சோக நிகழ்ச்சி 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சாலம்மா என்ற பெண் அங்கே ஏற்பட்ட பைப் உடைப்பின் காரணமாக தீ காயம் பட்டு இறந்து இருக்கிறார்கள். அதையும் அரசின் கவனத்திற்கு நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கடிதம் எழுதியும் இருக்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இப்போது 1985 ஆம் ஆண்டில் இந்த சோக நிகழ்ச்சி ஏற்பட்டு இருக்கிறது என்றால் அங்கே பொழிந்த நெருப்பு மழையால் தான். அங்கே இருக்கக்கூடிய எப்.டி. என்று சொல்லக்கூடிய 2 முக்கியமான ஆப்பரேட்டர்கள் செயல்படாததன் காரணமாக இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்து இருக்கிறது (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. வி. தங்கவேலு: I request the Hon. Speaker to give me some more time to express my inner thoughts. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அது மட்டுமல்ல, அங்கே தீக்காயங்கள் பெற்றவர்களை ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்த்து இருக்கிறார்கள். அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள்

சிறுபான்மையின மக்களுக்கு அங்கே சரியான முறையில் டிரீட்மென்ட் கொடுக்கப்படவில்லை. நான் சென்று பார்க்கும்போது அவர்களுக்கு சரியான முறையில் eyelid fuid கொடுக்கவில்லை. அதிகமாக தீக்காயங்கள் 80 சதவீதம் பெற்று இருந்தவர்களுக்கு அதிகமான eylid fuid கொடுத்து இருக்கிறார்கள். அதே நேரத்தில் 40 சதவீதம் தீக்காயங்கள் பெற்றவர்களுக்கும் அதே அளவு eyelid fluid கொடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் அங்கே இருக்கக்கூடிய டாக்டர்கள் செய்யக்கூடிய வேலையை அங்கே இருக்கக்கூடிய மற்ற வார்டு பாய்கள் அவர்களுக்கு செய்து இருக்கிறார்கள். கீழே போடப்பட்டுள்ள ரப்பர் ஷீட் சுத்தமாக இல்லை. அதற்கு அடுத்து தீக்காயம் பெற்ற 3 பேர் இறந்து இருக்கிறார்கள். இன்னும் ஏதாவது கேஷ்சுவாலிட்டி ஏற்படுமா என்று பார்க்கும்போது அவர்களுக்கு மேல் போர்த்தியிருந்த அந்த ஆடைகள் நன்றாக சுத்தமாக இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த தீக்காயங்கள் பட்டவர்கள் இருந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமது அரசை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் "We want an Experts Comittee" நமது அரசு வல்லுநர் குழுவை அமைக்கவேண்டும். இந்த வல்லுநர் குழுவின் வாயிலாக இந்த சுற்றுப்புற சூழ்நிலையை நன்கு காப்பாற்ற வழிவகைகளை செய்யவேண்டும் என்பதால் இவைகளை எல்லாம் பற்றி பேச வேண்டும் என்பதால் இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-85 அன்று எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய விபத்தின் காரணமாக ஏறத்தாழ 18 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இது மிகவும் கவலைத் தரக்கூடிய ஒரு விஷயமாகும். அதிலே மிகவும் பெண்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த அனல் மின் நிலையத்தில் சாம்பலை வெளியேற்றுவது பகல் 12 மணியிலிருந்து 2 மணி வரை அன்றாட நிகழ்ச்சியாக நடை பெற்று வந்தது. ஆனால் அன்றையதினம அந்த சாம்பல் வெளிப்படுத்தும் வேலை 2 மணிக்கு மேல்தான் நடைபெறும் என்று ஒரு தவறான தகவல் தெரிவித்ததன் காரணமாக அன்றையதினம் அங்கே வேலை செய்கிற அந்த மக்கள் அந்த பகுதியில் நடமாடிக் கொண்டு இருந்த நேரத்தில் தான் திடீர் என்று அந்த நெருப்பு சாம்பல் அங்கே நடமாடிக் கொண்டு இருந்தவர்கள் மேல் விழுந்து சுமார் 18 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், இப்படிப்பட்ட இடங்களில் அன்றாடம் வேலை நடைபெறுகிற காரணத்தால் என்றைக்காவது ஒரு நாள் இப்படிப்பட்ட ஒரு விபத்து ஏற்படும் என்று அதிகாரிகள் அறிந்தும் அதைத் தடுப்பதற்கு வழிவகைகளை அதிகாரிகள் எடுக்காமல் இருந்ததால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேர்த்தில் குற்றச்சாட்டாக சொல்லவிரும்புகிறேன். ஏன் என்றால் அதிகாரிகள் முன் எச்சரிக்கையாக இந்த இடம் விபத்திற்கு உள்ளாகும் இடம் ஆகவே இங்கே யாரும் வரக்கூடாது என்ற அறிவிப்பை



அறிவித்து இருக்க வேண்டும். அப்படி அறிவித்து இருந்தால் மக்கள் யாரும் அந்த இடத்தில் நடமாடி இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த பைப்பில் ஓட்டை விழுந்ததன் காரணமாக அந்த விபத்து நடந்து இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அங்கே உள்ள அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? அன்றாடம் இப்படிப்பட்ட பைப்புகளை பார்த்து சரியாக இருக்கிறதா? அல்லது எந்த நேரத்தில் ஓட்டை விழும்? அதை மாற்றுவதற்கு என்ன வழிவகைகளை செய்யலாம் என்று அதிகாரிகள் அதை அறிந்து அதை செய்யவில்லை. அவர்கள் அப்படி செய்யாததன் காரணமாக இன்றையதினம் 18 பேர் பாதிக்கப்பட்டு அதில் ஏறத்தாழ 3 பெண்கள் இறந்து இருக்கிறார்கள் என்பதை காணுகிறபோது இப்படிப்பட்ட ஏழைக் குடும்பத்தில் இருப்பவர்கள் பாதிக்கப்பட்ட காரணத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு நல்ல வகையில் நிவாரணம் அளிக்க வேண்டும் அவர்களுக்குப் பெரும் தொகை கொடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்லமுறையில் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். இனிமேலாவது இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும். இந்த சம்பவம் பற்றி இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதால் இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. 1-4-85 ஆம் தேதி எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கழிவு சாம்பல் வரும் பைப்புகள் சரியாகச் செயல்படாமல், உடனுக்குடன் கழிவுச் சாம்பல் வெளியே வராமல் கூடங்களில் தேங்கிக் கொள்ளும் நிலை இருந்திருக்கிறது. அங்கே பணிபுரிந்து வரும் ஆபரேட்டர்கள் கவனக் குறைவாக இருந்த காரணத்தால், கழிவு சாம்பல் வெளியே சரியான முறையில் வராமல் தேங்கிக் கொண்டிருந்திருக்கிறது. அந்தத் தேக்கத்தைக் கண்டு கொள்ளாத ஆபரேட்டர்களின் கவனக் குறைவினால், அந்த சாம்பல் வரும் பைப்பின் அருகே ஜன நடமாட்டம் இருந்ததால், அந்தப் பைப்பிலே வந்த சாம்பல் அதிகமாக் வெளிவந்ததன் காரணமாக இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த ஆப்பரேட்டர்கள் சரியான முறையிலே அந்த பைப்புகளை கிளீன் செய்து அந்தச் சாம்பலை வெளியேற்றி இருந்தால், இந்த ஆபத்துக்கள் வந்திருக்க இயலாது. ஆகவே, இதுபோன்ற நடவடிக்கைகள் மீண்டும் வராமல் இருப்பதற்காக இப்பிரச்னை குறித்து விவாதிக்க இந்த மாமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கும்படி வேண்டுகிறேன்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவரவர்களே, கடந்த 1-4-1985 ஆம் தேதி அன்றைக்கு எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கழிவு எரி சாம்பலால் ஏற்பட்டிருக்கின்ற கடுமையான விபத்தால் மூன்று பெண் தொழிலாளர்கள் மரணம் அடைந்திருக்

கின்றார்கள் என்பதோடு இன்னும் ஆறு பெண் தொழிலாளர்களின் நிலைமை ஸ்டான்லி மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் இருக்கிறது என்ற தகவலும் வந்திருக்கிறது. இந்தச் சம்பவத்தைச் சுட்டிக்காட்டுகின்றபொழுது, இது ஏதோ தனியார் நிறுவனத்தில் எற்பட்ட சம்பவம் அல்ல; அரசுத் துறைக்கு சொந்தமான ஒரு நிறுவனத்தில் நடைபெற்றிருக்கின்ற ஒரு சம்பவம் ஆகும். அரசு ஒரு மாடல் எம்ப்ளாயராக விளங்க வேண்டிய நிலைமையை மறந்து, இந்த விபத்திற்கு அடிகோலி இருக்கிறது என்று கருதுகிறேன்.

குறிப்பாக, இந்தக் கழிவு வெளியேற்றப்படும்பொழுது இந்தக் கழிவு உயிர்ப் பலியை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது என்று தெரிந்துகொண்டு, அந்த உயிர்ப் பலி ஏற்படாமல் பாதுகாப்பு வளையங்களை நிர்வாகம் ஏற்பாடு செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, நிர்வாகக் சோளாறின் காரணமாக, போதுமான உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை காலத்திலே மேற்கொள்ளாததன் காரணத்தினாலே இத்தகைய முறையில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யாததால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அனல் மின் நிலையத்தில், முன்னெச்சரிக்கையோடு, போய்க் கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு உரிய நடைமுறைகள் அங்கே இல்லை என்பதால் தான் இந்த விபத்து எற்பட்டிருக்கிறது. அதுவும், அரசுத் துறையிலே இந்த விபத்து ஏற்பட்டிருப்பதால், எதிர்காலத்திலே, அரசுத் துறையானாலும் சரி, தனியார் துறையானாலும் சரி, மிக மலிவாக இதேபோன்ற நிகழ்ச்சிகள் நடந்த பிறகு அனுதாப வார்த்தைகளால் மட்டும் அவர்களுக்குத் தேறுதல் சொல்லுவது என்கின்ற நிலைமை மாறி, இத்தகைய உயிர்ப் பலிகள் இனிமேல் ஏற்படாது என்பதற்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்பது போன்ற நிலைமைகளைப்பற்றியெல்லாம் விவாதிப்பதற்காக இந்தச் சபையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சித்தன். தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். இதைப்பற்றி விவாதிப்பதற்காக சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். காரணம், இந்தப் பாதுகாப்பு முறைகள் எல்லாம் அங்கே மீறப்பட்டதன் விளைவாகத்தான் இந்த நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மின்சார இலாக்காவில் அடிக்கடி இத்தகைய விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சில மாதங்களுக்கு முன்னால் பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலே இதே முறையிலே ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டு ஒன்பது உயிர்களைப் பலி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.



(முற்பகல் 10-20.)

அப்போதும் அந்தக் கருவிகள் மோசமான நிலையில் இருக்கின்றது என்றும் உடனடியாக பழுதுபார்க்கவேண்டும் என்றும் அதற்குத் தேவையான சேஃப்டி மெஷர்ஸ் அதாவது பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் நடைபெறவில்லை என்றும் மின்வாரியத் தலைவர், மின் வாரிய அமைச்சர், மின்வாரிய அதிகாரிகள் ஆகியோருடைய கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்திருந்தோம். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன்பிறகு ஓரிரு மாதங்களுக்குப் பிறகு துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டு 9 பேர் இறந்துவிட்டார்கள். இதே முறையில்தான் எண்ணூர் அனல் மின் நிலையத்திலும் நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. தற்செயலாக ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள் உண்டு. அதற்கு யாரும், யாரையும் குறை சொல்ல முடியாது என்பதை உணருகிறேன். ஆனால் இது தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சியாக மட்டும் நாம் கருதிவிடக்கூடாது. பாதுகாப்புக்கான முன்னேற்பாடுகள் முறையாக நடைபெறவே இல்லை. இதுவரையில் அந்தத் தொழிற்சாலையில் கண்டிராத அளவுக்கு அந்த நெருப்புக் கோளம் ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறு அந்தச் சாம்பலும், ஸ்பிலிண்டர்ஸும் வெளியே வருவதற்கான காரணத்தை ஆராயவேண்டும்.

ஏற்கெனவே இருந்த இயந்திரத்தில் சில கோளாறுகள் ஏற்பட்டன. நான் டெக்னிக்கல் அடிப்படையிலே போக விரும்பவில்லை. ஆனால் அங்கே வேலை செய்யவேண்டிய கருவிகளை எல்லாம் சரியாகப் பழுது பார்க்காத காரணத்தால் அங்கே இருந்து வெளியே தள்ளப்படவேண்டியவை முறையாகத் தள்ளப்படவில்லை. அந்த நெருப்புச் சாம்பலும் அத்தோடு சேர்ந்த பொருட்களும் அந்தக் குழாய்களிலிருந்து கீழே வந்தால் கீழே ஒரு தண்ணீர்த் தொட்டி உண்டு, அந்தத் தண்ணீர்த் தொட்டியில் அவை விழும், அந்த வகையில் அங்கே ஆபத்து ஏற்படாத முறையில் ஒரு ஏற்பாடு உண்டு. ஆனால் அது முறையாகத் தள்ளப்பட வேண்டும். முறையாகத் தள்ளப்படுகின்ற வைப்ரேட்டர் மற்றும் உள்ளே உள்ள கருவிகள் பழுதடைந்தது குறித்து அந்த இன்ஜினியர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோதிலும் அவர்கள் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இதை ஒரு நிகழ்ச்சியாக மட்டும் நான் கருதவில்லை. மின்வாரிய அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும், மீண்டும், மீண்டும் கொண்டுவரப்பட்டும் கவனிக்கப்படாத ஒரு பிரச்சினையாக இது மாறி இருக்கின்றது.

சமீபகாலமாக இத்தகைய நிகழ்ச்சிகள் அதிகமாகிக்கொண்டிருக்கின்றன. எனவே இதற்குக் காரணம் தொழிலாளர் நல இலாக்காவின் பொறுப்பிலே இந்த ஃபேக்டரிகள் எல்லாம் அவ்வப்போது கண்காணிக்கப்படவேண்டும். அவ்வாறு வேண்டிய அளவுக்கு அவ்வப்போது அந்த இலாக்கா போதுமான முறையில் செயல்படவில்லை. குறிப்பாக அரசினுடைய நிறுவனம் என்றால் அவர்கள் அதைப் புறக்கணித்துவிடுகிறார்கள். இந்த விதிமுறைகள் முறையாகக் கவனிக்கப்படுகிறதா என்பதில்

அவர்கள் போதுமான அளவுக்குக் கவனம் செலுத்துவதில்லை. ஆகவேதான் இதுபற்றி இங்கே விவாதிக்கவேண்டும் என்று வலியுறுத்தவேண்டியிருக்கிறது. மேலும் அவர்களுக்கு இப்போது வழங்கப்படுகின்ற சிகிச்சையும் போதுமானதல்ல. நான் நேற்றையதினமும் அதற்கு முன் தினமும் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். மிகப்பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்ட அந்தத் தொழிலாளர்களுக்கு வெளியிலே இருந்து மருந்து வாங்கிக்கொடுக்கவேண்டிய நிலை இருக்கின்றது. சில மருந்துகளை வாங்கிக்கொடுக்க பணத்தை நானே வசூல் செய்து என்னுடைய பாக்கெட்டிலே உள்ள பணத்தையும் போட்டு மருந்து வாங்கிக்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. உயிருக்கு ஊசலாடக்கூடிய நிலையில் இருப்பவர்கள் என்று சொல்லப்படக்கூடிய நான்கு பேர்கள் என்று கருதுகிறேன், அவர்களுக்கும் போதுமான பாதுகாப்பு மருத்துவமனையில் கொடுக்கப்படவில்லை.

கான்ட்ராக்ட் தொழிலாளர்களாக அவர்கள் இருப்பதன் காரணத்தால் அவர்களுக்கு ஈ. எஸ். ஐ. வசதி கிடைக்காது. எனவே அவர்களுக்கு முறையாக நஷ்ட ஈடு கொடுக்கின்ற வகையிலும் இத்தகைய விபத்துக்கள் இனி வராமல் இருப்பதற்கு போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டி இருப்பதாலும் இதுபற்றி முறையாக ஒரு விவாதம் நடக்க வேண்டும் என்பதாலும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டு இங்கே பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணூர் மின் நிலையத்தில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து சில கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட அந்த வேதனை தரத்தக்க நிகழ்ச்சி ஒரு எதிர்பாராத வகையில் ஏற்பட்ட விபத்து என்பதை நான் முன்கூட்டியே அறிவிக்க விரும்புகிறேன். எப்படி என்றால் ஒப்பந்தப் பணியாளர்கள் 17 பேர்கள் மழைக்கு அந்த இடத்தில் ஒதுங்கி இராவிட்டால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது. ஏதோ அது ஏப்ரல் முதல் நாள் எதிர்பாராத விதத்திலே மழையும் பெய்து, சுமார் 11.00 மணி அளவில் இந்த 17 பேரும் மழைக்கு ஒதுங்கிய இடத்திலே இந்த எரி சாம்பலும் வந்து விழுந்து அதனுடைய விளைவாக ஏற்பட்ட சம்பவம்தான் இது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வகையில் அத்தகைய எரிசாம்பல் அங்கே வந்து விழுந்தது என்பதைப் பற்றி பத்திரிக்கைகளிலே வந்த கருத்துக்களையும் எடுத்துக் கூறினார்கள். தொழிலாளர்கள் சார்பாக தரப்பட்ட கருத்துக்களையும் எடுத்துக் கூறினார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நான் உண்மையை விளக்குவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்த விபத்து ஏற்பட்ட பிறகு தொழில்நுட்ப உறுப்பினர் (உற்பத்தித் திறன்) (மின் உற்பத்தி) அவர்கள் இது சம்பந்தமாக எண்ணூர் அனல்



மின் நிலையத்திற்குச் சென்று தீவிரமாக விசாரணை நடத்தினார். அந்த விசாரணையின்பொழுது கிடைத்த தகவல் கொதிகலன், அதாவது பாய்லருக்கு வரவேண்டிய காற்று-ட்ராப்ஃபான் என்று சொல்வார்கள்; அந்தக் கரியைச் சேர்த்து எரிப்பதற்கு காற்று அனுப்புகிற விசிறி—அந்த விசிறிக்கு வரவேண்டிய காயிள் பழுதுபட்டு அந்த விசிறி போதுமான காற்றை உள்ளே அனுப்ப வில்லை. அதனால் எரி உலையில் வாக்குவம் என்று சொல்லக் கூடிய சூனியம் ஏற்பட்டு அது மிகுந்து ஓர் அழுத்தத்தைக் கொதிகலனிலே உருவாக்கி, அது உள்ளே இருந்த எரிவாயு, ப்ளூ காஸ் என்று சொல்வார்கள். அதோடு வெளியே வந்திருக்கிறது. அது வேகமாக வெளியே வந்திருக்கிறது. வெளியே வருவது சாதாரணமாக சூப்பர் ஹீட்டர் வழியாகவும் ப்ரெசிப்பிட்டேட்டர் வழியாகவும்தான் செல்ல வேண்டும். ஆனால், திடீரென்று சூப்பர் ஹீட்டருக்கு அடிப்பக்கத்தில் இருக்கக் கூடிய அந்தப் பைப்பின் வழியாக, கீழே இறங்கி, அந்தப் பைப்பின் கீழே இருக்கக் கூடிய அந்தத் தண்ணீரிலே யாவது அது கரைந்திருக்க வேண்டும். அது கரையாமல் நேராக திடீரென்று வெளியே வந்திருக்கிறது. ஆகையினாலே அது பாய்லர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதை முதலில் நான் தெளிவாக்க விரும்புகிறேன். அது எரிசாம்பலைக் கீழே இறக்குகின்ற அந்த பைப்பில் பொருத்தப்பட்ட வைப்ரேட்டர் அசைக்கக்கூடிய அந்தத் தன்மை வாய்ந்த அந்த வைப்ரேட்டர்கள் இயங்கவில்லை. ஆகையினாலே தண்ணீர் இருக்கக்கூடிய இடத்திலே போதுமான தண்ணீரும் இல்லை. அந்த இடத்திலேயும் கற்கள் இருக்கின்றன. ஆகவே, அதைப் பராமரிப்பதற்குத் தவறியவர்கள் யார் என்பதைப் பற்றி நிச்சயமாக மின்வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், பராமரிப்பு இருந்திருந்தால் மட்டும் இந்த விபத்தை நாம் தவிர்த்திருக்க முடியாது. ஏனென்றால் அது பாய்லரிலே ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சினை.

பாய்லரிலே இத்தகைய உயர் அழுத்தங்கள் திடீரென்று ஏற்படுவதை நமக்குக் காட்டுவதற்காகப் பல்வேறு கருவிகள் பொருத்தப்படுவது இயற்கை. அது செக்கோஸ்லவியா நாட்டு டிசைனிலே, அதாவது கட்டமைப்பிலே, வாங்கப்பட்ட முதல் இயந்திரம்-60 மெகாவாட் யூனிட். ஆகையினாலே போதுமான நுணுக்கங்களை தெரிவிக்கக்கூடிய கருவிகள் அதிலே பொருத்துவதற்கு வாய்ப்பு இல்லை. இந்த பெட்டர்மென்ட் ஸ்கீம் என்ற வகையிலே ரூ. 42 கோடி அளவிலே நாம் போட்டிருக்கின்றோம். போதுமான கருவிகள் அவ்வப்போது ஏற்படுகின்ற நிலைமைகளைத் தெரிவிக்கின்ற கருவிகளை, அங்கே பொருத்துவதற்கு, அதிலே இனிமேல்தான் வசதிகளை எல்லாம் செய்து வருகிறோம். ஆனால், அதே நேரத்தில் ஒன்றைப் பொதுவாகச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்ல, பொதுவாக, நம்முடைய நாட்டிலே குடியிருக்கக்கூடிய நிலைமை, பராமரிப்பு என்று வருகின்றபொழுது, நம்முடைய தொழில்நுட்ப வல்லுநர்கள் போதுமான அக்கறை காட்டவில்லை என்பதுதான் இதுவரையிலே இருக்கக்கூடிய ஒரு நிலைமை, அதாவது.

'We are very bad maintenance Engineers.' என்று சொல்வார்கள். ஆகையினாலே எப்படி ஒரு விவசாயி காலையிலே எழுந்தால் தன்னுடைய நிலத்தைப் பார்த்துவிட்டு வந்துதான் கஞ்சி குடிக்கிறானோ அதைப்போல், குறிப்பாக, பொது நிறுவனங்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பொறியாளர்களை நான் கேட்டுக்கொள்வது அலுவலகத்திலேயிருந்து கோப்புகளை அனுப்புவது மட்டும் பொறியாளர்கள் வேலை என்று கருதாமல் அவர்கள் தங்கள் கரங்களிலேயும் அழுக்குப்பட வேண்டுமென்ற உணர்வோடு தினந்தோறும் இத்தகைய பிளான்ட் அன்ட் எக்குவிப்மென்ட்ஸ், அதாவது அமைப்புக்களைச் சுற்றிப் பார்த்து அவற்றில் ஏற்படுகின்ற பழுதுகளைப் போக்கிக்கொண்டே வருவார்களானால் இத்தகைய திடீரென்று ஏற்படுகின்ற நிகழ்ச்சிகள் நிச்சயமாகத் தடுக்கப்படும். இதை மின்வாரியத்தைப் பொறுத்தவரையிலும் அந்தப் பொறியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே அந்த எரிசாம்பலைக் கீழே விழ வைக்கின்ற பைப்பிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த மெயின்டெனன்சை யார் சரிவர செய்யவில்லை என்பதற்கான பொறுப்பையும் மின்வாரியம் யார் அதற்குச் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் மீது சுமத்தும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் முன்பே சொன்னதைப்போல இந்த விபத்து அப்படி அவர்கள் அங்கே சென்றிருக்காவிட்டால் நடந்திருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் பேசுகிறபொழுது யாரும் நடமாட வேண்டாம் என்று அங்கே போர்டு போட்டிருக்கலாம் என்றார்கள்.

(முற்பகல் 10-30.)

போர்டில் போடுவதையெல்லாம் நாம் கடைப்பிடிப்பது இல்லை. சாலைகளில் குறுக்கே செல்லாதீர்கள்; சுரங்கப்பாதை வழியாகச் செல்லுங்கள் என்றால் யார் சுரங்கப்பாதை வழியாகச் செல்கிறார்கள்? ஆகவே அதனால் மட்டும் இதனை தவிர்த்திருக்க முடியுமா என்பது சந்தேகம். ஆனாலும் அத்தகைய யோசனைகளை எங்கெங்கு அமல்படுத்த வேண்டுமோ அதை அமல்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. அந்த 17 பேர்களில் 9 பெண்கள், 8 ஆண்கள். அதிலே மூன்று பேர்கள் இறந்துவிட்டார்கள். ஆறு பேர்கள் நிலைமை மோசமாக இருந்து வருகிறது. அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், நானும் ஸ்டான்லி மருத்துவமனைக்குச் சென்றிருந்தோம். அங்கே டாக்டர்களிடம் உரிய சிகிச்சை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறோம்.

எண்ணூர் அனல் மின் நிலையத்தை நானும் நேரில் சென்று பார்த்ததில் எந்த வகையில் அந்த விபத்து ஏற்பட்டது என்பதைக் கண்டறிய முடிந்தது. அதிகாரிகளிடத்தில் அதுபற்றி பேசியிருக்



கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் தங்கவேலு அவர்கள் சொல்கிறபோது, அந்தக் கட்டிடமே தலைமீது இடிந்து விழுமோ என்ற நிலையில் இருக்கிறதென்று அச்சப்பட்டார்கள். அதெல்லாம் இடிந்து விழாது. அவர்கள் அந்த அச்சத்தை அனாவசியமாக உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். பராமரிப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் என்னென்ன நடவடிக்கைகளை அரசுத் துறைகள் மேற்கொள்ளவேண்டுமோ அவைகள் கட்டாயமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே ஆபத்திற்குள்ளான, அவதிக்குள்ளான பணியாளர்கள் ஒப்பந்த பணியாளர்கள் என்ற காரணத்தால் மின்வாரியம் நேராக இழப்பீடு தருவது என்பது இயலாத காரியம். இருந்தாலும்கூட அதற்கு பொறுப்பிருக்கிறது என்ற காரணத்தால் அந்த ஒப்பந்தக்காரர் மூலமாக என்னென்ன இழப்பீடுகளுக்கு அவர்கள் உரிமை படைத்தவர்களோ அவற்றைப் பெற்றுத்தரும். மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களிடத்தில் இத்தகைய பிரச்னைகள் இருக்கின்றன என்று சொன்னபோது அவர்கள் தனது நிதியிலிருந்து இறந்தவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாயும், காயமுற்றவர்களுக்கு 500 ரூபாயும் என்ற வகையில் முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு இடைக்காலப் பரிகாரமாக அவர்கள் தந்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க செய்தி. ஆகவே அரசின் சார்பில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதால் அவையை ஒத்திவைத்துதான் விவாதிக்க வேண்டுமென்று அவசியம் நிசசயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. அறிவிப்புகள்

### (அ) அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக்குழு—உறுப்பினர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (சிண்டிகேட்) ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று 2–4–1985 அன்று பேரவையில் செய்த அறிவிப்பில் கீழ்க்கண்ட மாற்றங்களை அறிவிக்கிறேன். வேட்பு மனுக்களைத் திரும்ப பெறுவதற்கான தேதி 10-4-1985 புதன் கிழமை காலை 11-00 மணி எனவும், வாக்கெடுப்பு தேவைப் பெறின் 11–4–1985 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 1–00 மணிக்கும் இடையே கோட்டையில் உள்ள சட்ட மன்றக் குழுக்கள் கூடும் அறையில் நடைபெறும் எனவும் நான் அறிவிக்கிறேன். வேட்பு மனுக்களைப் பெறுவதற்காக குறிப்பிட்ட நாள் மற்றும் வேட்பு மனுக்களை ஆய்வு செய்வதற்காக குறிப்பிட்ட தேதிகளில் மாற்றம் எதுவும் இல்லை.

5. கவன ஈர்ப்புகள்

(அ) கோவை மாவட்டத்தில் பல ஆலைகள் மூடப்பெற்றுள்ளதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. சின்னராசு, ஆ. நடராசன், [illegible] தங்கவேலு, ஜெ. ஹேமச்சந்திரன், குமரமணி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ், வசந்தா மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ், ஸ்ரீ ஹரி மில்ஸ், திருப்பூர் காட்டன் மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், பத்மா மில்ஸ் ஆகியவை மூடப்பட்டுள்ளதால் அத்தொழிலாளர்கள் வேலை இழந்து துன்பப்படும் நிலை குறித்த அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

கோவை மாவட்டத்தில் தற்போது செயல்படாமல் உள்ள சட்டமன்ற அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொழில் நிறுவனங்களின் விவர அறிக்கை வருமாறு:—

(1) இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ்: இந்நிறுவனத்தில் 850 நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் 95 தற்காலிக தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர். பங்குதாரர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இந்நிறுவனத்தை கலைத்துவிட உயர் நீதிமன்றத் தீர்ப்பு பெற்று இருந்தனர். இதன் பேரில் தொழிலாளர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு ரிட் மனு மூலம் முறையீடு செய்ததில் நிறுவன கலைப்பில் தொழிலாளர்களையும் ஒரு பாகமாக கருதி அவர்களது கருத்தையும் கேட்க வேண்டுமென்றும் தீர்ப்பு வழங்கியது. இந்நிறுவனத்தை 27-12-1981 முதல் கலைப்பு அலுவலர் ஏற்று நடத்தி வந்தார். தொழில் மந்தத்தாலும் நிதி சரியில்லாத் தன்மையாலும் அனைத்து தொழிலாளர்களுக்கும் வேலை விட்டு தொழிலாளர்களுக்கு ஊதியம் கூட வழங்க இயலாத நிலையில் தொழிற்சாலை கடந்த 3-9-1984 முதல் மூடப்பட்டது.

(2) பத்மா மில்ஸ், காளப்பட்டி: 4000 கதிர்களைக் கொண்ட இந்நிறுவனம் 110 தொழிலாளர்களுடன் இயங்கி வந்தது. நிதி நெருக்கடி காரணமாக 25-2-1981 முதல் இயங்கவில்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு தலா ரூ. 200/- வீதம் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து அளிக்க 14-9-1984 அன்று அரசு ஆணையிட்டு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.



(3) தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், ஆனைப்புதூர், கோவை.—4000 கதிர்களையும் சுமார் 250 தொழிலாளிகளையும் கொண்ட இவ்வாலை நிதி நெருக்கடியால் 8-6-81 முதல் செயல்படவில்லை. பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு தலா ரூ. 200/- வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 4-8-84 அன்று அரசாணை மூலம் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

(4) கோவை ஜனார்த்தனா மில்ஸ் லிமிடெட்.—25,936 கதிர்களையும் சுமார் 700 தொழிலாளிகளையும் கொண்ட இவ்வாலை மெதுவாக வேலை செய்தல், வன்முறை செயல்கள் ஆகியவற்றில் ஈடுபட்டதாகக் கூறி 7-8-83 முதல் கதவடைப்பு செய்தது. இவ்வாலை நலிவுற்ற நிலை அடைந்து பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு தலா ரூ. 200/- வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5-5-84 நாளிட்ட அரசு ஆணை மூலம் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகம் இந்த ஆலையை தொடர்ந்து நடத்த வாய்ப்பு உள்ளது என்று முறையிட்டதின் பேரில் தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தை மேற்கொண்டுள்ளார்.

(4) வசந்தா மில்ஸ் லிமிடெட், கோவை.— 47,521 கதிர்களையும் 366 தறிகளையும் சுமார் 1,765 தொழிலாளிகளையும் கொண்ட இவ்வாலை பஞ்சு இல்லாமை நிதிப் பற்றாக்குறை தொழிலாளிகளின் நிதானமாக வேலை செய்யும் போக்கு மின்சார வெட்டு, பஞ்சு விலையேற்றம், நூலுக்கு சரியான விலை இல்லாதது சிக்கன சீரமைப்பு பற்றி ஒப்பந்தம் செய்ய சங்கங்கள் ஒத்துழையாமை காரணங்கள் காட்டி 12-11-84 முதல் செயல்படவில்லை. ஆலையில் தொடர்ந்து ஏற்படும் நஷ்டத்தை தவிர்த்து உற்பத்தியை பெருக்க முடியாத காரணத்தினால், வங்கிகள் மேலும் நிதி உதவி அளிக்க முன்வரவில்லை என்றும், இந்த ஆலையை ஒரு நலிவுற்ற ஆலையாக அறிவித்து உத்தரவிட வேண்டுமென்றும் நிர்வாகம் கோரியது. தொழிற்சங்கங்களின் சார்பில், நிர்வாகத்தின் கருத்துக்களை ஏற்பதற்கில்லையென்றும், தொழிலாளர்கள் வேலை பார்த்த காலத்திற்கு உண்டான சம்பளத்தையும். போனஸ் தொகையையும், உடனடியாக பட்டுவாடா செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது, கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இப்பொருளில் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டுள்ளார். இதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

(5) ஸ்ரீஹரி மில்ஸ் லிமிடெட், ஒண்டிபுதூர், கோவை.—27,216 கதிர்களையும் சுமார் 657 தொழிலாளிகளையும் கொண்ட இந்நிறுவனம் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 1984 ஆகிய மூன்று மாதங்களுக்கு தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்ற காரணத்திற்காக 8-4-84 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வந்தனர். இப்பிரச்சினை குறித்து கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் மற்றும் கோவை மாவட்ட ஆட்சியாளர் முன்பு பேச்சு வார்த்தைகள்

நடைபெற்றன. அப்பொழுது நிர்வாகத்தின் சார்பில் இண்டஸ்ட்ரியல் ரிகன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷனிலிருந்து ரூ. 1.2 கோடி முன்பணம் கேட்கப்பட்டுள்ளது என்றும், அந்தப் பணம் இல்லாமல் ஆலையை நடத்த இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் தொழிலாளர்கள் 17-8-84 முதல் வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொண்டனர். ஆனால் நிர்வாகம் அவர்களுக்கு வேலை அளிக்க இயலாத காரணத்தால், ஆலை இயங்கவில்லை. மேலும் இந்த ஆலையை 29-9-84 நாளைய 1185 எண்ணிட்ட தொழிற் துறை அரசு ஆணையின் மூலம் 1-10-84 லிருந்து ஒரு வருடத்திற்கு தமிழ்நாடு நிவாரண சட்டத்தின் கீழ் ஒரு நிவாரண ஆலையாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலையை மீண்டும் இயக்குவது பற்றிய பிரச்சினையில் 4-2-85 அன்று கோவை மாவட்ட ஆட்சியாளர் நிர்வாகப் பிரதிநிதியிடம் பேசியபோது பம்பாயிலுள்ள நிதி நிறுவனத்திலிருந்து பணம் பெற முயற்சி செய்வதாக அவர் கூறினார். மேற்கொண்டு நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 200 அளிக்க 23-3-85 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(6) திருப்பூர் காட்டன் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிமிடெட்.—திருப்பூர். 15,386 கதிர்களையும் சுமார் 500 தொழிலாளர்களையும் உடைய இந்நிறுவனம் 21-10-84 முதல் நிதி நெருக்கடியின் காரணமாக நிர்வாகம் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கவில்லை. அவர்களுக்கு லேஆப் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்பிரச்சினையில் கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றது. 3-8-84 நாளிட்ட தொழில் துறை அரசு ஆணையில் இந்த ஆலை ஒரு நிவாரண நிறுவனமாக 3-8-85 வரை அறிவிக்கப்பட்டுள்ளது. கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இருதரப்பினரிடமும் பேச்சு வார்த்தை மேற்கொண்டுள்ளார்.

2. பொதுவாக நிதி நெருக்கடி காரணமாக இந்த பஞ்சு ஆலைகள் இயங்காமல் உள்ளன. ஆலையை மீண்டும் திறந்து இயக்குவதற்கு இந்த நிர்வாகங்கள் கோரும் சில முக்கியமான சலுகைகள் பின்வருமாறு:—

(1) போதிய நிதி உதவிக்கு வங்கிகள் மூலமோ அல்லது வேறு நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலமோ அரசு ஏற்பாடுகள் செய்தல்.

(2) மின்கட்டணத் தொகை, பிராவிடண்ட் பன்ட், இ.எஸ்.ஐ., விற்பனை வரி, கூட்டுறவுப் பண்டக சாலைக்குச் சேர வேண்டிய தொகை முதலியவற்றில் தவணை முறையில் செலுத்துதல்.

(3) ஆலையில் சிக்கன சீரமைப்பு அடிப்படையில் புதிய வேலைப்பளு புகுத்தப்பட்டு அதன் அடிப்படையில் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கு தொழிலாளர்கள் ஒத்துழைக்க வேண்டும்.



(4) தொழிலாளர்களுக்குத் தற்காலிக சம்பள வெட்டு, சட்டப்படி சேரவேண்டிய தொகைகள் (ஈட்டிய சம்பளப் பாக்கி உட்பட) தவணை முறையில் தொழிலாளர்களுக்கு வழங்குதல்.

(5) ஆலைகளைத் தமிழ்நாடு நிவாரணச் சட்டங்களின் கீழ் ஓர் நிவாரண நிறுவனமாக அறிவித்தல்.

(6) நிதிநிலைமை பாதிக்கக்கூடிய கோரிக்கைகளை தொழிலாளர்கள் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு (சுமார் 5 வருடம்) எழுப்பக் கூடாது.

(7) சுயமாக வேலையிலிருந்து ஓய்வு பெறும் திட்டத்தின் மூலம் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

(8) ஆலை இயங்காத காலத்திற்கு ஊதியம் இல்லை.

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரை சிக்கன சீரமைப்பு புகுத்துதல், சுயமான ஓய்வு பெறும் திட்டம், கோரிக்கைகள் எழுப்புவதற்குத் தடை மற்றும் இதர பண சம்பந்தப்பட்ட பிரச்சினை ஆகியவைகளில் இரு தரப்பினருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி அதன் மூலமே தீர்வு காண முடியும். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஆலைகளை சீராக இயக்குவதற்கு மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை ஓரளவாவது ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கும்.

இவ்வரசை பொறுத்தமட்டில் ஏற்கனவே 7-12-83-ல் பத்மா மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், ஜனார்தனா மில்ஸ் ஆகியவற்றை தேசியமயமாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரும் மைய அரசைக் கோரியிருந்தார். மைய அரசும் பருத்தித் துணி தொழிலுக்கான ஒரு குழுவினை அமைத்துள்ளது. மைய அரசின் தொழிலாளர் துறைச் செயலரும் 11-3-85ல் நலிந்த ஆலைகளை பொறுத்தமட்டில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க ஒரு கூட்டம் கூட்டியிருந்தார், மைய அரசும் மூடப்பட்ட ஆலைகளில் இயங்கக் கூடியவைகளைத் திறப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து வருகிறது.

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் வைத்துள்ள அறிக்கையில் மூன்று மில்களை பத்மா மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் மற்றும் ஜனார்த்தனா மில்ஸ் ஆகியவற்றை நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலமாக எடுத்து நடத்த வேண்டுமென்று 7.12-1983-ல் தெரிவித்திருப்பதாக தெரிவித்து இருக்கிறார்கள்.

ஆனால் 11-3-85-ல் தான் மைய அரசுத் தொழிலாளர் நலத் துறைச் செயலாளர் இங்கே வந்து கூட்டத்தை நடத்தியிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த காலதாமதத்தை தவிர்த்து, இந்த மூன்று மில்களை மட்டுமல்லாமல் எஞ்சியிருக்கிறஇரண்டு மில்களையும் கூட தேசியப் பஞ்சாலை நிறுவனமே எடுத்து நடத்த வாய்ப்பும் வசதியும் இருக்கிறது.

ஏற்கெனவே நடத்திக்கொண்டிருக்கிற மில்களின் வாயிலாக கணிசமான இலாபம் இருக்கிறது. ஆகவே இந்த மில்களை தேசியப் பஞ்சாலைக் கழகத்தின் மூலம் எடுத்த நடத்த வேண்டுமென்று மாநில அரசு வலியுறுத்த வேண்டும்.

அதைப்போன்று வசந்தா மில்லைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நல ஆணையர் மூலம் ஒப்பந்தம் ஏற்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது என்று நான் அறிகிறேன். அந்த ஒப்பந்தத்தையும் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

அது மட்டுமல்ல. நலிவுற்ற நிறுவனங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிற திருப்பூர் காட்டன் மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ் ஆகியவற்றையும் தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலம் எடுத்து நடத்த அரசு ஆவண செய்ய முன்வருமா? ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டதை வரவேற்கிறேன் மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் எழுப்பியிருக்கிற வினாக்களுக்கு உரிய விளக்கம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, கோவையில் மூடப்பட்டிருக்கிற 6 மில்களில் ஜனார்த்தனா மில்ஸ் வசந்தா மில்ஸ் ஆகிய இரண்டு ஆலைகளைப் பொறுத்தவரையில் வருகிற 9–ந்தேதியன்று ஜாயின்ட் கமிஷனர் ஆப் லேபர், சென்னை அவர்கள் முன்னால் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையின்போது ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

திருப்பூர் காட்டன் மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ் ஆகிய இரண்டு மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக இன்று காலை அதாவது 4-4-85 அன்று காலை கோவையில் துணைத் தொழிலாளர் நல ஆணையாளர் (டெபுடி கமிஷனர் ஆஃப் லேபர்) முன்னிலையில் பேச்சு வார்த்தை நடந்துக்கொண்டிருக்கிறது. அநேகமாக அந்தப் பேச்சு வார்த்தை மன நிறைவோடு முடிவுறும் என்று எதிர்ப்பார்க்கிறோம்.

பத்மா மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் ஆகிய இரண்டு மூடப்பட்ட ஆலைகளைத் திறந்திட இதுவரை அரசு முயற்சி எடுக்கவில்லை. ஏறத்தாழ 400 தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நிர்வாகம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லைஎன்றாலும்அரசு மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக நிவாரண முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் பேச்சுவார்த்தைகளில் சுமூகமான முடிவை நிர்வாகம் அளிக்கவில்லை என்றால் ஏற்கெனவே 1983 ஆம் ஆண்டில் கோவையில் இலட்சுமி மில்ஸ், ஜோதி மில்ஸ் ஆகிய இரண்டு ஆலைகளையும் எந்த அடிப்படையில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அதே அடிப்படையில் மூடப்பட்ட ஆலைகளைத்திறக்க சாத்தியக்கூறு உண்டா என்பதை அரசு பரிவுணர்வோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ஆ. நடராசன்: தலைவரவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஒருசில விளக்கங்களைத் தந்தார்கள். இந்த ஆலைகளைப் பொறுத்தவரையில் கடந்த 4 ஆண்டுகாலமாக மூடப்பட்டிருக்கின்றன. சில ஆலைகளில் 200 ரூபாய் வீதம் உதவித் தொகை தந்திருந்தாலும் 4 ஆண்டு காலம் அந்தத் தொழிலாளர்கள் துன்பத்திலும் துயரத்திலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த 200 ரூபாய் உதவித் தொகை என்பது மிக மிகக் குறைவாக இருக்கிறது. அடுத்து வேலைப் பளுவைக் கூட்டுவதற்கும், சம்பளத்தை குறைப்பதற்கும் 5 ஆண்டு காலத்திற்கு நிதி சம்பந்தப்பட்ட கோக்கைகளை எழுப்பக்கூடாது என்பதற்கும், மின் கட்டணம், பிராவிடன்ட் பன்ட், இ.எஸ்.ஐ. விற்பனை வரி போன்றவற்றைத் தவணை முறையில் கட்டுவதற்கும் ஆலைகள் திட்டமிட்டு இப்படிபட்ட ஆலைகளை மூடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இந்த ஆலைகளைத் திறப்பதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கே. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே நான் எடுத்துச் சொன்னதைப்போல, இன்றும் வருகிற 9-ந்தேதியன்றும் பேச்சுவார்த்தை நடைபெற இருக்கிறது. அதன் பிறகு உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

(முற்பகல் 10–40)

திரு. வி. தங்கவேலு: தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் இராமகிருஷ்ணா இன்டஸ்ட்ரிஸ், வசந்தா மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ், திருப்பூர் காட்டன் மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், பத்மா மில்ஸ் ஆகிய இந்த ஆறு ஆலைகளும் எப்போது பார்த்தாலும் தொழில் செய்ய முடியவில்லை என்று சொல்லி, பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டு, ஆலைகளை மூடுகின்ற வகையிலே பணியாற்றுகிறார்கள் நிர்வாகிகள். அப்படி பார்க்கிறபோதுகூட இந்த ஆலையள் ஊழியர்களை நம்பி, சொந்தக்காரர்களை நம்பி சரியாக நடக்கவில்லை. ஆனால் இப்படிப்பட்ட ஆலைகளுக்கு, தேசிகமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பல கோடிக்கணக்கான ரூபாய்கள் நீண்டகாலக் கடனாகத் தரப்பட்டிருக்கிறது. அப்படித் தந்தும், அந்த ஆலைகள் மூடப்படுகிறது என்றால், தொழிலாளர்கள் நலனுக்காக அந்த ஆலைகள் சரியாக நடத்தப்படவில்லை என்பது தெரியவருகிறது. இனியாவது இப்படி ஆலைகள் மூடப்படுகிற போது அதிலே தொழிலாளர்கள் நலனுக்காக தொழிலாளர்களை வைத்து நடத்தக்கூடிய அளவிற்கு கூட்டுறவுத் தொழிலாளர், சங்கத்தின் சார்பாக இந்த ஆலைகளை அவர்களுக்குத் தந்துந்த 6 ஆலைகளையும் எப்போதும் மூடாதவாறு ஏற்று நடத்துவதற்கு ஆவன செய்வார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் டெல்லியில் நடந்த பட்ஜெட் தொடர்க் கூட்டத்தில் டெல்லியில் உள்ள நிதியமைச்சர் அவர்கள், அது போன்ற சிக்மில்களுக்கு பொறுப்பாக இருக்கின்ற

மேனேஜ்மெண்ட்கள் மீது மிகுந்த கடுமையாக இருப்பதற்காக ஒரு சட்டம் கொண்டு வர இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகாது என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே விவர அறிக்கையில் 5-வது பக்கத்திலும், 6-வது பக்கத்திலும் கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய யோசனைகள், முதலாளிகள் இன்று என்ன நிபந்தனைகளைத் தொழிலாளர்கள் தலையில் கட்டுவதற்கு முயற்சிக்கிறார்களோ, அந்த நிபந்தனைகள் தான் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இது தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பெரிய சிரமத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருக்கிறது என்ற காரணத்தால், அந்த நிபந்தனைகளை அரசு எற்றுக் கொள்ளாமல், விவர அறிக்கையின் முதல் பக்கத்திலே குறிப்பிடப்பட்டு இருப்பதைப் போல உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் இப்படி மூடுவதற்கு முன்னாலே தொழிலாளர்களைக் கலந்து, தொழிலாளர்களுக்கு என்னென்ன முறையில் பாதுகாப்பு, நிவாரணம் அளிக்க வேண்டுமோ, அந்த முறையில் ஏற்பாடுகளை செய்து விட்ட பிறகு தான் அந்த ஆலைகளை மூடுவதற்கான விதிகளை அல்லது சட்டத்தை இயற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மைய அரசு இதைப்பற்றி மனதில் அக்கறை கொண்டு, அண்மையில் பருத்தி, துணித் தொழில்களுக்கு ஒரு சிறப்புக் குழுவை அமைத்து இருக்கிறது. அது மட்டுமில்லாமல், கடந்த மார்ச் 11—ஆம் தேதி, மைய அரசின் தொழிலாளர் துறையின் செயலாளர், அனைத்து இந்தியாவில் உள்ள மாநிலங்களின் தொழிலாளர் துறைச் செயலாளர்களின் கூட்டத்தை ஏற்பாடு செய்து, அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தை மையமாக வைத்து விவாதித்து இருக்கிறார்கள். அடுத்த 2 வாரங்களுக்குள்ளாக மீண்டும் அவர்கள் கூடி ஆராய இருக்கிறார்கள். அப்போது இந்தப் பிரச்சனை மைய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படும்.

(ஆ) கோவை மாநகராட்சி விதித்துள்ள கூடுதல் தண்ணீர் வரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு: அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் திரு. மு. இராமநாதன் இருக்கையில் இல்லை. திரு. கு. ரமணி அவர்கள் அதனை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "கோவை மாநகராட்சியில் தற்போது விதித்துள்ள கூடுதல் தண்ணீர் வரியானது பொது மக்கள் தாங்க முடியாத அளவிற்கு மீறிய வரி விதிப்பாக இருக்கின்ற நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாநகராட்சியில் சிறுவாணி குடிநீர்த் திட்டம் ரூபாய் 21.65 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு அரசு ரூ. 16.65 கோடியும், ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 5.00 கோடியும் கடனாக வழங்கி உள்ளன. இக்கடன் 22 ஆண்டுத் தவணைகளில் 8½% வட்டியுடன் செலுத்தப்படவேண்டும். அதற்கு கோவை மாநகராட்சி வழி வகை செய்ய வேண்டியுள்ளது. தண்ணீர்க் கட்டண உயர்வு 1-11-78-லிருந்து உயர்த்த நகரமன்றம் தீர்மானித்தது. எனினும். இது தள்ளி வைக்கப்பட்டு இறுதியில் 1-4-83 முதல் அமுல்படுத்தப்படுகிறது. இதன் விவரம் கீழ் வருமாறு:—

| வ.எண் | இனம் | முன்பிருந்த விகிதம். | உயர்த்தப்பட்ட விகிதம். |
|---|---|---|---|
| 1. | வீட்டு இணைப்புகளுக்குத் தண்ணீர்க் கட்டணம் (domestic) | 4500 லிட்டருக்கு ரூ. 1.60 | 4500 லிட்டருக்கு ரூ. 5/- (குறைந்த பட்சம் ரூ. 6/-) |
| 2. | வீட்டு இணைப்பு அல்லாத இனங்களுக்கு (Non-Domestic) | 4500 லிட்டருக்கு ரூ. 3.00 | 4500 லிட்டருக்கு ரூ. 10/— (குறைந்த பட்சம் ரூ. 20/-) |

2. கோயம்புத்தூர் நகராட்சி மாநகராட்சியாக மாறுவதற்கு முன்பு சொத்து வரி ஆண்டுக்கு 24% ஆக இருந்தது. இதில் தண்ணீர் கட்டணம் 8¾% அடங்கியிருந்தது. மாநகராட்சிச் சட்டத்தில் குறைந்த பட்சம் சொத்து வரி 36% ஆகும். இதில் தண்ணீர் வரி 13%. இவ்வரி 1—10—1983 முதல் அமலுக்கு வந்து உள்ளது. சிறுவாணித் திட்டத்தினால் விளையும் நன்மையையும் அதனால் மாநகராட்சிக்கு ஏற்பட்டுள்ள செலவையும் பொறுப்பையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும் போது தண்ணீர் விகிதமும் (Rate) கட்டணமும் அளவோடுதான் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 1985-86 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம்..

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் பெற கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும்.. நமது ரூல்ஸ்ஸே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேண்டாம். ரூலை நானே படிக்கிறேன். Provided that if the Member who has given notice is unavoidably. absent, any other member, with the permission of the Speaker may call the attention of the Minister on his behalf. என்று இருக்கிறது. (குறுக்கீடு)

நாம் இதுவரையில் இந்த ரூலை பாலோ பண்ணிக் கொண்டு வந்தோம். இப்பொழுது உங்களை கேள்வி கேட்க அனுமதித்தால், இனிமேலே உறுப்பினர்கள் நோட்டீஸ் கொடுத்து விடுப் போய் விடுவார்கள், வேறு ஒருவரை வைத்துக் கேள்வி கேட்டுக் கொள்ளலாம் என்ற நிலை வந்து விடும்.... (கூச்சல், குழப்பம்)

திரு. கு. ரமணி: நீங்கள் கேள்வி கேட்க அனுமதிக்கலாம். உங்களுடைய டிஸ்கிரிஷன் பவர் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு பொதுப் பிரச்னை என்ற வகையில் தான், நோட்டீஸ் கொடுத்த் மெம்பர் இல்லை யென்றாலும் உங்களை எழுப்ப அனுமதித்தேன். அமைச்சர் அறிக்கையைத் படித்தார். அத்துடன் அப்படியே விட்டுவிட்டு, வேறு ஒன்றிற்குப் போவதுதான் இதுவரை நாம் கடை பிடித்து வந்த மரபு. அந்த மரபை பின்பற்றாமல் இப்போது நாம் முறையை மாற்றி விட்டால், நோட்டீஸ் கொடுத்து விட்டால் போதும், யார் வேண்டுமானாலும் கேள்வி கேட்டுக் கொல்ளலாம் என்று இங்கேயும் பிராக்சி வந்து விடும். இங்கே பிராக்சி வேண்டாம். (குறுக்கீடு) மரபு இருக்கிறது......

திரு. ப. பொன்னுரங்கம்: மரபு இருக்கட்டும். ரூல்ஸ் இருக்கிறதே. மரபைத் தவறாக இதுவரையில் பின்பற்றி வந்திருந்தால், தொடர்ந்தும் அதையே பின்பற்ற வேண்டுமா? ரூல்ஸிலே கொடுக்கலாம் என்று இருக்சிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஒரு மரபை 40 ஆண்டு களாகப் பின்பற்றுகிறோம். ஒரு நல்ல காரணத்திற்காக ஒரு நல்ல முன்மாதிரிக்காகத்தான் நான் இப்போது அனுமதிக்க மறுக்கிறேன். நாம் பேசிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் உங்களைக் கேள்வி கேட்க விட்டிருக்கலாம. ஆனால் இதே முறையைப் பின்பற்றினால் எதிர்காலத்திலும், நோட்டீஸ் கொடுத்தவர் வராவிட்டால், வேறு யாரையாவது வைத்து இரண்டு கேள்விகள் கேட்டுக் கொள்ளலாம் என்று வந்து விடும். நோட்டீஸ் கொடுத்தவர் கண்டிப்பாக வரவேண்டும் என்று தான் இந்த மரபு பின்பற்றப்படுகிறது....(குறுக்கீடு)



திரு. ப. பொன்னுரங்கம் : ரூல்ஸை நான் படிக்கிறேன்....

திரு. கு ரமணி : உங்களுக்கு டிஸ்கிரீஷன் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான், நோட்டீஸ் கொடுத்தவர் இருக்கையில் இல்லை என்று சொல்லிவிட்டு, வேறு யாரையும் அழைக்காமலேயே இதைத் தள்ளி யிருக்கலாம். அதுவும் என்னுடைய டிஸ்கிரிஷனில்தானே இருக்கிறது......(குறுக்கீடு) கோயம்புத்தூர் நகராட்சியைப் பற்றியது ஆயிற்றே என்றுதான் திரு. ரமணியைக் கொண்டு வர அனுமதித்தேன்......(குறுக்கீடு) அப்படி இல்லாமல் நானே பார்த்துவிட்டு, உறுப்பினர் இருக்கையில் இல்லை என்று சொல்லி ஆட்டோமெடிக்காக விட்டிருக்கலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : அது எப்படி விட முடியும்? ரூல்ஸ் இருக்கிறதே. நோட்டீஸ் கொடுத்த மெம்பர் இல்லை என்றால், தள்ளிவிடலாம் என்று இருக்கிறதா என்ன ? நீங்கள் ரூல்ஸை இதுவரையில் தப்பாகப் பின்பற்றியிருக்கிறீர்கள். தொடர்ந்தும் அதையே பின்பற்ற வேண்டுமா ? நான் படிக்கிறேன் ரூல்ஸை......

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் வாதம் வேண்டாம். இது நான் கொடுத்த தீர்ப்பு. (குறுக்கீடு) அதனை பிராக்சியாக்க வேண்டாம். சில முறைகளை நாம் பின்பற்றினாலும், சில நேரம் சில முறைகள் ரூலை ஓவர்டேக் பண்ணித்தான் போகிறது. இதற்கு அனுமதித்தால், இது ஒன்றுக்கு மட்டும் கொடுத்துவிட்டு அதற்கு மேலே இது பிரிசிடெண்ட்டாக கிடையாது. இனிமேல் உறுப்பினர் இடத்தில் இல்லையென்றால், இது போய்விடும். இப்போது நான் அலௌவ் பண்ணிவிட்டால், இதுதான் முதலும் கடைசியுமாக இருக்க வேண்டும். இல்லையென்றால், எல்லோருமே கவன ஈர்ப்பு எழுதிக்கொடுத்துவிட்டு ஊருக்குப போய்விடுவார்கள். நான் ஒரு மரபைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறேன். அதற்கு எல்லோரும் ஒத்துழைத்தால் நல்லது. அவை மரபுக்காக நான் சொன்னேன். தவறான மரபு என்று எப்படி சொல்வது ?

திரு. ப. பொன்னுரங்கம் : ரூலுக்கு அகேன்ஸ்ட்டாக இருந்தால் தவறான மரபுதானே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில நேரம் சின்ன கோர்ட்டிலே கொடுக்கும் தீர்ப்புக்குக் கூட எதிர்ப்பு இல்லை. இங்கு எதிர்ப்பு ஜாஸ்தியாக இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருகிறவர்கள் தான் அமைச்சருடைய கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பது விதி. கவன ஈர்ப்பு கொண்டுவருகிறவர்கள் அவையிலே இல்லை என்றால் மாண்புமிகு தலைவர் அவர்கள் விரும்பினால், அவருடைய விருப்பப்படி வேறு ஒருவரை அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்க விட்டுவிட்டு பதில் சொல்ல விடலாம். இது மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு இருக்கின்ற உரிமை. மாண்புமிகு உறுப்பினர் கவன ஈர்ப்பு கொண்டு வந்தபோது, கவனத்தை ஈர்க்காத நிலை இருக்கும்போது அமைச்சர் அவர்களை நீங்கள் பதில் சொல்ல விட்டுவிட்டதன் காரணமாக இன்று மட்டும் அந்தத் தொகுதியோடு தொடர்புடைய ஒருவரைத் தாங்கள் துணைக் கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கலாம். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற அளவுக்கு அனுமதித்தாகிவிட்டது. முடிந்தாகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே கூட Provided further that the Speaker suo motu may direct that the statements on the matter may be made if the importance of the subject so warrants. என்று இருக்கிறது. நானே கூடச் செய்திருக்கலாம். நான் ...னநாயகத்தை கொஞ்சம் அதிகப்படுத்தினேன். சிலது என் மனத்திற்குத்தான் தெரியும். அதைச் செய்ய விடமாட்டேன் ...ன்கிறீர்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நீங்கள் மற்ற உறுப்பினரை உங்களுடைய டிஸ்கிரிஷன் அது பிரகாரம் கூப்பிட்டது நல்ல அம்சம். காரணம் இந்தப் பிரச்சினை. அப்படிப் பட்ட முக்கியமான பிரச்சினை. நான் எழுந்து அவருடைய அட்டென்ஷனை ஈர்த்தேன். அவர் ஸ்டேட்மெண்ட் வைத்தார். ஒரு கேள்வி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வியை இன்றைக்கு அனுமதிக்கிறேன். பியூச்சரில் கிடையாது. இது என்னுடைய தீர்ப்பு.

திரு. இரா. தாமரைக்கனி : எல்லோரையும் நீங்கள் அனுமதிக்க வேண்டும். எதிர்க் கட்சிக்கு ஒரு நியாயம், எங்களுக்கு ஒரு நியாயமா ?

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த விஷயம் மிக முக்கியமான பிரச்சனை. கோவை மாநகரத்தினுடைய 7, 8 இலட்சம் மக்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான பிரச்சனை. எனவே தான் இதுபற்றி கேட்டேனே தவிர முறையை மீற வேண்டும் என்று அல்ல. நீங்கள் அனுமதித்து விட்டீர்கள், வரவேற்கிறேன்.

அமைச்சர் அவர்களிடம் நான் கேட்கும்போது சிறுவாணி நீருக்கு இவ்வளவு செலவாச்சு என்றுசொல்லுகிறார். மாநகராட்சி என்று ஆன பிறகு, அதனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும்படியான வரி விகித உயர்வு, அதுஅல்லாமல் சிறுவாணி நீர் கிடைத்ததால்



இருக்கும்படியான செலவு முழுவதையும் ஜனங்களிடமிருந்து தண்ணீருக்கு விலையாக வாங்குவது சாத்தியம் இல்லை. இன்று அவர்களுக்குக் கிடைக்கும்படியான ப்ரீ அலவன்ஸ் தண்ணீர் மிகக் குறைவு. 270 லிட்டர் தான் பிரீ அலவன்ஸ் ஒரு நாளைக்குக் கிடைக்கிறது. இப்படிக் குறைந்த அளவுக்குக் கொடுத்தும் 2, 3, 5, 10 மடங்கு என்று வரியை — அது மாநகராட்சியாகிவிட்டது என்ற காரணத்திற்காக — உயர்த்தி இருப்பது ஒரு அநீதியான உயர்வு என்று மக்கள் மத்தியிலே கருதது இருக்கிறது. ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கவுன்சில் வருகிற வரைக்கும் அதை உயர்த்தாமல் முன்பு இருந்தமாதிரியே வைப்பதற்கு அரசு முன்வரவேண்டும். ஏற்கெனவே ஒரு முறை இப்படி உயர்த்தியபோது அமைசசர் அவர்கள் சொல்லியதை ஏற்றுக்கொண்டு உத்தரவிட்டிருக் கிறார்கள். அதே முறையிலே இதற்குச் செய்யவேண்டும். இப்போது ஹைகோர்டிலே கேஸ் போடப்பட்டு நிறுத்தப் பட்டிருக்கிறது. நான் குறிப்பிட்ட மாதிரி அமைச்சர் அவர்கள் அதை உயர்த்தாமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட் குழு வருகிற வரைக்கும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் நமக்குக் கொடுத்த தொகையைக் கேட்காமல் இருந்தால் அதைத் தள்ளிப்போடுவதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். ஆனால் கடனும் கடனுக்கு வட்டியும் சேர்த்து அவர்களுக்கு நாம் கட்டவேண்டியிருக்கிறது. வரி அதிகமாகிறது என்றால் வசதியும் அதிகமாகிறது என்றுதான் பொருள். ஆகவே அதையெல்லாம் உத்தேசித்துத்தான் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதை நிறுத்துவதற்கு இல்லை.

## 6. வரவு-செலவுத் திட்டம் 1985–86 பொது விவாதம் (தொடர்ச்சி).

திரு. த. புஷ்பராஜ் : தலைவர் அவர்களே, 1985–86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது எனது உரையை நான் ஆற்றுவதற்கு முன்பு உலக அரங்கில் இந்திய நாட்டினுடைய அந்தஸ்தை உயர்த்துவதற்காகவும் இந்திய நாட்டிலே உள்ள கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து வதற்காகவும் இரவு பகல் என்று பாராது பாடுபட்ட இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக தன்னுடைய உயிரைக் கொடுத்த அன்னை இந்திராகாந்தி அவர்களை வணங்கி என்னை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த திருமயம் தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கைப் பிரகாரம் வருகிற ஆண்டுகளிலே 4850 குழாய்க் கிணறுகள் போடப்படும் என்று அறிவித்திருக்

கிறார்கள். தமிழ்நாடு என்று எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் அவை போதாது என்பது என் கருத்து. கிராமப்புறங்களிலே உள்ள அனைத்து ஏரிகளிலும் ஒரு ஏரிக்கு ஒரு குழாய்க் கிணறு என்ற அடிப்படையில் அமைத்துக் கொடுத்தால் கிராமப்புறங்களிலே வறட்சி நீங்கி வளம் ஏற்படும். குறிப்பாக கிராமப்புறங்களிலே உள்ள ஏழை எளிய விவசாயிகள் தங்களுடைய வயல்களிலே குழாய்க் கிணறுகள் போடுவதற்கு வட்டியில்லாத கடன் கொடுத்து அதன் மூலம் அவற்றை அமைப்பதற்கான ஏற்பாட்டை அரசு செய்யவேண்டும்.

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை நாம் தெளிவாக ஆராய வேண்டும். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பல திட்டங்களைப் போட்டு செயல்படுகிறோம். மத்திய நிதியிலிருந்தும் மாநில நிதியிலிருந்தும் பணத்தை ஒதுக்கித் திட்டங்களைச் செயல்படுத்துகிறபோது எந்த அளவுக்கு அக் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவியிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக பாதி அளவுகூட கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு செலவு செய்யப்படவில்லை என்பதையும் கிராமப்புற மக்களுக்கு முழுமையான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்பதையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய சூழ்நிலையில் கிராமப்புறங்களிலே அன்றாடப் பிரச்சினையாக உள்ள குடிநீர், தெரு விளக்கு வசதி, போக்குவரத்து வசதி இவைகளைப் பொறுத்த வரையில் எந்த நிலையில் கிராம மக்கள் இருக்கிறார்கள் என்று இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நான் பொதுவாக, இந்த குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன் முதலாக பதவி ஏற்றபோது இந்த அவையில் எடுத்துச் சொன்னதை நான் நினைத்துப் பார்க்கிறேன். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமங்களில் இருக்கின்ற தாய்மார்கள் பலர் 1 கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் என்று குடிநீருக்காக அலைந்துகுடிநீரைக் கொண்டு வருகின்ற நிலையை இந்த அரசு போக்கும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பலதிட்டங்கள் தீட்டி அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு பல ஆயிரக்கணக்கான ரூபாயை ஒதுக்கி இங்கே செயல்படுத்தி வந்தார்கள். அப்படி செயல்படுத்தி வந்து இருந்தாலும் இன்றைக்கு அந்தக் குடிநீர் பிரச்சினை கிராமங்களில் தீர்க்கப்படவில்லை என்பதை நினைக்கும்போது உண்மையிலேயே நமக்கு வேதனை தருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால், பல ஆயிரக்



கணக்கான ரூபாயை அங்கே செலவு செய்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி 1 ஆண்டு, 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் இன்னும் சில இடங்களில் 4 ஆண்டுகள் என்ற விகிதத்தில் இயங்காமல் எந்தவித வசதியும் இல்லாமல் அந்தக் கிராம மக்களுக்கு எந்தப் பயனும் இல்லாமல் இருக்கின்ற நிலையை அரசுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏன் என்றால், இன்றைய சூழ்நிலையில் கிராம மக்களுக்குக் குடிநீருக்காக போடப்பட்டு இருக்கின்ற கைப் பம்புகள் 6 மாதம், 7 மாதம் என்று இயங்காமல் அங்கே இருக்கின்றன என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இந்தநிலையைப் பார்க்கும்போது கிராம மக்கள் என்னநினைக்கிறார்கள்? குடிநீர் வடிகால் வாரியம் என்று ஒன்று இருக்கிறதா? ஊராட்சி ஒன்றிய அமைப்புகள் தமிழகத்தில் செயல்படுகின்றனவா என்ற நிலையில்அவர்களுக்குச் சந்தேகம் வருகிறது.

அதோடு அந்த அமைப்புகளில் அதிகாரிகள் இருக்கிறார்களா? அவர்கள் அரசிடமிருந்து நம்முடைய வரிப் பணத்திலிருந்து சம்பளம் பெறுகிறார்களா என்ற ஒரு சந்தேகம் மக்களுக்கு ஏற்படுகிறது. அரசு இவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஏன் என்றால் ஆண்டுக்கணக்கில் இயங்காமல் நீர்த் தேக்கத் தொட்டிகள் மட்டும் கட்டிவிட்டு புள்ளி விவரத்தைக் கொடுத்து விட்டால் அந்த புள்ளிவிவரங்கள் கிராம மக்களின் குடிநீர்ப் பஞ்சத்தை போக்கிவிடுமா என்பதை அரசு நினைத்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை எவ்வளவு விரைவில் செயல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் செயல்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி ரிப்பேர் ஆகிவிட்டால் குறைந்தது ஒரு வாரத்தில் ரிப்பேர் செய்துவிடலாம். என்ன காரணத்தாலோ ஆண்டுக் கணக்கில் அதை, செய்யாமல் அதை இயக்காமல் இருக்கிறார்கள். இந்த நிலையை அரசு உணர்ந்து அதை உடனடியாக செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைய சூழ்நிலையில் தெரு விளக்குகள் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முதலில் பொறுப்பு ஏற்றவுடன் இந்தத் தெரு விளக்குகளை கிராமப்புறங்களில் சரியாக இயங்கச் செய்வதற்கு எப்படி எப்படி செய்யலாம் என்று உறுப்பினர்களிடம் ஆலோசனை கேட்டு பல வழிகளில் அதை செய்து கொடுக்க முயற்சி செய்தார்கள். ஆனாலும் இன்றைய சூழ்நிலையில் கிராமப்புறங்களில் முழுமையாக ஒரு வாரம் தெரு விளக்குகள் எரியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலையைப் போக்குவதற்கு அரசு அந்தக் கிராமங்களில் தெரு விளக்குகளுக்கு பயன்படுத்துகிற பொருட்களை தரமான பொருட்களாக வாங்கி உபயோகிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் இன்றைய அளவில் ஒரு அதிகாரியை நியமித்து அந்தத் தெரு விளக்குகளைப் பராமரிக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்து வசதி: கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுப்பதற்கு மாநில அளவிலேயும், மத்திய அளவிலேயும் செலவழிக்கப் பட்டாலும் அங்கே கிராம மக்களுக்கு முழுமையாக நாம் போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்கமுடியவில்லை என்ற நிலையை இங்கே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏன் என்றால் அங்கே நிதியை ஒதுக்கி அந்தச் சாலைகள் பராமரிப்பு, கல் பரப்புதல் போன்ற வேலைகளை எடுத்துக்கொள்ளும்போது அங்கே இருக்கின்ற ஒப்பந்தக்காரர் களின் வசதிக்காக அந்தச் சாலைகள் ஒதுக்கப்படுகின்ற நிலையை அரசுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால் ஒப்பந்தக்காரர்கள் எந்த வேலையை எடுத்து செய்தால் லாபம் அதிகமாக கிடைக்கும் என்று பார்த்து அந்த ஒரே காரணத்திற்காக மக்களுக்குப் பயன் இல்லாத போக்குவரத்து வசதி அதிகம் இல்லாத சாலையை எடுத்து அவர்கள் மராமத்து பார்க்கின்ற ஒரு நிலையை அரசு மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் புதிதாக எடுக்கும் சாலை வேலைகளையும், அல்லது சாலைகளுக்குக் கல் பரப்புதல், மராமத்து செய்தல் போன்ற வேலைகளையும் அந்தந்ததொகுதியினுடையசட்டமன்றஉறுப்பினர்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரியான நிலைமைகளை நாம் செய்யவில்லையென்றால் நிச்சயமாக எத்தனையாண்டுகள் ஆனாலும் கிராமப் புறங்களில் அந்தச் சாலைப்போக்குவரத்தைச் சரிவர செய்து கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றிய அளவில் மட்டுமல்லாமல், அந்தச் சாலைகளில் வேலை செய்கின்ற ஒப்பந்தக்காரர்களாக, உங்களுடைய வளர்ச்சியை விரும்பாத சில கட்சிகளைச் சார்ந்தவர்கள் ஒப்பந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்கள் மூலம் செய்யப்படும் வேலைகள் எந்த அளவிற்கு இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த விஷயத்தில் அரசு முழு கவனம் செலுத்தி மக்களுக்குச் சாலை வசதி முழுமையாகக் கிடைக்கும் வகையில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், இந்தத் திட்டம் நல்லத் திட்டமாகும். எங்களது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்தை விரிவாக்கி, அதை எல்லாத் தரப்பு மக்களின் குழந்தைகளும் பலன் பெறும் அளவிற்குச் சத்துணவுத் திட்டத்தை உயர்த்தியிருப்பதில் நாங்கள் உண்மையிலேயே பெருமை அடைகிறோம்; மகிழ்ச்சி அடைகிறோம். இந்தத் திட்டத்தில் இருக்கின்ற ஒருசில குறைபாடுகளை நீக்கி இந்தச் சத்துணவுத் திட்டம் நல்ல முறையில் செயல்பட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





முன்னாள் இராணுவத்தினரின் வாழ்க்கைத் தரத்தை நிரந்தரமாக உயர்த்துவதற்கான பல திட்டங்களை இங்கே அறிவித்திருப்பது கண்டு நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். அந்த முன்னாள் இராணுவத்தினரின் நிலையை நாம் பார்க்கின்ற பொழுது, கஷ்டம் வருகின்றபொழுது கடவுளை நினைக்கிறோம், அதேநேரத்தில் நாட்டிற்கு ஆபத்து வருகின்றபொழுது இராணுவத்தினரை நினைப்போம் என்கின்ற மனப்போக்கு இல்லாமல் இன்றைக்கு அரசே முன்வந்து அவர்களுக்குப் பல சலுகைகளையும், திட்டங்களையும் அறிவித்திருப்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் முன்னாள் இராணுவத் தினருக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது எதிர்க்கட்சியைச் சார்ந்த எங்களைப் போன்றவர் களாக இருந்தாலும் சரி, தமிழகத்திலே உள்ள பெண்கள், தாய்க்குலம் அதிகமாக வாக்களித்து நம்மை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் உள்ள பெண்களின் நிலை என்ன என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். 40 வயது கடந்தும்கூட திருமணம் என்பதை நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அளவிற்கு பெண்களின் நிலை இன்றைக்குத் தள்ளப் பட்டிருக்கிறது என்பதை அரசு உணர வேண்டும். இதற்குக் காரணம் வரதட்சிணைக் கொடுமை என்பதை நாம் நன்றாக அறிவோம். இந்த வரதட்சிணைக் கொடுமை என்பது தமிழகத்திலே உள்ள பெண்களை, பெண்களின் நிலையை எந்த அளவிற்குக் கீழே தாழ்த்தியிருக்கிறது என்பதை உணர்ந்து அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வரதட்சிணைக் கொடுமையை ஒழிப்பதற்காக இன்றைக்கு இந்திய அளவில் பல சட்டங்கள் இருந்தாலும்கூட அந்தச் சட்டங்களை முறையாகச் செயல்படுத்தாததன் காரணமாக இந்த வரதட்சிணைக் கொடுமையின் காரணமாக இன்றைக்குப் பெண் சமுதாயம் எந்த அளவிற்குக் கீழே தள்ளப்பட்டு, பிற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, தயவு தாட்சண்யம் இன்றி இந்த வரதட்சிணைக் கொடுமைகளை ஒழிப்பதற்கான சட்டங்களை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இங்கே ஒருவரே பல பெண்களைத் திருமணம் செய்துகொள்கின்ற நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களைக் கடுமையான சட்ட திட்டங்களைக் கொண்டு தண்டிக்கக்கூடிய வேண்டிய வகையில் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏதோ போலிச் சாமியார் என்று ஒரு சில நிகழ்ச்சிகள் நடப்பதைப் பத்திரிகைகளில் நாம் பார்க்கிறோம். ஒரு ஆசிரமம் அமைத்து, அதில் பெண்டுக் கணக்கிலே இருக்கிறார்கள், ஒருசில நிகழ்ச்சிகளைச் செய்

கிறார்கள். அதை நம்பிச் செல்லுகின்ற ஒருசில பெண்களின் வாழ்க்கையைக் கெடுக்கின்ற அளவிற்கு நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்று சொல்லும்பொழுது, போலீஸ் இலாக்கா என்ன செய்து கொண்டிருந்தது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஏதோ ஒரு நிகழ்ச்சி அங்கே நடந்துகொண்டிருந்தது. அதை எந்த வகையிலேயாவது போலீஸ் இலாக்கா, சி.ஐ.டி. இலாக்கா ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கலாம். ஆனால், கடைசியாக, பாதிக்கப்பட்ட ஒரு பெண் சொன்னபொழுதுதான் அம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பது தெரியவந்திருக்கிறது. எனவே, போலீஸ் இலாக்காவினர் தங்கள் கடமையை மறந்துவிட்டார்களோ என்று நினைக்கின்ற அளவிற்கு இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நினைவுபடுத்தி, எவ்வளவு விரைவிலே இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்க முடியுமோ அந்த வகையில் நடவடிக்கைகளை எடுத்துச் செயல்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விதவைகளுக்கு மறுவாழ்வு அளித்து, அவர்களை மறுமணம் செய்துகொள்ளக் கூடியவர்களுக்கு அரசாங்கம் பல சலுகைகளை அளித்திருக்கிறது. அப்படி விதவைகளை மறுமணம் செய்து கொள்பவர்களுக்கு இன்னும் பல காரியங்களைச் செய்து, சமூகம் அதை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு விதவைகள் மறுமணத்தை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

தாழ்த்தப்பட்ட மக்கள் நிலையைப் பற்றி இங்கே பேசிய அனைவரும் எடுத்துச் சொன்னார்கள். என்னதான் திட்டங்களைத் தீட்டினாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான அந்தத் திட்டங்களின் முழுப் பலனும் அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று நினைக்கிறபோது வேதனையாகத்தான் இருக்கின்றது. எனவே இந்த நிலையை அரசாங்கம் போக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குறிப்பாக அவர்களுடைய அன்றாடப் பிரச்சினைகளான குடிதண்ணீர், சாலைப் போக்குவரத்து, தெரு விளக்கு, ஆகிய பிரச்சினைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். இவற்றைத் தமிழகம் இந்த ஆண்டு செய்துமுடிக்க வேண்டும். அதற்கான திட்டங்களைத் தீட்டி அரசு செயல்பட வேண்டும்.

அடுத்து இளைஞர்கள் பிரச்சினை பற்றி ஒருசில திட்டங்களை அறிவித்து இருக்கிறீர்கள். இப்படி இளைஞர்களின் வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்ற வகையில் திட்டங்களை அறிவித்திருந்தாலும் அந்த இளைஞர்களின் நிலையை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும் 15 வயதுக்கு மேற்பட்ட சிறிய இளைஞர்கள் கூட குடிப்பழக்கத்திற்கு பலியாகி தாங்கள் என்ன நிலையிலிருக்கிறோம் என்பதையே மறந்திருக்கின்ற நிலைமை இருக்கின்றது. எனவே அரசு இப்படிப்பட்ட நிலைமையை உணர்ந்து அந்த மாதிரி





இளைஞர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி 10 பேர், 15 பேர் சேர்ந்து குடித்துவிட்டு அந்த வழியாகச் செல்கிற போலீஸ்காரர்களைக் கூட கிண்டல் செய்கின்ற அளவுக்கு நிலைமை உருவாகி இருக்கின்றது என்பதை நினைவுப்படுத்தி அவர்களைக் கடுமையாகத் தண்டித்து அந்த நிலையைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): இன்னும் 10 உறுப்பினர்கள் பேசவேண்டி இருக்கின்றது. எனவே இத்துடன் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்

திரு. த. புஷ்பராசு: மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்து இலங்கைப் பிரச்சினையைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். இலங்கையிலே இன்றைக்குத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் நமக்கெல்லாம் வேதனையைக் கொடுக்கின்றன என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு அந்த இலங்கைப் பிரச்சினையை ஒரு சில அரசியல் கட்சிகள் தங்களுடைய கட்சியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தக்கூடிய நிலையை எண்ணி உண்மையிலேயே மனம் வேதனைப் படுகின்றது. இலங்கையிலே உள்ள தமிழ் மக்கள் அனைவரும் நமது உடன்பிறப்புக்கள் என்ற நிலையில் அந்தப் பிரச்சினையை அணுகி மத்திய அரசு எடுத்துக்கொள்கின்ற முயற்சிக்கு எல்லாம் உறுதுணையாக இருந்து கட்சிப் பாகுபாடின்றி அந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற நிலையை ஏற்படுத்தவேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் வறட்சியல் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த மாவட்டத்தில் ஏற்படுகின்ற வறட்சியை நிரந்தரமாகப் போக்குகின்ற வகையில் காவிரியிலிருந்து வருகிற உபரி நீரை எடுத்து எங்கள் மாவட்டம் பயன்படுத்தக்கூடிய வகையில் 188 கோடி ரூபாயிலே ஒரு திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டத்தை 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து அதை நிறைவேற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

தொழிற்சாலைகள் புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய எல்லையிலே ஆரம்பிக்கப்படுகின்றன. அந்த நிலைமையைப்போக்க வேண்டும். அந்தத் தொழிற்சாலைகளில் வேறு மாநிலத்தவர்களுக்கும், வேறு மாவட்டத்தினருக்கும்தான் வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகின்றது. அந்த நிலைமையை அரசு உணர்ந்து புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு 50 சதவீதம் வேலை வாய்ப்பு கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்தபோது அங்கே மன்னராட்சியை எதிர்த்து நடந்த போராட்டத்தில், அதாவது புதுக்கோட்டை சமஸ்தானத்தை இந்திய யூனியனோடு இணைக்கவேண்டும் என்று நடந்த போராட்டத்தில் ஈடுபட்ட

போராட்ட வீரர்களுக்குப் பென்ஷன் தரவேண்டும். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயரகுநாத தொண்டமான் அவர்கள் 29–1–1983 அன்று இந்தச் சபையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்துகிறேன். எங்கள் மாவட்டத்தின் தலைநகரான புதுக்கோட்டை நகரத்திற்கு நூறாண்டுக் காலமாக குடிதண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கின்ற புதுக்குளத்தை உடனடியாக சுத்தம் செய்ய வேண்டும். அந்தக் குளத்திற்கு மேலே தொழுநோய் மருத்துவமனை இருப்பதால் அந்த மருத்துவமனையில் அசுத்தங்கள் எல்லாம் கலந்து ஆபத்து ஏற்படுத்தக்கூடிய நிலைமை இருக்கின்றது. எனவே அந்தத் தொழுநோய் மருத்துவமனையை வேறிடத்திற்கு மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும்.

புதுக்கோட்டையிலே டி.வி. அஞ்சல் நிலையம் அமைக்க மத்திய அரசிடம் மாநில அரசு கோரிக்கை எழுப்பவேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் பல இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் பக்கத்திலே உள்ள இடங்களில் கட்டிடங்களைக் கட்டி ஒரே இடத்தில் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

புதுக்கோட்டை நகரத்தில் சுற்றுலா வாரியத்தின் மூலமாக ஹோட்டல் தமிழ்நாடு ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமயம் தொகுதி மிகவும் பிற்பட்ட வறட்சி மிகுந்த தொகுதியாகும். இந்தத் தொகுதியிலே ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும். காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க எல்லா வசதிகளும் அரிமளம் ஒன்றியத்தில் இருக்கின்றது. திருமயம் தொகுதியில் வறட்சியைப் போக்க அரிமளம், கூடலூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே ஒரு அணை கட்ட வேண்டும். பொன்னமராவதி யூனியனில் வார்பட்டு அருகில் பிரான்மலையிலிருந்து வருகின்ற தண்ணீரைத் தேக்க அங்கே ஒரு அணை கட்டித்தர வேண்டும். இதன் மூலமாக 2 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சரித்திரப் புகழ்பெற்ற திருமயத்தைச் சுற்றுலாத் தலமாக ஆக்கித் தியாகச் செம்மல் சத்தியமூர்த்தி பெயரில் ஒரு நூலகம் ஏற்படுத்த வேண்டும். திருமயம் தாலுக்கா தலைநகராக இருந்தும் எந்த வசதியும் செய்யப்படவில்லை. இந்த நிலையைப் போக்க திருமயத்தை பேரூராட்சி மன்றமாக அரசு உயர்த்தித் தர வேண்டும். தாலுகா மையத்திலே உள்ள பேருந்து நிலையத்தை வசதிமிக்க பேருந்து நிலையமாக அரசு உயர்த்தித்தர வேண்டும்.

பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்றைத் திருமயத்திலே தொடங்க வேண்டும்.



பொன்னமராவதி பகுதியிலே இருக்கிற மின் பற்றாக் குறையைப் போக்குவதற்கு துணை மின் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

திருமயம் தொகுதியிலே புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு கிராமம் என்னுடைய சொந்தக் கிராமம். இங்கே உள்ள ஆளுங் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர்களும் எனது கிராமத்தைச் சேர்ந்தவர். எனது கிராமம் 9,000 ஜனத்தொகை கொண்டது. கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களை எல்லாம் சேர்த்து மொத்த ஜனத்தொகை 25,000 பேர்கள் இருக்கும். இருந்தாலும் அங்கு எந்த வைத்தியவசதியும் இல்லை. எனவே வடகாடு கிராமத்திலே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமயம் தாலூகாவை, இரண்டாகப் பிரித்து, ஒன்றை பொன்னமராவதி தாலூகா என்று ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அளிக்கப்பட்ட வாய்ப்புக்கு நன்றி கூறி உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த அவைக்கு வருவதற்குக் காரணமாயிருந்த எங்களது இதய தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பாதங்களைத் தொட்டு வணங்கி, வாக்குகளை அளித்த, நல்ல இதயங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 1985-86 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது எனது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

புரட்சித் தலைவரிடம் நாட்டு மக்கள் எதை எதிர்பார்த்து, வாக்குகளை வாரித் தந்தார்களோ, அவர்களது எண்ணம் நிறைவேறும் வகையில், நன்றியைத் தெரிவிக்கும் வகையில், நிதி நிலை அறிக்கை அமைந்துள்ளது. அதை நான் பரமக்குடி தொகுதி மக்களின் சார்பாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பரந்து விரிந்து கிடந்த இராமநாதபுரம் மாவட்டத்தை நிர்வாக நலன் கருதி மூன்றாகப் பிரித்த, பரமக்குடி வருவாய்க் கோட்டம் தந்த, புரட்சித் தலைவருக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வேலை தேடி வேறு மாவட்டங்களுக்குச் செல்லும் அவலநிலை காணப்படுகிறது. வறட்சியின் தன்மையைக் கண்டறிய ஒரு குழு அமைத்து, வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாகத் துவக்க வேண்டுமாய்கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்படுவது

வாடிக்கையானது. எனவே, புதிதாகத் தொடங்க இருக்கும் 10 சர்க்கரை ஆலைகளில், மக்களுக்கு நிரந்தரமாக வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, பரமக்குடியில் ஒரு சர்க்கரை ஆலை துவங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவின் பாதுகாப்பு நலன் கருதி, இராமநாதபுரத்திற்கு அருகில் உள்ள உச்சப்புளி விமானதளத்தை விரிவுபடுத்தி செயல் படுத்தவும், சேதுக்கால்வாய்த் திட்டத்தை உடனடியாக நிறை வேற்றவும் மத்திய அரசை வலியுறுத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு கலைக் கல்லூரிகள்தான் உள்ளன. ஒன்று இராமநாதபுரத்திலும் மற்றொன்று கமுதியிலும் உள்ளது. எனவே, பரமக்குடியில் ஒரு கலைக் கல்லூரியும் தொழில் கல்லூரியும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாக வருவாய்க் கோட்டம் அமைக்கப்பட்டிருப்பதால் அரசு அலுவலர்கள் குடியிருக்க வீடு இல்லாமல் அவதிப்படு கிறார்கள். அவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் விடுகள் கட்டித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் வீட்டு வசதிச் சங்கங்களின் கீழ் கொடுக்கப் படும் தொகையை ரூ. 10,000 ஆக உயர்த்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள நைனார்கோவில், சத்திரக் குடி, பார்த்திபனூர் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் போதுமான கட்டிட வசதி இல்லை. அக்குறையைப் போக்கி, கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலத்துறையிலிருந்து சத்திரக்குடியில் ஒரு மாணவர் விடுதியும் பரமக்குடியில் ஒரு மாணவர் விடுதியும் கட்டித் தர வேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நைனார் கோவிலிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாய் மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா கிராமங்களிலும் ஏறத்தாழ மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு குடிநீர் வழங்கப்படாமல் இருக்கின்றன. கூடிய விரைவில் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரத்திற்கு அருகிலே உள்ள காவலூரில் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி, தண்ணீரைத் தேக்கி விவசாயிகள் பயனடையச் செய்ய வேண்டுமாய் இந்த அவையின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.



பரமக்குடி தொகுதியில் வைகை ஆற்றின் கரையில் உள்ள உரப்புளி, கள்ளிக்கோட்டை, நெம்மேலி, அஸ்தினாபுரம் செல்லூர், நாகாச்சி போன்ற ஊர்களில் பெருவெள்ளக் காலங்களில் ஊருக்குள் வெள்ளம் புகுந்து ஆபத்தான நிலை ஏற்படுகிறது. வருங்காலத்தில் அவ்வாறு ஏற்படாதவண்ணம் ஆற்றுப் படுகை ஓரங்களில் தடுப்புச் சுவர்களைக் கட்டித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நைனார்கோவில்-தேனிப்பட்டணம் சாலை பல ஆண்டுக் காலமாய் தார் போடப்படாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதனால் போக்குவரத்து சரிவர செய்ய இயலாத நிலை இருக்கிறது. அதனால் 50-க்கு மேற்பட்ட கிராம மக்கள் அவதிப் படுகின்ற நிலை உள்ளது. எனவே, அந்தச் சாலை முழுவதும் உடனடியாக தார் போட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடி நகராட்சியின் சுகாதார நலன் கருதி பாதாள சாக்கடைத் திட்டத்தை அங்கு அமுல்படுத்த வேண்டுகிறேன். கோட்ட வருவாயாகப் பரமக்குடி உயர்ந்திருப்பதனால் தலைமை மருத்துவமனைக்குப் போதுமான வசதி செய்து தர வேண்டு கிறேன். மருத்துவ மனைக்குச் சென்று வர போதுமான போக்கு வரத்து வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பரமக்குடி எமனேஸ்வரத்தை இணைத்து, வைகை ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன்.

(முற்பகல் 11–20)

எமனேஸ்வரம் பகுதியில் ஒரு காவல் நிலையமும், ஒரு மருந்தகமும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற பரமக்குடி யில் அடிக்கடி அவர்கள் நெய்கிற துணி தேக்கமடைகிற நிலை ஏற்படுகிறது. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, குறித்த நேரத்தில் கொள்முதல் செய்து அவர்கள் வாழ்வு வளம் பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் குடியிருக்க மேலும் வீடுகளைக் கட்டித் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளைப்போல வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் போக்குவரத்துத் துறையில் சாதாரண நடத்துனராக பணிபுரிந்தவன். என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய தொழி லாளர்களின் ஒளிவிளக்காம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து, போக்குவரத்துத் துறையில் பணி புரியும் தொழிலாளர்களின் குறைகளை அறிய ஒரு குழுவை நியமித்து அவர்களை பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கைப் பிரச்னையில் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்ட போதிலும், அவர்கள் பிரச்னைகளை உடனடியாக தீர்ப்பதற்கு தனியாக ஒரு அமைச்சர் அவர்களை நியமித்த புரட்சித் தலைவரின் தாயுள்ள அன்பை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலையில் நிதிநிலையறிக்கையை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே. இந்த நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துக்களை வைக்க விழைகிறேன். நாவலர் அவர்கள் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கையில் பாரா 21-ல் ஒரு சிறு தவறு இருக்கிறது. அதை அவர்கள் திருத்திக் கொள்வார் என்று கருதுகிறேன். பாரா 21-ல் பால் பெருக்குத் திட்டம் என்று இருக்கிறது. ஆனால் ஆங்கிலத்தில் "Operation Flood Programme" வெள்ளப் பெருக்குத்திட்டம் என்று இருக்கிறது. அதனை பால் பெருக்குத் திட்டம் என்று திருத்திக் கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

அடுத்து நிதிநிலை அறிக்கையில் நாவலர் அவர்கள் சொல்கிறபோது சில சங்கடங்கள் இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதற்கு இரண்டு காரணங்கள். ஒரு காரணம், எட்டாவது நிதிக்குழு நமக்கு நிதியை வழங்குகிறபோது, 'பெர்கேபிட்டா இன்கம்' என்ற முறையில் வகுத்த முறை நல்ல முறையல்ல என்பது. இதே எட்டாவது நிதிக்குழுவைப் பற்றி கடந்த டிசம்பர் மாதத்தில் சட்டமன்றக் கூட்டத்தில் ஒழுங்குப் பிரச்னை மூலமாக நானே கேள்வி கேட்டேன். மேற்கு வங்காளத்தில் ஜோதிபாசு சர்க்கார், தாங்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறோம் என்ற காரணத்தால் தங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை நிதியமைச்சர் தலைமையில் அனுப்பி ஜனாதிபதி அவர்களை சந்தித்து இருக்கிறார்கள். மக்களைத் திரட்டி, போராட்டம் நடத்தி இருக்கிறார்கள். நாம் வாளா இருக்கிறோமே, இது முறைதானா இது சரிதானா என்று கேட்டேன்

மாண்புமிகு நாவலர் அவர்கள் இதே கருத்தை நான் கேட்பதற்கு ஓரிரு வாரத்திற்கு முன்பாக அவர்கள் வெளியே பேசி பத்திரிகையில் வந்திருந்ததை அன்றையதினம் சுட்டிக் காட்டினேன். நாவலர் அவர்கள் எனக்கு அளித்த பதில் எட்டாவது நிதிக்குழுவின் முடிவு இறுதியானது என்று சொன்னார். எட்டாவது நிதிக்குழுவின் முடிவு இறுதியானது என்பது மேற்கு வங்க சர்க்காருக்குத் தெரியாதா? அல்லது ஜோதிபாசுவிற்கு தெரியாதா? அல்லது அங்கேயுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாதா? தெரிந்திருந்தும் அந்தச் சர்க்கார், ஜோதிபாசு அவர்கள், மேற்கு வங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கிளர்ச்சிகளில் எல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள், என்பதை இந்த நேரத்தில் என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.



அடுத்து நாவலர் அவர்கள் சந்தேகப்படுவது, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் முடிவாக்கப்படவில்லை. not yet been finalised. நமக்கு எந்த அளவிற்கு நிதி ஒதுக்குகிறார்கள் என்பது நமக்குத்தெரியாது. தெரியாத இந்தக் காலக்கட்டத்திலே நிதிநிலை அறிக்கை வைக்கிறபோது நாவலர் அவர்கள் மெத்த சங்கடப்பட்டுக் கொண்டே சொல்கிறார்கள். என்ன சொல்கிறார் என்றால், In arriving at the closing deficit for the next Financial year one major handicap .....not an ordinary handicap.....for the Government has been the fact that the Plan Outlay for next year......that is this year, from April 1st. .... has not yet been finalised by the Union Planning Commission nor has any clear indication...... இண்டிகேஷன் கூட கிடையாது. நாம் பட்ஜெட் போட்டுவிட்டோம். நிதி ஒதுக்கீடு வருகிறபோது பெரும்பாலும் பிளானிலேதான் ஒதுக்கிக்கொண்டு வருகிறோம். பள்ளிக்கூட மாணவர்களுக்கு சீருடை வழங்கவும், புத்தகங்கள் வழங்கவும் நாம் பிளானிலேதான் ஒதுக்கி இருக்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர், திரு உத்திராபதி அவர்கள் என்று நினைக்கிறேன், பேசுகிறபோது செப்டம்பரிலே வேண்டாம்; ஜூனிலே தாருங்கள். பள்ளிகள் திறக்கப்படுவது ஜூன் மாதமாகத்தான் இருக்கும். அந்த நேரத்தில் கண்டிப்பாகக் கொடுக்க முடியாது? ஏனென்றால் மத்தியிலே எவ்வளவு பணம் திட்டத்திற்கு ஒதுக்குவார்கள் என்று தெரியாது. அந்த எண்ணத்தினால்தான் 'பிளான்ஸ் ஃபைனல் ஆகவில்லை என்பதை எதிர் பார்த்தோ என்னவோ அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் மாதம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதோடு.. 'nor has any clear indication been given regarding the increased assistance that would be available from Government of India for 1985-86 which is the first year of the Seventh Plan.' என்று முடிக்கிறார். ஆக இந்த இரண்டு சங்கடங்களுக்கும் மத்தியில்தான் இன்றைய நிதி நிலை அறிக்கையை நாவலர் அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நமக்கு இப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதிய நிதி ஆதாரங்கள் வேண்டும். புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும், அதற்குப்போதுமான நிதி ஆதாரங்கள் வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்கிற ஒரு வாய்ப்பையாவது ஏற்படுத்தியிருக்கிறீர்களா. என்றால் இல்லை. அதே நேரத்தில் பிற மாநிலங்கள், குறிப்பாக ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் எல்லாம் எந்த அளவுக்கு மத்திய சர்க்காரால் மாநிலங்கள் வஞ்சிக்கப்படுகின்றன என்பதையும் வஞ்சிக்கப்படுகிறபோது தங்கள் கருத்தை எப்படி எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் இங்கே எடுத்துக் காட்ட நான் ஆசைப்படுகிறேன். "மாநிலங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு போதிய நிதி உதவி தராவிட்டால் இரத்தப் புரட்சி நடக்கும்" என்று சொன்னது யார்? ஆந்திர முதலமைச்சர் என். டி. இராமாராவ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே என்ன புரட்சி நடக்கிறது? புரட்சி, புரட்சி என்று தான் சொல்கிறீர்களே தவிர வேறு ஒன்றும் இல்லையே. மாநிலம் வஞ்சிக்கப்படும்போது இரத்தப் புரட்சி நடக்கும் என்று ஆந்திர முதலமைச்சர் சொல்கிறார்.

அடுத்து, கல்வி, பொருளாதாரம் மற்றப் பிரச்சனைகளில் டெல்லிக்கு அதிகாரம் இருந்து பயன் இல்லை. மாநில அரசுகளும் தங்கள் கடமைகளை ஆற்ற அனைத்து அதிகாரங்களையும் கொடுப்பதில் தவறு இல்லை. மாநிலங்களில் ஆட்சி செய்ய மாநில அரசுகள் இருக்கின்றன. மத்தியில் ஆட்சி செய்ய மத்திய அரசு இருக்கிறது. ஆனால் மத்திய அரசுக்கு ஆட்சி செய்ய ஏது மாநிலம்? இல்லை. அதற்கு இடமே இல்லை. இதைச் சொல்வது யார்? மாநிலங்கள் விஷயங்களில் எல்லாம் மத்திய அரசு தலையிடுவது அரசியல் சட்டத்திற்கு முரணானது. மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்களைக் கொடுக்க மத்திய அரசு கடமைப்பட்டிருக்கிறது என்று டாக்டர் இராமகிருஷ்ண ஹெக்டே, கர்நாடக முதலமைச்சர் சொல்கிறார். நம்மிடம் அந்த நிலை இல்லையே. நாம் அஞ்சி அஞ்சி சாகிறோம். ஏன் இந்த நிலை? சொல்லவேண்டியதை துணிந்து சொல்ல வேண்டும். துணிந்து கேட்கவேண்டும். வேறு மாநிலங்கள் நமக்கு நல்லமுறையில் வழி காட்டும் போது அதைப்பின்பற்றி நாமும் செல்ல வேண்டாமா? ஏன் அஞ்சவேண்டும்?

அது மட்டுமல்ல நான் ஏற்கெனவே சொன்னேன். நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும். ஃபாமிலி பிளானிங் மூலம் மக்கள் பெருக்கம் இங்கே குறைவாக இருப்பதால் பெர்காபிட்டா இன்கம் அதிகமாக இருக்கிறது. அதனால் நமக்கு கிடைக்கின்ற உதவி குறைக்கப்படுகிறது. மக்கள் பெருக்கம் குறைவினால், பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது நம்முடைய மாநிலத்தில் பெர் காபிட்டா இன்கம் கூடுதலாக இருக்கிறது. அதனால் நிதி ஒதுக்கீடு குறைகிறது என்றால் நாம் கேட்க வேண்டாமா? குடும்ப நலத் திட்டம் ஒரு தேசியத் திட்டம். அதை நாம் நல்லமுறையில் செயல்படுத்துகிறோம், பெருமைப் படுத்துகிறோம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தலைசிறந்த மாநிலம். முதலிடம் வகிக்கும் மாநிலம் தமிழ்நாடு தான் என்று பீத்திக் கொள்கிறோம், பெருமைப்படுகிறோம். ஆனால் நாம் வஞ்சிக்கப்படுகிறோம். நிதி ஆதார ஒதுக்கீட்டில், இப்படி நல்லமுறையில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதினால், நாம் வஞ்சிக்கப்படுகிறோம். ஆகையால் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாம் தொடர்ந்து செயல்படுத்த வேண்டியது அவசியம்தானா என்ற எண்ணம் ஏற்படாதா? உங்களுக்கு அந்த எண்ணம் வரவில்லையா? ஆக, மாநில சர்க்கார் இதை எல்லாம் எடுத்துக் காட்டி, நாட்டின் தன்மையைக் கருதி செய்யப்படுகிற திட்டத்தை முன்னணியில் நின்று செய்கிறோம். அதற்கு இப்படிப்பட்ட தண்டனையா என்று மத்திய அரசை வற்புறுத்தி ஏன் நீங்கள் கேட்கவில்லை?







அடுத்து, மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் இலங்கைத் தமிழர்கள் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி சொல்ல வேண்டிய அவசியம் ஏன் வந்தது, முதலிலே 40 கோடி ரூபாயும் இப்போது 66 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியிருப்பதால் இந்த அறிக்கையில் இலங்கைத் தமிழர் பிரச்சனை வருகிறது. அப்படி வருகிறபோது இதைப்பற்றி எழுகிற விமர்சனத்தில் ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)
(முற்பகல் 11-30)

இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சனையில் நம்முடைய அணுகுமுறை எப்படி இருக்கிறது? அண்மையில் பத்திரிகையில் பார்த்தோம். செய்தியை கேட்டோம். வெளிநாட்டிலிருந்து வந்த விமானம் ஒன்றில் பெருமளவுக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு அந்த விமானம் திருவனந்தபுரத்திற்கு வந்து சேர்ந்தது. அதிகாரிகள் அதை தடுத்து நிறுத்தினார்கள். ஆனால் டெல்லியிருந்து வந்த உத்தரவினால் அந்த விமானம் அப்படியே இலங்கைக்கு அனுப்பப்பட்டது. அந்த விமானத்தில் எதற்காக அவ்வளவு ஆயுதங்கள் கொண்டு வந்தார்கள். இலங்கைத் தமிழர்களை சுட்டுக்கொல்வதற்காகப் பயன்படுத்தப்படுகிற ஆயுதங்கள் அவை.

அந்தஆயுதங்களைக் கொண்டு வந்த விமானத்தை அதிகாரிகள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு சட்டம் தெரியாதா? விதி தெரியாதா? தெரிந்துதான் நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் டெல்லியில் இருந்து வந்த உத்தரவின் கீழ் அந்த விமானம் இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. இது மத்திய சர்க்காருடைய அணுகுமுறை. அது இலங்கைத் தமிழர்களை மட்டும் சுடுவதற்காகவா? இராமேஸ்வரத்தில் இருக்கக் கூடிய தமிழர்களைச் சுட பயன்படவில்லையா? 2 மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படவில்லையா? தமிழ்நாட்டு மீனவர்களைச் சுட்டுக் கொல்லவும் அது பயன்படுத்தப்பட்டு இருக்கிறது.

அதுபோன்று ஒரு செய்தியை அண்மையிலே பத்திரிகையிலே பார்த்தேன். ஒரு படகிலே 2 இளைஞர்கள் ஆயுதங்களை எடுத்துச் சென்றார்களாம். உடனே படகைப் பிடிக்கிறார்கள். தமிழ் இளைஞர்கள், இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள், படகை பிடித்து, அவற்றை விட்டுவிட்டார்களா என்றால் அதுவும் நம்முடைய ரோந்துக்கு வந்த ராணுவம் பிடித்து மாநில சர்க்காரிடம் தருகிறது. மாநில சர்க்கார் அவர்களை சிறையிலே வைத்திருக்கிறது. ஆகவே—மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் இலங்கைத்தமிழர்களுடைய பிரச்சனையில் அவர்களுடைய அணுகுமுறை எப்படி இருக்கிறது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இங்கே கூட பேசினார்கள். அரசியல் கட்சி வளர்ச்சிக்காக இந்த இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சனை பயன்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டை எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் சொன்னார்கள்,

அண்மையில் ராஜ்ய சபா நிகழ்ச்சியில் நடைபெற்ற சம்பவத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தச் சம்பவத்தில் திரு பண்டாரே அவர்கள் போய் வந்தவுடன், ஒரு அறிக்கை ராஜ்ய சபாவில் வைக்கப்பட்டது. அந்த அறிக்கையை வைத்தவர் எக்ஸ்டர்னல் அப்பேர்ஸ் மினிஸ்டர்" திரு ஆலம் கான் என்பவர் அவர் வைத்த பிறகு, அங்கே விவாதம் நடைபெறுகிறது. அந்த விவாதத்திலே ஒருவர் சொல்கிறார்கள்.

'... the Government must not shut its eyes to the realities oj the situation. There was gross violation of human rights by S.i Lenka, which was throwing dust in the eyes of the World. Does not the Indian Gove nment know that Mr. Jayawardane has lost control and is a prisoner in the hands of the army, Mr. Bhandari asked. He criticised Mr. Khan for d afting the statement in a vague fashion and asked the Government to come out with a time-bound programme.,

யார் தெரியுமா! இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி. டைம் பவுண்ட் புரா கிராம். அவருக்கு இருக்கின்ற உணர்ச்சி நமக்கு இல்லையே? இது அரசியல் கட்சி வளர்ச்சிக்கா சொல்லப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், இன்னொருவர் சொல்கிறார். நான் அதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"The Minister should not have used the word "Violence in his statement when there was genocide in S i Lanka"
வயலன்ஸ் என்ற வார்த்தையை பயன்படுத்தினாலே கோபம் வருகிறது. ஏன் தெரியுமா?

'in his statement when there was 'genocide in Sri Lanka'.

'genocide' அங்கே இனப்படுகொலை நடக்கிறது. கலவரம் அல்ல. இனப் படுகொலை நடக்கிறது என்று சொல்கிறார். "He said the Government's soft appreach would nct yield results and called for direct action. யார் தெரியுமா? சொன்னால் வருத்தப்படமாட்டீர்கள், என்று கருதுகிறேன். அருமைச் சகோதரர், ராஜ்ய சபா உறுப்பினர், தங்கபாலு. ஆகவே அவர்கள் கட்சி வளர்ச்சிக்காக இதை பயன்படுத்துகிறார்களா? அடுத்து இன்னொருவர் பேசுகிறார். அதையும் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திலே சொல்லப்பட வேண்டிய விதத்திலே சொல்வது செய்ய வேண்டிய காரியத்தைச் சுட்டிக்காட்டுவதற்காக. அதைக் கட்சி வளர்ச்சிக்காக என்று குறை சொல்வது வீதியிலே வெறும் விளம்பரத்திற்காக செய்யப்படுகிறபோது.





திரு. ப. பொன்னுரங்கம்: அவையிலேயும் சொல்லலாம். மக்களுடைய ஆதரவைத் திரட்டுவதற்காக வெளியிலேயும் சொல்லலாம். அடுத்து, The Ministe.'s statement was the mcst irresponsible one since 1972. He said Mr. Jayawardane was not the real power in Sri Lanka, which was now controlled by the Buddhist Clergy. You are not allowing us to feel that we are part of the heritage. Mr. John told the Minister and demanded to know whether the Government was prepared to take military action to solve the problem. வலம்புரி ஜான் கேட்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு அங்கே சொல்லுகின்ற தைரியம் கூட இங்கே இல்லை என்றால், நாம் தமிழக மக்களுக்குத் துரோகம் செய்தவர்களாக ஆகமாட்டோமா? ஆகவே தான் நான் இதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட உணர்வுகளை எல்லாம் நாம் எடுத்திருக்கிறோமா? இங்கே சாஃப்ட் அப்ரோச். அந்த சாஃப்ட் அப்ரோச் கூடாது என்றுதான் சொல்கிறேன். நீதிபதி கிருஷ்ணய்யர் என்ன சொல்லியிருக்கிறார்? 'இலங்கை தமிழர் பிரச்சனையில் மத்திய அரசு தலையிட வேண்டிய உரிய சமயம் இதுதான்' என்று கிருஷ்ணய்யர் சொல்கிறார். மேலும், 'ஈரான் போர் சம்பந்தமாக தூதுக் குழு அனுப்பப்படுகிறது. இங்கே இலங்கையிலே தமிழ் இனம் அழிக்கப்படுகிறது, ராஜீவ் சுண்டு விரலைக் கூட அசைக்கவில்லையே என்று ஹெக்டே கூறுகிறார். யார் வார்த்தை இது. ஹெக்டே அவர்களின் சொல். உண்மையான வார்த்தை. ஈரான் போருக்கு தூது போகிறது, இலங்கை தமிழர் பிரச்னையில் நடவடிக்கை எடுக்க முடியாதா என்று ஹெக்டே சொல்கிறார்? அங்கு என்ன தமிழர்களா இருக்கிறார்கள். அந்த உணர்வு நமக்கு இல்லையே. ஆனால் அவர் துணிந்து சொல்கிறார்.

மேலும் சொல்லுகிறார், "தென் மாநில முதலமைச்சர்களை கூட்டவேண்டும்." என்று. நாம் நினைத்தோமா இப்படி இதுவரையில். எவ்வளவு துணிச்சலான கருத்து. ஆகவே, இப்படி இலங்கைத் தமிழர் விவகாரத்தில் நாம் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை என்பது என்னுடைய தாழ்மையானக் கருத்து.

அடுத்து வேறு ஒரு விவகாரம். பாரா 19-ல், ஒரு விவசாயக் கல்லூரி 1984-85–ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுவதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். நானும் அது எங்கே என்று தேடி பார்க்கிறேன். காணவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதை விளக்கிச் சொன்னால் நல்லது. 1984-85-லே ஆரம்பித்திருப்பதாகச் சொல்லப்பட்ட அந்த வேளாண்மைக் கல்லூரி, இதுவரையில் எங்காவது பங்ஷன் ஆகிறதா? To continue research and dissemination of improved techinques or agricultural production one more Agrcultural College was sanctioned in 1984-85 and preliminary works have been commenced.' என்று இருக்கிறது. எங்கே அதை ஆரம்பித்திருக்கிறார்கள் என்று நம்முடைய நாவலர் அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் இருக்கிற கிள்ளைவளவன் என்ற ஊரில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கோவையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய கட்டிட வசதி அமைந்தவுடன் அவர்கள் அங்கே அனுப்பப்படுவார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: அடுத்து வீட்டு வசதி. இதிலேயும் ஒரு விஷயத்தை நான் மாண்புமிகு நாவலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எதிர்காலத்தில் இவைகளைத் திருத்திக் கொள்ளலாம் என்ற நல்ல எண்ணத்தோடுதான் சுட்டிக் காட்டுகிறேன். இதில் ஆறாவது திட்டக் கால இறுதிக்குள் நெசவாளர்களுக்கு 5,000 வீடுகள் கட்டுவதென்று கருதப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலம் சென்ற மார்ச் மாதத்தோடு போய் விட்டது. இப்பொழுதுதான் வீடு கட்டிக் கொடுக்கலாம் என்று கருதுகிறோம். எப்பொழுது கட்டிக் கொடுக்கப் போகிறோம்? இதுபோன்ற குறைபாடுகள் மாற்றப்படவேண்டும் என்று நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இதுபோல '7 வது திட்டக் காலத்தில், இம் மாநிலத்தில் மேலும் பத்து சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது' என்று இருக்கிறது. இது 7—வது திட்டக் காலத்தின் முதல் ஆண்டுத் தொடக்கம். இதில் ஏதாவது ஒரு இடத்தில் குறிப்பிட்டு இங்கே சர்க்கரை ஆலை வருகிறது என்று ஏதாவது ஒன்றிற்காவது போட்டிருக்கலாம் இல்லையா? அப்படி போட்டிருந்தால் பத்து சர்க்கரை ஆலைகளும் படிப்படியாக வரும் என்று எதிர் பார்க்கலாம். ஆனால் இல்லையே. அதனால் இந்தத் திட்டம் முறையாக அமல் நடத்தப்படுமா என்ற சந்தேகம் ஐயப்பாடு வருகிறது.

அடுத்து, பாரா 34. இதற்கு கட்டாயம் நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லியாக வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணங்களையே குலைக்கிற வகையில் வார்த்தைகள் உள்ளன. நான் படிக்கிறேன்.

'Preliminary ac ion was initiated in 1984-85 itself on preparation for launching from 1985-86 the revolutionary scheme for making school education life oriented. Revised School curriculum and syllabus intune with the concepts of the new scheme of Chief Minister's Life Oriented Education are being prepared by expert committees and nem vocational courses a e being introduced. The scheme involves a massive outlay and assistance is being sought from the World Bank andffrom the Government of India'.



How can you int oduce it? You have stated that massive outlay and assistance is sought. They are being prepared by Expert Committees. அது என்ன புது கோர்ஸ்? அந்தக் கோர்ஸ்ஸை இன்டிரடியூஸ் பண்ணுகிறீர்களா? பாடமுறைகளே இன்னும் தயாராகவில்லை, வல்லுநர் குழு தயாரித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் கர்ரிகுலமே தயார் செய்யப்படவில்லை? How can you start it? இதையெல்லாம் தயாரிக்காமல் எப்படி இந்த ஆண்டே ஆரம்பிக்கப்போகிறீர்கள்? அது மட்டுமல்ல, ''The Scheme involves a massive outlay and assistance is being sought from the World Bank and from the Government of India'. பெரும் தொகை தேவைப்படுகிறது? இதற்கு கிளியரன்ஸ் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவிலே கொடுத்துவிட்டார்களா? வோர்ல்ட்டு பாங்கிலே கடன் கிடைத்துவிடும் என்று உறுதியாகச் சொல்ல முடியுமா?

(முற்பகல் 11-40.)

முதலமைச்சர் அவர்களின் தொழிற் கல்வியோடு சேர்ந்த வாழ்க்கைக் கல்வி, முதலமைச்சர் அவர்களின் புரட்சிகரமான திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற இது போன்ற திட்டங்களைக்கூட ஏற்றுக்கொள்ளக்கூடாதா என்று எதிர்தரப்பிலே சுட்டிக்காட்டினார்கள். ஆனால் அதற்கு முரண்பட்டதாக இந்த அறிக்கை இருக்கிறது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

நாவலர் அவர்கள் அடிக்கடி ஆளும் கட்சித் தரப்பிலும், எதிர் கட்சித் தரப்பிலும் இருப்பவர்களைப் பார்த்து, வெளியிலே நடப்பதைப் பற்றி பேசாதீர்கள், நிதி நிலை அறிக்கையின்மீது பேசுங்கள் என்றார். அதனால் நானும் நிதி நிலை அறிக்கையின் பாரா 44 ஐ பற்றி பேசுகிறேன். நான் நாவலர் அவர்களை மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். Under the scheme of self-sufficiency for municipalities Government had sanctioned a sum of Rs. 500 lakhs in 1984-85 for the implementation of the scheme for 30 municipalities under Phase III. 1560 works were taken up for execution. நான் அங்கே தான் வருகிறேன். அடுத்து ரொம்ப அழகாக அதிகாரிகள் தந்திருக்கிறார்கள். A provision of Rs. 5.00 crores has been made in 1985-86. 1984—85-ல் ரூ. 500 இலட்சம், 1985-86-ல் ரூ. 5 கோடி. நம்முடைய நாவலர் அவர்களுக்கு ஆங்கில இலக்கணம் நன்கு தெரியும். அவர் பேச்சை நான் கேட்டிருக்கிறேன். முதலில் டென்ஸ் போட்டார். "for execution." Then "to execute" பிறகு டென்ஸ் வெர்பாகி விட்டது. வெர்பாக மாற்றிவிட்டார்கள் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது...... (மணியடிக்கப்பெற்றது) நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும். இது என்னுடைய கன்னிப்பேச்சு. ......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பழைய மெம்பர். இது உங்களுடைய கன்னிப் பேச்சாகாது. 20 உறுப்பினர்கள் பேர் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, திரு. ப. பொன்னுரங்கம் கன்னிப்பேச்சு என்று சொல்கிறார். இப்படிப்பட்ட முதிர் கனிகளை நாங்கள் எப்படி ஏற்றுக் கொள்வது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். 20 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்திலே ஒரு கருத்து சொல்லப்பட்டது. அது என்ன கருத்து என்றால் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை. இந்த குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை எப்படி என்றால் This Centrally sponsored programme intends to provide employment to atleast one person per family for a period of not less than 100 days in a year. ஒரு வருடத்திலே 100 நாட்கள் அவர்களுக்கு வேலை கொடுப்பார்கள். என்ன வேலை? கொத்தனார் வேலையா? நான் கூட வீடு கட்டும்போது வேலை கொடுக்கிறேன். குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்பது இதுவா என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாவலர் அவர்கள் புள்ளிவிவரத்திலே நல்ல திறமைசாலி. இந்த புள்ளிவிவரத்தில் எப்படித் தவறினார்கள் என்று தெரியவில்லை. ஏனென்றால் அவர் சொல்கிறார்.

The Government have decided to open 20 hostels for Backward classes and 15 hostels for Adi-Dravidars at a total cost of Rs. 23 Lakhs. 35 ஹாஸ்டல்களுக்கு ரூ. 23 இலட்சம். பிராக்டிகலாக ஒத்துக்கொள்ள முடியுமா? ஒரு வீடு கட்டுவதற்கே ரூ. 50,000 ரூ. 60,000 என்று ஆகிறது. ஒரு ஹாஸ்டலுக்கு ரூ. 65,000 நடக்குமா? இது உறுதிப்பாடான திட்டமா? நடப்பதற்காக சொல்லப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பிற்பட்டோர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் விடுதிகள் திறக்கப்படுகின்றன. விடுதிகள் அரசுக் கட்டிடங்களாகத் திறக்கப்படுவதில்லை. ஏறக்குறைய 600 சில்லறை விடுதிகளில் நானூற்றுச் சில்லறை விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கிறது. அதற்கென்று தனியாக கட்டிடங்கள் ஒதுக்கும்போது, படிப்படியாக கட்டிடங்கள் கட்டுவோமே தவிர எடுத்த எடுப்பிலே கட்டிடங்கள் கட்டிக் கொடுப்போம் என்று சொல்லவில்லை. அப்படிச் சொன்னால், உறுப்பினர் சொல்வதுபோல் இந்தத் தொகை போதாது. அது மெல்ல மெல்லதான் நடைபெறும். தற்போது வாடகைக் கட்டிடங்களில் அந்த விடுதிகள் திறக்கப்படும்.



திரு. ப. பொன்னுரங்கம்: சர்க்கரைக்கு விலை ஏறியிருக்கிறது. தேயிலைக்கு, காபிக்கு விலை ஏறியிருக்கிறது. ஆனால் பாலுக்கு அட் எ ஸ்ட்ரெச் 65 பைசா ஏற்றியிருக்கிறார்கள். தேயிலைக்கு டாக்ஸ் ஆட்டோமெடிக்காக வருகிறது. காரணம் டீசல் விலை, டயர் விலை ஏறியவுடனே லாரிகளிலே தேயிலை வருகிற காரணத்தினால் விலை ஏறுகிறது. அதைப்போலவே வேகனிலே வந்தால் ரயில்வே பேர் ஏறிவிடுகிறது. ஆனால் நாம் எல்லாம் காலையில் எழுந்தவுடன் காபி, டீ சாப்பிடுகிறோம். குழந்தைகளுக்குப் பால் வாங்கிக் கொடுக்கிறோம். அதற்குப் போய் அட் எ ஸ்டிரெச் 65 பைசா ஏற்றியிருப்பது சரியல்ல, இங்கே பால்வளத் துறை அமைச்சர் இல்லை, இருந்தாலும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அவர்களிடம் சொல்லி அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எலக்ஷன் மேனிபெஸ்டோவிலே சொன்னதைப் பற்றி நான் அன்றைக்கே கேட்டேன். படிப்படியாக நிறைவேற்றுவோம் என்று மாண்புமிகு அமைச்சர் திரு. சௌந்திரராசன் அவர்கள் சொன்னார்கள். புரபஷனல் டாக்ஸை எடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள், ஒருவேளை பட்ஜெட்டிலே கொஞ்ச கொஞ்சமாக வரும் என்று நினைத்தேன், கார்ப்பரேஷனுக்கு முதலிலே வரும், பிறகு முனிசிபாலிடிக்கு வரும், பிறகு பஞ்சாயத்துக்கு வரும், அது படிப்படியாக வரும் என்று நினைத்தேன், ஆனால் ஒன்றுமே இல்லை. ஆகவே தேர்தல் வாக்குறுதிகளைக் காப்பாற்றுகிறவர்களாக நீங்கள் இல்லை.

போலீஸ்காரர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் போலீஸ் ஸ்டேஷன் கட்டப்படும் என்று சொல்லப்படுகிறது. போலீஸ் ஸ்டேஷன் கட்டினால் அவர்களுக்கு அது டிரஸாக மாறுமா? அது அவர்களுக்கு உணவாக மாறுமா? இந்த நிலை துர்பாக்கியமான நிலைமை. அவர்களும் மனிதர்கள்தான், என்.ஜி.ஓக்கள் அவர்களுக்காக இந்த பட்ஜெட்டிலே நீங்கள் சொல்லாவிட்டாலும் அலாக்கேஷனிலே அது இருக்கிறது நான் பார்த்தேன். போன தடவை அலாக்கேஷனிலே இருந்தது. ஆனால் எனக்கு சந்தேகம் என்னவென்றால் அலாக்கேஷனிலே இருந்தாலும் தருவார்களா இல்லையா என்ற சந்தேகம் இருக்கிறது. போலீஸாருக்கு சப்சிடி காஸ்டிலே உணவு கொடுக்கிறோம். ஆரம்ப நிலையிலே 24 கிலோ அரிசி, 4 கிலோ சர்க்கரை, 4 கிலோ எண்ணெய் என்று கொடுத்து போலீஸார் 60 ரூபாய் கொடுத்தார்கள் அதற்காக. ஆனால் இப்போது அதை 80 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். ஆனால் கொடுப்பது என்ன தெரியுமா? 24 கிலோ அரிசியென்பது இன்றைக்கு 16 கிலோ அரிசிதான் கொடுக்கப்படுகிறது. 4 கிலோ சர்க்கரை கொடுத்தாலும்கூட எண்ணெய் 4 கிலோ கொடுக்கப்பட்டது இன்றைக்கு 1 கிலோதான் கொடுக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. ஆகவே சப்சிடி காஸ்டிலே நிறைய அவர்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

[திரு. ப. பொன்னுரங்கம்] [1985 ஏப்ரல் 4

மேலும் சில பொருட்களுக்கு சிங்கிள் பாயின்ட் வரியாக்கியதற்காக பாராட்டுதல் வியாபாரிகளால் மாண்புமிகு அமைச்சர் திரு. வீராசாமி அவர்களுக்கு நடத்துகிறார்கள், எனக்குத் தெரியும். நல்லது செய்தால் பாராட்டலாம். ஆனால் வியாபாரிகளின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிற வணிக நல வாரியம் என்று மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் 1980 ஆம் ஆண்டு அமைச்சரவைக் கூட்டத்தை முடித்துவிட்டு வெளியே வருகிறபோது வணிக நல வாரியம் அமைக்கப்படும் என்று சொன்னதுபற்றி இந்தப் பத்திரிகையிலே செய்தி வந்த அன்றைய தினமே நான் இங்கே கேட்டேன், ஆனால் இன்றைக்கும் அதை நடைமுறைப்படுத்தவில்லை, ஆகவே வியாபாரிகளின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிற வணிக நல வாரியத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேக்கன்சீஸ் பில் அப் செய்வது பற்றிச் சொலல விரும்புகிறேன். எத்தனையோ வேக்கன்சீஸ் பில் அப் செய்யப்படாமல் இருக்கிறது. அவை சாதாரண வேக்கன்சீஸ் ஆக இருந்தால் பரவாயில்லை, ஹைகோர்ட்டிலே நிலைமை பேரலைஸ் ஆகக்கூடிய முறையிலே ஹைகோர்ட் ஜட்ஜூகளே போடப்படாத நிலைமை இருக்கிறது, இருப்பதே 25 அதிலே 6 வேக்கன்ஜீஸ் பில் அப் பண்ணவில்லை என்றால், மேலும் 1984-85 இல் 4 ஜட்ஜ் ரிடையராகப் போகிறார்கள். அதற்காக நான் உங்களை மட்டும் சொல்லவில்லை. மத்திய சர்க்காரையும் சொல்கிறேன், துரிதமான நடவடிக்கை எடுப்பதன் மூலம் இதுபோன்ற நிலைமைகளைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே சில பொருட்களுக்கு எக்ஸம்ப்ஷன் என்ற முறையிலே இருக்கிறது. ஆனால் பட்ஜெட்டிலே சொல்லப்படாத முறையிலே Entertainm nts Tax Bill பாஸாகியிருக்கிறது, Prawns. Frogs,-- இவைகளுக் எல்லாம் வரிப்போட்டு பில் பாஸாகியிருக்கிறது. pipes, Hoses flevible pipes இவைகளுக்கு எல்லாம் அடிஷனல் டாக்ஸ் போட்டு பில் பாஸாகியிருக்கிறது. பட்ஜெட்டிலே காட்டாமல் தனிப்பட்ட முறையிலே மசோதாக்கள் மூலமாக வரியை உயர்த்திருக்கிறீர்கள் என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது, இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். அரசாங்கத்திற்கு தெரிந்து நடக்கிறது என்று நான் சொல்லவில்லை. குடிசை மாற்று வாரியத்தின் நடவடிக்கை பற்றிச சொல்கிறேன். இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன் பைப் லைன்கள் மேலே குடிசைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றை அகற்றுவதற்காக, 9,24,000 அந்த நிறுவனம் கொடுத்திருக்கிறது, இதைத் தவிர அரசு உலகவங்கியிலிருந்து கடன் வாங்கியிருக்கிறது. அதை 3 வருடம் டெபாசிட் செய்ய வேண்டும். ஆனால் ஒருவருடம்தான் டெபாசிட் செய்திருக்கிறது குடிசைமாற்று வாரியம். அதன்மூலமாக 2,49,126 ரூபாய் நஷ்டம் வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போலவே ஏள்ளீஸ்வரன் கோயில் திட்டத்திலே கடைகள் கட்டப்பட்டிருக்



1985 ஏப்ரல் 4] [திரு. ப. பொன்னுரங்கம்]

கின்றன. அங்கே வியாபாரிகள் போகவில்லை, காரணம் ஜனங்கள் வாங்கவராத இடத்திலே கடைகளைக் கட்டியிருக்கிறார்கள், அதனால் வியாபாரிகள் போகவில்லை, அதனால் நட்டம், இதில் இன்னொரு விநோதம் என்ன தெரியுமா? அந்த கடைகளை கட்டி அதை பூட்டி வைத்து இருக்கிறார்கள். அலாட்மெண்டு செய்து விட்டு பூட்டி வைத்து இருக்கிற கடைக்கு மின்சார கட்டணம் 4 ஆயிரத்து சொச்சம் நம்முடைய போர்டு கட்டியிருக்கிறார்கள். மின்சாரம் பயன்படுத்தாத கடைகளுக்கு மின்சாரக் கட்டணம் கட்டியிருக்கிறார்கள். பூட்டியிருக்கிற கடையில் எப்படி மின்சாரம் செலவாகியிருக்கும். இதை நினைத்துப் பார்க்க வேண்டாமா? இந்த கடைகளை முறையாக கொடுக்கத் தவறியதன் காரணமாக உரிய நேரத்தில் அலாட்மெண்டு செய்யாததன் காரணமாக ஒரு பிரிவில் 4,390 ரூபாய் நஷ்டம். அடுத்த பிரிவில் 11,268 ரூபாய் நஷ்டம். பூட்டி இருந்த கடைக்கு கரண்டு சார்ஜ் 4,480 ரூபாய் நஷ்டம். "Thirumangalam Phase II Scheme-Allolment was not made in due time-Due to adm nistrative reason and due to delay in allotment up to 31-3-1984 Rs. 12,260 loss" நஷ்டம் யாருக்கு?

(முற்பகல் 11.50)

வாரியத்திற்கு சொந்தமாக 10 வண்டிகள் இருக்கின்றன. அதை அதிகாரிகள் யூஸ் செய்யலாம். அப்படி 10 வண்டிகள் இருந்தும் அங்கு இருக்கிற அதிகாரிகள் அதையும் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் டி.ஏ. வாங்கியிருக்கிறார்கள். டிராவலிங் அலவன்ஸ் என்ன என்று விளக்கம் ஆடிட் ரிப்போர்ட்டில் கேட்டால் பில் கொடுக்கவில்லை. எந்த வண்டியில் பயணம் செய்தார்கள் என்றும் சொல்லவில்லை. செகரட்டரிக்கு புரவிஷன் கிடையாது. புரவிஷன் இல்லாத செகரட்டரி பில் போட்டு வாங்கியிருக்கிறார். அவரவர்கள் பில் போட்டு வாங்கும் வாரியமாக இருக்கிறதே தவிர குடிசை மாற்று வாரியமாக ஒழுங்காக இல்லை என்பதை நான் மெத்த பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து, கடர்கரை நகர் திட்டம், ஏ. இ. கோயில் தெரு திட்டம். அட்கோ திட்டத்தின் மூலம் வீடு கட்ட நிலம் வாங்கிவிட்டார்கள். நிலம் வாங்கிய பிறகு வீடு கட்டும் திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். அதனால் ஏற்பட்ட நஷ்டம் என்ன என்று கேட்டால் நிலம் வாங்கின பிறகு டாகுமெண்டு சார்ஜ் 35,000 ரூபாய். Soil Test, Publication of tenders, etc. Rs. 1,62,631.92.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு கொடுத்தது போல் எல்லோருக்கும் நேரம் கொடுத்துக்கொண்டு இருந்தால் யாருமே பேச முடியாது. மற்றவற்றை டிமாண்ட் ஸில் பேசிக்கொள்ளலாம்.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள்

சமர்ப்பித்துள்ள 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது திருச்சி மாவட்டம், திருவரம்பூர் தொகுதியின் சார்பில் 2-வது முறையாக மிகப் பெரிய தொழிலாளர்கள் பகுதியிலிருந்து என்னை இந்த மாமன்றத்திற்கு தேர்ந்து எடுத்து அனுப்பிய அந்த வாக்காள பெருமக்களுக்கும் என்னை இந்த மாமன்றத்திலே 2-வது முறையாக கலந்து கொள்கின்ற வாய்ப்பினை அளித்து அங்கே இருந்து என்னை ஆசிர்வதித்து வெற்றிப்பெறச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் இதய தெய்வம் அவர்களுக்கும் முதற்கண் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் அவர்களுடைய பாணியிலே அழகாக இங்கே பல குற்றச்சாட்டுகளையும் சொன்னார்கள். இங்கே பல கருத்துக்களையும் சொன்னார்கள். அவர்களுக்கு நான் மிக்க பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் ஏழரை ஆண்டுக் காலம் இந்த ஆட்சியை நடத்தினீர்கள் என்பதை மறந்திருக்கமாட்டீர்கள். எங்களுடைய தானைத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு இந்த நாட்டு மக்களினுடைய நல்வாழ்விற்கான திட்டங்களை எவ்வளவு தெளிவாக, 1977-க்குப் பின்னால் ஒவ்வொரு நிதி ஆண்டிலேயும் தந்தார்கள் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அந்தக் காலகட்டத்திலேயிருந்து இன்றைய வரைக்கும் நீங்கள், நிதி நிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை, இது ஒரு அறிக்கையா, இது ஒரு திட்டமா, இது நடக்குமா என்றுதானே கேலி பேசினீர்கள். இப்படி நீங்கள் கேலி பேசிப் பேசியே, 1977-க்குப் பின்னால், இந்த 1984ஆம் ஆண்டு கடைசி மாதத்திலே நடைபெற்ற தேர்தல் காலம் வரையில் நீங்கள் படிப்படியாகத் தள்ளப்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றீர்கள். உங்களிடத்திலே ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்ற நிலைக்கு மக்கள் வந்து, அந்த மக்களாலே தள்ளப்பட்டு இந்த மன்றத்திலே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தயவுசெய்து மறந்து விடாமல் நீங்கள் கருத்துக்களைச் சொன்னீர்களேயானால் மிச்சம் மீதி இருக்கின்ற அந்த இடத்தையாவது, உங்களுடைய தானைத் தலைவர் காலத்திலே பாதுகாத்துக் கொள்வதற்காகவாவது ஒரு வாய்ப்பு இருக்கும் என்பதை மிக்க பணிவோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் அழகாகத் தெளிவாகத் தெரிந்துதான் நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சரவர்களோடு கலந்து ஆலோசித்தும், நிபுணர் குழுவோடு பேசியும் தான் திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மட்டும் இந்தத் தமிழகத்திலே இன்றைக்கு இருக்கின்ற நிபுணர்கள் அல்லாது வெளிநாடுகளிலே இருந்தவர்களைக் கொண்டு வந்து இங்கே நிதி நிலை அறிக்கையை தயாரிக்கவில்லை என்பதைத் தயவு செய்து மறந்து விடாதீர்கள். சட்டம் படித்து விட்டோம்,



நாம் நீண்ட கால அனுபவத்திலே இருக்கிறோம் என்ற மமதையோடு பேசுவீர்களேயானால் நிச்சயமாக நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், இந்த நாட்டு மக்கள் மிகப்பெரிய அறிவாளிகளாக, தெளிந்தவர்களாக இன்றைக்கு உருவெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு நடந்து முடிந்ததேர்தலே சாட்சி என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய தலைவரவர்கள் நன்றாகச் சிந்தித்துந்தான் செய்திருக்கிறார்கள்.

''உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை''

என்றான் பொய்யாமொழிப் புலவன் வள்ளுவன். அதாவது உழவருடைய கை, தொழில் செய்யாமல் மடங்கியிருக்குமானால், விரும்புகின்ற எந்தப் பற்றையும் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் வாழ்வு இல்லை என்பதைப் பொய்யாமொழிப் புலவன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எடுத்து வைத்த கருத்தை எங்களுடைய புரட்சித் தலைவர் தெரிந்துதான், இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய விவசாய மக்கள் வாழ வேண்டுமென்பதற்காக, விவசாயத் துறையில் அதிகமாக அக்கறை காட்டி, 1977க்குப் பிறகு இந்தத் தமிழ் மண்ணிலே இந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்திருக்கின்ற நன்மைகளை, அந்த விவசாயப் பெருமக்கள் பெற்றிருக்கின்ற நன்மைகளை நாங்கள் கோடிட்டுக் காண்பிக்க வேண்டுமென்றால் எங்களுக்கு நேரம் போதாது. நாங்கள் ஆளும் கட்சியிலே இருப்பதால் மணியடிக்கப்பட்டு உட்கார வைக்கப்பட்டு விடுவோம். ஆனால், நீங்கள் நீட்டித்துக்கொண்டே பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவேதான், புள்ளி விவரக் கணக்குகளை இங்கே நான் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

இந்தக் காலகட்டத்திலே விவசாயிகளுக்குக் கடனை ரத்து செய்திருக்கிறதே, அதை மறுக்க முடியுமா? மேட்டுப் பகுதி நிலங்களை விளை நிலங்களாக மாற்றி, விவசாய உற்பத்தியிலே கூடுதலான நிலையைப் பெற்றிருக்கின்றது என்ற கணக்கு நிதி நிலை அறிக்கையிலே காண்பிக்கப்பட்டிருக்கிறதே. அது உண்மை இல்லையா? தயவுசெய்து சிந்திக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த, அதுவும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னன் அவர்கள் இங்கே ஆரம்பத்திலே தன்னுடைய கன்னிப் பேச்சிலே பேசுகின்றபொழுது காகிதப் பூ மணக்காது; காகிதச் சட்டம் இனிக்காது என்று சொன்னார்கள்.

(நண்பகல் 12.00)

நான் மிகப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன், ஞாபகப் படுத்த விரும்புகிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, காகிதப்பூ மணக்காது என்ற அந்தச் சொல்லை உங்களுடைய

தலைவர், நாங்கள் எல்லாம் முன்னாலே தலைவராக ஏற்றுக்கொண்ட கலைஞர் அவர்கள்தான் சொன்னார்கள். அவர்கள் காகிதப்பூ நாடகத்தைத் தமிழ்நாட்டிலே நடத்தினார்கள், அதற்குப் பின்னாலே இன்னொன்றையும் அவர்கள் எழுதினார்கள் ''மறக்க முடியுமா'' என்ற திரைப்படத்திலே. ''காகித ஓடம் கடல் அலை மீது போவது போலே மூவரும் போவோம்' என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். உங்களுடைய தலைவர் எழுதிய அந்தக் காகித ஓடம் கடல் அலை மீது போவது போலே போவோம் என்று சொன்னாரே, இன்றைக்கு உங்களுடைய நிலை என்ன? எங்களோடு இருந்த ரைட் கம்யூனிஸ்ட், லெஃப்ட் கம்யூனிஸ்ட் உங்களோடு சேர்ந்தது. ஆக அப்படி நீங்கள் மூன்றுபேரும் அந்தக் கடல் அலை மீது காகித ஓடம் எப்படி போகுமோ அதுபோல நாட்டு மக்கள் மத்தியிலே இருந்து நீங்கள் ஒதுக்கப்பட்டு போய்க்கொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தயவுசெய்து மறந்து விடாதீர்கள்.

இன்னொன்றையும் நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். இங்கே பேசிய அந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காகிதச் சட்டம் இனிக்காது என்று சொன்னார்கள். நீங்கள் ஆண்ட காலத்திலே சட்டங்களை எல்லாம் காகிதத்திலே சொல்லாமல் தங்கத் தகட்டிலேயா இந்த மன்றத்தில் வைத்தீர்கள்? எனவே காகிதத்திலே நீங்களும் நிதிநிலை அறிக்கையை வைக்கவில்லையா என்று கேட்க விரும்புகிறேன். எங்களுடைய தானைத் தலைவர் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டம் எப்படிப் பட்டது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை நீங்கள் நினைக்கிற சீவிச் சிங்காரித்து அத்தரும், ஜவ்வாதும் அணிகலன்களும் அணிந்து ஆடம்பரமாக வாழும் மேற்குடி மக்களுக்காக அல்ல. இந்த நிதிநிலை அறிக்கை அள்ளி முடிந்து அழகாகக் கொண்டையிட்டு, அசல் மல்லிகை, முல்லை மலர்களை அடுக்கி பல வண்ணப் பூக்களால் தொடுக்கப்பட்ட தஞ்சாவூர் சதம்பம் போன்ற மலர்களை அணியக்கூடிய ஏழை, விவசாயத் தொழிலாளர்கள், நடுத்தர மக்கள் போன்றவர்களுக்கான அழகான நிதிநிலை அறிக்கை இது. அந்த வகையிலே அந்த மக்களுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

நான் கேட்க விரும்புகிறேன், இதற்கு முன்னால் எந்தத் தலைவர் ஆட்சிக் காலத்தில் இப்படி விவசாயப் பெருங்குடி மக்களின் கடனைத் தள்ளுபடி செய்தார்கள். இந்தக் காகிதத் திட்டம் மணக்காது என்று சொல்கிறீர்களே, நான் கேட்க விரும்புகிறேன், நீங்கள் உங்களுடைய ஆட்சிக்காலத்தில் எந்தத் திட்டத்தை மணக்க வைத்தீர்கள். கூவத்தை மணக்க வைப்போம் என்று பல நிகழ்ச்சிகளை நடத்தினீர்கள். வேறு எந்த மணம் வந்தது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





தொழிலாளர் வர்க்கம் கொடுக்கின்ற குரலுக்கு உடனடியாகப் பரிகாரம் காணக்கூடிய வகையில் அதாவது தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உன்னத கருத்துக்கேற்ப இந்த நாட்டிலே ஒரு அரசை உருவாக்கித் தந்தவர் எங்களது இதய தெய்வம் புரட்சித்தலைவர் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பல அடுக்கடுக்கான கருத்துக்களை இங்கே எங்களால் செல்ல முடியும். ஆனால் என்னுடைய தொகுதியிலே உள்ள ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியில் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அந்தக் கல்லுடைக்கும் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று புரட்சித்தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கனிமங்களைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் எந்தக் கனிமத்திற்குக் கட்டாயம் வரி விதிக்கவேண்டுமோ அதற்குததான் வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. அதை நாங்கள் வரவேற்கிறோம்.

தமிழ்நாட்டுக்குத் தேவையான. அன்றாடம் தேவையுள்ள கற்கள், அதாவது சிறுசிறு கற்கள், அதாவது சாம்பல் நிறத்திலே உடைக்கப்படுகிற கற்கள், அதற்கு ஒரு சதுர அடிக்கு ரூ. 1-60 வரியாக விதிக்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல், உள்ளூர் வரி, உள்ளூர் மேல் வரி, என்று அதற்கு மேலும் வரி விதிக்கப்படுவதால் அந்தத் தொழிலாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தொழிற்சங்கங்கள் மூலம் அல்ல, கூட்டுறவுக் கல் உடைக்கும் தொழிலாளர்கள் என்ற அமைப்பின் மூலமாக அரசுக்குக் கோரிக்கை வைத்திருந்தார்கள். அதை அரசு நிராகரித்திருக்கிறது. நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், அந்தப் பகுதி தொழிலாளர் பகுதி, கல் உடைக்கும் தொழிலாளர் மிகுந்த பகுதியாக அது இருப்பதால், அரசு மீண்டும் பரிசீலனை செய்து ரூ. 1.60 என்ற ஒருமுனை வரியை மட்டும் வைத்துக்கொண்டு, மற்ற, அதிகப்படியான வரியை ரத்து செய்ய பரிசீலனை செய்யவேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மத்திய அரசாங்கம் மிகப் பெரிய தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கு அனுமதி அளித்திருக்கிறது. ரூ. 170 கோடியில் கனரக உலோகக் கலவை உருவித் தொழிற்சாலை என்னுடைய தொகுதியிலே வர இருக்கிறது என்பதை மேதகு ஆளுநர் உரையிலே சொன்னார்கள். அதற்காக நான் மத்திய அரசாங்கத்திடம் முயற்சி செய்து பெற்றுத் தந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலே மட்டுமல்ல, திருச்சி மாவட்டத்தின் சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று அதே திருச்சியில் இரண்டாவதுரெயில் பெட்டித் தொழிற்சாலை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று தமிழக அரசு மூலமாகக் கேட்கப்பட்டுள்ளது. இந்த மன்றத்தின் வாயிலாக மத்திய அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதற்கும் அனுமதி அளித்து இந்த இரண்டாவது ரெயில் பெட்டித் தொழிற்சாலை உருவாவதற்கு வழிவகை செய்யவேண்டும். அதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு உண்டு. அதை இந்த மாமன்றத்தின் மூலமாக இங்கே மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். அதாவது, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற தொழிற்சாலைகள், வரப்போகின்ற தொழிற்சாலைகள், இவைகளை எல்லாம் மனதிலே கொண்டு பார்த்தால், இன்றைக்கு நெருக்கடியான நிலை பெருகிக்கொண்டே வருகிறது. மக்கள் தொகை மிக மிக அதிகமாகப் பெருகுவதால் ஒவ்வோரு ஆண்டும் குடிதண்ணீர் பற்றாக்குறைக்கு ஆளாகிற மக்கள், என்றைக்குமே போதவில்லை, போதவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு பொன்மலை நகராட்சி என்னுடைய தொகுதியிலே இருக்கிறது; அந்தப் பொன்மலை நகராட்சியிலே நீண்ட காலமாக வைத்த கோரிக்கை, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே 1980-வது ஆண்டுக்குப் பிறகுதான், ரூ. 1 கோடியே 90 இலட்சம் மதிப் பீட்டில் ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கி குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணி களைத் துரிதமாக முடித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அரசும் முனைப்பாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த இணைப்போடு, என்னுடைய தொகுதியிலே ஆலந்தூரும் சேர்ந்திருக்கிறது; அதோடு அரியமங்கலம் பேரூராட்சி, திருவரம்பூர் பேரூராட்சி, உக்கலை, இன்னும் வேம்பூர் போன்ற கிராமங்கள் உள்ளடங்கியிருப்பதால், அந்த காவிரிக் குடிநீரை அப்பகுதிகளுக்கும் கொடுப்பதற்கு அரசு அனுமதி வழங்கிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகளை துரிதப் படுத்தி, வேகமாக அந்தத் திட்டத்தைச் செய்து கொடுத்தால், அந்தத் தொகுதி மக்கள் குடிநீர்ப் பிரச்னை தீர நல்ல வழி ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த அளவிற்குப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர் களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

திரு அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அண்ணா தாசன் அவர்கள் இங்கே திருச்சியிலே கோச் பாக்டரி ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அவருக்கு அந்தத் தகவல் தெரியுமோ, தெரியாதோ' எற்கனவே மத்திய சர்க்கார் பஞ்சாபுக்கு ஒதுக்கி விட்டது.





திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே கோச் பாக்டரியை அமைக்க வேண்டுமென்று சூரியூருக்குப் பக்கத்தில் காந்தளூர் கிராமம் பக்கத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அதை நான் தெரிந்தவன்; அதனால் அங்கே வருகிறது என்ற நம்பிக்கையில் இங்கே கோரிக்கையாகக் கேட்கிறேன்.

(பிற்பகல் 12–10)

*திரு. தமிழ்மணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எட்டாவது நிதிநிலை அறிக்கையை ஆதரித்தும், வரவேற்றும் என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு முன்னால், என்னை அரசியல் வாழ்வில் ஆளாக்கிய வெண்தாடி வேந்தர் ஐயா அவர் களை வணங்கி, வங்க கடல் ஓரம் துயில் கொண்டிருக்கும் தங்க நிகர் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, கருவிலே இருக்கும் உயிருக்கும் முதுமை நிலைந்த நிலைமைக்கும் கரும்பாம் புரட்சித் தலைவர் காலம் கன்னித் தமிழ் நாட்டில் பொற்காலம் என்று கூறி, அந்தப் பொற்காலத்தைப் படைத்திட்ட தானைத் தலைவர், தங்கத் தலைவர், இனியத் தலைவர், இதயத் தலைவர், டாக்டர் புரட்சித் தலைவர் பதம் வணங்கி, எங்களை எல்லாம் உறுப்பின ராகும் வாய்ப்புக்கு வழி செய்த வள்ளலாம் அருளாளர் அண்ணன் ஆர். எம். வீ. அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து. மயிலையில் இருக்கிற என்னை திருப்போரூரில் போட்டியிடுகிற வாய்ப்பை உருவாக்கிய ஆட்சி மன்றக் குழுவிற்கும் அந்தத் தொகுதியிலிருந்து நான் வெற்றி பெற எனக்கு பாடு பட்ட அருமை கழக உடன்பிறப்புகளுக்கும், தேசிய காங்கிரசைச் சேர்ந்த அருமை சகோதரர்களுக்கும் குறிப்பாக பெற்ற நல் தாய் மார்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். காலிலே பிறந்தவர்கள் என்று வர்ணிக்கப்பட்ட எங்களைப் போன்ற சாதாரணமானவர்கள் எல்லாம் இந்த ஹாலிலே பேசுகிற சந்தர்ப்பத்தை சட்டத்தின் வாயிலாக உருவாக்கிய டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு தனித் தொகுதியைச் சார்ந்தவன் என்ற முறையிலே என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் தங்களை எதிர்க்கட்சிகளாக ஆக்கிக்கொண்டு. சிலபல உணர்வு களை எல்லாம் உணர்ச்சி வயப்பட்டுப் பேசினார்கள். குறிப்பாக எட்டாவது நிதிக்குழு அறிக்கையில் ஒன்றுமே இல்லை என்று அழுத்தமாக வாதிடுவதாகச் சொன்னார்கள். எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை மட்டும் சொல்கிறேன். எல்லோருக்கும் எல்லாமும் வேண்டும் என்ற நம்பிக்கையிலே இந்த மன்றத்திற்கு வந்திருக்கிற நான்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க அத்தகைய நிலையில் உடைய அரசை இன்றையதினம் 20-ம் நூற்றாண்டின் பொற்கால அரசை எங்களுடைய இன்முகம் காட்டும் இனிய தலைவர் படைத்திருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய அரசை பார்த்து குறைகளைச் சொல்வது சரிதானா? என்று எதிர் முகாமிலிருக்கிற அருமைச் சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு வள்ளுவன் சொன்ன இன்னோரு குறளையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இடித்து எடுத்துச் சொல்கிற சக்தியைப் பெற்றவர்கள் தான் எதிர்க்கட்சிகளே தவிர எதையோ பேசி, எதையோ செய்துவிட்டுச் செல்வது அவ்வளவு சிறந்ததாக இருக்காது என்று வள்ளுவன் சொல்கிறான். அந்த வகையில் இன்றையதினம் பாமரமக்களின் பொற்கால உதயத்திற்கு பூபாள ராகமாக இருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை பக்சத்திற்குப் பக்கம் பயன்தரும் பாங்கினை பார்த்து நான் வரவேற்று சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

புரட்சித் தலைவரின் அமைச்சரவையில் இன்றையதினம் புதிய வரிகளைப் போடவில்லை என்றாலும், இருமுனை வரியை ரத்து செய்து ஒருமுனை வரியாக செய்திருக்கிறார்கள். அந்த நிலையை உருவாக்கியதற்காக வியாபாரிகள் தங்களுடைய நன்றிக்கடனை வெளியிலிருந்து செலுத்துவதைப் பார்க்கிறோம்.

இன்றையதினம் கல்விக்காக அதிக அளவிற்கு மானியத்தை ஒதுக்கி இருக்கிறார்கள். அதேபோல சேற்றிலே விவசாயிகள் கால் வைக்கவில்லையென்றால் நாம் எல்லாம் சோற்றிலே கை வைக்க முடியாது என்ற நிலையை உருவாக்கிய அந்தத் தலைவர் ஏற்கனவே கடவுளின் நேரடித் தொழிலாளர்கள் விவசாயிகள் என்ற எண்ண உணர்விலே தன்னுடைய கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கெல்லாம் பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். உரத்தின் மீது இருந்த வரிக்கும், மின்சாரத்திற்கு புதிய சலுகைகளைச் செய்து சிறு விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளையும் செய்து இன்றைய தினம் உன்னத அரசை அமைத்து இருக்கிறார்கள். இப்படி சொல்லிக்கொண்டே போனால் பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். அரிசி விலையை ரூ. 1.75 என்று நிர்ணயித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் அது ஏழை எளியவர்களுடைய பட்ஜெட்டாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் செய்திருக்கிறார்கள்.

'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழையின் சிரிப்பிலே இன்பத்தைக் காண்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே மாண்புமிகு எதிர்க் கட்சி சகோதரர்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன்.



நீங்கள் எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் அது சரியாக இருக்கும். ஆனால் நாங்கள் எதைச் செய்தாலும் அது உங்களுக்குத் தப்பாகத் தெரியும் என்றால் இது எதைக் காட்டுகிறது என்பதை நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பொன்னுரங்கம் அவர்கள் பேசும்போது நாங்கள் ஏதோ மத்திய சர்க்காரைப் பாரத்து அச்சப்படுகிறோம், ஆயாசப்படுகிறோம் என்பதைப்போலச் சொன்னார்கள். நாங்கள் யார்? உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்கு என்ன தைரியம் இருக்கிறதோ அதே தைரியம் எங்களுக்குமிருக்கிறது. உங்களை விட நாங்கள் எதிலே சோடை போனோம், சொத்தை போனோம் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். நீங்கள் நினைக்கிறமாதிரி நாங்கள் சோடையும் இல்லை, சொத்தையும் இல்லை. நீங்கள் ஏற்கனவே என்னென்ன சொன்னீர்கள்? 'அன்னை இந்திரா காந்தியே வருக, வருக; இனிய ஆட்சி தருக, தருக' என்று சொன்னதை எல்லாம் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்திரா காங்கிரஸ் கட்சியோடு நீங்கள் இணைந்திருக்கும்போது நீங்கள் என்ன சொன்னாலும் அது நல்லது; இந்திராகாந்தி நல்லவர். இந்திரா காங்கிரஸ் கட்சி எங்களுடன் இருந்தால் அவர்கள் கெட்டவர்கள். நாங்கள் சொல்வது தவறுஎன்று தயவு செய்து மக்கள் மத்தியிலே சொல்ல வேண்டாம்.

பாரதியார் சொல்வார், "வாய்ச்சொல்லில் வீரரடி கிளியே இவர் வஞ்சனை செய்வாரடி கிளியே" என்று. இன்றைக்கு அத்தகைய ஒரு நிலையில் நீங்கள் இருந்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணரவேண்டும். இப்படி எல்லாம் வெளியே சொல்லி, நீங்கள் தப்பித்துவிடலாம் என்று எண்ணவேண்டாம். எனக்கு முன்னாலே பேசிய அருமை சகோதரர் பரிதி இளம்வழுதி பேசும்போது மக்கள் தெரியாமல் ஏதோ உங்களைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்; உண்மை தெரிந்தால் உருட்டி விடுவார்கள் வெளியே என்று சொன்னார். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண்விடல்" என்றவள்ளுவர் கருத்தைச்சொன்னார். மக்கள் நன்றாகத்தெரிந்துதான் இன்றைக்கு உங்களை வெளியே வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் முதலிலே உணர்ந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டு நிர்வாகத்தை சக்திவாய்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால்தான் நிர்வகிக்க முடியும் என்று கருதி, புரட்சித் தலைவர் கையிலே ஆட்சியை ஒப்படைத்து உங்களை எதிர் முகாமிலே உட்கார வைத்திருக்கிற தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதி பற்றி சில கருத்துக்கள் கூற ஆசைப்படுகிறேன். செங்கை மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். அந்த செங்கை மாவட்டத்தில் என்னுடைய திருப்போரூர் தொகுதி மிகவும் நோய்வாய்ப்பட்ட தொகுதி. அந்தத்

தொகுதி மக்களுடைய நீண்ட நாள் வேண்டுகோள்களை நான் இப்போது மாண்புமிகு முன்னவர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

செங்கை மாவட்டத்தில் பல தொழிற்சாலைகள் இருந்தாலும் அங்கே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நிலப்பட்டா விரைவிலே வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் 50 ஆண்டு 60 ஆண்டு காலம் புறம்போக்கு நிலத்தில் தரிசு நிலத்தில் குடியிருந்து வருகிறார்கள். குடியிருப்பு மனை இல்லாமல் அப்படிப்பட்ட இடங்களில் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இல்லாமல் அவதிப்படுகிறார்கள், வேதனைப்படுகிறார்கள். பட்டா இல்லாததால் அரசாங்கம் கொடுக்கிற சில சலுகைகளை அவர்கள் அனுபவிக்க முடியவில்லை. ஆகையால் அப்படிப்பட்ட ஏழை எளிய மக்களுக்கெல்லாம், விவசாயப் பெருங்குடி மக்களுக்கெல்லாம், ஆதிதிராவிட மக்களுக்கெல்லாம் நிலப்பட்டா வீட்டுமனைப்பட்டா கொடுக்க தமிழக அரசு உறுதுணையாக இருந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. எனது தொகுதியில் பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. அந்த கிராமப்புறங்களில் அதிக அளவில் படிக்காதவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பொருளாதார வசதி இல்லை. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய அந்த ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் படிப்பதற்கு வசதி படைத்தவர்கள் இருக்கின்ற சென்னை மாநகரில் இருப்பதுபோன்ற பஸ்கட்டண சலுகை இல்லை. சென்னையில் இருப்பவர்கள் வசதி படைத்தவர்கள், படித்தவர்கள். அவர்களுக்கு பஸ் கட்டண சலுகை இருக்கிறது; டோக்கன் சிஸ்டம் இருக்கிறது ஆனால் கிராமப்புறத்தில், வசதியற்ற நிலையில் இருக்கிற குழந்தைகள் படிப்பதற்கு இந்த வசதி இல்லை. ஆகவே கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் பஸ்கட்டண வசதி கிடைக்கின்ற வகையில் தமிழகத்தின் தளநாயகர், தானைத் தலைவர், தங்கத் தலைவர், எங்கள் இனியத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் உறுதுணையாக இருந்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. என்னுடைய தொகுதியில் 9 மீனவர் குப்பங்கள் இருக்கின்றன. அந்த மீனவர் குப்பங்களில் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. அந்த இருளைப் போக்க வேண்டும், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அதற்காக அங்கே சோடியம் விளக்குகளைப் போட்டு, மீன்பிடிக்க விளக்கு வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே அங்கே இருக்கின்ற மீனவர்களுக்கு குடியிருக்க வீடு கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடுகளுக்கு இப்போது தவணை முறையிலே வாடகை வசூலிக்கும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை ரத்து செய்து, வீடு கட்டுவதற்கு ஆன தொகையை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 12-20).

அது மட்டுமல்ல, என்னுடைய திருப்போரூர் நகரத்திற்கும் பக்கத்திலே இருக்கின்ற நெம்மேலி என்ற குப்பத்திற்கும் ஒரு பெரிய இடைவெளி இருக்கின்றது சுமார் 2 ஆயிரம் மக்கள் அன்றாடம் சென்று வருகிற ஒரு நிலையிருக்கிறது. எனவே அந்த இடத்திலே ஒரு பெரிய பாலம் கட்டி அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய திருப்போரூர் நகரத்திலே தண்ணீர் பிரச்சனை பெரிய அளவிலே இருக்கிறது. ஏற்கெனவே 33 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அமுலுக்கு வந்தாலும், நடைமுறைக்கு செயல் முறைக்கு வரவில்லை. ஆகவே தமிழக அரசு, புரட்சித்தலைவர் அரசு, திருப்போரூர் நகரத்தினுடைய தண்ணீர் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் உள்ள மானாம்பதி என்ற கிராமத்திலே ஏராளமான நிலங்கள் பாசன வசதியில்லாமல் இருக்கின்றன. அவைகளுக்கு தண்ணீர் தேவைப்படுகின்றது. இன்றையதினம் அங்கே உள்ள ஏரிகள் எல்லாம் தூர் எடுக்கப்படாமல், மதகுகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. ஆகவே அந்தப் பணிகளை துரிதமாக செய்ய நடவடிக்கை எடுத்து, உடனடியாக தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல்வேறு கிராமங்களில் உற்பத்தி செய்கின்ற பொருள்களை விவசாயிகள், சந்தைக்கும், விற்பனை செய்கின்ற இடங்களுக்கும் கொண்டு செல்வதற்கு வேண்டிய போக்குவரத்து வசதியில்லை. ஆகவே, போக்குவரத்து வசதிகளை பல்வேறு கிராமங்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய திருப்போரூர் நகரத்திலே ஒரு மருத்துவமனை ஒன்று இருக்கிறது. ஆனால் அந்த மருத்துவமனை நல்ல முறையிலே நடைபெறவில்லை. அங்கே நிரந்தரமாக மருத்துவ அதிகாரிகளையும், பெண் மருத்துவ அதிகாரிகளையும் போட்டு, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு மருத்துவ வசதி கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதி மலைப்பகுதிகள் நிறைந்த பகுதி. அங்கே கல் உடைக்கும் தொழிலாளர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள்..... (மணியடிக்கப்பெற்றது.)

*திரு. சி. பழனிருத்து: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே 1985-86ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அறிக்கையில் ஏழை மக்கள், பாமர

மக்கள் விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக மத்திய அரசு எல்லா விதமான சலுகைகளையும் கொடுத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே அவர்கள் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் தேசிய கிராமப்புற நில மற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம், ஆகிய திட்டங்களைக் கொடுத்து, ஏழை எளிய விவசாயிகளுக்கு மாசிவ் புரோகிராம் என்ற திட்டத்திலே பல திட்டங்களைக் கொடுத்து, நம்முடைய தமிழக மக்களுடைய, விவசாய பெருங்குடி மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக, அவர்களுடைய வேளாண்மைப் பொருள்கள் உற்பத்தி உயர்வதற்காக பல வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழை மாணவர்களுக்கு இலவச சீருடை என்பதற்கு 13.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 1 முதல் 8 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் ஏழை மாணவர்களுக்கு இலவச பாட புத்தகங்கள் என்பதற்காக 11⅓ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. ஆகவே இந்த இரண்டையும் நான் வரவேற்கிறேன். ஆனால் அவைகள் உரிய காலத்திலே, உரிய சமயத்திலே கொடுப்பதுதான் நியாயமாக இருக்கும். ஆகவே காலம் கடந்து கொடுக்காமல், உரிய காலத்தில் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மத்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர் பிரச்னையில் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட மத்திய அரசு, இலங்கைத் தமிழர்களுக்காக, 9 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதோடு நம்முடைய இலங்கைத் தமிழர்களுக்காக திருவனந்தபுர சட்டமன்றத்தில் கேரள அரசின் முதல்வர் மாண்புமிகு கருணாகரன் அவர்கள், இலங்கை அகதிகளின் புனர் வாழ்விற்காக கேரள அரசு எல்லா வகையிலும் உதவும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதேபோல் நம்முடைய அரசும் எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தமிழகத்தின் நிதிநிலை அறிக்கையிலே எடுத்த எடுப்பிலேயே மத்திய அரசால் ஏற்பட்ட பாதிப்பை விவரித்து இருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையின் விளைவால் ஏற்பட்டு உள்ள பலன்களைப் பற்றி நிதியமைச்சர் அவர்கள் ஒரு வார்த்தை கூட குறிப்பிடப்படவில்லை. விலைவாசி உயர்வு, இரயில் கட்டண உயர்வு போன்ற நிலைமைகள் இருந்தாலும், மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள பயிர் பாதுகாப்புத் திட்டம், நிலமற்றோர் விவசாய தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம், போன்ற திட்டங்களைப் பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

இன்று கூட நான் பார்த்தேன். விளையாட்டுப் போட்டிகளுக்காக மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அதிக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். புதிய விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்கு தற்சமயம் 5 லட்சம் ரூபாயிலே என்று இருப்பதை 20 இலட்சமாக ஒதுக்கியிருக்கிறார்கள். விளையாட்டு அரங்கங்களை புதுப்பிக்க



1 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள். கிராமங்களிலுள்ள விளையாட்டு அமைப்புகளுக்கு 600 ரூபாயிலிருந்து 1,300 ரூபாயாக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு இளைஞர் ஆண்டு என்று குறிப்பிட்டு, 15 வயதிலிருந்து 35 வயது உள்ளவர்களை கணக்கில் எடுத்துக் கொண்டு உள்ளார்கள். அதிலே 4 கோடி ரூபாய் மாநில அரசு அதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே இந்த பணம் 378 ஊராட்சி ஒன்றியங்களுக்கு சமமாக பகிர்ந்து எல்லா யூனியன்களுக்கும் விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தப்படுமா? அல்லது சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டும் விளையாட்டு அரங்கம் அமைக்கப் பயன்படுத்தப்படுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

எல்லா ஊராட்சி மன்றங்களிலும் இந்த விளையாட்டு அரங்கம் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் இப்பொழுது கடுமையான வறட்சி நிலவி வருகிறது. குடிதண்ணீர் கிடைப்பது எல்லா இடங்களிலும் தட்டுப்பாடாக உள்ளது. ஆத்தூர் நகரைப் பொறுத்தவரையில் வாரத்திற்கு 2 நாட்களுக்குத்தான் குடிதண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது இது போல எல்லா இடங்களிலும் குடிதண்ணீர் பற்றாக்குறை இருப்பதனால், போதிய ஆழ் துளை கிணறுகளையும் புதிதாக, போட்டுத்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் காரணம் 70 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட ஆத்தூர் நகருக்கு வாரத்திற்கு இரண்டு முறை தண்ணீர் கொடுப்பது என்பது மிகவும் துர்பாக்கியமான நிலைமை ஆகும். ஆகவே, மேட்டூரில் இருந்து காவிரி தண்ணீரைக் கொண்டு வரும் திட்டம் 1984 ஆம் ஆண்டே நவம்பர் மாதம் அரசு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை வேலை செயல்படவில்லை அதற்கு விரைவான வகையில் நடவடிக்கைகளை எடுத்து, அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தி, தேவையான வழி வகைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த திட்டத்தில் ஆத்தூர் வரை தண்ணீர் கொண்டு வரப்பட வேண்டும் என்று இருப்பதை தலைவாசல் வரையில் நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூர் அரசு பொது மருத்துவமனை என்பது சேலம் மாவட்டத்திலேயே இரண்டாவது பொது மருத்துவமனையாக உள்ளது. 120 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகச் செயல்படுகிறது. ஆனால் இந்த மருத்துவமனையில் குடிக்க தண்ணீர் இல்லை, மின்சார விளக்குகள் எரிய மின்சாரம் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. இந்த மருத்துவமனையில் தண்ணீர் இல்லாததால் நோயாளிகள் பெரிதும் கவலைபடுகிறார்கள். நேற்றைக்கு முன்தினம் கூட, ஒரு தாய்க்கு பிரசவம் ஆனபோது குழந்தையைக் கழுவுவதற்கு கூட அங்கே தண்ணீர் இல்லை என்ற நிலை இருந்தது. ஆகவே அங்கே தண்ணீர் வசதிகளைச் செய்துக் கொடுப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும்

என்று கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து ஆத்தூரில் இருக்கிற பி. டபிள்யூ டி அலுவல்களில் கேட்டால் தண்ணீர் எங்களுக்குத்தான் இருக்கிறது, அதைக் கொடுக்க இயலாது என்று கூறுகிறார்கள். இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இருந்தும் தண்ணீர் கிடைக்காத நிலை இருக்கிறது. இந்த மருத்துவமனைக்கு தண்ணீர் கொடுப்பது மிக இன்றியமையாத ஒன்று. ஆகவே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன், உரிய நடவடிக்கை எடுத்து அந்த நோயாளிகளுக்கு உடனடியாக தண்ணீர் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதைவிட சிறிய மருத்துவமனைகளுக்கு கூட நிறைய நிதி ஒதுக்கி எல்லாவித சலுகைகளையும் செய்து வருகிறீர்கள். ஆனால் இந்த மருத்துவமனைக்கு செய்யாமல் இருப்பது வருந்தத் தக்கது. அதுபோலவே அந்த மருத்துவமனைக்கு அருகில் உள்ள போலீஸ் குடியிருப்புகளை வேறு இடத்திற்கு மாற்றி, அந்த இடத்தையும் இந்த அரசு மருத்துவமனைக்கே ஒதுக்கவேண்டு கிறேன். போலீஸ் குடியிருப்பிற்காக வேறு இடத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. ஆகவே, இந்த இடங்களில் போலீஸ் அதிகாரிகளுக்கு குடியிருப்புகளைக் கட்டித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில் பெத்தநாயக்கன் பாளையம் என்னும் பேரூராட்சியிலே கடந்த 8 ஆண்டுகளாக 12 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டவேண்டும் என்று மீண்டும் மீண்டும் விண்ணப்பங்கள் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அரசு அதிகாரிகளிடம் கேட்டால் அரை பார்ட்-2 ஸ்கீமிலே சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் சேர்க்கவில்லை. அமைச்சர்களைக் கேட்டால், சேர்த்துக் கொள்வோம் என்று பதில் சொல்லிவிடுகிறார்கள். 8 ஆண்டு களாக இதற்காக கோரிக்கைகளை விடுத்தும் இதுவரையில் நடைபெறவில்லை. இந்தப் புறக்கணிப்பு ஏன் என்று எனக்கே புரியவில்லை, எல்லாவற்றிற்கும் நம்முடைய நாவலர் அவர்கள் காட்கில் விதிகளை பயன்படுத்தி பேசி வருகிறார்கள். அதையும் எங்களுடைய தொகுதிக்கு எடுத்துக் கொண்டு, எல்லாவிதமான சலுகைகளையும் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியான பெத்தநாயக்கன் பாளையம் மருத்துவமனையிலே நாள் ஒன்றுக்கு 200 உட்புற நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். அப்படியும் அந்த ஊரிலே போதுமான படுக்கை வசதிக் கொண்ட கட்டிடம் ஒன்றைக் கட்டித்தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வில்லை. என்னுடைய தொகுதியில் மல்லிகரை, ஆரியபாளையம் ஆகிய இரண்டு ஊர்களிலும் ஆரம்ப பொது சுகாதார நிலையங்கள் உள்ளன. இவைகளின் தரத்தை உயர்த்தித் தர வேண்டும் என்றும், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



ஆத்தூரில். அரசு மேல் நிலைப் பள்ளி என்று ஒன்று ஆண்களுக்கும், பெண்கள் மேல்நிலைப் பள்ளி என்று பெண்களுக்கும் இரண்டு உண்டு. அரசு மேல்நிலைப்பள்ளியில் 3 ஆயிரம் மாணவர்களுக்கு மேல் படிக்கிறார்கள். அதிலே ஆசிரியர்கள் 120 பேர்கள் உள்ளார்கள். அதை இரண்டாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மேல்நிலைப் பள்ளியாகட்டும், உயர்நிலைப் பள்ளியாகட்டும், எல்லா ஊர்களிலுமே பள்ளிகளுக்கு போதிய கட்டிட வசதி இல்லை என்ற குறை இருக்கிறது. ஆகவே அவைகளுக்கு போதுமான கட்டிடங்களைக் கட்டித்தருவதற்கு இந்த அரசு முழு கவனம் செலுத்தி இன்னும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது 7-வது ஐந்தாண்டு திட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 10 வரப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆத்தூர் வட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரியையாவது அல்லது அரசு ஐ.டி.ஐ. கல்லூரியையாவது ஏற்படுத்தி தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஆத்தூரிலே அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி ஒன்று உண்டு. அந்தக் கலைக் கல்லூரியின் கட்டிடம் 72 ஆம் ஆண்டிலே கட்டப்பட்டுள்ளது, மாணவர்கள் படிப்பதற்கு போதிய கட்டிட வசதி இல்லை. அந்தக் கல்லூரியில் கெமிஸ்ட்ரி வகுப்பு உள்ளது. ஆனால் அது ஒரு நேரம் மட்டும் தான் நடக்கிறது. போதிய இட வசதி இல்லாததால், காலையில் ஒரு வகுப்பும், மாலையிலே ஒரு வகுப்பும் கெமிஸ்ட்ரி படிக்கக் கூடிய அளவுக்கு ஷிப்ட் முறையில் கல்லூரியை நடத்துகிறார்கள். ஆகவே, இந்தக் கல்லூரிக்கு போதிய கட்டிடம் கட்டுவதற்கு தேவையான நிதியை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

தாட்கோ மூலம் வீடுகள் ஏழை எளிய மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிறது. 8 ஆண்டுகளாக இந்தத் தாட்கோ மூலம் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு நான் முயற்சி செய்கிறேன். இது வரையிலும் ஒரு வீடு கூட இந்த தாட்கோ மூலம் கட்டித்தரப் படவில்லை. காரணம் செல்வாக்கு படைத்த சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் எல்லா வீடுகளையும் அவரவர்கள் தொகுதியிலே கட்டிக்கொண்டார்கள். 5,000 வீடுகளை சில அமைச்சர்களே எடுத்துக் கொண்டார்கள். எங்களைப் போன்ற ஒன்றும் அறியாத, செல்வாக்கு இல்லாத உறுப்பினர்களுடைய நிலை என்னாவது என்பது புரியவில்லை. எல்லா பகுதிகளுக்கும் தாட்கோ மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மைய அரசின் மூலம் நடத்தப்படுகின்ற தேசிய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், வீடு கட்டிக் கொடுப்பதில் ஒரு ஊராட்சிக்கு 50 வீடுகள் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். அது போன்று தாட்கோ மூலம் ஏதாவது ஒரு நிர்ணயம் செய்து 100 வீடுகளோ, 50 வீடுகளோ கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சி சாலைக்கு அரசு மானியம் வழங்க வேண்டும். நகராட்சி சாலைகள் மிகவும் பழுது அடைந்த நிலையில் உள்ளது. எந்தச் சாலையை பார்த்தாலும், செப்பனிடப்படாமல் இருக்கிறது ஆத்தூரிலிருந்து 13, 14 நம்பர் டவுன் பஸ் செல்லுகின்ற சாலையைப் பார்த்தால், அது பற்றி கேட்டால், நகராட்சியிலே சம்பளத்திற்கே பணம் இல்லை, நாங்கள் எப்படி செப்பனிடுவது என்று கூறுகிறார்கள் ஆகவே அந்த முறையிலே நகராட்சிகளுக்கு அரசு மானியம் கொடுக்க வேண்டும்.

என்னுடைய பகுதியில் அம்மாபாளையத்தில் குடிநீர் பிரச்சனை பல ஆண்டுகளாக இருக்கிறது. ஜவ்வரிசி மில் இருப்பதால் அந்த அம்மாப்பாளையம் ஊராட்சியில் கழிவுநீர் முழுவதும் ஆற்றில் கலந்து விடுகிறது. 5.000 ஜனத்தொகை உள்ளது. அப்பகுதி மக்களுக்கு அந்த சாகோ தண்ணீர் போய் ஆழ்துளை கிணறில் புகுவதால் அந்தத் தண்ணீர் குடிப்பதற் தகுதியில்லாத நிலையில் இருக்கிறது. ஆழ் துளை கிணறுகளை அந்தப் பகுதியிலே போட்டு தண்ணீர் வசதியை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பைத்தூர் ஊராட்சியிலுள்ள மலைவாழ் மக்கள் பலர் அதிகமாக வசிக்கக்கூடிய இடம் 1982 ஆம் ஆண்டில் சாலை அமைக்கப்பட்டது அது முற்றுப்பெறாமல் இருக்கிறது. அந்த பைத்தூர் மலையில் உள்ள தவளப்பட்டி, வானாவரம், கல்லுக்கட்டு, முருகம் ஆகிய ஊர்களுக்கு சாலைகள் அமைத்துத்தர வேண்டும். தேசீய வேலைவாய்ப்பு மற்றும் கிராமப்புற நிலம் அல்லாத ஏழை விவசாய வேலைவாய்ப்புத் திட்டங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நில உடைமை மேம்பாட்டுத் திட்டம் என்று எல்லா பகுதிகளிலும் கொண்டு வந்துள்ளோம். நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்திலே வருகின்ற அதிகாரிகள் ஒருவருக்கு நிலப் பட்டா இருந்தால், அந்த இடத்திலே நிலத்தை விற்றிருந்தால், அந்த நிலத்தை விற்றவர் தன்னுடைய டாக்குமெண்ட்டை கொண்டு போய் காண்பித்தால், பதிவு செய்யவில்லை என்பதால், மாற்றம் செய்யாமல் இருப்பதால் அவருக்கு அந்த இடத்தை நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தினால் பதிவு செய்துகொடுக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள். அந்த இடத்தை தரிசாக விட்டு விடுகிறார்கள். ஆகவே நல்லது செய்கிறேன் என்று கூறி, இப்படிப்பட்ட திட்டத்திலே பலவிதமான சிக்கல்கள் இருக்கின்றன. அதிலும் ரிசம்ஷன் தாசில்தார் என்று போட்டு உள்ளார்கள். 'டி' கார்டு பெற்று, ஹரிஜன மக்கள், தாழ்த்தப் பட்டவர்கள் அந்த நிலங்களை 10 ஆண்டுகள் கழித்து விற்க





வேண்டும். மாற்றுவதாயின் ரிசம்ஷன் தாசில்தாரை சென்று பார்க்க வேண்டுமாம். இது மிகவும் தேவையற்ற ஒன்று. நாம் ஏழை எளிய ஹரிஜன மக்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுத்தவற்றை நாம் திரும்ப எடுத்துக்கொள்ளவில்லை. அப்படி இருக்கும்போது திரும்ப இந்த அலுவலகத்திற்கு வந்தால் பணம் அதிகமாக செலவாகிறது. அதுபோன்ற சூழ்நிலை வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே கால்நடை மருத்துவ கல்லூரி ஒன்று 1985-86-ல் ஆரம்பிப்பதை நான் வரவேற்கிறேன். மருத்துவக் கல்லூரி ஒன்றும்சேலத்திலே ஆரம்பிப்பதைவரவேற்கிறேன். சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்தை பின் தங்கிய வட்டமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு இந்த ஆண்டு இளைஞர் ஆண்டு என்று குறிப்பிடுவதால் இரயில்வேயில் மைய அரசு 6 பேர் ஆயிரம் கிலோ மீட்டர் பிரயாணம் செய்தால் அவர்களுக்கு பாதி கட்டணச் சலுகை கொடுத்துள்ளார்கள். அதுபோல் நம்முடைய தமிழக அரசு போக்குவரத்துத் துறையிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு 500 கிலோ மீட்டர், ஆயிரம் கிலோ மீட்டர் சென்றால் அவர்களுக்கு பாதி கட்டணம் சலுகை அளிக்க வேண்டும். புதிய உயர்நிலைப் பள்ளிகள் கடந்த ஆண்டு 94 என்று குறிப்பிட்டுள்ளார்கள். என்னுடைய பகுதியில் ஆரியபாளையம், கல்பகனூர் ஆகிய இரண்டு ஊர்களுக்கும் புதிய உயர்நிலைப்பள்ளியைத் துவக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக்கு ஊதியத் தொகை ரூ. 25,000 பணம் கட்டி 10 ஏக்கர்கள் நிலங்கள் கொடுத்தும் இதுவரையில் துவக்கப் படவில்லை.

ஆகவே புதிய உயர்நிலைப் பள்ளிகளை இந்த ஆண்டிலாவது துவக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து காடு வளர்ப்புத் திட்டத்திலே எங்கள் பகுதியிலே பெரியகல்ராயன் மலைப்பகுதி இருக்கிறது, அங்கே கெரவாங்காடு என்ற பகுதியிலும் இன்னொரு பகுதியிலும் 4–3–85 அன்றும் 12–3–85 அன்றும் வீடுகள் தீப்பற்றி எரிந்து 100 வீடுகள் எரிந்துவிட்டன. ஹட்கோ மூலமாக அந்த வீடுகளை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து காடு வளர்ப்புத் திட்டங்கள் மூலமாக ஏழை எளிய மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளிலே அவர்கள் தரிசு நிலங்களிலே மரங்களை காடுகளை வளர்க்கிறார்கள். ஆனால் அதிலே வன இலாகாவினர் தலையிட்டு அந்த மக்களுக்கு துன்பங்களையும் தொல்லைகளையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ஆடு மாடுகள் மேய்வதற்கு மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்துகிற போது அவர்கள் செடிகளை மரங்களை நடுகிறார்கள். அந்த இடங்களிலே வன இலாகாவினர் மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அங்கே அந்த மக்கள் 200, 300 ஆண்டுக்காலமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒதுங்குவதற்கு இடத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டும்கூட இதுவரை கொடுக்கப்படவில்லை, அதையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து முதியோர் உதவித் தொகைகள் விண்ணப்பிக்கிறவர்களுக்கு உடனடியாகத் தொகை கொடுக்கப்படுவதில்லை. அது 80 ஆயிரமாக இருந்தது 2,80,000 ஆக இப்போது உயர்ந்திருந்தாலும் அதற்காக அங்கே போ ய இளநிலை உதவியாளர் இல்லை. 8 ஆயிரம் விண்ணப்பங்கள் என்னுடைய பகுதியிலே நிலுவையிலே இருக்கின்றன. ஆகவே அந்தப் பணியைச் செய்வதற்கு போதுமான இளநிலை உதவியாளர்களை நியமிக்க வேண்டுகிறேன். முதியோர் உதவித் தொகை வேண்டுமென்று விண்ணப்பம் கொடுக்க வேண்டுமென்றால் 25 ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. அந்த மனுக்கள் அடிக்கடி காணாமல் போகின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே அதிகமான உதவியாளர்களை நியமிக்க முதியோர்களுக்கு உதவித் தொகைகளை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆரியபாளையம், கல்பனூர், கரிப்பட்டி ஆகிய இடங்களிலே உயர் மேல்நிலைப் பள்ளிகளை துவங்க வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்திலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பொதுவான சில கொள்கை விமர்சனங்களை நான் முன்வைக்க விரும்புகிறேன். குறிப்பாகப் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி அந்த அந்த மானியக் கோரிக்கைகள் வருகிறபோது விரிவாக எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதால் சில முக்கியமான கொள்கைப் பிரச்சினைகளை நான் பேரவை முன் வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு திட்டங்களுக்கான நிதியைச் சேகரிப்பதற்கான முறையாக உலக வங்கியிடம் அதிகபட்சமாக அணுகியிருக்கிறது என்பதை நான் வேதனையோடு தெரிவிக்க விரும்புகிறேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவுவதற்காக 102.44 கோடி ரூபாய் பெறுவதற்காக உலகவங்கிக்கு மதிப்பீடுகளை அனுப்பியிருப்பதும், தஞ்சை காவிரியை நவீனப்படுத்துவதற்காக 102 கோடி ரூபாய் உதவி கோரப்பட்டிருப்பதும், வாழ்க்கை முறையோடு ஒட்டிய கல்விமுறையை உருவாக்குவதற்கான திட்டத்திற்காக உலகவங்கியிடம் நிதிஉதவி கோரப்பட்டிருப்பதும், பெரிய நகரங்களுக்கு நீர் வழங்குவதற்காக 10 கோடி ரூபாய் உலக வங்கியிடம் கோரப்பட்டிருப்பதும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்திற்காக ஸ்வீடிஷ் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப்பின் உதவியுடன் ஒரு பெருந்திட்டம் செயல்பட்டிருப்பதும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த வாசகங்களையெல்லாம் பரிசீலித்து பார்க்கிறபோது அநேகமாக தமிழ்நாடு நிதித்துறை உலகவங்கியோடு இணைக்கப்பட்டிருக்கிறதோ என்ற ஒரு அச்சம் ஏற்பட்டிருக்



கிறது. உலகவங்கியிடம் கடன் பெற்றுத் திட்டங்களை தீட்ட வேண்டாம் என்பது நம்முடைய கருத்தல்ல. ஆனால் கடன் பெறுகிறபோது உலகவங்கி என்பது வெறும் வட்டிக்குக் கடன் கொடுக்கிற பாங்க் அல்ல. உலகத்தின் பல்வேறு நாடுகளின் அரசியலிலே தலையீடு செய்வதற்குரிய ஒரு ஏகாதிபத்திய நிதி அமைப்பு என்ற முறையில் அந்த ஏகாதிபத்திய நிதி அமைப்பிடம் கடன்பெற்று இருப்பது எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் என்பதை இந்தப் பேரவையிலே வைக்க வேண்டுமென்று நான் ஒரு பிரஜை என்ற முறையிலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடன்பெறுவதற்கான நிபந்தனைகள் என்ன என்ன என்பதை இந்தப் பேரவை முன் வைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏன் இதை வலியுறுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்றால், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பஸ் கட்டணம் உயர்த்தப்படும் என்று. பஸ் கட்டணம் உயர்த்த பிரஷர் எங்கிருந்து வருகிறது. பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லி இந்த மாநில அரசு முடிவு எடுப்பதற்கு முன்னர் இந்த மாநில அரசுக்கு அந்த சிந்தனை உருவாவதற்கு முன்னர் உலக வங்கி என்ன சொல்கிறது. நீங்கள் நகரத்தில் நீர் கொண்டுவருகிற திட்டத்திற்கு கடன் வேண்டுமானால் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று உலக வங்கி தமிழக அரசை நிர்ப்பந்திக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த மாநிலத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிற அதிகாரம் உலக வங்கிக்கு எப்படி போயிற்று? அந்த அதிகாரத்தை அவர்கள் எப்படி பெற்றார்கள். ஆக நீங்கள் பெற்று இருக்கிற, இந்த மாநில் அரசு பெற்று இருக்கக்கூடிய கடன்களால் இவ்வளவு துயரங்கள் மாநிலத்திற்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்கு அந்த நிபந்தனையை சபைக்கு தெரிவிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.40)

அடுத்து இதைப்பற்றி குறிப்பிடுகிறபோது சிலர் கருதுகிறார்கள் வட்டிக்கு தானே கடன் வாங்குகிறோம், வணிக நோக்கத்திற்கு தானே கடன் வாங்குகிறோம் என்ற தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவின் வரலாற்றைப் படித்துப் பார்த்தவர்களுக்குத் தெரியும். இந்திய நாட்டை நீண்ட காலம் அடிமைக் கொண்ட வெள்ளைக்காரன் முதலில் வாள் எடுத்து போர் புரிந்து இந்த ஆட்சியை கைப்பற்றவில்லை. இந்த மண்ணுக்குள் வெள்ளையன் கால் எடுத்து வைத்தது வணிக நோக்கத்தோடுதான். கிழக்கு இந்திய கம்பெனி முதலில் சந்தையை தேடி வந்து பின்னர் இந்த நாட்டை ஆண்டார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எனவே ஒரு அரசியல் நோக்கத்தோடு நடத்தப்படுகின்ற ஏகாதிபத்திய அமைப்பு இந்த மாநிலத்திற்கு கடன் தருகிறது என்றால் அதன் உள்ளே மறைந்து கிடக்கிற அரசியல் அபாயத்தை எச்சரிக்க வேண்டிய ஒரு பொறுப்பு உணர்ச்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு என்ற முறையில் நான் இந்த கருத்தை முன் வைக்கிறேன்.

அடுத்து 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் தயாரிக்கும் திட்டத்தின் நகலை டிராப்ட்டை இந்தப் பேரவைக்கு வைக்கவேண்டும் என்று நான் வலிவறுத்த விரும்புகிறேன். இந்த மாநிலத்தினுடைய தேவைகள் உண்மையிலேயே பூர்த்தி ஆக்க வேண்டிய தேவைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகிறது இந்த மாநில அரசால். எந்த தேவைக்கு முதலிடம் கொடுக்கப்படுமோ அந்தத் தேவைக்கு முதலிடம் கொடுக்காத ஒரு அசட்டைப் போக்கு இந்த மாநில அரசின் நடவடிக்கையால் விளங்குகிறது, 7 ஆயிரம் கோடி செலவிட இருக்கின்ற அந்த நகல் திட்டத்தை இந்த பேரவைக்கு விவாதத்திற்கு வைக்கவேண்டும் என்றும் நான் வற்புறுத்துகிறேன்.

அடுத்து காவல் துறையைப் பற்றி நான் வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வைத்து இருக்கிற இந்த அறிக்கையில் காவல் துறையைப்பற்றி 77-வது பாராவில் சொல்லப்பட்டு இருக்கிறது. இதை படித்துப் பார்க்கிற போது உண்மையிலேயே நான் வேதனையோடு சில விஷயங்களை சொல்ல விரும்புகிறேன். எந்த அர்த்தத்தில் நிதியமைச்சர் அவர்கள் அந்த விஷயத்தைப் போட்டு இருக்கிறார்கள் என்பதும் எனக்குப் புரியவில்லை. அண்மைக்கால ஆண்டுகளில் காவல் துறையின் பணி குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் அடைந்துள்ளது. சட்டம்-ஒழுங்கு, குற்றத் தடுப்பு ஆகியவற்றைச் செயற்படுத்துவதுடன் நலிந்த பிரிவினரைப் பாதிக்கும் சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் போன்ற சமூகச் சட்டங்களைச் செயல்படுத்துவதில் காவல்துறை தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒடுக்குவதில் தீவிரமாக ஈடுபட்டு இருக்கிறதே தவிர சட்டம் வழங்கியிருக்கிற சட்ட உரிமைகளை பறிப்பதிலும் சட்ட சித்திரவதைகள் செய்வதிலும் தான் காவல்துறை முதலிடம்பெற்றிருக்கிற இந்த நிலையில் அவர்கள் முதுகை தட்டிக் கொடுத்தால் என்ன பொருள். கோழி காலில் கச்சைக் கட்டிவிட்டு ஆட விட அனுமதிப்பது போல் நீங்கள் இந்த முறையில் காவல் துறைக்கு ஊக்கம் தருவது அபாயகரமான எதிர் விளைவுகளை தோற்றுவிக்கும் என்பதை மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு எச்சரிக்க கடமைப்பட்டு இருக்கிறேன், என்ன நடத்தியிருக்கிறார்கள்? ஆவடியில் என்ன சட்டம் ஒழுங்கை பாதுகாத்து இருக்கிறார்கள்? சாத்தூரில் என்ன சட்டம் ஒழுங்கை பாதுகாத்து இருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் எங்கே சட்டம் ஒழுங்கை பாதுகாத்து இருக்கிறார்கள்? நான் கவர்னர் உரையில் பேசுகிறபோது குறிப்பிட்டேன், உச்ச நீதி மன்றம் கண்டனம் தெரிவித்து சட்ட விரோத சித்திரவதை நிறைந்த ஒரு தன்மையில் இந்த மாநில போலீசார் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை தெரிவித்து நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு பின்னாலும் இப்படி ஒரு ஊக்கம் கொடுக்கிற போக்கில் நிலைமை நிலவுமானால் அது சரியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



திருப்பூர் குமரனுக்கு 45 அலட்சம் ரூபாய் செலவிலே நினைவாலயம் எழுப்புவதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள் மிக்க மகிழ்ச்சி. ஒதுக்கப்பட வேண்டிய விஷயத்திற்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் அந்தக் குமரன் ஏன் இறந்தான்? பிரிட்டிஷ்காரர் கொடுத்த தடியடியால்; பிரிட்டிஷ் போலீஸ் தாக்கிய காரணத்தால் மண்டை உடைந்து செத்தான். இந்தத் தேசத்தைக் காதலித்ததால்; இந்த தேச மக்களின் முன்னேற்றத்திற்கான போர்க்களத்தில் போலீஸ்காரரால் அடிபட்டு செத்த குமரனுக்கு நினைவாலயத்தை வைக்க இருக்கிறீர்கள். ஆனால் எந்த மக்களை அந்தக் குமரன் நேசித்தானோ, அந்த மக்களை அந்தக் குமரனை அடித்த அதே தடிகளால், அதே பயிற்சியால், அந்தக் குமரன் போராடிய தேசீய விடுதலை கிடைத்ததற்குப் பின்னரும் அடிப்பது நியாயம்தானா? தேசீய விடுதலைக்குப் பின்னரும், செக்கிழுத்த சிதம்பரனுக்குப் பின்னர், அவனை அடித்த போலீஸ், அதைப்போல திருப்பூர் குமரனை அடித்த போலீஸ், சுப்பிரமணிய சிவத்தைச் சித்திரவதை செய்த போலீஸ், தேசீய விடுதலை வாழ்க்கையில் அதே பிரிட்டிஷ் பயிற்சியில், சுதந்திர பாரதத்திலே சித்திரவதை செய்வது நியாயம்தானா? அந்தச் சித்திரவதை தொடருகின்றபொழுது இப்படிப்பட்ட புகழுரை பொருத்தமானதுதானா என்பதை நிதியமைச்சரவர்களின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன். காவல்துறைக்கு இப்படி முதுகைத் தொடுகின்ற போக்கு, காவல் துறையை ஊக்கப்படுத்துகின்ற போக்கு என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைப்பற்றி மீண்டும் எதிர்காலத்தில் சிந்திக்க வேண்டுமென்பதற்காக இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன்.

நண்பர்கள் சிலரால் சில விஷயங்களை ஜீரணித்துக் கொள்ள இயலாது. டெல்லி ஹைகோர்ட்டிலே ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள் சமீப காலத்தில். குற்றத் தடுப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவர்கள் கொடுத்திருக்கின்ற தீர்ப்பு இந்த மாநில அமைச்சரவையால் நிச்சயமாகப் படிக்க வேண்டிய ஒரு தீர்ப்பாகும். அந்தத் தீர்ப்பிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள்: ''மனிதத் தன்மை, சமூக உணர்வு, நாகரீகப் போக்கு ஆகியவை கொண்ட குற்றத் தடுப்பு பார்வை வேண்டும் காவல் துறைக்கு'' என்று சொல்கிறார்கள். இத்தகைய பார்வையோடு இந்தத் தமிழ்நாட்டின் காவல் துறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், சட்டத்தின் மெய்யான உள்ளடக்கமே. குற்றவாளிகள் தப்பித்துக் கொண்டாலும், நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதுதான். எனவே, அத்தகைய முறையில் இருக்க வேண்டுமென்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து ஒரேயொரு விஷயம். தமிழ்நாட்டில் ஏராளமான சாலை விபத்துக்கள் தினசரி நடைபெறுகின்றன. நூற்றுக்கணக்கான மக்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அரசுக்கு இது புலப்படவில்லையா? இந்த அபாயகரமான சாலை விபத்துகளைத் தடுப்பதற்குப் புத்திசாலித்தனமாக திட்டங்களை இந்த

நிதிநிலை அறிக்கையிலே வைத்திருக்க வேண்டுமா இல்லையா? வாகனங்கள் பெருகி விட்டன; சாலைகள் குறுகிக் கிடக்கின்றன; அதிக நேர வேலையின் காரணமாக டிரைவர்கள் தூக்கம் இழந்து தூக்கத்திற்கு ஆளான நிலையில் விபத்துக்கள் ஏற்படுகின்ற அபாயங்கள் இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட விபத்துக்களைத் தடுப்பதற்கு என்ன வழி என்பதை நீங்கள் செய்திருக்க வேண்டுமா இல்லையா? அதுபற்றி ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அதுபற்றிச் சிந்திக்காமல் வேறு பல விஷயங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகின்ற பொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 25 அமைச்சர்கள் இருக்கிறார்கள்: 25 அமைச்சர்கள் என்றால் 5 பிளஸ் 2 ஆக மொததம் 7. 7-ஆம் நம்பர் என்பது முதலமைச்சரவர்களுக்குப் பொருத்தமான ஒரு எண் என்று பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பாசறையிலே பயின்று, ஒரு புதிய பகுத்தறிவு விளக்கத்தைக் கொடுத்தார்கள். ரொம்ப மகிழ்ச்சி. அந்தப் பகுத்தறிவு விளக்கத்தின் அடிப்படையிலேயே, இலட்சிய நம்பரின் அடிப்படையிலேயே அரசாட்சியை நடத்த முடியாது; அடிப்படையான பொருளாதாரக் கொள்கைகளோடு நடத்த வேண்டும். அந்தப் பொருளாதார ஞானத்தோடு திட்டங்களை முன்மொழிவதற்கான முறையில் என்ன நடந்திருக்கிறது? வேலையற்றோர் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ள மாநிலம் தமிழ் மாநிலம். அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான திட்டங்களைப் பற்றி அதிகமாக என்ன சொல்லப்பட்டிருக்கின்றது? அதற்குத் தேவையானவை இருக்கின்றனவா? இல்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே இலட்சக்கணக்காக உள்ள மாநிலம் தமிழ் மாநிலம். அவர்களின் மேம்பாட்டை, வெறும் வார்த்தைகளால், வெறும் வாக்குறுதிகளால், எந்தவிதமான முன்னேற்றத்தையும் உருவாக்க முடியாது. ஆனால் அவை மட்டும்தான் இருக்கின்றன.

54 கோடி மட்டும் தானே வரி போடப்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்கிறார்கள். ஆனால் திரைப்படத் துறையிலே சொல்லுவார்களே, மாய அடி, மாயாவிகள் கொடுக்கிற அடி போல, பட்ஜெட்டிலே சொல்லப்பட்ட வரி உயர்வுக்கு மாறாக, பஸ் கட்டணம் உயர்வு; பஸ் கட்டணம் உயரும் என்று பட்ஜெட்டிலே சொல்லப்பட்டதா? சர்க்கரையின் விலை ஏறும் என்று பட்ஜெட்டிலே சொல்லப்பட்டதா? பால் விலை ஏறும் என்று பட்ஜெட்டிலே சொல்லப்பட்டதா? இதெல்லாம் என்ன? கண்ணுக்குப் புலப்படாத மாய இடிதானே. ஆகவே, இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, பட்ஜெட்டில் சொல்லப்படாத சில விஷயங்களை மக்கள் தலையிலே சுமத்தி இருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது என்ன நினைக்கத் தோன்றுகிறது? வெறுமனே ஆளுங்கட்சி நண்பர்கள் தங்கள் முதுகைத் தாங்களே தட்டிக் கொள்கிறார்கள். ரொம்ப மகிழ்ச்சி. நம்மை நாமே போற்றிக் கொள்வதால் பயன் இல்லை; எதிர்த் தரப்பிலே இருக்கின்ற மக்களின் தரப்பிலே இருந்து மக்களின்



உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடிய தார்மீகப் பொறுப்பை மேற்கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சிகள் என்ன கருத்தை முன் வைக்கின்றன என்பதை ஜனநாயகப் பூர்வமாகக் காது கொடுத்து கேட்டு, கருத்துக்களைச் சமராடி முறியடிக்க வேண்டுமே தவிர, கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்காமல் நிர்ப்பந்திப்பது என்பது சரியான வழிமுறைஆகாது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.50.)

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு என்ன கருதுகிறது என்பதைச் சொல்கிறேன். விளம்பரங்களைச் செய்வதில் இந்த அரசுக்கு அளவற்ற வேட்கை என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைப்பற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளித்தார்கள். இன்னும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து உரிய கடன் பெறப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் 13-12-1983 அன்றே அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், என்ன அவசரம்? திட்ட மதிப்பீட்டுக்கு உரிய நிதியைச் சேகரிக்கும் முன்னரே ஏன் அவசரப்படுகிறீர்கள்? அந்த நிதியைச் சேர்ப்பதற்கு முன்னாலே, சேகரிப்பதற்கு முன்னாலே இவ்வளவு அவசரப்படுகிறீர்களே, அதற்கு என்ன அர்த்தம்? உங்களுக்கு திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்பதைக் காட்டிலும் விளம்பரத்திலே அளவற்ற வேட்கை நிலவுகிறது என்பதுதானே உண்மை. இவற்றை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதைச் சொல்லி மற்ற விஷயங்களை மானியக் கோரிக்கையிலே விரிவாகச் சொல்லலாம் என்று கூறி, நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்தத் திட்டப் பணிகள் ஏற்கெனவே துவக்கப்பட்டிருக்கின்றது. எல்.ஐ.சி யிலிருந்து வாங்கப்படுகின்ற அந்தக் கடன் தான் வரவில்லையே தவிர நில ஆர்ஜிதம் செய்வது மற்றும் அதற்கு வேண்டிய ஆய்வுப் பணிகளைச் செய்வது என்பது இரண்டாண்டுகளாகத் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது என்பதையும் மேட்டுப்பாளையம் ஹெட் ஒர்க்கிற்காகக் கூட நிலத்தை ஆர்ஜிதம் செய்கின்ற வேலைகளை எல்லாம் துவக்கியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போடப்பட்ட குடிநீர் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் நிதியினைச் சேகரிப்பதற்கு முன்னாலேயே அடிக்கல் போட்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் நான் சொன்ன கருத்தாகும்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாகக் கொடுக்கப்படுகின்ற மானியம், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்படுகின்ற கடன் இந்த இரண்டையும் சேர்த்துத்தான் இந்தத் திட்டத்திற்கு பயன்படுத்த இருக்கிறோம் எனவே அரசு மானியம் என்பதை நான் முன்னமேயே அறிவித்து அந்தத் திட்டம் தொடங்கப் படலாம் என்பதற்கு உள்ளாட்சித் துறைலிருந்து அதற்குரிய ஆணை வெளியிடப்பட்டு அந்த ஆணை வெளியிடப்பட்ட அடுத்த திங்களில்தான் முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக் கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது விளமபரத்தில் இந்த அரசுக்கு ரொம்ப வேட்கை என்று பேசினார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்லி யிருக்க வேண்டிய கருத்து.

திரு. இ. வி. வச்சிரவேலு: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைக் தலைவர் அவர்களே, 20 நிமிடங்கள் எனக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1985–86-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது உரையைத் துவக்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் புரட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனையின்பேரில் இங்கே அளித்திருக்கின்ற மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கு வணக்கத்தை முதலிலே தெரிவித்துக்கொண்டு, இந்த அரசு விவசாயிகளுக்கு உதவவேண்டும் என்ற நோக்கத்தோடு தால், விவசாயிகளின் விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்காக 102.44 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கின்றது. கிராமப்புறங்கள் நல்ல நிலையில் வளம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் கிராமங்கள் அனைத் திற்கும் குடிநீர் கொடுக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் 177.69 கோடி ரூபாய் ஒதுக்கி 7,226 கிராமங்கள் பயனடைகின்ற ஒரு சீரிய திட்டத்தை இன்றைக்குத் தந்திருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்ல. விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் நம்பி வாழ்கின்ற மின்சாரத்துறை மேலும் வளம் பெறவேண்டும் என்பதற்காகத்தான் 100 கோடி ரூபாயை இந்த ஆண்டு அதிகப் படியாகச் செலவு செய்வதற்காக இந்த அரசு ஒதுக்கி இருக்கின்றது.

இந்த ஆண்டு இளைஞர் ஆண்டு என்ற காரணத்தால், ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் இளைஞர் மையங்கள் உருவாக்கப்பட்டு ஆரோக்கியமான இளைஞர்களை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இன்றைக்கு இளைஞர் மையங்களை உருவாக்குகிற திட்டத்தைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள்.



இலங்கை அகதிகளைப் பற்றி எதிர்க்கட்சி நண்பர்கள் இங்கே அழுதுகாட்டினார்கள்; ஓலமிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் சொல்லிக் கொள்வேன். இலங்கை அகதிகளின் வாழ்வு மலர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ற கழகத்தைத் துவக்கி அதன் மூலம் பல்வேறு திட்டங்களை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக் கிறார்கள்.

ஆதிதிராவிட மக்களின் மேம்பாட்டிற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே 125 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இதையடுத்து உயர்நிலைப் பள்ளிகளின் கட்டிடங்கள் முழுமையாகச் செப்பனிட வேண்டும் என்ற நோக்கத்தோடு, அவற்றைப் பழுதுபார்க்கவேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதேநேரத்தில் அந்தப் பள்ளிகளுக்கெல்லாம் நம்முடைய அரசுக் குழாய்க் கிணறுகளை அமைத்துத் தண்ணீர் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு, தொழில் துறையிலே ரூ. 108 கோடி திட்டச் செலவில், மலெனியர் ஆல்கையல் பென்ஜீன் தயாரிக்கும் தொழிற் சாலை உருவாக்க இருக்கிறார்கள். அது என்னுடைய சொந்தத் தொகுதியாக தண்டராம்பட்டு தொகுதிக்குக் கிடைத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, நடைமுறையிலே சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் கணக்கை மட்டும் காட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவிற்கு அரசாங்க அதிகாரிகள் வருகிற நேரத்தில் அவர்களுடைய சொத்துக் கணக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அதன்பின் 3 ஆண்டுக்கொருமுறை அவர்களுடைய சொத்துக் கணக்கையும் காட்டுவதற்கு இந்த மாமன்றத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்கு சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலே உறவினர்கள் அதிகம். இருந்த ஒரு கப்பலும் பழுதடைந்துவிட்ட காரணத்தால் அதைப் பழுது பார்ப்பதற்கும் நாளாகும். அப்படிப் பழுது பார்ப்பதென்றாலும் காலம் அதிகமாகும் என்ற காரணத்தால், ஒரு புதிய கப்பலை வாங்கி, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரிட்டு, கப்பல் போக்குவரத்துக் கழகத்தை மீண்டும் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த காலத்தில் சொல்வார்கள், ஏசுபிரான், கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொன்னார் என்று. இன்றையதினம் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், ஏசுபிரான் போல, கேட்காமலேயே சில திட்டங்கள் கொடுக்கப்படும் என்றுதான் தன்னிறைவுத் திட்டம், சத்துணவு திட்டம் என்பன போன்ற இன்னும் எத்தனையோ திட்டங்களை அறிவித்தார்கள்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் வேண்டுமென்று இந்த ஆட்சியைப் பார்த்துக் கேட்டார்கள். இரண்டுமுறை தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார்கள். மாற்றுக் கட்சியினர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள், கோர்ட்டிலே ஸ்டே வாங்கி விட்டார்கள். அதோடு நிறுத்தி விடாமல், இன்றைக்கு உள்ளாட்சித்துறை அமைச்சராக இருக்கிற அண்ணன் ப.உ.ச. அவர்கள், மீண்டும் ஒருமுறை நான் தனி அதிகாரி நியமனம் என்று சொல்லி, சபைக்கு வரமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, உள்ளாட்சித் துறை தேர்தல் வர இருக்கிறது. ஆனால், இலங்கை வாழ் மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் குறிப்பிடுகிறார், மாணவர் சமுதாயமே நீங்கள் போராட வாருங்கள் என்று கூப்பிட்டிருக்கிறார். என்னைப் பொறுத்த வரையில் எனக்கு என்ன பயம் என்றால், இன்றைக்கு உள்ளாட்சித் தேர்தல் வரவேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே மாணவர்களை அழைத்து, போராட்டங்களை உருவாக்கி, அதன்மூலமாக, உள்ளாட்சித் தேர்தலை எப்படியாவது நிறுத்திவிடலாமா என்று கருதுகிறார்கள். எனவே, மாற்றுக் கட்சித் தலைவர்களையும் உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன், தயவுசெய்து உள்ளாட்சித் தேர்தலை நடத்த வழி விடுங்கள். அந்த வகையிலே புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல், பொற்கால ஆட்சியிலே உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு வழிவிடுங்கள்.

இங்கே பேசிய கோவை திரு. இராமநாதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், காசிலே இந்தி இருக்கிறது, என்று. தமிழ் எழுத்து இருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்தும். ஆனால் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், காசிலே தமிழ் எழுத்து வேண்டுமென்று கேட்கிற நண்பர், இன்னொன்றையும் சொன்னார். ஏதோ மத்திய அரசாங்கம் புலியைப் போலவும், ஏதோ இங்கே ஆளுகிற மாநில சர்க்கார் புலி வாலைப் பிடித்து ஆடிக் கொண்டிருக்கிறது. புலி ஆடுவது ஒரு ஆட்டம் என்று சொன்னால், புலியைப் பிடித்து ஆடுகிறவன் அதை பாலனஸ் செய்து 3 முறை ஆட வேண்டுமென்று இங்கே ரசனையாகச் சொல்லிக் காட்டினார். அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், புலியினுடைய வாலைப் பிடித்து ஆடியவர்கள் நாங்கள் இல்லை; எங்களுக்கு ஆடத்தெரியாது. ஆடத் தெரிந்தவர்கள், அதைக் கண்டு பயந்தவர்கள் இங்கே ஆடிக் காட்டினார்கள். எங்களுக்கு புலி ஆட்டம் தெரியாது. ஆனால் நீங்கள் புலி ஆடிய வரலாறு உண்டு.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1980-ஆவது ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிந்தபிறகு, பாராளுமன்ற உறுப்பினர்களில், கோவை திரு. இராமநாதன் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். டெல்லிப் பேரரசு, உலகத்திலே எங்கெங்கே எல்லாம் இந்திப்பரவி



இருக்கிறது என்பதைக் கண்காணிப்பதற்காக ஒரு தூதுக் குழுவை அனுப்புகிறது எதற்காகப் போகிறது என்றால், உலகத்திலே எங்கெங்கே எல்லாம் இந்தி பரவி இருக்கிறது என்று பார்ப்பதற்காக அதைக் காணுவதற்காக, நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் மாண்புமிகு திரு. கோவை இராமநாதன் அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்தி எங்கெங்கே எல்லாம் பரவி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக, தமிழ்நாட்டிலிருந்து போனார்கள். இதை நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் அவர்கள்தான் காசிலே இந்தி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், வாலைப் பிடித்து நாங்கள் ஆடவில்லை, வாலைப் பிடித்து எப்படி ஆட வேண்டுமென்று கற்றுக் கொண்டவர்கள், உலகத்திலே இந்தி எங்கெங்கே எல்லாம் பரவி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக அனுப்பப்பட்டார்கள்.

அதோடு மட்டுமல்ல, குட்டி மணியைப் பற்றி இங்கே பேசினார்கள். அவர்கள் ஆட்சியில் இருந்த நேரத்தில் வேதாரண்யத்திலே ஒரு இளைஞன் கைது செய்யப்படுகிறான்; என்னவென்று? பாஸ்போர்ட் இல்லையென்று. கைது செய்த உடனே டெல்லிப் பேரரசுக்கு எழுதுகிறார்கள். வேதாரண்யத்திலே குட்டிமணி என்ற இளைஞன் கைது செய்யப்பட்டிருக்கிறான். அவனிடம் பாஸ்போர்ட் இல்லை, இலங்கையிடம் ஒப்படைக்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் சொன்னார்கள், உங்களுடைய இஷ்டம், என்று.

(பிற்பகல் 1-00)

ஆனால் அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள், இல்லை, இல்லை நீங்கள் சொல்லுங்கள் நாங்கள் உங்கள் வாலைப் பிடித்து ஆடுகிற பழக்கம் அப்படி தான்; எனவே நீங்கள் சொல்லுங்கள், நாங்கள் கைது செய்கிறோம் என்று சொல்கிறார்கள். உடனே டெல்லி பேரரசு உங்களுடைய இஷ்டம் என்று சொல்லி விடுகிறார்கள். எனவே அன்றைக்கு குட்டிமணியை கைது செய்து, தமிழன் என்ற உணர்வில்லாமல் கைது செய்து இன்றைக்கு இருக்கிற இலங்கைப் பிரச்சினைக்கு அடித்தளம் நாட்டியவர்கள், இன்றைக்கு வாலினைப் பிடித்து எப்படி ஆடவேண்டுமென்று காட்டினார்கள்.

அதோடு மட்டுமல்ல. எங்களைப் பொறுத்தவரையில் தமிழ் பேசுவது என்பது ஒரு மனிதன் மூன்று வேளையும் சாப்பிட்டு ஆரோக்கியமாக இருப்பது; ஆங்கிலம் பேசுவது என்பது அவனுக்கு உடல்நலம் குன்றி வைத்தியம் பார்ப்பதைப் போன்றது. இந்தி பேசுவது என்பது ஆலகால விஷத்தை சாப்பிடுவதற்கு ஒப்பாகும். அந்த முறையில்தான் தொலைக்காட்சியில் தேசிய நிகழ்ச்சியை நீட்டக்கூடாது என்பதற்காக இந்த மாமன்றத்தில் நம்முடைய அண்ணன் ஆர். எம். வி. அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பேரிலே தான் அது நிறுத்தப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்ல. அவர்கள் ஆடிய ஆட்டம் இந்தியப் பேரரசிடத்தில் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதற்காக முன்பே குறிப்பிட்டார்கள். இந்திராகாந்தியே வா; நிலையான ஆட்சியை தா; என்று நாடகம் போட்டார்கள். வாலை பிடித்து ஆடினார்கள். ஏனென்று சொன்னால் அந்தத் தலைவர் மீது ஒரு வழக்கு இருந்தது. கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து ஊழல் என்று இரண்டு வழக்குகள் இருந்தன, அந்த வழக்குகளை எப்படியாவது வாலைபிடித்து ஆடி வாபஸ் வாங்கலாம் என்ற நோக்கத்தோடு செய்தார்கள். அப்படி வாலைப்பிடித்து ஆடி வாபஸ் வாங்கவும் செய்தார்கள் என்பதை மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் வாலைப்பிடித்து ஆடுகிற அரசு புரட்சித் தலைவர் அரசல்ல. வாலைப்பிடித்து ஆடி கோதுமை பேர ஊழலையும், பூச்சி மருந்து ஊழலையும் வாபஸ் பெற்றவர்கள் இன்றைக்கு வாலைப்பிடித்து ஆடியதாக எங்களை சொல்லியுள்ளார்கள். அப்படியே வாலைப்பிடிக்கிற ஒரு வாய்ப்பு எங்களுக்கு கிடைக்குமானால், புரட்சித் தலைவர் வாலைப்பிடிப்பார்கள் என்று சொன்னால், அந்தப் புலியினுடைய வாலை நறுக்குவதற்காகத் தான் பிடிப்பாரே தவிர, அதைப் பிடித்து ஆடுவதற்காக எங்களுடைய புரட்சித் தலைவர் பிடிக்க மாட்டார் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் சுப்புராயன் ஒன்றை குறிப்பிட்டார். ஏதோ பஸ் கட்டணம் உயர்ந்துவிட்டது என்று சொன்னார். அவர் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் எந்தக் கட்சியோடு கூட்டணி வைத்து வந்தீர்களோ அந்தக் கட்சி ஒரு காலத்திலே ஆண்டபோது தனியார் பஸ் முதலாளிகளை எல்லாம் அவ்வப்போது அழைத்து அதிகக் கட்டணம் வசூல் செய்ய சொன்னது அவர்கள் தான். அவர்களோடு தான் நீங்கள் கூட்டு வைத்திருக்கிறீர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தனியார் பஸ்கள் தான் அதிகமாக கிராமப் பகுதிகளில் ஓடிக் கொண்டிருக்கின்றன. எனவே அந்தக் காலத்தில் ஆண்டவர்கள் தான், எங்களுக்கு முன்பு ஆண்டவர்கள் தான் உங்களுடைய கூட்டாளிகள். பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அவ்வப்போது தனியார் முதலாளிகளை அழைத்து அதிகக் கட்டணம் வசூலித்தவர்கள் அவர்கள் தான், என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைக்கு புரட்சித் தலைவரின் ஆட்சி தான் பொற்கால ஆட்சி. புரட்சித் தலைவர் தான் ராஜாங்கம் கண்ட ஏகபிரான். எங்கள் புரட்சித் தலைவர் ஆட்சி உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு உங்கள் மாணவர் போராட்டங்களை நிறுத்தி வழிவிடுங்கள் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.



திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இந்த பரப்புரை கமிட்டியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்ததாகச் சொன்னார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எம்.பி.-க்கள் அதில் இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இரண்டாவது, இந்திரா காங்கிரசோடு கூட்டு சேர்ந்தது வழக்குகளை வாபஸ் வாங்குவதற்காகத் தான் என்று சொன்னார்கள். இப்போது நீங்கள் கூட்டு சேர்ந்திருப்பது ரே கமிஷன் எரிசாராய ஊழல் வழக்கை திரும்பப் பெறவேண்டும் என்பதற்காகவா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இந்தி எந்த அளவிற்கு பரவி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக அனுப்பப்பட்ட குழுவிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தான் இடம் பெற்றிருந்தார்களே தவிர அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இடம் பெறவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கக்கூடிய கருத்து உண்மைக்கு புறம்பாக இருந்தால் அவர் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படும் என்று கருதுகிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். இதை என்னுடைய நினைவின் அடிப்படையில் சொல்லவில்லை. அதற்கான பட்டியலை உங்கள் அனுமதியோடு நாளைக்கு தரவிருக்கின்றேன். அடுத்தது ரே கமிஷன் விவகாரத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தன்னைப் போலவே மற்றவர்களையும் எடுத்துக்கொள்ளக் கூடாது. நீங்கள் எதற்காக கூட்டு சேர்ந்தீர்கள் என்பதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் வச்சிரவேலு சுட்டிக்காட்டினார்கள். நீங்கள் அதற்கு எதிர் கேள்வியாக ரே கமிஷன் என்று கேட்கிறீர்கள். நீங்கள் சேர்ந்த விவகாரம், அதிலே ஏற்பட்ட சிக்கல்கள் அவைகளைப் பற்றி பதில் சொல்லியிருக்க வேண்டுமே தவிர இங்கே எதிர்க் கேள்வி தொடுத்து பயனில்லை. நாங்கள் அதற்காக கூட்டு சேரவில்லை.

திரு. வி. பி. சிந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இரண்டு பேரும் கூட்டு சேர்ந்தது தவறு என்று கூறுகிறவன் நான்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதனால் தான் நீங்கள் எப்போதும் போல இருக்கிறீர்கள்.

**திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு முன்பாக என்னை இந்த மன்றத்திலே கலந்து கொண்டு, இந்த நடவடிக்கையில் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த இறைவனுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த தொகுதி வாக்காளர்களுக்கும் ஏதோ ஒரு காரணத்தால் எனக்கு வாக்களிக்காத எனது தொகுதி மக்களுக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி கூறி, எனது உரையை தொடங்குகிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வைத்து, பல்வேறு விளக்கங்களைத தந்திருக்கிறார்கள். முதன் முதலாக என்னுடைய கருத்துக்களிலே, மது வரியை உயர்த்தியிருப்பதைப் பற்றிக் கூற விரும்புகிறேன். எங்களுடைய கொள்கைப்படி மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தல் அறிக்கையில் இந்த ஆண்டு செப்டம்பர் 15-ம் நாளிலிருந்து கண்டிப்பாக மதுவிலக்கை அமுல்படுத்துவோம் என்று கூறியிருக்கிறார்கள். அவை நிறைவேற்றுகின்ற வகையில் கண்டிப்பாக மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத் துறையிலே நான் குறிப்பாக ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன் விவசாயத்தில் நெல்லை மாவட்டம் உலகத்திலேயே ஒரு சிறந்த தன்னிறைவு மாவட்டம். எங்கள் மாவட்டத்திலேயே உற்பத்தியாகி, எங்கள் மாவட்டத்திலேயே கடலில் சங்கமம் ஆகிற நீர்வளம் மிக்கது நெல்லை மாவட்டம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாவட்ட பிரிவினை வந்த பின்னால் அந்தப் பெருமை உங்களுக்கு வராது.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : இப்போது அந்தப் பெருமை எங்களுக்கு உண்டு. இடவபாதி காலத்தில் அதிகமாக மழைநீர் வரும். மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிற ஆற்றில் நீர் அதிகமாக வந்து, கடலிலே வீணாகச் சென்று கலந்து, விவசாயத்திற்குப் பயன்படாமல் போய் விடுகிறது. எங்களுடைய மாவட்டத்தில் இன்றைக்கு பெரிய அணை என்று சொல்லப்படுபவை தாம்பரவருணி அணையும் அதற்கு அடுத்து மணிமுத்தாறு அணையும் இருக்கின்றன. இப்போது அந்தப் பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருப்பது பச்சையாறு அணைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது.

தாம்பிரவருணி, மணிமுத்தாறு பாசனக் கருத்தரங்கில் நெல்லை மாவட்டத்திலிருந்து ஏகமனதாக இந்த அணைத் திட்டத்தைக் கட்டித் தர வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். அதை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, அதிகமாக செலவு இல்லாத காரணத்தால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பச்சையாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால் இந்த மாநிலத்திற்குள்ள உணவு நிலைமையில் எங்கள் மாவட்டம் தன்னிறைவு செய்யக்கூடிய அளவு வசதி ஏற்படும். அது மட்டுமல்லாமல் அந்த பச்சையாறு திட்டத்தினால் பல குளங்கள் நீர்ப் பெருகி, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் விவசாயம் செய்வதற்கு ஏற்ற வகையில் பயனடையும், குடிநீருக்கும் உதவியாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பல்கலைக் கழகங்கள் பல ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாட்டில் சிறப்பாக நடந்து வருகின்றன. மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் கிட்டத்தட்ட நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதனால் அதை இரண்டாகப் பிரித்து மேலும் ஒரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தினால் நிர்வாக முறைக்கு நன்றாக இருக்கும். பாளையங்கோட்டையைத் தலைநகராகக் கொண்டு அந்த புதிய பல்கலைக் கழகத்தை இயங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனியார்களுடைய பேருந்துகளுக்கு அனுமதி அளித்து, ஒரு குறிப்பிட்ட அளவு அவர்கள் வைத்து நடத்திக்கொள்ளலாம் என்ற வகையில் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நடைமுறையில் அப்படி இல்லை. ஒன்றில் எல்லாவற்றையும் அரசுடைமையாக்க வேண்டும். அல்லது நீங்கள் வாக்களித்தபடி தனியார்கள் பேருந்துகளை நடத்த நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் நல்ல குறிக்கோள்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே வைத்திருக்கிறார்கள். இப்போது மேலப்பாளையம் நகராட்சியைப் பொறுத்தவரையில் 1 கோடி ரூபாய்க்கு மேல் திட்டமிடப்பட்டு, குடிநீர் திட்டம் நடந்து வருகிறது. ஆனால் அதனுடைய வேலைகள் சுணக்கமாக நடைபெறுவதால், அந்தப் பகுதி மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் அந்த நடவடிக்கைகளை துரிதமாக எடுத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நெல்லை மாவட்டத்திற்கு சட்டப் படிப்புக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப் பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு நிறைய மானியம் ஒதுக்கியிருக்கிறார்கள் இந்த நிதிநிலை அறிக்கையில், ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் செம்மலை அவர்கள் ஆளுநர் உரை மீது நன்றி கூறும் தீர்மானத்தின் மீது பேசும்போது, காவலர்களுக்கு இந்த அரசு நிறைய சலுகைகளைச் செய்து இருக்கிறது, அவர்கள் இந்த அரசுக்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும் என்று

சொன்னார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படி என்றால் அரசுக்கு அவர்கள் உறுதுணையாக இல்லை என்பது அவருடைய கருத்திலேயிருந்து தெரிய வருகிறது. ஏன் இதை நான் கூறுகிறேன் என்றால் நான் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவன் என்று கூறி அதற்காக சில காரணங்களை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல நினைக்கிறேன். தேர்தலிலே போட்டியிடும்போது, சில வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. அந்த நேரத்தில் காவலர்களிடம்......

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : துணைத் தலைவர் அவர்களே, தேர்தலைப் பற்றி ஏற்கனவே வழக்கு மன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே, வழக்குக்கு குந்தகம் ஏற்படுகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அதை இங்கே பேசலாமா என்பதைப் பற்றி தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கில் இருப்பது சம்பந்தமாகப் பேச வேண்டாம்.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நாங்கள் முறையீடு செய்யும்போது, அவர்களைக் கூப்பிட்டு எச்சரிக்கை செய்திருந்தால், இப்படி எல்லாம் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக இருந்திருக்காது என்பதற்காகத்தான் இந்தச் சம்பவத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். இந்த நாளில் சம்சாரத்தைவிட மின்சாரம் ரொம்பவும் முக்கியமானது என்று. எல்லாத் துறைகளிலும் மின்சாரம் இப்போது உபயோகத்தில் இருப்பதால் இந்த மின்சாரத்துறையிலே அரசு சரியான கவனம் செலுத்தி, மின்சாரம் தமிழ்நாடு முழுவதும் நல்லமுறையில் கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய பாளையம்கோட்டை தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. எனவே இந்த பாளையம் கோட்டை தாலுக்காவையும், சங்கரன்கோவில் தாலுக்காவையும் பிற்பட்ட பகுதியிலே சேர்க்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பாளையங்கோட்டை ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் அநேக பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. அவைகள் எல்லாம் தீவுகளைப் போல் காட்சியளிக்கின்றன. ஒரு அவசரமான பேறுகாலத்திற்குச் செல்லவேண்டும் என்றால் கூட அவர்கள் அந்த மெயினான பாதைக்கு வரமுடியாமல் ஊரைச் சுற்றி வரவேண்டிய நிலைமையிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் திட்டம் தீட்டி நிறைவேற்றும்போது ஒரு லட்சம்



ரூபாய்க்கு அதிகமான தொகை ஏற்பட்டால், அதை அரசிடம் அனுமதி பெற்றுத்தான் அந்த வேலையைச் செய்யவேண்டும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இதுபற்றி நான் துணைக்கேள்விகள் கூட இங்கே கேட்டு இருக்கிறேன். அரசு அதற்கான அனுமதியை உடனடியாக வழங்கும் என்று அமைச்சர் அவர்கள் எனக்கு உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். அந்த அளவிலே உடனடியாக அனுமதியை வழங்கி அந்தப் பாலங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாளையம்கோட்டை நகராட்சியைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட நிறைய புறநகர்ப் பகுதிகள் ஏற்பட்டு வருகின்றன. 20 ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்ட பெருமாள்புரம் போன்ற ஊர்களுக்குக் கூட இன்றுவரையில் குடிநீர் வினியோகத்தைச் செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. அங்கே என்.ஜி.ஓ. காலனியில், 'ஏ' காலனி, 'பி' காலனி, இ.பி. காலனி, கே.டி.சி. காலனி போன்ற காலனிகள் புறநகர்ப் பகுதிகளில் அதிகமாக ஏற்பட்டு வரும் இந்தச் சூழ்நிலையில், அங்கே குடிநீர் வழங்குவதற்கு அதிகமான தாமதங்கள் ஏற்படுகின்றன. சரியான முறையில் குடிநீர் வழங்க முடியவில்லை. அங்கே விளக்கு வசதி செய்து தர முடியவில்லை. பாதை வசதி கூட செய்து தர முடியவில்லை. இதைப்பற்றி அரசாங்க அதிகாரிகளைக் கேட்கிற போது, அடுத்த வருஷம் செய்கிறோம், அடுத்த வருஷம் செய்கிறோம் என்று அவர்கள் காலம் தாழ்த்திக் கொண்டு இருக்கிறார்களே தவிர, முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு எல்லாம் காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்தப் பொறுப்பிலே இல்லாத காரணத்தால், தனி அதிகாரிகளால், அந்தக் காரியங்களைச் செய்ய முடியாத நிலை இருக்கிறது, என்று கூறி உடனடியாக உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கல்வி திட்டத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து வளரும் குழந்தைகளுக்கு இலவச படிப்பும், இலவச புத்தகமும் இலவச சீருடைகளும் கொடுப்பதற்காக இந்த அரசு அறிவித்திருக்கிறது. அறிவித்தபடி செயல்படும்போது நடைமுறையில் சில குறைபாடுகள் ஏற்படும். ஆகவே, அவைகளை நல்ல முறையில் கண்காணித்து சீராக நிறைவேற்றித்தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவி நீட்டிப்பினால், அவர்களுடைய பொறுப்பற்ற முறைகள் வளர்ந்து கொண்டே போவதனால்தான் திரும்ப திரும்ப நான் இதைச் சொல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்

திரு. க. நரசிம்ம பல்லவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்லோர் பலரும் பொறுப்பேற்று, இம்மாநிலம் நலமுடன் வாழ, நற்பெயரோடு வாழ்ந்து வழி

நடத்திச் சென்ற, இம்மாமன்றத்தின் உள் நுழைந்து, பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருபொருளாய், காரண கர்த்தாவாக உள்ள, அமெரிக்காவில் மூன்றாம் பிறையாக உதித்து, இன்றைய தினம் தமிழகத்தின் முழுநிலவாய் ஒளி வீசிவரும், மூன்றாம் முறையும் முதலமைச்சராக இருக்கும் எங்களுடைய தனைத் தலைவர். புரட்சித் தலைவர், இதய தெய்வம் அவர்களுடைய பொற் பாதங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்து; உலகத்திலே உத்திரமேரூர் கல்வெட்டு மூலம், உள்ளாட்சித் தத்துவத்தை, தேர்தல் முறைகளை வித்திட்டு வழங்கிய உத்திரமேரூர் தொகுதி அனைத்து பொது மக்களுக்கும், குறிப்பாக தாய் குலத்திற்கும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கும், எனது நெஞ்சார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டில் ஏழைகளை பாதிக்காத அளவில் கனியப் பொருள்களின் மீதும் ஏழைகள் பயன்படுத்தக் கூடாத வகையில் இருக்கின்ற சாராயத்தின் மீதும், வரிகளைப் போட்டு உயர்த்தியிருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் ஒரு முனை வரியின் மூலமாக மிளகாய், தனியா போன்ற பொருள்களுக்கு முதல் கட்ட வரி விதிப்பை மட்டும் இந்த விலைவாசி ஏற்றக்காலத்தில், அமல் படுத்தியிருப்பதை பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்று வேளையும் கூழைக் குடித்து வாழ்கிற சமுதாயத்தினர், அம்மா என் குழந்தைக்கு சோறு கொஞ்சம் கொடுங்கள் என்று வசதிப்படைத்தவர்கள் வீட்டுக்கு சென்று கையேந்துகிற நிலைமையைப்போக்க, பிள்ளைக்கு உண்ண உணவே இல்லை எங்கே என் பிள்ளை படிக்கப் போகிறது என்று தாய்மார்கள் ஏங்கும் நிலைமை இருக்கிற குடும்பங்களில், இன்றையதினம் சத்துணவு திட்டத்தின் மூலமாக ஒளி விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த சத்துணவு திட்டத்தின் மூலமாக உணவு அளிக்கப்பட்டு, நல்லமுறையில் குழந்தைகளுக்கு பயன்பெற்று, எதிர்கால சந்ததியினரை உருவாக்குகிற வகையில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வரும் என்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே கொண்டு வந்திருப்பதை வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணாவின் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தத்துவத்தின் அடிப்படையில் நடந்து செல்கிற நிலையில் பொது மக்களுடைய மனம் புண்படாத வகையில், இன்றைய தினம் அழிந்து வந்த ஆலயங்கள் அனைத்தும் அழகு படுத்தப்பட்டு, பொது மக்கள் மனம் திருப்தி அடைகிற வகையில் நடந்திருப்பதை வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதே நேரத்தில் இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்தவன் தொழிலாளி என்று புரட்சித் தலைவர் அவர்கள் பாடியதற்கு இணங்க இன்றைய தினம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கிற நிதிநிலையைப் பொறுத்து, எந்த அளவிற்கு சிறப்பாக ஆட்சிதனைச் செய்ய முடியுமோ, அந்த வகையில், எந்தத் துறையானாலும், அது மின்சாரத் துறையானாலும், விவசாயத் துறையானாலும், கல்வித் துறையானாலும் அந்தந்த துறைக்கும் சிறப்பான முறையில் மக்களுடைய உள்ளங்களை குளிர வைக்கிற அளவில் எப்படி ஆட்சி செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு ஆட்சி செய்துக் கொண்டு வருகிற இந்த அரசு இன்றையதினம் உபரியாக மின்சாரம் உள்ள மற்ற மாநிலங்களை விட, ஏழை எளிய மக்கள் பயன் பெறுகிற வகையில் ஒரு விளக்கு மின் திட்டத்தை அறிவித்ததுடன், ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சார வசதிகளையும் செய்து தரும் வகையில் கொண்டு வந்திருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோது இங்கே புரட்சி இல்லை மிரட்சி தான் இருக்கிறது என்று கூறினார்கள். அதைப்பற்றி நான் ஒன்று கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக மக்கள் எல்லாம் இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பை நம்பி ஒப்படைத்திருக்கிறார்கள் என்றால், அதுவும் மூன்றாம் முறையாக, அவர்களுக்கு அந்த புரட்சி தெரிந்திருக்கிறது. அதனால் ஒப்படைத்திருக்கிறார்கள். உங்களுக்கு வேண்டுமானால் அவர்களிடம் சென்று பாடத்தைக கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறிக் கொண்டு, அடுத்து என்னுடைய தொகுதிப் பிரச்னையாக சிலவற்றை நான் கூறிக் கொள்ள முன்வருகிறேன்.

(பிற்பகல் 1—20)

அகில இந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு முதன் முதலாக நமது புரட்சித் தலைவர் அவர்கள் காஞ்சியினுடைய மண்ணை தொட்டு விட்டு, உத்திரமேரூருக்கு வருகை தந்து நன்றி கூறுகிற கூட்டத்தில் கலந்துக் கொண்டார்கள். அந்தக் கூட்டத்திலே உத்திரமேரூர் பகுதியை பொறுத்த அளவில் 7 அடி வண்டல் மண் தூர்ந்து இருக்கிறது. அதை தூர் எடுப்பதற்கு ஆவன செய்வதாக அன்றைய தினம் கூறிவந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இன்றையதினம் கரைகள் எல்லாம் வலுப்படுத்தப்பட்டிருக்கிறது. தூர் வாருவது மட்டும் கொஞ்சம் தாமதமாகி இருக்கிறது. அதனை செய்து எங்களுடைய பகுதிகளுக்கு விவசாயம் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும். எங்கள் பகுதியில் எடைமிச்சி கால்வாய்த் திட்டம் என்று ஒரு திட்டம் ஏற்கனவே உருவாக்கப்பட்டு நடைமுறையில் தாமதமாகி இருக்கிறது. அந்தத் திட்டத்தை உருவாக்கினால் பாலேஸ்வரம் என்ற இடத்தில் இரண்டு மலைகளுக்கு இடையே

ஒரு அணை கட்டி அதன் மூலம் பல கிராமங்களும், பல்லாயிரக் கணக்கான நிலங்களும் பயன்பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பழைய சீவாத்திக்கும் திருமுக்கூடலுக்கும் இடையில் பாலாற்றின குறுக்கே ஒரு பெரிய அணையை கட்டுவதற்கு கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக அது சர்வே செய்யப்பட்டு அப்படியே நிற்கிறது. அதையும், விரைவுபடுத்தி அந்த அணையைக் கட்டித் தந்தால் அந்த பாலாற்றின் இருமருங்கிலும் உள்ள கிராம மக்கள் நல்ல பலன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் வெள்ளிவளம் கிராமத்திற்கு தெற்கே பாலாறும் வடக்கே வேகவதி ஆறும் ஓடுவதால் மழைக் காலத்தில் அந்த கிராமங்கள் தீவு போன்று தத்தளிக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. வெள்ளிவளம் தாங்கிக்கும் இடையே ஒரு சிறிய மேம்பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலியூர் சிறுவாக்கம் செல்லும் வழியில் பம்பக் கால்வாய் குறுக்கே சிறிய மேம்பாலம் கட்டித்தர வேண்டும். தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்களிலேயே உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரியது. 74 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கியது ஆகும். நிர்வாக வசதி பொருட்டும், கிராம வளர்ச்சிப் பொருட்டும் இதை அவசியமாக இரண்டாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும். கிராமப் பகுதிகள் அதிகமாக உள்ள என் தொகுதியில் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே தயவு செய்து தாலுக்கா அந்தஸ்த்தில் உள்ள உத்திரமேரூர்க்கு தீ அணைப்பு நிலையம் ஒன்றை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். சுமார் 30 வருடங்களுக்கு மேலாக உரிமையியல் நீதி மன்றம் உத்திரமேரூரில் இயங்கி வந்தது. தற்சமயம் தாலுக்காவாக ஆக்கப்பட்டு இருப்பதால் மீண்டும் நீதிமன்றம் வேண்டும் என்பது பொது மக்கள் கோரிக்கை. வாலாஜாப் பேட்டை பேரூராட்சிக்கு சித்த வைத்தியம் மட்டும் தான் இருக்கிறது. அங்கே ஒரு அரசு மருத்துவமனை அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உத்திரமேரூர்க்கு பக்கத்தில் அச்சரப்பாக்கம், வந்தவாசி, மதுராந்தகம் போன்ற இடங்களுக்கு உத்திரமேரூர் மையமாக உள்ளதால் கல்லூரி ஒன்று அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உத்திரமேரூரிலிருந்து சென்னைக்கு புக்கத்துறை கூட்டு ரோடு வருகின்ற வழியில் தார் சாலையை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)



*திரு ஜி. கே. ஜே. பாரதி: மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய தலைநாயகர் அவர்களே, நிதி நிலை அறிக்கையினுடைய எழுச்சிமிக்கபேருரையை ஆற்றுகின்ற வாய்ப்பை தந்ததற்கு உள்ள படியே பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை வளமாக, நலமாக மக்களுக்கு பயன்படுகின்ற அளவுக்கு ஏற்ற மிக்க தரத்தை அளித்து உள்ளது என்பதை உளப்பூர்வமாக பாராட்டுகிறேன். நடுவன் அரசினுடைய 20 அம்சத் திட்டத்தை எழுச்சியோடு செயல்படுத்தியதற்காக நடுவன் அரசிடம் பரிசு பெற்றிருப்பதையெல்லாம் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் கல்விக்காக ரூ. 468 கோடி வழங்கி இங்கே முதியோர் கல்வித் திட்டத்தையும் நமக்கும் சிறப்பாக அள்ளி வழங்கியதற்கு நடுவன் அரசு ரூ. 25 இலட்சம் பரிசு தற்திருக்கிற எழுச்சியினை பார்க்கிறோம். தமிழகத்திலே, தமிழ் பல்கலைக் கழகம் உருவாக்கி தமிழர்களுடைய இதயங்களில், தமிழுக்குத் தனித் துறையை ஏற்படுத்தி சிறப்பு செய்து இந்த அரசை பாராட்டி தமிழுடைய விழாவை கொண்டாடுகின்ற நாமெல்லாம் பூரிப்பு அடைகிறோம், பெருமை அடைகிறோம் என்று சொல்லி, கண்ணதாசன் நினைவுச் சின்னத்தையும், நம்முடைய மதிப்பிற் குரிய.திருப்பூர் குமரனுக்கு நினைவுச் சின்னத்தையும் வைக்க இருக்கிறார்கள். 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்'' என்று பாடினானே அந்த எழுச்சிமிக்க கவிஞனுக்கு நினைவு விழா.

அடுத்து கொடி காத்த குமரன், எந்த நிலையிலும்தான் கொடியை விடமாட்டேன் என்று ஆர்ப்பரித்த எழுச்சிமிகு போர் வீரனுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப இருக்கிறார்கள், இப்படிப் பட்ட எழுச்சிமிகு நிதிநிலை அறிக்கையை இங்கே வைத்திருக் கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் எண்ணூர் அனல் மின்நிலையத்திலே ஒரு மாபெரும் விபத்து ஏற்பட்டிருக் கிறது. காலையிலே மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் வெகு அழகாக அதற்குப் பதில் சொன்னார்கள். அங்கே இறந்து விட்ட மூன்று பேர்கள் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள். அதுவும் 20 வயதுக்கு கீழே உள்ளவர்களும் அங்கே இருக்கிறார்கள். சட்டப்படி 20 வயதிற்கு மேற்பட்டவர்கள்தான் பணியிலே அமர்த்தப்பட வேண்டும். ஆனால் அங்கே 15 வயது, 16 வயது இளைஞர்கள் கூட வேலை செய்கிறார்கள். ஒப்பந்தக்காரர்கள் ஒரு குறிப்பிட வயதுக்கு மேற்பட்டவர்களைத்தான் பணிக்கு அமர்த்தவேண்டுமென்ற அறிவுரையினை அரசு அவர்களுக்குத் தெரிவிக்க வேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே பணி யாற்றுகிறவர்கள்(ஸ்டாப் அமெனிட்டிஸ்)என்பது எதுவும் இல்லை. அதையெல்லாம் கொடுப்பதற்கு அரசு தயாரக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அந்த விபத்து நடைபெற்ற நிலையிலே ஹோஸ் பைப் தடைபட்டுத் தான் அந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது அவைகளையெல்லாம்

தடுக்கின்ற முறையிலே அரசு ஆபரேட்டர்களை நியமிக்க வேண்டும், அரசு எவ்வளவுதான் ஆணைகளை வெளியிட்டாலும் கூடஅதிகாரிகள் மெத்தனமாக இருக்கிறார்கள். ஆகவே அதையும் அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்திலே மிகப் பெரிய வீடியோ சென்டரை வைத்துக்கொண்டு புளு பிலிம்கள் காட்டி இளைஞர்களைப் பாழடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைத் தடுக்கவேண்டும். அது மட்டுமல்ல, பெரிய ஹோட்டல்களிலே காபரே போன்ற நடனங்களை நடத்தி இளைஞர்களின் நெஞ்சங்களிலே நச்சுத் தன்மையைப் பரப்புகின்ற தன்மையை அறவே போக்கிடவேண்டும். காட்டன்பெட் என்ற சூது இழிவினை இழிவான தன்மையை கடந்த அரசு நிறுத்தி வைத்திருந்தது. மீண்டும் அது தலைதூக்க ஆரம்பித்து இருக்கிறது. அதை தலை தூக்கவிடாமல் செய்ய வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் துணை சூப்பிரண்டெண்டெண்ட் ஆப் போலீஸ், துணை கலெக்டர் ஆகிய பதவிகள் போன்றவற்றிற்காக ஏ குரூப் தேர்வு நடந்தது 1982 ஆம் ஆண்டு. அப்போது நடந்த தேர்வையொட்டி உயர்நீதி மன்றத்திற்கு வழக்குச் சென்ற காரணத்தினால் அந்தத் தீர்ப்பின் முடிவை 1985 ஆம் ஆண்டுதான் வெளியிட்டிருக்கிறார்கள். இடையிலே 1983, 1984 ஆண்டுகளிலே தேர்வு எழுதமுடியாமல் பாதிக்கப் பட்ட இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் தேர்வு எழுதுவதற்கு வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்பே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், ஆகவே விரைவிலே அதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சர்வீஸ் கமிஷனில் தேர்வு எழுதுவதற்கு இளைஞர் களுக்கு வாய்ப்புக் கொடுக்கிற முறையிலே அவர்களுடைய வாழ்விலே அவர்கள் வளம் பெறுவதற்காக 10 ஆயிரம் இளைஞர்கள் மீண்டும் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள் என்பதால் 1 வயது, 2 வயது வித்தியாசம் என்ற காரணத்தினால் அவர்கள் வேலை வாய்ப்பை இழக்கக்கூடிய நிலைமை இருப்பதால் அதை ரிலாக்ஸ் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பல் வேறு கோணங்களிலே பார்க்கிறபோது மிகப் பெரிய தொழிற் கூடங்கள் நிறைந்த பகுதியாக இருக்கிற காரணத்தினால் அங்கே ஒரு என்சினியரிங் கல்லூரி இருந்தால் சிறப்பாக இருக்கும். அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். என்னுடைய தொகுதி ஹைலி பொல்யூட்டட் ஏரியா வாக இருக்கிறது. நாங்கள் அங்கே வாழ்வதற்கு தவம் செய் திருக்க வேண்டும். அங்கே உள்ள தொழிலாளர்கள் நல்ல வகை யில் எல்லா வளமும் பெறத்தக்க வகையிலே எல்லா வளத்தையும் இந்த அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



என்னுடைய திருவொற்றியூர் தொகுதியில் 1½ லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அங்கே ஒரு காவல் நிலையம்தான் இருக்கிறது. 52 கான்ஸ்டபிள்கள்தான் இருக்கிறார்கள். அதை சென்னை நகரக் காவல் துறையோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கயவர்கள், திருடர்கள் அறவே ஒழிக்கப்பட்டு விட்டார்கள். ஆனால் பிக்பாக்கெட் அதிகமாக இருக்கிறது. அது தலை தூக்காமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்தக் காவல் நிலையத்தை சென்னை நகரக் காவல் துறை யோடு இணைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப் பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-30)

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு! 2-4-1985 அன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி 24-1-1985 முதல் பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைபேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 24-6-1985 திங்கட்கிழமை | | 1985-86 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும் |
| | 20 — | வேளாண்மை |
| | 49 — | குடிநீர் வழங்கல் |
| | 50 — | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு |
| 25-6-1985 (செய்வாய்க்கிழமை) | 18 — | மருத்துவம் |
| | 19 — | பொதுச் சுகாதாரம் பேரவை மாலையிலும் கூடும்- |
| 26-6-1985 (புதன்கிழமை) | 24 — | தொழில்கள் |
| | 51 — | தொழில் வளர்ச்சி குறித்த மூல தனச்செலவு |
| 27-6-1985 (வியாழக்கிழமை) | 3 — | மோட்டார் வண்டிகள்-சட்டங்கள் நிர்வாகம் |
| | 39 — | சாலைகளும் பாலங்களும் |
| | 40 — | சாலைப்போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். |

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1985 ஏப்ரல் 4

54 — சாலைகளும் பாலங்களும் குறித்த மூலதனச் செலவு.

55 — சாலைப் போக்குவரத்துப்பணிகளும் கப்பல் போக்குவரத்தும் குறித்த மூலதனச் செலவு.

28–6–1985 (வெள்ளிக்கிழமை) 5 — முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்

6 — பத்திரப்பதிவு

10 — பால் வழங்கு திட்டங்கள்

22 — கால்நடை வளர்ப்பு

மற்ற மானியக் கோரிக்கைகள் என்று எடுத்துக் கொள்ளப் படும் என்பது குறித்து பின்னர் அறிவிக்கப்பெறும். 24-6-1985 அன்று காலை 10–00 மணிக்கும், அடுத்து வரும் நாட்களில் வழக்கம்போல் காலை 9-00 மணிக்கும் பேரவை கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 8-4-1985 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

154. வருவாய்த் துறையின் 7–9–1971 ஆம் நாளிட்ட II–1 எண் 3987 (b)/1971 ஆம் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 16-6-1984 ஆம் நாளிட்ட 996 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்விளை நிலங்கள் (பதிவுரு குடிவார உரிமைச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ், பேரவை முன் வைக்கப் பெற்றது].

155. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் வழிவகைகளிலிருந்து சில கோவில்களுக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 4-8–1984 ஆம் நாளிட்ட 853 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு அறக்கட்டளைகள் துறையின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்—தொடர்ச்சி.

156. இந்துசமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் வழிவகைகளிலிருந்து திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1-8–1983—ஆம் நாளிட்ட 860–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959—ஆம் ஆண்டு அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

157. இந்துசமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் 36-வது பிரிவின் வழிவகைகளிலிருந்து மதுரை மாவட்டம், பழனி தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்திற்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 23—6-1984-ஆம் நாளிட்ட 679-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

158. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84-ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை [1959-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

159. மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ.) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள் எதுவுமில்லை—

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

32/86
2837

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 8, 1985 - தொகுதி V எண் 3
Monday the 8th April 1985 - Volume V No 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்)
Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்

8—4—1985


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்— விடைகள் | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 245—258 |
| 2. | ஒத்திவைப்புத் தீர்மானம் | |
| | சிறப்பு காவல் படையினரில் சிலர் சேர்ந்து கொண்டு ஆவடி ராமரத்னா திரையரங்கையும், அதன் உள்ளும் வெளியும் இருந்த பொதுமக்களையும் தாக்கியுள்ளது. | 258—272 |
| 3. | கவன ஈர்ப்புகள் | |
| | (அ) விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை குறைந்த வாடகைக்கு அளித்தல் | 273—274 |
| | (ஆ) உத்திரமேரூர் பகுதியில் நெல்பயிர் பாது காப்புக்காக எலி ஒழிப்பு நடவடிக்கை | 27 —276 |
| 4. | அரசினர் சட்ட முன்வடிவுகள் | |
| | (அ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985 | 276—284 |
| | (ஆ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 | 284—287 |
| | (இ) அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு 1985 | 287 |
| 5. | வரவு-செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம் (தொடர்ச்சி) | 290—310 |
| | திரு. கி. மனோகரன் | |
| | திரு. என். எஸ். வி. சித்தன் | 310—335 |
| | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 335—370 |
| 6. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 370 |

2837

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1985, ஏப்ரல் 8, திங்கட்கிழமை**

**பங்குனி 26, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016**

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*'' உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.''*

*இறையாக வந்து சேரும் பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், தன் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும் அரசனுடைய பொருள்களாகும்.*

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### பஞ்சாலைத் தொழிலாளர் பணிக்கொடை

*49—(*வினா எண் 1018)*—**திரு. கு. சுப்பராயன் :** *மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சர்வீஸ் முடிந்த தொழிலாளர்களுக்கு பணிக் கொடைத் திருத்தச் சட்டபடியும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புப் படியும் பணிக்கொடை வழங்க பல பஞ்சாலை முதலாளிகள் முன் வருவதில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?*

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** *(அ) பணிக்கொடை திருத்தச் சட்டத்தின்படியும், உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படியும் பணிக்காலம் (சர்வீஸ்) முடிந்து ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்க பல பஞ்சாலை முதலாளிகள் முன்வருவ தில்லை என்பது பற்றி புகார் விவரங்கள் தொழிலாளர் துறைக்கு இதுவரையில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.*

*(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.*

**திரு. கு. சுப்பராயன் :** *பேரவைத் தலைவரவர்களே, கடந்த 1984-ஆம் ஆண்டு மே மாதம் 21-ஆம் தேதியில், திருத்தப்பட்ட பணிக்கொடைத் திருத்தச் சட்டத்தின்படி பஞ்சாலை முதலாளிகள் தமிழ் நாட்டில் கிராஜூட்டி வழங்குவதில்லை. ஆனால் வழங்கப் பட வேண்டும் என்று முதலாளிகள் சங்கத்திலேயிருந்து ஒரு சர்க்கு லர் மட்டும்தான் போடப் பட்டிருக்கிறதே தவிர, நடைமுறையில் எங்கும் கிராஜுட்டி திருத்தச் சட்டபடி வழங்கப்படுவது இல்லை.*

[1985 ஏப்ரல் 8

ஆகவே, பணிக்கொடைத் திருத்தச் சட்டப்படி பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக் கிராஜுவட்டி வழங்கப்பட வேண்டும் என்பதற்கான முறையில், முதலாளிகளுக்கு எதிரான நிர்பந்த நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் சகோதரர்களுக்குச் சட்டப்படி பாதுகாப்பு இருக்கிறது. எனவே, அவர்கள் விண்ணப்பித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ரு. சுப்பராயன் :** பேரவைத் தலைவரவர்களே, சட்டப்படி பாதுகாப்பு இருந்தாலும்கூட, அவற்றை நடைமுறைப்படுத்துவது இல்லை என்பதைத் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களோடு 12—3—84-இல் பேச்சுவார்த்தை நடத்தியபோது, முதலாளிகள் பஞ்சப்படி தராமல் இருக்கிறார்கள் என்று சொல்லி அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே குறிப்பாக நான் சுட்டிக்காட்டுவது, பொதுப்படையாக, திருத்தச் சட்டப்படி பஞ்சப்படி வழங்கப்பட வேண்டும் என்று முதலாளிகள் மீது நிர்பந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். அதை அரசு மேற்கொள்ளுமா என்பதைத்தான் திரும்பவும் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டத்தில் வாய்ப்பு இருக்கிறது; சாத்தியம் இருக்கிறது. இவைகளை விட்டுவிட்டு நிர்பந்தம் நிர்பந்தம் என்று வற்புறுத்துவதில் பொருள் இல்லை. அதற்கு உரிய அதிகாரிகளை அரசாங்கம் நியமித்திருக்கிறது. ஆகவே, பாதிக்கப்பட்ட அல்லது கிடைக்காத தொழிலாளர்கள் இவர்களிடத்தில் விண்ணப்பித்து விட்டு, பிறகு அதிகாரிகள் ஏதாவது சுணக்கமாக இருந்தால் அல்லது தாமதித்து இருந்தால் அல்லது அக்கறை இல்லாமல் கடமையிலிருந்து தவறினால் அதை நீங்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவரவர்களே, மின்சார இலாக்கா, அரசு போக்குவரத்துக் கழகம் போன்ற இடங்களில் இத்தகைய பணம் கிடைக்கவில்லை என்பதற்காக சுப்ரீம் கோர்ட் வரையில் வழக்கு நடத்தப்பட்டது. இன்றைக்கும் ஆயிரக் கணக்கானவர்களுக்கு அந்தத் தொகைகள் கிடைக்காமல் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? இதுகுறித்து அமைச்சரவர்கள் தலையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. சம்பந்தப்பட்ட துறையினிடத்தில் விசாரித்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறேன்.



1985 ஏப்ரல் 8]

**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே இந்தத் தொழிலாளர்களினுடைய கிராஜுவட்டி சம்பந்தமாக, மத்திய அரசாங்கமானது இந்தச் சட்டத்தைத் திருத்தி சுற்றறிக்கையாக அனுப்பி இருக்கிறார்கள். அது நம்முடைய அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியானால் உடனடியாக அது ஏன் அமல் நடத்தப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்மையில் கோவையிலிருந்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உட்பட தொழிற்சங்கத் தலைவர்கள் அரசினிடத்தில் தகவல் அளித்திருக்கிறார்கள். மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### சென்னையில் தடையிலா வர்த்தக மண்டலம்

50—(*வினா எண். 4)—**திரு. என். எஸ். வி. சித்தன், திரு. மா. சின்னராசு, திரு. செ. செம்மலை :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் அமைக்கப்பட்டு வரும் தடையிலா வர்த்தக மண்டலம் எப்போது முதல் செயல்படும்?

(ஆ) எந்தெந்த தொழில்கள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) சென்னையில் அமைக்கப்பட்டு வரும் ஏற்றமதி தொழில் மண்டலத்தின் முதல் பகுதி இந்த ஆண்டு இறுதியிலிருந்து செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ள தொழில்கள்—

| | | |
|---|---|---|
| 1. | உடுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் | 12 |
| 2. | சிறு பொறியியற் தொழிற்சாலைகள் | 3 |
| 3. | தோல் பெல்ட் தயாரிக்கும் தொழிற்சாலை | 1 |
| 4. | ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழிற்சாலைகள் | 2 |
| 5. | பொன் ஆபரணத் தொழிற்சாலை | 1 |
| 6. | டிடானியம் உலோக கருவிகள் தொழிற்சாலை | 1 |
| 7. | சோப்புத் தொழிற்சாலை | 1 |
| 8. | எலக்ட்ரானிக்ஸ் | 2 |
| 9. | கம்ப்யூட்டர் | 1 |
| 10. | செயற்கை வைரத் தொழிற்சாலை | 1 |
| 11. | மருந்து தொழிற்சாலை | 1 |
| | மொத்தம் .. | 26 |

மொத்தம் 26 தொழில்களை அந்தப் பகுதியில் நிறுவ அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மெட்ராஸ் எச்ஸ்போர்ட் ப்ராசஸிங் ஸோன் என்று சொல்லக்கூடிய இந்த ஏற்றுமதிக்கான வர்த்தக மண்டலம் சென்ற ஆண்டே தன்னுடைய தொழிலைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. என்ன காரணத்தால் காலம் நீடித்துக்கொண்டே போகிறது? இந்த ஆண்டாவது அது தன்னுடைய பணியைத் தொடங்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்தச் சுற்றுச் சுவர் கட்டுகின்ற பணி கூட இன்னும் நிறைவு பெறவில்லை. அப்படி சுற்றுச் சுவர் கட்டினால்தான் சுங்க இலாக்காவினர் அதை நோட்டிஃபை பண்ணுவார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சரை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒரு திட்டவட்டமான பதிலை. இது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது குறித்துச் சொல்ல முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்துவதற்குச் சற்று கால தாமதம் ஆகியது. முதலிலே 100 ஏக்கரா வரை எடுப்பதாகத் தீர்மானித்து இருந்தார்கள். அதற்குப் பிறகு அந்த ஏற்றுமதி வர்த்தகர்கள் அதிகமாக இடங்களைக் கோருவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டு இப்போது 292 ஏக்கரா வரையில் கையகப் படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. 100 ஏக்கரா வரையில் சுற்றுச் சுவர் கட்டுகின்ற வேலைகள் இப்போது நடந்துகொண்டிருக்கின்றது. அந்த வேலைகள் அனேகமாக இன்னும் 10 நாட்களில் முடியும் என்று கருதுகிறேன். நான் 15 நாட்களுக்கு முன்பு போய்ப் பார்த்தபோது 40 நாட்களில் இந்த சுற்றுச் சுவர் கட்டுகின்ற வேலை முடிந்துவிடும் என்று சொன்னார்கள். எனவே அந்த வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதற்கிடையில் கட்டிட வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த ஆண்டு எப்படியும் அந்தத் தொழில் பேட்டை துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 26-க்கும் அதிகமான மனுதாரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கின்றது. அங்கே யாருக்காவது இடம் வழங்கப்பட்டிருக்கின்றதா? யாருக்கும் இன்னும் இடம் வழங்கப் படவில்லை என்று அறிகிறேன். அந்த ஏற்றுமதி தொழில் மண்டலத்தில் வேறு என்னென்ன சலுகைகளை அரசு கொடுக்க இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் ; பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு என்பது கட்டிடங்களைக் கட்டி அதற்குப் பிறகு ஒதுக்கவேண்டிய ஒன்றாகும். கட்டிடங்கள் வேலைகள் இப்போதுதான் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே முதலிலே கட்டிடங்களைக் கட்டவேண்டும். பிறகு தொழிலாளர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டவேண்டும். அதற்காக





வீட்டுவசதி இலாக்காவின் மூலமாக அதைச் செய்யும்படி, நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இவ்வாறு தொழிலாளர்கள் தங்குவதற்கும் மற்றும் பல வசதிகளுக்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அந்தந்த இடங்களில் ஒவ்வொரு இலாக்காவினரும் வேலைகளைத் தொடங்கி இருக்கிறார்கள். இது முக்கியமாகக் காலதாமதம் ஆனதற்குக் காரணம் அந்த நிலத்தைச் சமப்படுத்த வேண்டியிருந்ததுதான். அது ஒரு குன்றை ஒட்டிய பகுதியாகும். எனவே அந்தப் பகுதியில் எல்லா வேலைகளையும் செய்து தரையைச் சமப்படுத்தித்தான் கட்டிடங்கள் கட்ட வேண்டி இருக்கிறது. அந்த வேலைகள் நடைபெற்ற பிறகு இப்போது ஏற்றுமதிப் பெருக்கத்திற்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்தக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டதற்குப் பிறகுதான் அவர்களுக்குத் தரப்படும். அங்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப்பட இருக்கின்றன என்று கேட்டார்கள். மூலப்பொருட்கள், துணைப்பொருட்கள், மூலதன இயந்திரங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய அந்த இடத்தில் நல் சலுகைகள் அளிக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்றுமதியை ஊக்குவிக்கின்ற திட்டமாக இருப்பதால் இதன் மூலம் அன்னியச்செலாவணியை மிச்சப்படுத்த வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே மத்திய அரசிடமிருந்து இதற்காக நாம் என்னென்ன உதவிகளைப் பெறுவோம் என்பதையும் ஏற்கனவே பல ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்கிற கோவை மாவட்டத்தில், அதாவது பனியன் மற்றும் துணிகளை ஏற்றுமதித் தரத்திற்கு உற்பத்தி செய்கின்ற கோவை மாவட்டத்தில் இதுபோன்ற மையம் ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்வதன் காரணத்தால் அன்னியச் செலாவணியை நாம் அதிக அளவில் ஈட்டுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. இந்தப் பகுதியில் உள்ள 100 சதவீத உற்பத்தியையும் நாம் ஏற்றுமதி செய்யவேண்டும் என்பதுதான் தற்போது நாம் வகுத்துள்ள கொள்கை. எனவே 100 சதவீதம் ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழில் அதிபர்கள்தான் அந்தப் பகுதிக்கு வர முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

(முற்பகல் 9-10)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் ஏதாவது தொழில் துவங்க முன் வந்திருக்கின்றனவா? கூட்டு நிறுவனங்களோ அல்லது தனியார்-வெளியார் நிறுவனங்களோ முன் வந்திருக்கின்றனவா? அப்படி முன் வரவில்லையென்றால் அதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏறக்குறைய வெளிநாட்டு அறிவோடுதான் அநேகமாக தொழில் ஆரம்பிக்க வருகிறவர்கள் அங்கே வருவார்கள். வெளிநாட்டோடு தொடர்புடையவர்கள்தான் அங்கே வருவார்கள். ஏனென்றால் அங்கே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமைகளுக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே, ஏற்றுமதி செய்யக்கூடிய தரமான பொருள்களை உற்பத்தி செய்யக்கூடியவர்களும் வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவை அறிந்தவர்களும் வெளிநாட்டுப் பெரிய தொழில் அதிபர்களோடு, தொழிற்சாலைகளோடு கூட்டு வைத்திருப்பவர்கள்தான் அநேகமாக இந்த இடத்திலே தொழில்களைத் தொடங்க முடியும்.

### தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம்.

51.-(*வினா எண் 50)—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்திற்கு, புதிதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு உதவியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

(இ) பல்கலைக் கழகத்திற்கு, மைய அரசு அங்கீகாரம் அளித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) தமிழக அரசு, தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குப் புதிதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு இதுவரை ரூ. 289.75 இலட்சம் அளித்துள்ளது.

(இ) பல்கலைக் கழக மானியக் குழு சட்டப் பிரிவு 12(ஏ)ன் கீழ், நிறுவன வளர்ச்சி நிதி தவிர ஏனைய திட்டங்களுக்கான மைய அரசிடமிருந்து உதவி பெற தமிழ்ப் பல்கலைக் கழகம் தகுதியானது என்று மானியக் குழு அறிவித்துள்ளது. கட்டிடங்கள் கட்ட மைய அரசு பல்கலைக் கழக மானியக் குழுவினால் மானியம் ஏதும் அளிக்கப்படவில்லை,

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகத்திற்கு மைய அரசிலிருந்து மீண்டும் மானிய உதவி பெறுவதற்கு இந்த அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற நிலையில் இந்த உதவி இதுவரையில் கிடைக்கவில்லை என்று சொன்னோம். ஆனால் அது வளர்ச்சியுறுகிறபொழுது அந்த உதவி நிச்சயமாகக் கிடைக்கும்.





திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் புதிய கட்டிடத்திற்கு நம்முடைய தமிழ்நாட்டு மாவட்டப் பெயர்கள் வைக்கப்படும் என்று முன்பு அறிவிக்கப்பட்டதே. அப்படிப்பட்ட பெயர்கள் இப்பொழுது அங்கே வைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பல்கலைக் கழக வளாகம் தமிழகத்தை ஒத்ததாக வகுக்கப்பட்டு, அதற்குள்ளே மாவட்ட எல்லைகளும் அதைப் போலவே அமைக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்ட எல்லைக்குள்ளும் அந்த மாவட்டக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலே கட்டிடங்கள் கட்டவேண்டுமென்று ஒவ்வொரு கட்டிடங்கள் கட்டிக்கொண்டு வருகிறோம். அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு ஏற்ப வளாகம் அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டினுடைய பண்டையக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் எழுநிலை மாடம் ஒன்றாவது கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்திற்குப் பயனுள்ள கட்டிடங்கள் கட்டும்போது இந்த வடிவமைப்புகளை நாம் அதிலே கொண்டு வரலாம் என்பதுதான் கருத்தே தவிர, வேறு நினைவுச் சின்னங்கள் போன்றவற்றைக் கட்ட வேண்டுமென்ற எண்ணம் இல்லை.

திரு. வி. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மைசூரிலே இருக்கக்கூடிய கல்வெட்டுக்களிலே இருக்கக் கூடிய தமிழ் ஆவணங்களைத் தஞ்சாவூர் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பல்கலைக் கழகம் பார்த்து முடிவு செய்ய வேண்டிய ஒன்று.

### அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்கல்.

52—(*வினா எண் 106)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட கொடுக்கும் கடன் தொகையை உயர்த்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டக் கொடுக்கும் கடன் சமீபத்தில் எப்பொழுது உயர்த்தப்பட்டது? தமிழ்நாடு மட்டத்தில் எத்தனை அரசு ஊழியர்களுக்கு எவ்வளவு ரூபாய் தொகையில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24—9—1982 அன்று, அரசு ஊழியர்களுக்குக் கடன் கொடுக்கின்ற ரூ. 1 இலட்சம் தொகை ரூ. 1½ இலட்சமாக உயர்த்தி இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த வரை இதுவரை மொத்தம் 15,000 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ரூ. 38 கோடி இது வரை வீடுகளுக்காக இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுடைய தொகுதியில், அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் போல, வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கை வெகுநாளாக இருந்து வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து வருடங்களாக இருப்பதால், வீடுகள் கட்டிக் கொடுத்தால் பணம் வசூலிக்க முடியுமா என்று யோசிப்பதாக தெரிகிறது. ஆகவே இதற்கு விதிவிலக்கு அளித்து அவர்களுக்கு அந்தந்தத் தொகுதிகளில் வாடகையில் வீடு கட்டிக்கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் கடன் பெறுகிற தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு 20 ஆண்டுகாலம் அவகாசம் இருக்கிறது. நான் அளிக்க வேண்டிய பதிலை உறுப்பினர் அவர்களே அளித்து விட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பதவிக்காலம் 5ஆண்டுகள் என்பதும் உறுதியாக சொல்லமுடியாத நிலையில் இருக்கிறது. அவர்களுடைய அடுத்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் மாவட்ட தலைநகரிலோ அல்லது வட்டத் தலைநகரிலோ இருப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கோ அல்லது வாடகை வீடு கொடுப்பதற்கோ அனுமதி கோருகிறதை பொறுத்தவரையில் ஏற்கனவே பொதுவாக இருக்கிறது. வேறு வீடுகளை கட்டுவதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்குரிய மனுவை கொடுத்தால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் நல்ல வீடுகள் இல்லாத காரணத்தால் அதிகாரிகள் அங்கே தங்க மறுக்கிறார்கள். எனவே கிராமப்பகுதிக்கும் வீடு கட்டும் திட்டத்தை, விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் கடனுதவி கொடுப்பதை விரிவுபடுத்தவேண்டும். அரசிடம் அதற்கான உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் கிராமப்பகுதிகளுக்கு வந்தால் தங்க மறுக்கிறார்கள் என்ற முதல் கேள்வியைப் பொறுத்தவரையில், வீட்டு வசதி வாரியம் வட்டத் தலைநகரத்தை முடித்துவிட்டுதான் கிராமப்பகுதிகளுக்கு வரமுடியும். ஆகவே அடுத்து கிராமங்களில் இருப்பவர்களுக்கு கடன் தருகிற நிலையைப் பொறுத்த வரையில் அங்கே வீடு கட்டும் சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கத்தின் மூலமாக வீடு கட்டுபவர்கள் கடன் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுகிற உச்ச அளவு தொகை எவ்வளவு? அந்தத் தொகையை ஒரு லட்சமாக ஆக்குவதற்கு அரசிடம் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிந்த பின்னாலே வாழ்க்கை முழுவதும் ஓய்வூதியமாக 250 ரூபாய் என்ற அளவில் இப்போது கொடுக்கிறார்கள். அந்த ஓய்வூதியத்தை பிடித்துக்கொண்டு அந்த அடிப்படையிலே வீடுகளை ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, ஒரு ஆண்டு காலத்திற்கு பிறகு இதனைப் பரிசீலிப்போம்.

திரு. கு. பாலன் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்காக கடன் கொடுப்பதிலே மூன்று தவணைகளாக கொடுப்பதால் அவர்கள் நிச்சயித்த காலத்தில் வீடுகளை கட்டமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அத்தகைய கடனை ஒரே தவணையில் அல்லது இரண்டு தவணைகளில் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, பெரிய அளவு தொகையை ஒரே நேரத்தில் கொடுத்தால் அரசு ஊழியர்கள் வேறு தவிர்க்க முடியாத செலவினங்களுக்கு அதை செலவுசெய்து, வீடு கட்டுவதில் இறுதி நிலையை அடைவதற்கு கடினமாக இருக்கும். இப்போதே அவர்கள் மேலும் கடனுதவி வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நிலையில் ஏற்கனவே இருக்கிற அந்த முறைதான் அவர்களுக்கும் நல்லது.

[1985 ஏப்ரல் 8

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கு திட்டம் மாநில அளவில் இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் அரூர் நகருக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு முன்னாள் வீட்டுவசதித் துறை அமைச்சர் இராஜாராம் அவர்கள் அனுமதி வழங்கி இருக்கிறார்கள். ஆனால் அது இன்னும் அமலாக்கப்படவில்லை. அதை அமலாக்கவேண்டுமென்று அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். கிராம வீட்டுவசதித் திட்டத்தைப் பொறுத்த வரையில் என்னுடைய தாலுக்காவில் 800 பேர்களுக்கு வீடு கட்டுவதற்கு அனுமதி கொடுத்து, அதற்கான நிதிவசதி இல்லாமையால் ஓராண்டு காலமாக அந்த வீடுகள் பேஸ்மெண்ட் போன்று பல்வேறு நிலைகளில் நின்று கொண்டிருக்கின்றன. அரூர் தாலுக்கா முழுவதிலும் பரவலாக இந்த நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதனை கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பூர்த்தி செய்து கொடுப்பதற்கு அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்? எப்போது அவை பூர்த்தி செய்து கொடுக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அவர்கள் குறிப்பிட்ட ஊருக்கு அனுமதி அளித்திருந்தால் அது பரிசீலிக்கப்படும். அடுத்து, 800 வீடுகளுக்குமேல் கட்ட ஆரம்பித்து முடியாமல் இருப்பதாகவும் அதற்கு கடன் உதவி செய்யும் வாய்ப்பு இருக்கிறதா என்றும் கேட்டார்கள். வீடு கட்டும் சொசைட்டி மூலம் மனு செய்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு தாலூகா மையத்திலும் வீட்டு வசதி வாரியம் மூலமாக வீடு கட்டிக்கொடுக்கப்படுகிறது என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு தாலூகாவிலும் இரண்டு, மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளடங்கி இருக்கின்றன. அந்தப் பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் அங்கே தங்கி பணியாற்றக்கூடிய அளவுக்கு வீட்டுவசதி இல்லாத காரணத்தால் 20, 30 மைல் தூரத்தில் நகரப்புறங்களில் தங்கியிருந்து, பணியாற்றச் செல்கிறபோது காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் அவர்கள் செய்யவேண்டிய காரியங்களில் தடை ஏற்படுகிறது. அதை எல்லாம் மனதிலே கொண்டு பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளடங்கி இருக்கிற பகுதிகளில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் இரண்டாவது கட்டமாக, அதிகாரிகள் மற்றுள்ள ஊழியர்கள் தங்குவதற்கு ஏற்றவகையில் வீடு கட்டிக்கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, நம்முடைய துறையிலிருந்து ஆர்.டி.எல்.ஏ. துறைக்கு நிதி அளித்து, அவர்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களில் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. அந்த வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நாட்டுக்கு நல்லது என்று கருதுகிறோம்.



1985 ஏப்ரல் 8]

**சிவகெங்கையில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்.**

53—(*வினா எண் 856)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகெங்கையில் அரசு ஊழியர்களுக்காக வீட்டுவசதி வாரியம் மூலமாக வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஆம்.

(ஆ) சிவகெங்கையில் அரசு அலுவலர்களுக்காக ரூ. 210·05 இலட்சம் செலவில் 288 வீடுகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் நடப்பு ஆண்டில் (1984-85-ல்) கட்டுவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதிலே பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் வீடு கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகத் தெரிவித்தார்கள். அதைப்போன்று பெரும் தலைவர் காமராஜர் பெயரால் அமைந்துள்ள காமராஜர் ம வட்டத்தின் தலைநகரான விருதுநகரிலும், இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரான இராமநாதபுரத்திலும் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் இதே நிதிஆண்டில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு வழிவகைக் காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரான இராமநாதபுரத்தில் 96 வீடுகள் 87.5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று காமராஜர் மாவட்டத்தின் தலைநகரான விருதுநகரில் 80.60 இலட்சம் ரூபாய் செலவில் புதிய குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட கடன்தொகை வழங்கப்படுவதைப்போல பத்திரிக்கை நிருபர்களுக்கும் கடன் வழங்கப்படுமா? அவர்கள் 300 ரூபாய், 800 ரூபாய் வாடகைக் கட்டவேண்டிய நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே பத்திரிகை நிருபர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் சிறிய வீடு கட்டுவதற்கு 16,000 ரூபாயும், பெரிய வீடு கட்டுவதற்கு 30,000 ரூபாயும் முதலில் கட்ட வேண்டும். இது பெரிய பத்திரிகை நிருபர்களுக்கு சரியாக இருக்கும். ஆனால் ஏழை, அப்பாவி பத்திரிகை நிருபர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு 16,000 ரூபாய் கட்டுவது மிகவும் சிரமமான காரியம். ஆகையால் இந்த ஏழை எளிய, அப்பாவி பத்திரிகை நிருபர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதைப்போன்று கட்டிக்கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, அவர்களும் இந்த நாட்டின் குடிமக்கள்தான். இன்னும் வீடு இல்லாத மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள வேண்டுமென்று விரும்பினால், ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடு கட்டும் சொசைட்டி இருக்கிறது ; அங்கே மனு செய்தால் முறைப்படி கவனிக்கப்படும்.

திரு. இ. வெங்கடாசலம் : தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை மக்களுக்கு, வீடு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் சென்னையிலிருந்து இப்போதுதான் மற்ற நகர்புறங்களுக்கு விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறது. காலப்போக்கில்தான் அது கவனிக்கப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே, பல இடங்களில் நீதித்துறையில் இருக்கிற நடுவர்களுக்கு வீட்டுவசதி இல்லை. அதனால் அவர்கள் வாடகை வீட்டில் குடியிருக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. வாடகை வீட்டில் இருப்பதால் நீதித்துறையில் சில நேரங்களில் சலசலப்பு ஏற்படும் சாத்தியம் உண்டாகிறது. தென்காசியில் கூட இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டது. இந்த நிலை ஏற்படாமலிருக்க நீதிபதிகளுக்கு தகுந்த குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே பல்வேறு நகரங்களில், உதாரணமாக திருச்சி நகரத்தைப் பொறுத்தவரையில் நீதிபதிகள் மற்றவர்களுக்கு இப்போது தனிக் காலனிகள் இருந்து அவர்களுக்கு வீடுகள் எல்லாம் இருக்கிறது. எனவே ஆங்காங்கு அவர்களுடைய அவசியத்தைப் பொறுத்து, அதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

டாக்டர் ந. மாசிலாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் இந்த மாநிலத்தில் எத்தனை தாலுக்காக்களில் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடப்பு ஆண்டில் 34 இடங்களை நம்முடைய தமிழக அரசு தேர்ந்தெடுத்து இருக்கிறது. இந்த இடங்களில் 4,500 குடியிருப்புகளை கட்ட இருக்கிறோம்.



திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பட்ட குடியிருப்புகள் எல்லாம் சுகாதாரச் சீர்கேடுகள் அடைந்திருக்கின்ற நிலையில் இருக்கின்றன. எனவே அவைகளை குடிசை மாற்று வாரியத்தில் இருந்து மாநகராட்சிக்கு ஒப்படைத்து, அந்தப் பணிகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் மட்டும் இங்கே பதில் சொல்வது முறையல்ல. ஆகவே இதற்கு விடை அளிப்பதற்கு இயலவில்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, சென்னையில் இருக்கிற குடிசைகள் மட்டும் மாற்றியமைப்பது என்பது மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கும் பயன் அளிக்கின்ற வகையில் திட்டம் தீட்டி, ஒரு பேஸ்டு புராகிராம் என்ற அடிப்படையில், 3 ஆண்டுக் காலத்தில் எல்லா கிராமங்களிலும் வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியை அனுசரித்து இப்படிப்பட்ட திட்டங்கள் கவனிக்கப்படும்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தற்போது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகராக இருப்பதால் அங்கே பல்வேறு மாவட்ட அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு உத்தேசித்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கூடலூர் இ.வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பணி புரியும் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு வீடு கட்டி வாடகைக்கு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தின் கடையோரத்தில் இருக்கக்கூடிய நரிக் குறவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித் தந்திருக்கிறது. எந்தெந்த மாவட்டங்களில் அந்த நரிக் குறவர்களுக்கு வீட்டுவசதி வாரியம் வீடுகள் கட்டித் தந்திருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை, சேலம் போன்ற பகுதிகளில் நரிக் குறவர்கள் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்கனவே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை பல இடங்களில் உள்ளாட்சி மன்றங்களோ அல்லது நகராட்சிகளோ, அதை மெயின்டெனன்ஸ், நிர்வகிப்பதை ஏற்றுக்கொள்வதில்லை. வீட்டுவசதி வாரியம் ஏற்றுக்கொள்வதில்லை என்ற பிரச்சனை அமைச்சரின் கவனத் திற்கு வந்திருக்கிறதா? அப்படி என்றால், அதைத் தீர்க்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதித் துறையைப் பொறுத்த வரையில், கட்டுகின்ற அந்த வீடுகளில், மின்விளக்கு, கழிவுநீர் வசதி, மற்றும் குடிநீர் வசதிகளை வீட்டுவசதித் துறையைச் சேர்ந்தவர்கள்தான் செய்துகொண்டு இருக்கிறார்கள். எனவே நடைமுறையில் அப்படித்தான் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சிறப்பு காவல் படையினரில் சிலர் சேர்ந்துகொண்டு ஆவடி ராமரத்னா திரையரங்கையும், அதன் உள்ளும் வெளியும் இருந்த பொதுமக்களையும் தாக்கியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி.பி. சிந்தன், ஜி. ஆனந்த கிருஷ்ணா, அ. ரகுமான்கான், டி. ஆர். வேங்கட ரமணன், கு. சுப்பராயன், எஸ்.என். இராமசாமி, சு. பாலன், பரிதி இளம்வழுதி, கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து ஆகியோர், "சென்னை ஆவடியிலுள்ள ராமரத்னா சினிமா தியேட்டரில் 1—4—85 இரவு சுமார் 11 மணி அளவில் ஆவடி போலீஸ் முகாமைச் சேர்ந்த சுமார் 100 எஸ்.ஏ.பி. போலீசார்



உள்ளே புகுந்து ஜனங்களை அடித்தும், சொத்துக்களை நொறுக்கியும் கடைகளில் புகுந்து அடித்தும், பலருக்குக் காயமேற்படுத்தியதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய அனுமதிகோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த முக்கியமான பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று வலியுறுத்துவதற்கான காரணங்களை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் குறிப்பிட்ட திரையரங்கில் சிறப்பு அதிகாரிகள் இரண்டு மூன்று பேர்கள் உள்ளே நுழைய முயன்றபோது அங்கே கேட் கீப்பர்களுக்கும் அவர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டு அவர்கள் அந்த இடத்திலிருந்து வாபஸ் பெற்று அவர்களுடைய நிலையத்திற்குச் சென்று அந்த அதிகாரிகள் அபாயச் சங்கை ஊதி நூற்றுக்கணக்கான சிறப்பு அதிகாரி களை, எஸ். ஏ. பி. காம்ப் நடைபெற்ற காரணத்தால், அவர் களைப் பூராவும் திரட்டி திரையரங்குக்குள்ளே நுழைந்து அடித் தார்கள். பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் என்று எந்த வித்தியாசமுமில்லாமல் மிருகத்தனமாக போலீஸ்காரர்கள் அவர் களைத் தாக்கினார்கள். கண்டவர்களையெல்லாம் அடித்தார் கள். அதற்குப் பிறகு அவர்களுடைய ஆத்திரம் தணியாத கார ணத்தினால் கடைத் தெருவுக்குள்ளே புகுந்து சில கடைகளை சூறையாடி அங்கே உள்ளவர்களையும் அடித்தார்கள்.

அதுமட்டுமல்ல. பக்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளே நுழைந்து போலீஸ்காரர்களை கழுத்தைப் பிடித்து தள்ளினார் கள், எஸ். ஏ. பி. போலீஸ் இது முதல் தடவையல்ல. அந்த அளவிற்கு ஆவடியில் உள்ள சிறப்பு போலீஸ்காரர்கள் இத்தகைய நடவடிக்கைகளை திரையரங்கில், கடைத்தெருவில் பலமுறை நடத்தியது உண்டு. ஒருமுறை இப்படிப்பட்ட வன்முறைக்கு உள் ளானவன் என்ற முறையில் அவர்களுடைய நடவடிக்கைகள் எப்படி என்பது எனக்கும் தெரியும். மிருகத்தனமாக நாங்கள் எல்லாம் அன்றையதினம் தாக்கப்பட்டோம். ஆகவே இதற் குள்ள காரணங்களை ஆராயவும் இத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு முயற்சி செய்வதும் அவசியம் என்ற காரணத்தால் இந்தத் தீர்மானத்தை இங்கே வலியுறுத்துவது அவசியமாகிறது. நம்முடைய ஜவான்களுக்கு நாம் பயிற்சி அளிக்கிற முறையிலே ஒரு அடிப்படை மாற்றம் தேவை என்பது என் கருத்து. இன்றையதினம் அவர்களுக்கு அத்தகைய ஒரு பயிற்சி, அத்தகைய ஒரு அவுட்லுக், ஒரு அணுகுமுறை வழங்கப் படுவதில்லை. இது போலீஸ் கமிஷனருடைய விசாரணைக்குழு

வழங்கிய 4, 5 அல்லது 6-வது வால்யூமை பரிசீலனை செய்து பார்த்தால், சபாநாயகர் அவர்களே, அது நன்கு தெளிவாகும். அங்கே ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அடிக்கிறபோது செத்துப் போகிறார்களே என்று. அதற்கு ஒரு உயர்தர அதிகாரி கொடுத்த பதில் We do not teach our Jawars anotomy என்றுதான் பதில் அளித்தார்கள். ஆகவே போலீஸ்காரர்களுடைய போலீஸ் அதிகாரிகளுடைய கண்ணோட்டத்தில் ஒரு மாற்றம் ஏற்படவேண்டும். அதுவும் குறிப்பாக தமிழகத்திலே கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக போலீசுனுடைய, போலீஸ் அதிகாரிகளின் அராஜகச் செயல்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. போலீஸ் நிலையங்களில் பெண்களை இரவு நேரத்தில் வைக்கக் கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டாலும் போலீஸ் நிலையங்களில் பெண்கள் கற்பழிக்கப்படுவதும்—வட ஆற்காடு மாவட்டத்தில் கட்டிப் போட்டு, கையையும் காலையும் கட்டிப்போட்டு /விவசாயிகள் கூலி கேட்ட காரணத்தினால் சுடப்பட்டதும் உங்களுக்குத் தெரியாததல்ல. அரசாங்கத்தினுடைய கொள்கையிலேயும் ஒரு மாற்றம் வேண்டும். அரசாங்கம் போலீஸ் இலாகாவைக் கட்டுப்படுத்துவதில் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். போலீஸ்காரர்களுடைய கண்ணோட்டத்திலேயும் ஒரு மாற்றம் தேவை. அன்றையதினம் அவர்களுடைய கையில் துப்பாக்கி இருந்திருந்தால் எத்தனை பேர்களைச் சுட்டுக் கொன்றிருப்பார்கள் என்று தெரியாது. அவர்கள் கோபத்தின் உருவமாக மிருகத்தனத்தின் உருவமாக வந்து தாக்கினார்கள். ஆர். டி. ஓ. விசாரணை நடத்தினால் மட்டும் போதாது. பகிரங்க விசாரணை நடத்தவேண்டும். ஆகவே சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து ஆழமான ஒரு விவாதம் இதுபற்றி இந்த சபையில் நடத்தவேண்டும். பகிரங்க நீதி விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி நான் அமர்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நம்முடைய காவல்துறையிலே எவ்வளவு கட்டுப்பாடின்மை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பகுதி என்னுடைய தொகுதியிலே இருக்கின்றது. அங்கு இரவு 10½ மணி அளவிலிருந்து 12 மணி வரையிலே அங்குள்ள சினிமா கொட்டகையிலும், அங்கேயிருக்கின்ற கடைத்தெருவிலும் இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள், கட்டுப்பாட்டை காக்கவேண்டிய காவல் துறையே இப்படிப்பட்ட வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது என்றால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் காவல் துறையைப் பற்றி பீதி அடைந்திருக்கிறார்கள். இதற்கு ஒரு எல்லையே கிடையாதா என்கிற ஒரு நிலை அங்குள்ள மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது.

1972-லே இப்பகுதியிலே தனி காவல் படையினரால் இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் நடத்தப்பட்டன. 1975-லே மீண்டும் இதே சினிமா கொட்டகையில், கடைத் தெருவில் இப்



படிப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது. 60 சிறு தொழில்கள் நடத்துகின்றவர்கள் தங்கள் பெட்டிக் கடைகள் சூறையாடப்பட்டு, தகர்க்கப்பட்டு, தூக்கியெறியப்பட்டுள்ளது' என்று என்னிடம் கூறினார்கள். அதோடு, அங்கேயுள்ள சிறு சிறு கடைகளின் கொட்டகைகளும் தூக்கியெறியப்பட்டன. அங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே சிறு வியாபாரம் செய்கிறவர்கள், பூ வியாபாரம் செய்கிறவர்கள் காய்கறி வியாபாரம் செய்கிறவர்கள் ஆகியோருடைய கொட்டகைகள் எல்லாம் நாசமாக்கப்பட்டு, சுமார் 500-லிருந்து 2,000 3,000 ரூபாய் வரையில் நஷ்டமேற்பட்டிருக்கிறது. இப்படி நிலையிருந்தால், அங்கே அந்த இடத்திலே வியாபாரம் செய்ய முடியுமா, முடியாதா என்ற நிலை வியாபாரிகள் மத்தியில் ஏற்பட்டதனால், இரண்டு நாட்கள் கடையடைப்பு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அங்கேயிருக்கிற அசிஸ்டென்ட் கமாண்டென்ட் என்று சொல்லுவார்களே, அவர்கள் உறுதுணையாக இருந்ததாகச் சொல்லுகிறார்கள். இதுவரையில் 5 காவல்துறை ஜவான்கள், போலீஸ்காரர்கள்தான் தான் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இதிலே ஈடுபட்டவர்கள் 100-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள், அவர்களின் மீது டி.ஆர்.ஓ. விசாரணை வைத்து அவர்களுடைய ஐடென்டிபிகேஷன் பரேட் நடத்தி, நடவடிக்கை எடுப்பதாக டி. ஜி. பி. அவர்கள் என்னிடம் நேரிலே கூறினார்கள், ஆனால் அவர்கள் எப்போது நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரியவில்லை, அங்கே இருக்கின்ற சப் இன்ஸ்பெக்டர் கருப்பையாதான், இதற்கு தலைமை தாங்கி நடத்தினார்கள் என்று கூறப்படுகிறது, ஆனால், இது வரையில் அவர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அங்கே டி. ஐ. ஜி. அவர்கள் அரசுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும், நாங்கள் பரிந்துரை செய்யவேண்டுமென்று சொன்னார்களே தவிர, இதுவரையில் கலவரம் நடந்து ஒரு வாரம் ஆகியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தனிக் காவல் படைக்கும், ரெகுலர் போலீஸ் அதாவது சாதாரணமாக இருக்கின்ற காவல்துறைக்கும் இடையே அங்கே பெரும் கலவரம் நடந்திருக்கிறது, அங்கே இருக்கின்ற காவல் நிலையத்திற்குள்ளே புகுந்து அங்கே இருக்கின்ற இன்ஸ்பெக்டர் ஒருவரின் கையை ஒடித்திருக்கிறார்கள். இந்தத் தனிக் காவல்படையினர். டி. எஸ். பி. கணேசன் அவர்களை தரக்குறைவாகப் பேசி, தாக்க முயற்சி செய்திருக்கிறார்கள், இந்தச் செயலினால் நாடு முழுவதிலும் உள்ள போலீஸ் காவல் துறையினர் மத்தியில் கட்டுப்பாடின்மை கிராஸ் இன்டிசிப்ளின் இருக்கிறதா என்று எண்ணவேண்டியிருக்கிறது. நம்மைக் காப்பாற்ற வேண்டிய காவல் துறையினரே இந்த நிலையில் இருந்தால், எப்படி சட்டம் ஒழுங்கை காப்பாற்ற முடியும். எப்படி அரசு இயந்திரம் நடக்க இயலும் என்ற பீதி மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், இது ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருப்பதனால், மக்களுடைய அக்கறையையும்

இன்றைக்கு கவனத்தை ஈர்க்கின்ற பிரச்சினை என்பதினால், இந்தச் சபையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது விவாதம் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, ஏற்கனவே உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதுபோல், ஆவடியிலுள்ள இராமரத்தினா சினிமா தியேட்டரில், தமிழ்நாடு ரிசர்வ் போலீசை சார்ந்த ஐந்து பேர்கள் சினிமா பார்ப்பதற்காக அங்கே சென்றிருக்கிறார்கள். படம் 'ஆயிரத்தில் ஒருவன்' என்பதாகும். ஆனால், பொதுமக்கள் இடத்தில் அவர்கள் காலையில் கொடுத்த டிக்கட் கவுண்டர்-பாயிலை இரவுக் காட்சிக்கு சென்றபோது காட்டியிருக்கிறார்கள். அப்போது அங்கே அந்த தியேட்டரில் பணியாற்றும் கேட்-கீப்பர் இந்த டிக்கட் செல்லாது என்றும், உள்ளே அனுமதிக்க முடியாது என்றும் சொன்னார். உடனே அவர்கள் 'சட்டம் என் கையில்' என்று சொல்வதுபோல், சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு, போலீஸ்காரர்களுக்கு அதுவும் சிறப்புக் காவல் படையினருக்கு படம் பார்க்க உரிமை இலலையா என்று சொல்லி, அந்த கேட்-கீப்பரை அடித்து, அதைத் தடுக்கப் போன தியேட்டர் மானேஜரை அடித்து, அதறகுப் பிறகு அங்கே ஒரு பெரிய கலவரமே ஏற்பட்டது.

(முற்பகல் 9-40)

அந்தக் கலவரத்தில் 3, 4 பேர்கள் இடத்தை விட்டே ஓடியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அங்கே சைரன் என்று சொல்லக்கூடிய சங்கின் ஒலியை எழுப்பி, 100-க்கும் மேற்பட்ட காவல் துறையைச் சார்ந்தவர்கள் ஒரு வேனிலே வந்து, அது கூட எப்படி, 3 பிரிவுகளாக வந்திருக்கிறார்கள். ஒரு பிரிவு பொதுமக்களை தாக்குகின்றனர். இன்னொரு பிரிவு உள்ளூர் போலீஸ்காரர்களை தாக்குகின்றனர், மூன்றாவது பிரிவு சினிமா தியேட்டர்காரர்களை தாக்குகின்றனர். இதிலே வேடிக்கை என்னவென்று கேட்டால், ஆவடியிலே இருக்கிற போலீஸ் இன்ஸ்பெக்டரை அடித்திருக்கிறார்கள். சப்-இன்ஸ்பெக்டரை அடித்திருக்கிறார்கள். அது போல கான்ஸ்டபிளை அடித்திருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனையே தாக்கியிருக்கிறார்கள். சம்பந்தமான வழக்கும் கூட அந்த ஆவடி போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டராலேயே பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இன்னொரு கொடுமையென்னவென்றால், வெளியிலே இருக்கிற இந்த சம்பவத்திற்கு சம்பந்தம் இல்லாத பொது மக்களையும் அடித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, வெளியிலே அவர்களுடைய கண்ணிலே தென்படுகின்றவர்களையெல்லாம், அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, குழந்தைகளாக இருந்தாலும் சரி, எல்லோரையும் தாக்கினார்கள்; ஆவடி ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியிலே ஒருவர் சைக்கிள்



கடை வைத்திருக்கிறார். அவர் இரவு நேரத்தில் கடைக்கு வெளியே தூங்கிக் கொண்டிருந்தபோது - அவர் பெயர் கூட சின்னப்பா என்று சொன்னார்கள் - தூங்குபவரை தட்டி எழுப்பி அடித்திருக்கிறார்கள். அத்தோடு அந்தக் கடையில் இருந்த சைக்கிள்களையெல்லாம் தூக்கியெறிந்து நாசப்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்தப் பகுதியிலே உள்ள அண்ணா ஸ்குயர் என்னும் இடத்திற்கு பக்கத்தில் இருக்கக்கூடிய பஜாரில் வைக்கப்பட்டிருந்த அத்தனை ஸ்கூட்டர்களையும், சைக்கிள்களையும், வேன்களையும் தூக்கியெறிந்து, அடித்து நொறுக்கி நாசப்படுத்தியிருக்கிறார்கள். ஆக ஒரு உள்நாட்டு யுத்தமே அங்கே நடைபெற்றது என்பதைப் போன்ற தோற்றம் ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பகுதி மக்கள் மிகுந்த பதட்ட நிலைக்கு ஆளாகியிருக்கிற சூழ்நிலை இருக்கிறது.

இதிலே மிக முக்கியமான விஷயம் என்னவென்று கேட்டால் பொதுமக்கள், உள்ளே படம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரும் அவர்கள் என்ன தப்பு செய்தார்கள் இதில் என்று தெரியவில்லை. மாமன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தயவுசெய்து உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்த்துக் கேட்க விரும்புகிறேன். தியேட்டர் ஊழியர்களுக்கும் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கும் கூட தகராறு இருக்கலாம், அதிலே கூட நியாயங்கள் வேறு விதமாக இருக்கலாம். ஆனால் நான் கேட்க விரும்புவது, படம் பார்த்துக்கொண்டிருந்த தாய்மார்கள் என்ன தப்பு செய்தார்கள் ? படம் பார்த்துக்கொண்டிருந்த குழந்தைகள் என்ன தப்பு செய்தார்கள் ? இந்த பிரச்சனைக்கு சம்மந்தமே இல்லாத பொது மக்கள் அங்கே உள்ளே இருக்கிறார்கள். நான்கு புறமும் கதவை மூடிக்கொண்டு உள்ளே படம் பார்த்துக் கொண்டிருப்பவர்களை கையிலே கத்தியோடும் துப்பாக்கி முனையாலும் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள்.

இதிலும் கொடுமை என்ன என்றால், பல தாய்மார்களை பலவந்தப்படுத்தியிருக்கிறார்கள். பத்திரிகை நிருபர்கள் அங்கே போய் பார்த்தபோது கூட, ஜாக்கெட்டினுடைய துண்டுகள், சேலையினுடையகிழிந்த துண்டுகள், பாவாடையின் கிழிந்த துண்டுகள், சவுரி முடிகள், கத்தி, லத்தி போன்றவைகள் கீழே கிடந்திருக்கின்றன என்பதைப் பார்த்திருக்கிறார்கள். யாரோ செய்த தவற்றுக்காக மூர்க்கத்தனமாக முடிவெடுத்து, நிரபராதிகளை தண்டித்தது என்பது என்ன நியாயம். அதிலும் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய காவல்துறையினரே இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டால் எப்படி ? போலீஸ் ஸ்டேஷனையே தாக்கியிருக்கிறார்கள், இது என்ன நியாயம் ? இப்படி அன்றாடம் ஏதாவது சம்பவம் அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதே வழக்கமான காரியமாக இருக்கிறது. இதிலே டி. ஆர். ஓ. வை வைத்து விசாரணை என்பது சரியானது அல்ல இதுவரையில் வந்த விசாரணைகளின் மீது எடுக்கப்பட்ட முடிவு

என்ன ? உதாரணத்திற்குச் சொல்கிறேன், நான் சப்ஜெக்டை விட்டு வேறு பிரச்னைக்கு செல்வதாக தயவுசெய்து எண்ணக் கூடாது. உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன்.

இஸ்மாயில் கமிஷன் தீர்ப்பு வந்தாயிற்று, தப்பு செய்தவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா ? பால் கமிஷன் தீர்ப்பு வந்திருக்கிறது, அதிலே ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா ? எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் நீதி விசாரணைக் கமிஷன்களின் மீதே நடவடிக்கை இல்லாத போது. வெறும் டி. ஆர். ஓ. விசாரணைக்கு ஏற்பாடு செய்தால் அவர்கள் குற்றவாளிகளை அடையாளம் காட்டச் சொல்லி, என்னதான் முடிவு சொன்னாலும், நடவடிக்கை எங்கே இருக்கப்போகிறது ? ஆளும் கட்சி தலையீடு விருப்பு வெறுப்புகள் அதனுள்ளே வந்துவிடுமே. ஆகவே, டி. ஆர். ஓ. விசாரணை என்று இருந்தால் நிச்சயமாக நியாயம் கிடைக்காது, நீதி விசாரணை இருந்தால்தான் நியாயம் கிடைக்க வேண்டிய ஒரு சூழலாவது ஏற்படும், இதிலே இன்னொரு வேடிக்கை யார் அடித்தார்கள் என்று தெரிந்துகொள்வதற்காக இந்த டி. ஆர். ஓ. ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள், (குறுக்கீடு) அதை ஒரு உதாரணத்திற்காகத்தான் சொன்னேன் என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, இதிலே ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்று கேட்டால், யார் அடித்தார்கள் என்று தெரிந்துகொள்வதற்கு, சினிமாத் தியேட்டர்காரர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படும் ஆணோ பெண்ணோ அவர்கள் முன்னால் காவல் துறையைச் சார்ந்தவர்களை வரிசையாக நிற்கவைத்து ஒரு அணிவகுப்பு பேரடு நடத்தப்போகிறார்களாம், அடித்தவர்களை, ஐடென்டிபிகேஷன் பண்ணவேண்டுமாம், இப்படி ஒரு ஏற்பாடு. இதை போலீஸ்காரர்கள், டி. ஆர். ஓ. மற்றும் கலெக்டர் ஆகியோர் சேர்ந்து செய்திருக்கிறார்கள்.

தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன், அடியை வாங்கிக்கொண்டு, பிழைத்தால் போதும் என்று தப்பி பிழைத்து ஓடுகிற தாய்மார்களும், மற்ற பொதுமக்களும், தங்களை யார் அடித்தார்கள் என்று பார்த்திருக்க முடியுமா, அடையாளம் காட்டமுடியுமா, அப்படியே அடையாளம் காட்டினாலும், அவர்கள் இவர்களை பழிவாங்காமல் விடுவார்களா, எனவே நீதி விசாரணைதான் வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். தற்போது போலீஸ் ராஜ்யம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஐ. பி. எஸ். அதிகாரிகள்தான் தமிழகத்திலே ஆளுகிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் இதற்கு முன்னால் இல்லாத அளவு கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன. டி. ஆர். ஓ. என்கொயரி இருக்கிறது. குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்



என்ற சாதாரண வாசகங்கள் தான் இன்னைக்கு இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. எனவே இந்த சபையை ஒத்தி வைத்து நீதி விசாரணை வழங்கவேண்டும். குற்றவாளிகள் ராணுவ கோர்ட்டிலே தண்டனை விதிப்பதைப் போல கடுமையாக தண்டிக்கப்பட்டால் தப்பு செய்கின்ற போலீஸ்காரர்கள் சட்டத்தை தன் கையில் எடுத்துக் கொண்டிருக்கிற போலீசார் திருந்துவதற்கான ஒரு நல்ல நிலைமை ஏற்படும். சட்டம் ஒழுங்கை நாட்டிலே பாதுகாக்கின்ற நல்ல நிலைமை ஏற்படும். துரதிருஷ்டவசமாக சட்டம் தன் கடமையைச் செய்யும் என்பதற்கு பதிலாக, சட்டத்தை பாதுகாக்கவேண்டிய காவல் துறை கடமையைச் செய்வதற்குப் பதிலாக, சட்டத்தை தன் கையில் எடுத்துக்கொண்டு தப்பான காரியத்தை செய்கிறார்கள். எனவே, இது அவசரபொது முக்கியத்துவம் வாய்ந்த மிக முக்கியமான பிரச்சினை. ஆவடியில் அடிபட்டவர்களாக நாம் இல்லாமல் இருந்தாலும், அன்றைக்கு அவர்கள் பட்ட அடி நமக்கு நிச்சயமாக வலிக்கிறது என்ற காரணத்தினால் சபையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, இந்த அவை மீது இரண்டாவது முறையாக காவல்துறை நடவடிக்கையை பற்றி இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் முன்மொழியப்பட்டு இருக்கிறது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டியவர்கள் சட்டம் ஒழுங்கைக் கேள்விக் குறியாக்கியிருக்கிறார்கள்.

ஆவடியில் இராமரத்தினா தியேட்டரில் நடைபெற்றிருக்கின்ற இந்தச் சம்பவம் ஏதோ எதிர்க் கட்சிகளால் கொண்டு வரப்படுகின்ற வழக்கப்படியான ஒன்று என்று ஆளும் கட்சி நண்பர்கள் கருதக்கூடாது. காவல் துறையைப் பொறுத்தவரையில், ஆட்சியிலே இருக்கின்றபோது ஆட்சியிலே இருக்கின்றவர்களை மதிக்கின்றார்கள். ஆட்சியைவிட்டு அகற்றப்பட்ட பின்னால், ஆட்சியிலே இருந்தவர்களை மிதிக்கிறார்கள் என்பது தான் நடைமுறை ஆகும். குறிப்பாக ஆவடியில் இராமரத்தினா தியேட்டரில் போலீசார் நடந்துகொண்ட முறை என்பது ஒழுங்கை கடைபிடிக்க வேண்டியவர்களே ஒழுங்காகச் சென்றிருக்கிறார்களா என்பதே கேள்விக்குறி.

பஞ்ச் பண்ணப்பட்ட டிக்கட்டோடு அவர்கள் உள்ளே சென்று இருக்கிறார்கள். தங்களுடைய கடமை என்ற அடிப்படையிலே செல்லாத பஞ்ச் பண்ணப்பட்ட டிக்கெட்டோடு வந்தவர்களை ஊழியர்கள் தடுத்திருக்கிறார்கள். தடுத்த உடனே போலீசார் தாக்குதலைத் தொடுத்திருக்கிறார்கள். அந்தத் தாக்குதலின் ஆழத்தைப் பற்றி அதிகமாக குறிப்பிட வேண்டியதில்லை. ஆட்சியிலே அமர்ந்திருக்கின்றவர்களுக்கு அதுபற்றி முழுமையான விவரங்கள் கிடைத்து இருக்கும் என்று கருதுகிறேன். நடைபெற்ற கொடுமை என்பது அநேகமாக, சமீப காலத்திலே இல்லாத மிகப் பெரிய கொடுமையாகும் அதைக் காவல் துறையினர் அங்கே நடத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அங்கே தியேட்டர் ஊழியர்கள் தங்களுடைய கடமையை செய்கிறார்கள். செல்லாத டிக்கெட்டோடு உள்ளே செல்ல அனுமதிக்க முடியாது என்று ஊழியர்கள் சொன்னதற்குப் பின்னர் அவர்கள் தங்களுடைய இருப்பிடங்களுக்குச் சென்று மேலும் 60, 70 காவல்துறை ஊழியர்களோடு வந்து கண்மண் தெரியாமல் தாக்கியிருக்கிறார்கள். 'பெண் என்றால் பேயும் இறங்கும்' என்பார்கள். ஆனால் இந்தக் காவல் படையினர் பெண்களைக் கண்டும் இணங்கவில்லை. குழந்தைகளையும் தூக்கி எறிந்திருக்கிறார்கள். காலால் உதைத்தும் இருக்கிறார்கள். 10, 12 சேலைகள் அந்தத் தியேட்டர் காம்பௌண்ட் வளாகத்திலே கிடந்திருக்கிறது. என்றால், அவர்கள் எந்த அளவிற்குத் தாக்கியிருக்கிறார்கள் என்பதை தயவு செய்து பரிசீலிக்க வேண்டும். குறிப்பாகக் காவல் துறை நடத்தியிருக்கின்ற ஆர்ப்பாட்டம் என்பது நவீன துச்சாதனர்களாகப் பெண்களைத் துயில் உரியத் தொடங்கி, தாம் காவல் துறையினர் என்பதை மறந்து, வேறு பல காரியத்திற்குக் கூட முயற்சித்திருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். நடைபெற்ற சம்பவம் என்பது கடுமையானது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டியவர்கள், சட்டம் ஒழுங்கிற்கு சவால் விட்டிருக்கிறார்கள். சட்டத்தை நிறைவேற்ற முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒழுங்கை மீறுவோம் என்று செய்து காட்டியுள்ளனர். என்ன காரணம்? தொடர்ந்து காவல்துறை சட்டவிரோத நடவடிக்கைகளை நீங்கள் மூடி மறைத்துவிடுகிறீர்கள், பாதுகாக்கின்றீர்கள் என்பது தான். நான் வலியுறுத்த விரும்புவது, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டும். அனுமதிக்கப்படுவதன் மூலம் காவல்துறையின் சட்ட விரோதப் போக்கைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலைமையை நடைமுறையில் உருவாக்குவதற்கு நாம் துணை புரிய முடியும்.

காவல்துறை என்பது தடி எடுத்து பொது மக்களைத் தாக்குவதற்கு அல்ல. பாதுகாப்பதற்குத்தான். ஆனால் பாதுகாத்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஆளுகின்ற கட்சி என்ற ஒரே காரணத்திற்காக இந்தக் காவல் துறையின் காட்டாட்சி தர்பாரை அனுமதிக்காதீர்கள், அரக்கத்தனத்தை மேலும் பாதுகாப்பது சரியல்ல என்பதையும் வலியுறுத்துகிறேன்.

(முற்பகல் 9-50)

அதோடு இங்கே, ஆளும் தரப்பிலே டி. ஆர். ஓ. என்கொயரி போடப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லலாம். சம்பந்தப்பட்ட 4, 5 பேர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதுபற்றிச் சொல்லலாம். நான் குறிப்பிட்டுக் குற்றஞ்சாட்டுகிறேன். இவ்வளவு சம்பவங்களும் நடைபெற்ற பிறகு குற்றத்தின் தன்மைக்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக தற்காலிக நீக்கம் செய்து, டி. ஆர். ஓ. என்கொயரி போடுவது குற்றவாளிகளைத் தண்டிப்பதாகாது. இந்த நடவடிக்கைக்குப் பின்னாலே ஒழுங்குமுறைகளை நிலைநாட்டும்





வகையில் தமிழ்நாட்டிலே காவல் துறையினரின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். எந்த விதத்தில் முடிவு கட்டுவது என்பதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி ராமரத்தினா தியேட்டரில், காவல் புரிகிறவர்கள் எந்த அடிப்படையிலே அங்கே இருந்தார்கள், அல்லது அவர்கள் முன்னுரிமை பெற்றுச் சினிமாப் பார்க்கப் போனார்களா என்பதையெல்லாம் நாம் முதலிலே ஆராயவேண்டும். அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்கெனவே தகராறு நடைபெற்றிருக்கிறது. அந்தத் தகராறு அடிப்படையின் காரணமாக மீண்டும் அந்தப் போலீசார் எப்படி அங்கே வரவழைக்கப்பட்டார்கள் என்பதை அரசு கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுமக்கள் திரைப்படம் பார்க்கக்கூடிய திரையரங்கிலே போலீசார் சென்று ஒழுங்கான முறையிலே படம் பார்த்து விட்டுத் திரும்புவார்களானால் இதுபோன்ற சம்பவம் நடைபெற்றிருக்காது. அது மட்டுமல்ல, இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அங்கே கடை வைத்திருக்கிற பேவ்மெண்ட் கடைக்காரர்களையெல்லாம் அவர்கள் அடித்து நொறுக்கி இருக்கிறார்கள், பெண்களைச் சித்திரவதை செய்திருக்கிறார்கள். கடைவைத்தவர்களுக்கு அதனால் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் வரையிலே நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அந்த வகையிலே குழப்பங்களை பொதுமக்களிடம் ஏற்படுத்துவதிலே முதலாவதாக இருந்திருக்கிறார்கள். எனவே பாதிக்கப்பட்ட அந்தக் கடைக்காரர்களுக்கு நமது அரசு நட்டஈடு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டி. ஆர். ஓ. என்குயரி போடுவதாகச் சொல்லப்படுகிறது. அதைச் சரியான முறையிலே என்குயரி செய்து வன்மையாளர்களைக் கண்டிக்கும் வகையிலே முடிவுசெய்வதற்காக இப்பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-85 அன்று ஆவடியிலே உள்ள ராமரத்தினா திரை அரங்கத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளையொட்டி மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து ஏன் அவையை ஒத்திவைக்க வேண்டுமென்பதற்கான காரணங்களை விளக்கிச் சொல்லி இருக்கிறார்கள். 1-4-85 அன்று ஆவடிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி உள்ளபடியே வேதனைக்குரிய ஒரு நிகழ்ச்சியாகும். சிறப்புக் காவல் படையினர் கடமை தவறிய ஒரு செயலாகும். சிறப்புக் காவல் துறைக்கு இது ஒரு களங்கத்தை உருவாக்குகின்ற ஒரு செயல் என்றுதான் கருதவேண்டும். அதையொட்டி

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய உணர்ச்சிகளின் அடிப்படையிலே கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் இப்படிபட்ட நிகழ்ச்சிகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக அவ்வப்போது எல்லா ஆட்சிகளிலேயும் எல்லா மாநிலங்களிலேயும் எப்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றனவே தவிர அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது, ஆகவே போலீஸ் ராஜ்யமாகியிருக்கிறது என்று ஒட்டுமொத்தமாக முடிவு கட்டுவது என்பது சரியான பேச்சல்ல. ஆனால் காவல் துறையினர் இல்லாமல் எந்த ஒரு ஜனநாயக நாட்டிலேயும் மக்களுக்குப் பாதுகாப்பு, உயிருக்கு, உடமைக்கு, உடலுக்கு, மற்றவைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பது இயலாத ஒன்று. ஆனால் சிறப்புக் காவல் துறையினர் தங்களது கடமையை ஆற்றும் வகையிலே அவர்கள் காரியத்தை ஆற்ற வேண்டுமென்ற முறையிலே அரசு கண்காணிப்பாக இருந்து நடைமுறைபடுத்துகின்ற முறையிலே இந்த அரசு பணியாற்றிக் கொண்டு வருகிறது.

ஆவடியில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் இரண்டாவது, ஐந்தாவது அணிகள், ரெஜிமெண்டல் மையத்துடன் நிறுத்தப்பட்டுள்ளன. ஆவடியில், தற்போது இந்த அணிகள் முழு அளவில் இல்லை. தற்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாவது அணியின் இரு குழுக்கள், ஐந்தாவது அணியின் இரு குழுக்களுடன் சேர்ந்து, தீவிரப் பயிற்சி பெற்று வருகின்றன. மற்ற குழுக்கள் (கம்பெனிகள்) பிரிவுப் பணிகளில் வெளியே உள்ளனர். தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் இரண்டாவது அணித்தளவாயாக திரு. குணசேகரனும், ஐந்தாம் அணி தளவாயாக திரு. ஜெ. பி. ஜோசப்பும், ரெஜிமெண்டல் மையத்தின் தளவாயாக திரு.வி.ராமச்சந்திரனும் உள்ளனர். ரெஜிமெண்டல் மையத் தளவாய், வளாகத்தின் ஒரு கோடியில் தங்கியுள்ளார். திரு. ஜெ. பி. ஜோசப் வளாகத்திற்கு வெளியே, சத்தியமூர்த்திநகரில் தங்கியுள்ளார். இரண்டாவது அணித்தளவாய்க்கு, ஒரு வீடு ஒதுக்கப்பட்டு இருந்தபோதிலும் திரு. குணசேசகரனுக்கு முன்பு இப்பதவியில் இருந்தவர் அவ்வீட்டை காலி செய்யாததால், மேற்படி இல்லம், காலியாவதை எதிர் பார்த்து திரு. குணசேகரன் சென்னையில் தங்கியுள்ளார்.

1-4-1985 அன்று இரவு, சுமார் 10-00 மணியளவில் இரண்டாவது அணியைச் சேர்ந்த இரு காவலர்கள், உள்ளூர் திரையரங்கு இராமரத்தினா தியேட்டர் ஒன்றுக்கு சென்றதாகவும் மேற்படி காவலர்கள் உரிய அனுமதிச்சீட்டுகள் இன்றி, திரையரங்கினுள் நுழைய முற்பட்டபோது, வாயிற்காப்போருக்கும் இக் காவலர்களுக்கிடையே சண்டை நிகழ்ந்ததாகவும் அதன் காரணமாகத் திரையரங்கு பணியாளர்கள், இக்காவலர்கள் இடையே தாக்குதல்கள் நடைப்பெற்றிருக்கின்றன, ஆவடி காவல் நிலையத்திற்குத் தக்க தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அந்த இடத்திற்கு வருவதற்குள், அவ்விரு காவலர்களும், அந்த





இடத்தைவிட்டுச் சென்று விட்டனர். காவலர்கள் தாக்கப்பட்டதானது, ஒரு தொடர் எதிர்தாக்குதலுக்கு காரணமாக அமைந்தது. சுமார் 10.30 மணியளவில், தமிழ்நாடு சிறப்புக் காவல்படைக் காவலர்கள், சுமார் 100 பேர் பெரும்பாலும் இரண்டாவது அணியைச் சேர்ந்தவர்கள், கழிகள் மற்றும் பெல்ட்களுடன் அத்திரையரங்கில் கூடி, அத்திரையரங்கின் கண்ணாடிகள் ஆகியவற்றிக்கு சேதம் விளைவித்து, ஐஸ் விற்பனை செய்யும் இயந்திரம் உட்பட, திரையரங்கினுள்ளும் அதன் வெளியேயும் இருந்த பொதுமக்களைத் தாக்கினர். இது முன்னர் நடந்த சம்பவத்திற்கு பதிலடியாக முற்றிலும் ஒரு வேண்டத்தகாத செயலாகும். திரையரங்கு உரிமையாளரின் புகாரின் மீது, முதலில் நடந்த சம்பவமான அனுமதிச் சீட்டின்றி உள்ளே நுழைய முற்பட்டமைக்கும், இரண்டாவது பெரிய சம்பவமான தாக்குதலுக்கும் சட்ட விரோதமான கூடுதல் ஆகியவற்றிற்கும், இந்திய தண்டனைச்சட்டம் 147, 148, 323, 324, 448 மற்றும் 427 பிரிவுகளின் கீழ் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. பதினொரு ஆண்களும் ஒரு பெண்ணும் காயம் அடைந்தனர். ஆனால் அவை அளவில் சிறிய காயங்களானாலும் அவர்கள் புறநோயாளிகளாக சிகிச்சைப் பெற்றனர். பின்னர் காவல் துறை 2. 4.1985 அன்று நேரடி விசாரணை செய்து கொண்டிருக்கையில் மேலும் 7 பேர் காயங்கள் அடைந்ததாக புகார் செய்தனர். அவர்களும் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் அவர்களது காயங்கள் சிறிய காயங்கள் ஆகும். தமிழ்நாடு சிறப்புக் காவல்படை காவலர்கள், ஆத்திரத்துடன் செயல்பட்டு திரும்புகையில், சில பெட்டிக் கடைகளை சேதப்படுத்தினர். ஒரு கடையின் உரிமையாளரான மோகன் என்பவரது புகாரின் மீது இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 323, 448 மற்றும் 427 பிரிவுகளின் கீழ், ஒரு வழக்கு சிறப்புகாவலர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் நடந்துக் கொண்டிருக்கையில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை உதவி ஆய்வாளர் கருப்பையா காவல் நிலையத்திற்குச் சென்று தனது காவலர் ஒருவர், திரையரங்கில் தாக்கப்பட்டதாக அறிவித்துப் புகார் கொடுத்ததன் பேரில், உரிய நடவக்கைக்காக அப் புகாரும் பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை காவலர்களின் ஒழுங்கீன நடவடிக்கையால், ஆத்திரமுற்று கூடியிருந்த ஒரு பெரும் கூட்டத்தினரை உள்ளூர் துணைக்காவல் கண்காணிப்பாளர் திரு. கணேசன், சமாதானப்படுத்தி' உரிய புலன் விசாரணை நடைபெறும் என்றும், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி கூறியதின் பேரில், கூடியிருந்தோர் அமைதியுற்றனர். கூட்டத்தினர் கலைந்து சென்று கொண்டிருக்கையில் இரவு சுமார் 11.00 மணியளவில், லான்ஸ் நாயக் 600 கணேசன் என்பவர் முகாமைவிட்டு வெளியே வந்தபோது சிலரால் தாக்கப்பட்டார். இது பற்றியும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, அதன் மீது ஒரு வழக்கு பதிவு செய்யபட்டது. லான்ஸ்நாயக் கணேசன் தாக்கப்பட்டதை அறிந்து இரண்டாவது அணியைச் சேர்ந்த தமிழ்நாடு சிறப்புக்

காவல்படை காவலர்கள், சுமார் 60 பேர், மீண்டும் ஆத்திர மூட்டும் செயல்களில் ஈடுபட்டு பெட்டி கடைகளுக்கு சேதம் விளைவித்தனர். அவ்விஷமிகளால் காய்கறி மற்றும் சோடா ஆகியவை விற்கும் சிறு வண்டிகள் கவிழ்க்கப்பட்டன. மீண்டும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. உள்ளூர் துணைக் காவல் கண்காணிப்பாளர் பொது மக்களிடையே பெருமளவில் நம்பிக்கையூட்டியதால், உணர்ச்சிவயப்பட்ட மக்கள் மெதுவாகக் கலைந்து செல்லத் தொடங்கினர்.

இச்சம்பவங்களைப் பற்றி தகவல் அறிந்ததும், செங்கை கிழக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளரும், செங்கற்பட்டு சரக காவல் துணைத் தலைவரும் சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு கைவசமிருந்த செங்கை கிழக்கு ஆயுதப் படையினருடன் சென்றனர்.

(முற்பகல் 10-00)

மேலும் தென் ஆற்காடு மற்றும் செங்கை மேற்கு மாவட்டங்களில் இருந்தும், கூடுதல் காவல்படையினரை அனுப்பவும் உத்தர விட்டனர். அதன்பின், வட ஆற்காடு மாவட்டத்திலிருந்தும் கூடுதல் காவல்படையை காவல்துறை இயக்குநர் அனுப்பியுள்ளார். ஆயுதக் காவல் படை காவல் துணைத் தலைவரும், விசாரணைக்காக உடனே ஆவடிக்குச் சென்றார்.

காலையில் இதுபற்றி தகவல் அறிந்து காவல்துறை இயக்குநர் உடனே காவல்துறைத் தலைவருடன் (சட்டம்-ஒழுங்கு) ஆவடிக்கு விரைந்து சென்றார். முன்னதாக காவல்துறை இயக்குநர் (நுண்ணறிவு) தனிப் பிரிவினரை உஷார்படுத்தினார். செங்கை கிழக்கு மாவட்ட கண்காணிப்பாளரும், இச்சம்பவங்கள் பற்றி மாவட்ட ஆட்சியாளருக்கு தகவல் தெரிவித்திருந்தார். இந்நிகழ்ச்சிகளில் காவல்துறையினர் சம்பந்தப் பட்டிருப்பதாலும், விசாரணை நடத்துவது பொதுமக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்ற காரணத்தாலும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி உடனடியாக விசாரணையை மேற்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

காவல்துறை இயக்குநரும், காவல்துறைத் தலைவரும் முந்தைய நாள் இரவு வன்முறை நிகழ்ச்சிகள் நடந்த இடத்தைப் பார்வையிட்டு, சேதம் பற்றிய சரியான படங்களைப் பெறுவதற்காக, சம்பவம் நடைபெற்ற இடங்களை வீடியோ படமெடுக்க ஏற்பாடு செய்தனர். மூத்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியாளர் சம்பவம் நடந்த இடங்களைப் பார்வை பட்டது உட்பட, எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கைகள், காவலர்களின் தவறான நடத்தைப் பற்றிய எந்த உண்மையும் மறைக்கப்படமாட்டாது என்று பொதுமக்களுக்கு உறுதியளிக்கப் பட்டுள்ளது.



தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் இரண்டாவது அணியைச் சேர்ந்த காவலர்கள் மட்டுமே, இச்சம்பவங்களில் சம்பந்தப் பட்டுள்ளார்கள் என்றும், ரெஜிமெண்டல் செண்டர் மற்றும் ஐந்தாம் அணியைச் சேர்ந்தவர்கள் கட்டுப்பாட்டுடனும், நிதானத்துடனும் நடந்து கொண்டார்கள் என்றும் விசாரணைகள் தெளிவாக்குகின்றன. இரண்டாம் அணியின் 4 காவலர்களும், நான்காம் அணியைச் சேர்ந்த ஆவடியில் விளையாட்டுப் போட்டிக் காகப் பயிற்சிப் பணியிலிருந்த ஒரு காவலரும், பல்வேறு வன்முறை சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது.

அவர்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1 காவலர் 571 பவார் சிங் | — | இரண்டாம் அணியில் விளையாட்டுப் போட்டிப் பயிற்சியிலிருந்து 4-ம் அணியைச் சேர்ந்தவர். |
| 2 காவலர் 551 ஹரிமோகன் | — | 2-ம் அணியைச் சேர்ந்தவர். |
| 3 காவலர் 3027 ராமசந்திரன் | — | 2-ம் அணியைச் சேந்தவர். |
| 4 நாயக் 376 நாராயணன் | — | 2-ம் அணியைச் சேர்ந்தவர். |
| 5 காவலர் 616 ராமச்சந்திரன் | — | 2-ம் அணியைச் சேர்ந்தவர். |

இவர்கள் உடனடியாக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மற்றவர்கள் யார் என்று அறிவதற்காக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

கொந்தளிப்பு சம்பவம் பற்றி அறிந்த உதவித் தளவாய் திரு. சுரேந்திர மோகன், காவலர்களைக் கேட்டுக்கொண்ட போதிலும், அது பலன் அளிக்கவில்லை. காவலர்கள் அனைவரும் தங்குமிடங்களிலிருந்து படுக்கையை விட்டு எழுந்து வந்த காரணத்தால், அவர்கள் எவரும் சீருடை அணிந்திருக்கவில்லை. எனினும், சம்பவம் பற்றி அவர் உடனடியாக முகாமிற்கு சற்றே வெளியில் வசித்துக் கொண்டிருக்கும் ஐந்தாவது அணி தளவாய்க்கு தகவல் கொடுக்கத் தவறிவிட்டார், அவ்வாறு, தகவல் கொடுக்கப்பட்டிருந்தால், தளவாய் உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்து, அவர்கள் போவதைத் தடுத்திருக்க முடிந்திருக்கும். இந்த உதவித் தளவாய், தனிப்பட்ட முறையில் முயற்சிகளை மேற்கொண்டாரே தவிர, பிற அணிகளின் உதவியைப் பெறும் அடுத்த கட்ட நடவடிக்கையை அவர் மேற்கொள்ளவில்லை. அவர், தனது அணியில் தளவாய்க்கு மட்டும் தொலைபேசியில் பேசினார். அந்தத் தளவாய் அதிகாலை 02-00 மணிக்குத்தான் வந்தார். அவரது இந்த தவறுதலுக்காக அவர்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவரை காவல்துறை இயக்குநர் மற்றொரு அணிக்கு மாற்றுவதாக கூறியுள்ளார்.

குற்றம் புரிந்தவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும், இரண்டாம் அணியில் இரண்டு கம்பெனிகள், உடனடியாக அந்த இடத்திலிருந்து திருப்பத்தூருக்கும், கிருஷ்ணகிரிக்கும் தீவிரப் பயிற்சி பெற பயன்படுத்துவதற்காக மாற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர்களை இந்த இடத்திலிருந்து அகற்றுவதால், பொதுமக்களின் எரிச்சல் அடங்குவதற்கு வழிகோலுவதற்கும்; பிறகு மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை நடத்தும்போது, நபர்களை முறையாக அடையாளம் கண்டுகொள்வதற்கும் மேலும் இது உதவியாக இருக்கும்.

குடியிருப்பு உள்ளதோ, இல்லையோ, தளவாய் உடனடியாக முகாமிற்கு உள்ளேயே தங்கி இருக்கவேண்டுமென்று காவல்துறை இயக்குநர் உத்தரவிட்டுள்ளார். நிலைமை அமைதியாகும் வரையில், சில நாட்களுக்காவது' தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக் காவலர்கள் அனுமதியின்றியோ, சீருடையின்றியோ, வெளியே செல்லாமலிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விசாரணை குறித்தும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் உள்ளூர் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அமைதி காட்டி வருகின்றனர்.

காவல்துறை புலன் விசாரணைகளை அடுத்த 15 நாட்களுக்குள் முடித்து, அதன் பின்னர், அரசாங்கம் மேற்கொண்டு வழக்குகள் தொடருவது உள்ளிட்ட உத்திரவுகளைப் பிறப்பிக்க, வழிகோலும் வகையில், மாவட்ட வருவாய் அலுவலரின் விசாரணைக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த நிலைமைகளைப் பொறுத்தவரையிலும், யாருக்கும் தயவு தாட்சண்யம் காட்டாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காவல் துறையினருக்கும், மாவட்ட ஆட்சியாளருக்கும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் இது குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து மேற்கொண்டு விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.



## 3. கவன ஈர்ப்புகள்

### (அ) விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை குறைந்த வாடகைக்கு அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ம. மணிமாறன், மற்றும் ஆ. நடராசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. ம. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''விவசாயப் பொறியியல் மையங்கள் மூலம் ஆழ் குழாய் கிணறு இறக்குவதற்கு வாடகை உயர்த்தியுள்ளது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே. வேளாண் கருவிகளை, விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்கு வாடகை 1969-ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி கருவிகளுக்கு வாடகை நிர்ணயம் செய்து பதினைந்து ஆண்டுகள் ஆனபடியாலும், துறைக்கு இதனால் ஏற்படும் செலவினமும் அதிகப்படியானதாலும், விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில், விலை நிர்ணயம் செய்ய, வாடகை வீதத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, இக்கருவிகளை வாடகைக்கு வழங்கும்போது, துளையிடுவதற்கான முனை மற்றும் தேவையான டீசலையும், முன்னால் விவசாயிகளே அளித்து வந்தனர். இதனால் 100, 200 அடி துளை போடுவதற்கு, சுமார் ஆயிரம் ரூபாய் கொடுத்து இந்த முனையை விவசாயிகள் வாங்க வேண்டியுள்ளதால், சிரமம் ஏற்படுவதாகவும், எல்லா இடுபொருள்களின் செலவினங்களையும் சேர்த்து அடிக்கு இவ்வளவு என வாடகை நிர்ணயம் செய்ய இயலுமா என கோரப்பட்டது. எனவே, அரசு இக்கருவிகளின் வாடகை விகிதத்தை விவசாயிகள் பாதிக்கப்படாத வகையிலும், அவர்களுக்கு சிரமமின்றி கருவிகள் வாடகைக்கு கிடைக்கும் வகையிலும், மாற்றி அமைத்து 22-11-1984-ம் நாளிட்ட அரசு வேளாண்மைத்துறை நிலை ஆணை எண். 271-ல் ஆணை வெளியிடப்பட்டது. இந்த வாடகைகள் 1-1-1985-லிருந்து நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. ம. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயிகளைப் பொறுத்தவரையில் எல்லா இடுபொருட்களின் செலவினங்களையும் சேர்த்து வாடகை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற ஆலோசனை அடிப்படையில் வாடகை ஏற்றப்பட்டிருப்பது நியாயம் என்று ஒத்துக்கொள்ள முடியாது. 33 ரூபாய் என்றிருந்த வாடகையை திடீரென்று 250 ரூபாய்

[திரு. மா. மணிமாறன்] [1985 ஏப்ரல் 8

பொறுத்தவரையில் ஏற்றியிருக்
என்று ரிக்கைப் பொறுத்தவரையில் 5 ரூபாய்
கிறார்கள். கை செட்டைப் பொறுத்தவரையில் 5 ரூபாய்
என்றிருந்ததை 25 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள்.
இப்படி கை செட்டைப் பொறுத்தவரையில் 5 மடங்கும்.
ரிக்கைப் பொறுத்தவரையில் 8 மடங்கும் ஏற்றியிருக்
கிறார்கள். சில இடங்களில் எளிமையாக இருக்கக்கூடிய
வகையில் மண் இருக்கிறது. அப்படி எளிதாக இறக்கக்கூடிய
இடங்களில் விவசாயிகளுக்கு டீசலை வாங்கிக்கொடுத்தால் அது
அவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். இந்தத்
துறையைப் பொறுத்தவரையில் அரசுக்கும் பெருத்த இழப்பு
ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில் விவசாயிகளும் மிகச்
சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில், அவர்கள் இடு
பொருட்செலவுகள் மிக அதிகமாக ஆகியிருக்கின்ற நிலையில்,
அவர்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை
கிடைக்காத நிலையில். வெள்ளம், புயல் போன்றவற்றால்
அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில்
இப்படி 8 மடங்கு, 5 மடங்கு என்று வாடகையை ஏற்றியது மிக
அதிகமான பளுவாக இருக்கின்றது. எனவே மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் இப்படி ஏற்றிய வாடகையை மறுபரிசீலனை
செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர்
அவர்களே. ஏற்கெனவே இருந்த முறையில் விவசாயிகளுக்கு
இருந்த சிக்கல்களை நாம் எண்ணிப்பார்த்துத்தான் டீசல்
போன்றவைகளை முறையே வழங்குவது என்ற முறையில்
எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாகத்தான் இது அதிகமாக
ஆகியிருக்கின்றது. பழைய முறையே உகந்தது என்று விவசாயப்
பெருமக்கள் கருத்து தெரிவித்தால் அதை அரசு பரிசீலிக்கும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இன்னொன்று சொல்ல விரும்புகிறேன், வாடகையைப் பொறுத்த
வரையில் அட்வான்ஸாக 4,500 ரூபாய் கட்டவேண்டும் என்று
விதித்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே 1,500 ரூபாய்தான்
கட்டவேண்டும் என்று இருந்தது. எனவே 4,500 ரூபாய் கட்டுவது
என்பது மிகச் சிரமமாக இருக்கின்றது. எனவே இந்தத்
துறையைப் பொறுத்தவரையில் 5 நாள் வாடகை, 10 நாள்
வாடகையை மட்டும் அட்வான்ஸாகப் பெற்றுக்கொள்ள
வேண்டும் என்ற வகையில் அந்த அட்வான்ஸ் தொகையைக்
குறைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர்
அவர்களே. விவசாயப் பெருமக்களுக்கு எந்த அளவுக்குச்
சலுகைகளை அளிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அளிப்பதில்
எந்தவகையிலும் அரசு பின்தங்கி இருக்காது. எனவே
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களை
ஆராய்ந்து அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 8]

(ஆ) உத்திரமேரூர் பகுதியில் நெல் பயிர் பாதுகாப்புக்காக எலி ஒழிப்பு நடவடிக்கை.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கை மாவட்டம், உத்திரமேரூர் தொகுதியில் நெல் பயிரை எலிகள் நாசப்படுத்துவதைத் தடுப்பது குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் பகுதியில் சுமார் 4,200 ஏக்கர் நெற்பரப்பில் எலி தாக்குதல் காணப்பட்டது. தாக்குதல் தென்பட்டவுடன், 4,200 ஏக்கரிலும் எலி ஒழிப்பு நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட்டு 20 கிலோ சிங்பாஸ்பைடு, 10 கிலோ கோட்டரின் மற்றும் 2 கிலோ செல்பாஸ் எலி மருந்துகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டு எலிகள் ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேவையான எலி மருந்துகள் எல்லா விவசாய கிடங்குகளிலும் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் எலிகளினால் நெற்பயிருக்கு பெரும் சேதம் இல்லை.

(முற்பகல் 10-10)

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டு மிகவும் தொல்லைக்குள்ளானார்கள். அதற்குப் பிறகு வானம் மழை பொழிந்து, பின் எங்கள் பகுதியைப் பொறுத்த அளவுக்கு, புகையான் பூச்சிகளால் மிகவும் பாதிக்கப்பட்டு நிலத்திலுள்ள பயிர்களைத் தீயிட்டுக் கொளுத்தி அந்தப் பூச்சிகளை ஒழிக்கின்ற அளவுக்குக்கூட ஈடுபட்டார்கள். ஆனால், கடந்த ஓராண்டுக் காலமாக, எலிகள் அதிகமாகப் பெருக்கெடுத்து, தானியங்களை நாசப்படுத்துகின்ற அளவில், பயிர்களை நாசப்படுத்துகின்ற அளவில் இருக்கின்றன. இன்றைய தினம் உலகத்திலேயே மனிதனுக்குப் போட்டியாக இருப்பது தானியங்களை அழிப்பதில் எலிகள்தான். ஆகவே, எலிகளை ஒழிப்பதற்குத் தீவிரத் திட்டம் ஒன்றை வகுத்து அரசு செயல் படுமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய உணர்வு நியாய மானதுதான். விவசாயிகளுக்குத் தொடர்ந்து ஏற்படக்கூடிய சோதனைகளை அரசு அறிகிறது. அந்தச் சோதனைகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு அரசும் தொடர்ந்து முயற்சி களை மேற்கொண்டு வருகிறது. எலிகளினால் ஏற்படக்கூடிய இழப்பைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார் கள். உத்திரமேரூர் தொகுதியைப் பற்றி இந்த விவரத்தைத் துறை வழங்கியிருப்பதை நாம் ஏற்கனவே தெரிவித்தேன். ஆனால்,

[டாக்டர். கா. காளிமுத்து] [1985 ஏப்ரல் 8

தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்தும் இதுபோன்ற நிலைமைகள் நமக்குச் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே கேட்டுக் கொண்டிருக்கிற முறைப்படி எலிகள் ஒழிப்பு தடவடிக்கையாகத் தனி திட்டத்தை வேளாண்மைத் துறை வகுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. நரசிம்மபல்லவன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த எலி ஒழிப்புப் திட்டத்தைச் செயல்படுத்துகின்றபொழுது, குறிப்பாக, விவசாயிகளுக்குத் தொல்லை இல்லாமல் ஊர் நல அலுவலர் அல்லது விரிவாக்கப் பணியாளர்களைப் பயன்படுத்தி நேரடியாக வயல்களிலே மருந்துகளை வைத்து, எலிகளை ஒழிக்கப் பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். அவ்வாறு செய்யப்படுமா என்று நான் அரசைக் கேட்க ஆசைப்படுகிறேன்,

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. திட்டம் வகுக்கும்போது இவைகளை எல்லாம் கருத்திலே கொண்டு நாம் செயல்படுத்தலாம்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்படுகின்ற இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கவில்லை. தேர்தல் நடைபெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்படுவதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், மீண்டும் அபாயம் வந்துவிடக் கூடாது. ஏற்கனவே, அரசாங்கம் தேர்தலை அறிவித்து, நடைபெறாததற்கு என்ன காரணம்? இட ஒதுக்கீட்டிலே முறைகேடுகள் இருக்கின்றன என்று கோர்ட்டுக்குப் போய்விட்டார்கள். எனவே, இப்பொழுது மறுபடியும் ஒரு சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, சட்டமாக நிறைவேற்றப்படும். மீண்டும் அதே தவறுகள் வந்து விடுமானால், நாங்கள் அறிவித்து விட்டோம், கோர்ட்டுக்குப் போய் விட்டார்கள், நாங்கள் என்ன செய்வது என்று தப்பித்துக் கொள்ளக்கூடாது. எனவே, இதிலே உள்ள சில முக்கியமான குறைகளைச் சொன்னால் அரசாங்கம் திருத்திக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்.



1985 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவு ஆய்வுக்கு வரும்போது இதையெல்லாம் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத் தலைவர் அவர்களே, ஆய்வுக்கு வருவதற்கு முன்பாகவே, I oppose the introduction of the Bill on technical grounds என்று சொல்லலாம். அந்த அடிப்படையிலே சொல்கிறேன். உதாரணமாக, இந்த மாநகராட்சித் தலைவர், மாநகராட்சி உறுப்பினர்கள், பஞ்சாயத்து உறுப்பினர், பஞ்சாயத்து தலைவர் இவர்களுக்கெல்லாம் பதவிக் காலம் 5 ஆண்டு என்று இருப்பதை 4 ஆண்டாக மாற்ற இருக்கிறார்கள், ஓராண்டு குறைக்க இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினருக்கு 5 ஆண்டுகள், சட்டமன்ற மேலவை உறுப்பினருக்கு 6 ஆண்டுகள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 ஆண்டுகள். ஆனால், இதிலே வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன, ஐந்தை நான்காக ஏன் ஆக்குகிறோம் என்பதற்குக் காரணம் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்சில் சொல்லப்படவில்லை. பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்பதை 4 ஆண்டுகள் என்று ஏன் மாற்ற இருக்கின்றோம் என்பதற்காகக் காரணம் சொல்லப்பட வேண்டும், ஆனால், அது சொல்லப்படவில்லை.

இரண்டாவது, 1981-வது ஆண்டு ஜனத்தொகை அடிப்படையிலே பெண்களுக்கோ, தாழ்த்தப்பட்டவர்களுக்கோ, மலை ஜாதியினருக்கோ இட ஒதுக்கீடு கிடையாது. டிவிஷன் வார்டு கிடையாது; உறுப்பினர் எண்ணிக்கை கிடையாது. 1971-ஆம் ஆண்டு ஜனத்தொகை கணக்கை எடுத்துக் கொண்டுதான் பெண்களுக்கும். மலை ஜாதியினருக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்படும். வார்டுகள் அந்தப் பிரிவிலே எதுவோ அதுதான் கணக்கிலே எடுக்கப்படும், 1971-ஆம் ஆண்டு சென்சஸ் படி என்ன உறுப்பினர்களோ அவர்கள் தான் பஞ்சாயத்திற்கும், பஞ்சாயத்து யூனியனுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் என்று சொல்கிற இதிலே ஒரு முக்கியமான பிரச்னை இருக்கிறது. ஏற்கனவே சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று இருக்கிறது. நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்று இருக்கிறது. அதற்கு என்ன அடிப்படையோ அதை வைக்க வேண்டும். இல்லையென்றால் 1981-ம் ஆண்டு சென்சஸ் அடிப்படையில் எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் 1971-ஆம் ஆண்டு சென்சஸ் என்று சொன்னால், நம்முடைய அமைச்சர் அவர்கள் வெளியிலே புரட்சிகரமான திட்டம் என்று கூட சொல்லி இருக்கிறார்கள், 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை என்று சொல்லியிருக்கிறார்கள்; பலபேர்களுக்கு இந்த வாக்குரிமை கிடைக்காமல் போய்விடும், 1981-ஐ 1971 ஆக முன்னாலே தள்ளிப்போடுகிறதாலே, பலபேர்களுக்கு ஓட்டுரிமை இல்லாமல் போகிற காரணத்தாலே அவர்களுக்கு மாநகராட்சித் தலைவராக வருகிற வாய்ப்பு போகும். உறுப்பினர்களாக வருகிற வாய்ப்பு போகும். பஞ்சாயத்துத் தலைவராக வருகிற வாய்ப்பு போகும். ஆகவே இது உள்நோக்கம் நிரம்பியது.

வாக்காளர்கள் ஆகிய எங்களுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டு விட்டது என்ற ஒரு கிரவுண்ட் அபாயகரமானது. அதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். நாமினேஷன் பை கலெக்டர். வழக்கறிஞர் என்பதால் உங்களுக்குத் தெரியும். ரொம்பவும் டேன்ஜரான விஷயம் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. கலெக்டர் அவர்கள் இட ஒதுக்கீடு செய்வதற்கு அதிகாரம் அவருக்கு தரப்பட்டிருக்கிறது. எவ்வளவு எண்ணிக்கை என்றால், 'லிமிடட் நம்பர்ஸ்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மலை ஜாதியினர். தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் இவர்களில் ஒதுக்கீட்டிற்கு கலெக்டருக்கு நாமினேஷன் போடலாம். அதற்கு அதிகாரத்தை தருவதோடு, அவர் ரூரல் டெவலப்மெண்டில் ஓரளவிற்கு உற்சாகமாக இருக்கிறார் என்று கலெக்டர் திருப்தியடைந்தால் ரூரல் டெவலப்மெண்டில் இவர் ரொம்பவும் ஆர்வமுடையவர் என்று சொல்லி அவரே நியமிக்கலாம்; நாமினேஷன் போடலாம் என்ற அமைப்பு அதிலே வருகிறது. இது மிஸ்யூஸ் ஆப் பவர். அதிகார துஷ்பிரயோகம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அடுத்தது பொலிட்டிகல் மோட்டிவோடு, அரசு உள்நோக்கத்தோடு ஆளும் கட்சிக்காரர்களை புகுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே சட்டத்திலே இந்தச் சிக்கல்கள் இருக்கின்றன. எனவே மீண்டும் இந்தச் சிக்கல்கள் உருவாகாமல் இருப்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவை இந்த நிலையிலேயே எதிர்க்கிறேன். இன்னொன்றும் சொல்லப்படுகிறது.

Without elected representatives for a long time நீண்ட காலமாக மக்கள் பிரதிநிதிகள் சபையில் இல்லாததால் இந்தத் தேர்தலைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லுகிறார்கள், நான் சென்னை சட்டமன்ற உறுப்பினர். ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் கூட இருக்கிறார்கள். இங்கேயும் நீண்ட நாட்களாக ரெப்ரசன்டேட்டிவ்ஸ் இல்லை. கோர்ட்டிலே கேஸ் இல்லை. இதைக் கொண்டு வருவற்கு என்ன தடை? எனவே சென்னை மநகராட்சிக்கு தேர்தல் தேதி அறிவியுங்கள் என்று கேட்டு, இந்தச் சட்டத்திலே இருக்கிற குறைகளைத் தீர்த்து அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டுவந்தால் நாங்கள் ஆதரிப்பதற்கு தயாராக இருக்கிறோம். ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதே சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. இட ஒதுக்கீடு முறையை எதிர்த்து கோர்ட்டிற்கு போய்விட்டதால், ஸ்டே கொடுத்துவிட்டதால் நாங்கள் தேர்தலை நடத்த முடியவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள், அதற்கு நீங்களும் பொறுப்பாக இருக்கிறீர்கள். இட ஒதுக்கீட்டிலே முறைகேடுகள் இருந்தால் வேறு என்ன செய்ய முடியும்? உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால் தென் ஆற்காடு மாவட்டத்தில் அண்ணா கிராமத்தில் அரிஜனங்களே கிடையாது. அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அது தவறு தானே? அப்படியானால் அந்தத் தவறை கண்டிக்க மாட்டார்களா? ஆகவே நாங்கள் கோர்ட்டிற்குப் போவதை விரும்பவில்லை. இன்னும் சொல்லப்போனால் தேர்தல் நடத்த வேண்டும், இந்தத் தவறுகளை திருத்திக்கொண்டு அரசாங்கம் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.



*திரு. கு. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே இந்திய குடியரசுக் கட்சியின் சார்பாக எதிர்க்க விரும்புகிறேன். உள்ளாட்சிகளுக்கு தேர்தல் விரைவில் நடத்தவேண்டுமென்கிற நல்ல எண்ணத்தோடு இந்தச் சட்டமுன்வடிவினை கொண்டு வந்திருந்தாலும், தமிழகத்திலே உள்ள 106 நகரசபைகளில் 20-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் தலைவர்களாக வருகிற நிலை தவிர்க்கப்பட்டிருக்கிறது. 378 ஒன்றியங்களில் 68-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் தலைவர்களாக வருகிற நிலை தவிர்க்கப்பட்டிருக்கிறது, எனவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு இல்லாமல் வருகிற இந்தத் தேர்தலை, சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1983-ஆம் ஆண்டில் உள்ளாட்சித் துறையில் தாழ்த்தப்பட்ட மக்களும் ஆட்சி அதிகாரத்திற்கு வரவேண்டுமென்ற பெரிய நோக்கோடு இந்தத் தேர்தலைக் கொண்டுவந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்தார்கள். நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் சில சுயநலவாதிகளும், ஜாதி வெறியர்களும் வழக்கு மன்றத்திற்கு போய், தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளாட்சித் துறையில் ஆட்சி அதிகாரத்திற்கு வந்துவிடக் கூடாது என்கிற கெட்ட எண்ணத்தோடு தடை வாங்கினார்கள். அந்த சுயநலவாதிகள், ஜாதி வெறியர்களுக்குப் பயந்து அரசாங்கம் மீண்டும் பழைய முறைப்படி தேர்தலை நடத்துவதை நான் ஆட்சேபிக்கிறேன். இந்த இட ஒதுக்கீடு இங்கு மட்டுமல்ல, பல மாநிலங்களில் இருக்கிறது, பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே கூட இட ஒதுக்கீடு இருக்கிறது. இட ஒதுக்கீடு செய்வது பற்றி தமிழ் நாட்டில் இருக்கிற எந்த அதிகாரப் பூர்வமான கட்சியும் எதிர்க்கவில்லை. இந்த சட்ட மன்றத்தில் இருக்கிற எந்த அரசியல் கட்சியும் அதிகாரப்பூர்வமாக எதிர்க்கவில்லை. யாரோ ஒரு சிலர் கோர்ட்டுக்குப் போனால் அதற்காக அரசு பின் வாங்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பல் 10-20)

தமிழ்நாட்டில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் இப்படிப்பட்ட சலுகைகள் வரும் என்ற எண்ணத்தில் மிக்க மகிழ்ச்சியாக இருந்தார்கள். அவர்களுடைய மகிழ்ச்சி வீணாகும் வகையில் பழைய முறைப்படி மீண்டும் தேர்தல் நடக்கக்கூடாது. கோர்ட்டிலே தடை வாங்கியிருக்கிறார்களே தவிர அந்த வழக்கு முடியவில்லை, நடந்துகொண்டிருக்கிறது. வழக்கு எப்பொழுது

முடியும் என்று நிச்சயமாகத் தெரியாத நிலை இருக்கிறது. எனவே வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறபோது அவசரம் அவசரமாக இப்படிப்பட்ட ஒரு தேர்தலை அறிவிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நியமனம் என்ற முறையில் இட ஒதுக்கீடு செய்கின்ற அதிகாரத்தைக் கொடுத்தால், இப்படிப் பட்ட சட்ட முன் வடிவின் மூலம் 'கைதூக்கிகள்' தான் வர முடியும். எந்தவிதமான அதிகாரமும் இல்லாத உறுப்பினர் களாகத்தான் அவர்கள் இருப்பார்களே தவிர, அவர்களுடைய எண்ணங்களை அங்கே தெரிவிக்கின்ற வாய்ப்பு இருக்க முடியாது. கை தூக்கிகளாக இருப்பவர்களைத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் செய்வார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளாட்சி மன்றத்தின் அதிகாரத் திற்கு வரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் இட ஒதுக்கீடுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. யாரோ ஒரு சிலர் எதிர்க்கிறார்கள் என்பதற்காக இந்த அரசு தன் கொள்கையிலி ருந்து பின்வாங்கி விடக்கூடாது. பழைய முறைப்படி, அதாவது ஏற்கெனவே அறிவித்த ஒதுக்கீடு முறைப்படி சட்ட முன்வடிவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நேற்றய தினம்கூட குறிப்பிட்டது பத்திரிகைச் செய்தியாக வந்திருக்கிறது. செப்டம்பர் 15-ம் தேதி தமிழ் நாட்டில் உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேர்தல், புதிய தலைவர்கள் வருவார்கள் என்று அறிவித்திருக் கிறார்கள். இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய கிராம மக்கள் முழுமையாக வரவேற் கிறார்கள். காரணம் எப்படிப்பட்ட நெருக்கடி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். தேர்தல் நடக்க வேண்டுமென்று தான் நாங்கள் விரும்புகிறோம்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒன்றை சொன்னார்கள். 18 வயதான வர்களுக்கு எல்லாம் வாக்குரிமை ஊராட்சித் தேர்தலில் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இந்த முறையிலே பார்த்தால் அவர்கள் ஓட்டுப் போட முடியுமா என்பது சந்தேகம்தான். இதிலே குழப்பம் இருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் சில உறுப்பினர்களை நியமிக்கலாம் என்று சொல்லி, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் இதற்கு முன்னாலே ஊராட்சி ஒன்றியத் தேர்தல் முடிந்த பிறகு அந்த ஊராட்சி ஒன்றியத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் உறுப்பினர்களும் தலைவரும் இரண்டு பெண் உறுப்பினர்களை நியமனம் செய்யலாம் : ஆதிதிராவிடர்களை நியமிக்கலாம் என்று இருக்கிறது. அந்த மாதிரி நியமித்து வந்தார்கள். அப்படி





இருக்கும்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த அதிகாரத் தைக் கொடுத்தால் நிச்சயமாக எதிர் காலத்தில் ஆளும் கட்சிக்கு கெட்ட பெயர்தான் வரும். மாவட்ட ஆட்சித் தலைவர் பட்டியல் கேட்பார். ஆளும் கட்சியிலிருந்துதான் பட்டியல் கொடுப்பார்கள். இப்பொழுது பாண்டிச்சேரியில் பற்றாக்குறை என்பதற்காக மூன்று உறுப்பினர்களை நியமித்து ஆளும் கட்சிக்கு அதிகபலம் சேர்த்து கொண்டதைப்போல இங்கேயும் செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை உருவாகும், அது கூடாது. எந்த விதமான குழப்ப மான சூழ்நிலைக்கும் இடம் கொடுக்காமல் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும். தேர்தல் முடிந்த பிறகு, தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெண் உறுப்பினர்களையும் ஆதி திராவிட மக்களையும், நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையைச் சேர்ப்பதற்கு, அவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற முறையில் திருத்தம் செய்து சட்டத்தைக் கொண்டுவந்தால்தான் நல்லது. அப்போதுதான் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். இல்லை என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கு இருக்கிற அதிகாரம் அதிகாரிகளுடைய கைக்குப்போய், ஆளும் கட்சிக்குத் தான் இதன் மூலம் ஆதாயம் கிடைக்கும் வகையில் இது அமையும். ஆகவே, பழைய முறைப்படி கொண்டுவர வேண்டும்.

மாண்புமிகு குடியரசுக் கட்சி உறுப்பினர் பேசும் போது ஆதி திராவிடர்களும் பெண் உறுப்பினர்களும் நியமனம் செய்யப் படுவதை சிலர் எதிர்க்கிறார்கள் என்று சொன்னார். அதை யாரும் எதிர்க்கவில்லை. வர வேண்டுமென்று எல்லோரும் வர வேற்கிறோம். ஏதோ ஒரு காரணத்தால் கோர்ட்டில் தடை வாங்கியிருக்கிறார்கள். 14 ஆண்டு காலமாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாத ஒரு சூழ்நிலையில் பல பிரச்சினைகள் கிராமங்களில் உருவாகியிருக்கின்றன. இந்தச் சூழ்நிலை இல்லாமல், குழப்பத்திற்கு இடமில்லாமல் தேர்தல் வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் குழப்பத்திற்கு இடமில்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இல்லாமல், ஆளும் கட்சிக்கு அதிகாரம் செலுத்தும் நிலை இல்லாமல் தேர்தல் நடை பெற வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவுக்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்திலே பஞ்சாயத்துக்களுக்கும் நகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்ற அரசினுடைய எண்ணத்தை நாங்கள் வரவேற்கிறோம், ஆதரிக்கிறோம். தேர்தலை எந்த அளவிற்கு விரைவிலே நடத்த முடியுமோ, அந்த அளவிற்கு விரைவிலே நடந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அந்த அவையில் சொல்லப்பட்டது. அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும், ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் தேர்தல் நடத்தப்படும் என்று இந்த அவையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு இணங்க இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன், ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஏப்ரல் 8

இதை இன்ட்ரட்யூஸ் பண்ணும் நேரத்திலே சில கருத்துக்களைச் சொல்லி, எதிர்க்கவேண்டிய துரதிருஷ்டவசமான நிலையில் நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம். ஏன் என்றால், 18 சதவீதம் ரிசர்வேசன் என்பது பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று 1983-ஆம் ஆண்டிலே இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்பதை, இந்தச் சட்டத்தினுடைய ஸ்டேட்மென்ட் அன்ட் ஆப்ஜெக்டிலே மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் அதற்கு பதிலாக இங்கே ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

:' It among the members of the panchyat union council' there are no women or members of the Scheduled Castes Scheduled Tribes' the panchayat union council may co-opt one women and one member of the Scheduled Castes or Scheduled Tribes ;'

அதற்குப் பிறகு, கலெக்டரைப் பொறுத்தவரையில்

the Collector may nominate one woman and one member of the "Scheduled Castes or Scheduled Tribes."

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், 18 சதவீதத்தினுடைய அடிப்படையிலே நாமினேட் பண்ணுவதற்கு அதிலே இடம் கொடுக்கப்பட்டு இருக்கவேண்டும். ஏன் என்றால், 18 சதவீதம் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கொள்கை அளவிலே ஒத்துக்கொண்டதற்குப் பிறகு, நேரடியாக தேர்தல் நடத்த முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டாலும்கூட, நாமினேட் பண்ணக்கூடிய நேரத்திலே, 18 சதவீதம் ஒதுக்கீடு என்ற அந்த பிரின்சிபில் அடிப்படையிலே, அந்த அளவிற்கு எண்ணிக்கையை ஆட்களை நாமினேட் பண்ணுவதற்கு இடம் ஒதுக்கியிருக்கவேண்டும். அந்த முறையில் இல்லை. இரண்டாவது, கலெக்டர் அவர்களிடத்திலே நாமினேட் பண்ணுவதற்கு உரிமை கொடுப்பது ஒரு ஜனநாயக முறையல்ல. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், யார் யாரை நாமினேட் பண்ணவேண்டும் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தக் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் முடிவு செய்யவேண்டும். அது அல்லாமல், கலெக்டர் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்பது சரியல்ல. முன்பிருந்த முறையிலே பஞ்சாயத்து கவுன்சில்—யாரை நாமினேட் செய்யவேண்டும் என்பது குறித்து—அந்தப் கவுன்சிலுடைய மெஜாரிட்டி மெம்பர்ஸ் எடுக்கக்கூடிய முடிவின் அடிப்படையிலே நாமினேட் பண்ணுவதற்கு அதிகாரம் இருக்கவேண்டுமே தவிர கலெக்டர் நாமினேட் பண்ணுவதற்கு அதிகாரம் கொடுப்பது என்பது பல சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கும். ஆகவே இப்படிப்பட்ட திருத்தங்கள்தான் இங்கே கொண்டுவரப்படவேண்டும். அந்த முறையிலே உள்ள திருத்தங்களைக்கொண்டு வந்து, ரீ-இன்ட்ரட்யூஸ் பண்ணவேண்டும் என்று சொல்லி, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.



1985 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சட்டத்தைப் பற்றி அறிமுக நிலையிலேயே அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். விவாதத்தின்போது, அவர்கள் எழுப்பியிருந்தால் விளக்கங்கள் தருவதற்கு வசதியாக இருந்திருக்கும். இருப்பினும் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும், இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த நல்ல சட்டத்தை தமிழரசன் போன்றவர்கள் ஆதரிக்கிறார்கள், பாராட்டுகிறேன். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாயத்திலே இருக்கிற சில தீய சக்திகள் அது கூடாது என்று நீதி மன்றத்திலே போய் தடை வாங்கிவிட்ட காரணத்தாலும் நீதிமன்றத்திலே இருக்கிற அந்தத் தடை எப்போது முடியும் என்று தெரியாத நிலை இருப்பதாலும் விரைவிலே உள்ளாட்சி, ஊராட்சி தேர்தல்களை நடத்த வேண்டும் என்று இந்த மன்றத்திலே வலியுறுத்திய காரணத்தாலும், அவை முன்னவர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் நிச்சயமாக தேர்தல் நடக்கும் என்று வாக்குறுதி கொடுத்த காரணத்தாலும், வேறு வழியில்லாமல்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இருக்கிறதே தவிர, இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், தாழ்ந்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டும் என்பதிலே எந்த விதமான மாறுபட்ட கருத்தும் புரட்சித் தலைவருக்கு ஏற்பட்டுவிடவில்லை. இன்னும் அழுத்தந் திருத்தமாக அந்த கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள், இந்த அரசும் தெரிவித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், உள்ளாட்சி, ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் இந்த திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்,

(முற்பகல் 10-30)

18 வயதானவர்கள் வாக்களிக்கவேண்டும், அவர்கள் எல்லாம் வாக்களிக்காத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்று ரகுமான்கான் போன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். நாம் சம்மரி ரிவிசனுக்கு இடம் வைத்திருக்கிறோம். வாக்காளர்கள் பட்டியல் திருத்தப்பட இருக்கிறது. திருத்தியதற்குப் பிறகுதான் தேர்தல் அறிவிக்கப்படும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்தப் பிரச்சனை எழாது. சேர விரும்புபுகிறவர்கள் அதிலே சேர்ந்துவிடலாம். அடுத்து இட ஒதுக்கீட்டைப் பற்றிச் சொன்னார்கள். 1971 ஆம் ஆண்டின் இட ஒதுக்கீட்டில்தான் செய்திருக்கிறார்கள். அந்த 1971 ஆம் ஆண்டின் சட்டப்படிதானே இடத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதைப்பற்றியெல்லாம் கூட நாங்கள் நீண்ட காலம், நாங்கள் அதிகாரிகளிடமும், மற்றவர்களிடமும் வாதிட்டு பார்த்து, விவாதம் நடத்தி முடிவெடுத்திருக்கிறோம். தற்போது கொண்டு வந்திருக்கிற சட்டத்தின்படி, அந்த முடிவின்படி இடம் ஒதுக்குவது என்று ஆரம்பித்தால், எந்த

வார்டுக்கு பெண்களை ஒதுக்கீடு செய்வது என்ற பிரச்சினை வரும். இந்த வார்டுக்கு ஒதுக்கவில்லை, அந்த வார்டுக்கு ஒதுக்கவில்லை, இந்த வார்டுக்கு ஒதுக்கிவிட்டார்கள், அந்த வார்டுக்கு ஒதுக்கிவிட்டார்கள் என்ற சர்ச்சை எழுப்பப்படக்கூடும்:

எனவே அப்போது—அதாவது முன்பிருந்த காலத்தில்—தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எந்தெந்த வார்டுகளில் நின்றார்களோ, எது எது ரிசர்வ் பகுதி என்று அப்போது அறிவித்திருந்தார்களோ, அவைகளை, அது எதுவாக இருந்தாலும் சரி, அப்படியே ஏற்றுக்கொள்ளலாம் என்ற நல்ல எண்ணத்தோடுதான் அரசு அதை ஒத்துக் கொண்டிருக்கிறதே தவிர, வேறு தவறான நோக்கம் ஒன்றும் இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதை ஆரம்பக் காலத்திலேயே, அறிமுக காலத்திலேயே எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது, நடைபெறும் விவாதத்தின்போது அங்கத்தினர்கள் தம் கருத்துக்களை எடுத்துச் சொல்வார்களேயானால், அரசு தரப்பில் முழு விவரங்களையும் பெற்று, நான் பதில் சொல்கிறேன் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துவதற்கு, இந்த அவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இது குறித்து பல்வேறு கருத்துக்களை எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், முந்தைய பில்லிலே என்ன இருந்ததோ அதே பொருள்படத்தான் இதிலும் இருக்கிறது. இருந்தாலும் ஒன்றை மட்டும் அமைச்சரிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்,





'The term of the Office of the Chairman and Councillors i reduced from 5 years to 4 years. But in Madurai it is for 6 years. ரெட்யூஸ் பண்ணியிருக்கிறார்கள் 5 வருடத்திலிருந்து 4 வருடமாக. ஏதோ ஒரு சில வெறுப்பு விருப்புகளுக்கு இணங்க இப்படி ரெட்யூஸ் பண்ணியிருக்கிறார்கள். தங்களுடைய விருப்பு வெறுப்புகளை இதில் காட்டியிருக்கிறார்கள். ஏன் இப்படி பதவிக் காலத்தை குறைக்க வேண்டும்? சாதாரணமாக நாம் தேர்தலே நடத்துவது இல்லை. மக்களின் ரெப்ரசன்டேடிவ்ஸ் இந்த உள்ளாட்சி மன்றங்களில் வருவதற்கே வழி செய்வதில்லை. ஆனால் வழி செய்ய முற்படும்போது, ஏன் இப்படி 5 வருஷத்தை 4 வருஷமாகக் குறைக்க வேண்டும்? என்ன காரணம்? இதை நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல மதுரை மாநகராட்சிக்கு 5 வருடமாக இருந்ததை 6 வருடமாக உயர்த்தியிருக்கிறார்கள். அங்கே இது தலைகீழ் பாடமாக இருக்கிறது. மதுரை மாநகராட்சிக்கு 5 வருஷத்திலிருந்து 6 வருஷம். இங்கே 5 வருடத்திலிருந்து 4 வருஷம். இதனால் பொதுமக்களுக்கும் ரொம்ப கஷ்டம் ஏற்படும் நாம் அடிக்கடி தேர்தல்நடத்த வேண்டிய அவசியம் ஏற்படும் நாம் தேர்தல் நடத்தி அவர்களை கஷ்டப்படுத்துவதே இல்லை, அது வேறு விஷயம். ஆனால் தொடர்ந்து தேர்தலை நடத்த வேண்டும் என்ற முடிவிற்கு வந்ததற்குப் பிறகு, இந்த கவுன்சிலர்களின், பஞ்சாயத்து சேர்மேன்களின் பதவிக் காலத்தை 5 வருஷத்திலிருந்து 4 வருஷமாகக் குறைப்பது நியாயம் இல்லை. மதுரை மாநகராட்சிக்கு உயர்த்தியிருக்கிறபோது, இதற்கு குறைப்பது என்ற நடவடிக்கை ஒரு கண்ணில் சுண்ணாம்பு, ஒரு கண்ணில் வெண்ணெய் காட்டுவது போல் இருக்கிறது.

எதற்கு இந்த இரண்டு அளவு கோல்? சர்க்கார் இப்படிப்பட்ட மாறுபட்ட முறைகளை கையாள்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இதற்கு பதிலை வேண்டுமானால், அமைச்சர் அவர்கள், சட்ட முன்வடிவை ஆய்வு செய்யும்போது, தன்னுடைய பதில் உரையிலே சொல்லட்டும். ஆனால் நான் இங்கே மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இங்கே நாம் இந்த சட்ட மன்றத்திலேயே ஒரு பில்லை பாஸ் பண்ணியிருக்கிறோம். அதை நான் கோட் செய்ய விரும்புகிறேன்.

'The term of office of councillors shall, save as otherwise expressely provided in this Act, be (six years) beginning and expiring at noon on such date as the Government may, by notification, appoint in that behalf:

Provided that the Government may, by notification, for sufficient cause, direct that the term of office of the Councillors as a whole be extended or reduced by such period not exceeding one year as may be specified in the notification.' என்று சொல்லி, ஒரு சப்ஸ்டிடியூட் பண்ணியிருக்கிறோம். 5 வருஷத்தை 6 வருஷமாக ஆக்கியிருக்கிறோம், ஆனால் நம்முடைய பஞ்சாயத்து

பஞ்சாயத்து போர்டு, முனிசிப்பாலிட்டி போன்றவைகள் என்ன தப்பு செய்தன? அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? ஆகவே இந்த திருத்தத்தை இதிலே சேர்த்துக் கொண்டு வந்திருப்பதை நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றாலும் அவர்களுடைய உணர்வை நான் மதிக்கிறேன். தவறான நோக்கத்தோடு குறைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு குறைக்கவில்லை. ஏற்கனவே நகராட்சிகளுக்கு மூன்றாண்டுகள் என்று தான் காலம் இருந்தது. அப்படி 3 ஆண்டு என்று இருந்ததை 5 ஆண்டுக் காலமாக ஆக்கினோம். 5 ஆண்டுக் காலமாக ஆக்கியதற்குப் பிறகு, தேர்தலே நடக்கவில்லை. இப்போது போடும் போது மாநகராட்சிகளுக்கு 4 ஆண்டுக்காலமாக அதைப் போடலாம் என்று குறைத்து, உள்ளாட்சிகளுக்கு மட்டும் 4 ஆண்டு வைக்கலாம் என்று வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வராசு அவர்கள் மதுரை மாநகராட்சியைப் பற்றிக் கேட்கிறார்கள். மதுரை மாநகராட்சி சம்பந்தமான சட்டம் வரும்போது அதற்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்கிற வகையில் சொல்கிறேன். சென்னை மாநகராட்சி சட்டம் வரும்போது, எப்படிச் செய்யவேண்டுமோ பார்த்துச் செய்யலாம். உள்ளாட்சிகளைப் பொறுத்த மட்டில் 4 ஆண்டுகள் என்று போட்டிருக்கிறோம். இப்படி நான்கு ஆண்டுகள் என்று போடுகிற காரணத்தால் அரசுக்கு ஆதாயம் ஒன்றும் கிடையாது. இப்படி 4 ஆண்டுகள் என்று குறைத்ததற்கு என்ன காரணம் என்று கேட்கிறார்கள். இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்து இப்போது அமலாக்கிற பரீட்சை செய்யப் போகிறோம்.

இந்த எட்டாவது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றுகின்ற இந்தச் சட்டம், எந்த நிலையில் இவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. அமுலாக்கப்பட்டிருக்கின்றன, இந்த மன்ற உறுப்பினர்கள் எப்படி பணியாற்றியிருக்கிறார்கள் என்று மீண்டும் பரிசீலனை செய்கின்ற வாய்ப்பை மன்றத்திற்கு அளிக்க வேண்டும் என்ற கருத்தில் குறைத்து இருக்கிறோமே தவிர வேறு தவறான நோக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு நான் அறிமுகம் செய்த சட்டத்தை அவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: "1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (இ) அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 5. வரவு-செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம் (தொடர்ச்சி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் தொடரும்; திரு. கி. மனோகரன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, நாஞ்சிலார் அவர்கள் பேசுவதற்கு முன்னால் நான் ஒரு விளக்கத்தை திரு. ரகுமான்கான் அவர்களிடமிருந்து பெற விரும்புகிறேன். கடந்த வியாழக்கிழமை அன்று உறுப்பினர் வஜ்ரவேலு அவர்கள் இங்கே பேசுகின்றபோது, இந்தி வெளிநாட்டிலே பரவியிருக்கின்றதா என்று பார்ப்பதற்காக சென்ற குழுவில் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்றார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். திரு. ரகுமான்கான் அவர்கள் எழுந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்றார்கள் என்று குறிப்பிட்டார். நான் இல்லை என்று மறுத்தேன். அவர்கள் நான் அதனை நிரூபிக்கிறேன், அமைச்சர் உண்மைக்கு மாறாக சொல்கிறார், அமைச்சர் மீது உரிமைப் பிரச்சனை கொண்டுவர இருக்கிறேன் என்றார். அதற்கு ஆதாரம் ஏதாவது இன்றைக்கு கொண்டு வந்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

[1985 ஏப்ரல் 8

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆதாரம் கேட்கிறார்கள். வெங்கா அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தபோது அந்தக் குழுவிலே உறுப்பினராக இருந்தார். பாலாபழனூர் அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தபோது, அவர்களும் அந்தக் குழுவிலே உறுப்பினராக இருந்தார்கள். அதுமட்டுமல்ல. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். தெரிந்து கொள்ளத் தயார் என்று சொன்னால், சொல்ல விரும்புகிறேன். ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள், வழக்கு வாபஸ் பெறப்பட்டதற்குப் பிறகுதான் மந்திரியானார்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அன்றைக்குச் சொன்ன வாதத்தை இன்றைக்கு வளர்க்க நினைக்கிறார். அன்றைக்கு வெளிநாட்டு தூதுவராலயங்களில் இந்தி பரவியிருக்கிறதா என்று பார்ப்பதற்கு வெளிநாடு சென்ற அந்தக் குழுவில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்தான் சென்றார்கள் என்பது வஜ்ரவேலு அவர்களுடைய கருத்து. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் சென்றார்கள் என்பது திரு. ரகுமான்கான் அவர்களுடைய கருத்து. வெங்கா அவர்களும், முருகையன் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத்தான் சென்றார்கள், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக செல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியதற்கு பின்னால் ஒரு உரிமைப் பிரச்சனை எழுப்பலாம் என்று சொன்னாலும், கேள்வி நேரத்திலே, அமைச்சர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்பி நான் முந்தினேன். ஆனால் அமைச்சர் அவர்கள் முந்திக்கொண்டு விட்டார். பரவாயில்லை. திரும்பவும் சொல்கிறேன். தகவல் பெறுவதற்கு சிரமம் இல்லை. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது வெங்கா அவர்களும், பாலாபழனூர் அவர்களும் அந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அந்தக் குழுவிலே இடம் பெற்றார்களா என்பது வேறு, அந்தக் குழு வெளிநாட்டிற்குச் சென்றது, இந்தி பரப்பப்படுவதை பார்க்கத்தான் என்ற கருத்தின் அடிப்படையிலே வஜ்ரவேலு அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இப்போதும் சொல்கிறேன். இப்போது நானே என்னுடைய மாண்புமிகு சகோதரர் ரகுமான்கான் அவர்கள் மீது உரிமைப் பிரச்சனை கொண்டு வரலாம். இருந்தாலும் பழைய நண்பர் என்பதற்காக மன்னித்துவிடுகிறேன்.



1985 ஏப்ரல் 8]

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு குழுவிலே உறுப்பினராக இருப்பதும், அந்தக் குழுவிலே போய் வருவதும் இவைகளுக்கு இடையிலே கூட வேற்றுமை இருப்பதாகச் சொல்கிறார். தாலி கட்டுவதற்கும், திருமண வாழ்க்கை நடத்துவதற்கும் இடையிலும் வேற்றுமை இருப்பதாக கருதுவது போல் தெரிகிறது. உறுப்பினராக இல்லை என்று அப்போது அந்தக் கட்சியிலிருந்த நண்பர்கள் மறுக்கவில்லை. உறுப்பினராக இருந்தார்கள். உறுப்பினராக இருந்த நிலைமையில் அவர்கள் மறுக்கவில்லை. அதை விட்டு வெளியேறவில்லை என்ற காரணத்தால் அந்தப் பொறுப்பு அனைவருக்கும் சமமானதே தவிர வேறு அல்ல.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அதில், உறுப்பினர்கள் சென்றது மட்டும் அல்ல. அவர்கள் வெளிநாட்டிலே இந்தி பரப்பப்படுகிறதா என்று பார்த்து வருவதற்கு, அவர்களுடைய தலைவர் உட்லண்ட்ஸ்ஸிலே விருந்து வைத்து, வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள். அதுதான் பிரச்சனை.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு பேர்களும் என்னுடைய அறையிலே வந்து அதைப்பற்றிச் சொல்லுங்கள். நான் எது உண்மை என்று பார்த்துச் சொல்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, தாங்கள் அதை அனுமதிக்கிறபோது முறையைக் கவனித்து அனுமதித்து இருக்க வேண்டும். அனுமதிக்கிறபோது உங்களுடைய அனுமதியில்லாமல் தங்களுக்குத் தெரிவிக்கப்படாமல் தாங்கள் அனுமதித்தது மூலம் அது அனுமதிக்கப்பட்டுவிட்டது. ஆகவே அது முடிக்கப்படவேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது. விருந்து வைப்பதும் விருந்து வைக்காததும் எங்கெங்கே யார் யார் தனித்தனியாக விருந்து வைத்தார்கள் என்பதையெல்லாம் இங்கே பேசமுடியாது. அவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்ற அளவிலே வேற்றுமை கிடையாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தனியாக விருந்து வைக்கவில்லை. அப்படி விருந்துவைத்து வழியனுப்பியது பத்திரிகைகளில் பெரிய செய்தியாக வந்து, அவர்களுக்குப் பாராட்டுரையோடு அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்கள். உங்கள் மீது களங்கம் கற்பிக்கப்படுகிறபோது, களங்கம் சுமத்தப்படுகிறபோது அந்தக் களங்கத்தைக் கழுவுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமே தவிர திருப்பி எங்கள்மீது சேற்றை வாரி இறைப்பது சரியல்ல,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி இதோடு அதை முடித்துவிடுவோம்.

[1985 ஏப்ரல் 8

திரு. கி. மனோகரன்: சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அவையின் முன்பு நிதியமைச்சர் அவர்கள் சமர்பிக்த்த நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதம் கடந்த 7 நாட்களாக நடைபெற்று இன்றைக்கு முடிவடையும் கட்டத்தை எதிர் நோக்கி இருக்கிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்த அவையிலே வரவும் பழைய பாசமுள்ள நண்பர்களோடு பழகுகின்ற வாய்ப்பினைப் பெறவும் சபாநாயகராக உயர்ந்து விட்ட தங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கவும் எல்லாவற்றிற்கும் மேலாக உடல் நலம் குன்றி இன்றைக்குப் பூரண நலத்தோடு தாயகம் திரும்பி முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும்—முதல்வராக என்று நான் தெரிவிக்கின்றபோது இலாக்காக்களை மூழுமையாகப் பெற்றிருக்கிற மூதல்வரை நான் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெறவும் அவருக்குப் பல்லாண்டு கூறவுமான வாய்ப்பினை எல்லோரும் தெரிவித்ததைப்போல எனக்கு வழங்கிய புரசைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு முதற்கண் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைப்பற்றி அரசு தரப்பிலேயிருந்தும் எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்தும் எடுத்து வைக்கப்பட்ட விவாதங்களை மிக உன்னிப்பாகவும் கவனத்தோடும் எல்லோரும் கேட்டார்கள். குறிப்பாக பதில் சொல்ல இருக்கிற நிதியமைச்சர் அவர்கள் அவையை விட்டு எழுந்து போகாமலேயே உட்கார்ந்து பேசப்பட்ட கருத்துக்களைக் கேட்டுக் குறிப்புகளை எடுத்துக்கொண்டு இன்றைச்கு பதில் சொல்ல இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

இது ஒரு பட்ஜெட் சீசன் என்பது நமக்குத் தெரியும். இரயில்வே பட்ஜெட்டை சமர்பித்ததற்குப் பிறகு, பொது பட்ஜெட்டையும் சமர்பித்ததற்குப் பிறகு நாமும் இங்கே நிதிநிலை அறிக்கையைச் சமர்பித்து இருக்கிறோம். நான் இந்த நிதிநிலை அறிக்கையில் நுழைவதற்கு முன்பு மத்திய அரசு சமர்பித்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே விவாதிக்கலாமா என்ற கேள்வி சரியான கேள்வியல்ல என்பதையும் இந்த பட்ஜெட்டும் அந்த பட்ஜெட்டும் இன்டக்ரேட்டடாக இருக்கிற காரணத்தினால் அந்த பட்ஜெட் மூலம் விளைகிற இன்சிடன்ஸ் அல்லது இம்பேக்ட் இங்கே இருக்கிற மக்களைப் பாதுகாக்கும் அல்லது பாதிக்கக்கூடும் என்ற காரணத்தினால் அந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். முதல் முறையாகப் பிரதமர் பொறுப்பை திரு. ராஜீவ்காந்தி அவர்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு இந்த நிதிநிலை அறிக்கை அங்கே சமர்ப்பிக்கப்பட்டது. திரு. ராஜீவ்காந்தி அவர்களைப் பொறுத்தவரையில் எனக்கு மிக்க மரியாதை உண்டு. அவரது அன்னையார்



1985 ஏப்ரல் 8] [திரு. கி. மனோகரன்]

அன்னை இந்திரா காந்தி அவர்கள் இரக்கமில்லாத அரக்கர்களால் சுட்டுக்கொல்லப்பட்டு நமது இதயம் எல்லாம் பிளந்து எறிகின்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடந்து முடிந்ததற்குப் பிறகு அமைதியான அளவுக்கு அவர் பிரதம அமைச்சராக ஆனார் என்பதில் நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக பிரதம அமைச்சர் காலம் சென்ற இந்திரா காந்தி அம்மையார் அவர்களை தெரிந்தவன் என்ற முறையில் அவரது உடலுக்கு மலர் வளையம் வைப்பதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் என்னை அனுப்பினார். நான் மலர் வளையம் வைத்ததும் உங்களுக்குத் தெரியும். 2 நாட்களுக்குப் பிறகு புதிய பொறுப்பை ஏற்ற ராஜீவ்காந்தி அவர்களை சந்திக்கின்ற வாய்ப்பையும் பெற்றேன். அவரிடம் முதலில் ஆழ்ந்த இரங்கலை கழகத்தின் சார்பாகவும், தலைமையின் சார்பாகவும் தெரிவித்ததற்குப் பிறகு அவர் பெற்று இருக்கிற பெரும் பொறுப்புக்காக எனது வாழ்த்துக்களையும் அவர்களுக்கு நான் உவந்து அளித்தேன். அப்போது அவர் என்னில் உருவாக்கிய உணர்வுகளை நான் இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்க விரும்புகிறேன். அடக்கமாக ஆனால் அழுத்தமாக நிதானமாக தொலைதூர பார்வை பெற்றவராக அவர் என்னுள் தோன்றினார். அவர் நிச்சயமாக நாடு என்ற கப்பலை செலுத்த வேண்டிய முறையில் செலுத்தி செல்ல வேண்டிய இடத்திற்கு சென்று சேர்ப்பார் என்ற நம்பிக்கையை அவர் உருவாக்கினார். அந்த நம்பிக்கையோடு தான் நான் டெல்லியை விட்டு தமிழகம் வந்தேன். ஆனால் வந்ததற்குப் பிறகு அவரது பேச்சிலே நடவடிக்கைகளிலே சில மாற்றங்கள் ஏற்பட்டு விட்டனவே என்ற வேதனை எனக்கு இல்லாமல் இல்லை. தேர்தல் காலத்தில் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பிரதம அமைச்சராக இருந்து கொண்டே பிரித்துப் பார்க்க என்னால் இயலாது, அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவராக சென்றார் என்றோ அல்லது பிரதமராக அவர் சொல்லவில்லை என்றோ பிரித்துப் பார்க்க நான் விரும்பவில்லை. முடியாது. ஏன் என்றால் இரண்டு பொறுப்புக்களையும ஒருவரே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் அந்த காரணத்தால் அந்த இரண்டையும் அவரே வகிக்கின்ற காரணத்தால் தான் நான் அவரது பேச்சை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் ஆட்சி இல்லாத மாநிலங்களுக்குச் சென்று அவர் பேசிய பேச்சுக்கள் பருவத்திற்குரிய பேச்சுக்களாக அமைந்து இருக்கக் கூடுமே தவிர இடத்திற்கு மரியாதைத் தருகின்ற பேச்சாக இல்லை என்பதை மெத்த பணிவன்போடு இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். அதற்காக யாரும் வருத்தப்படக் கூடாது, எனக்கு அவரிடம் இருக்கின்ற மரியாதையை விட காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இருக்க முடியும் என்று நான் நம்ப மாட்டேன். ஆனாலும் சில உண்மைகளை (கூச்சல்—குழப்பம்)—I am not yielding—சொல்ல வேண்டிய கருத்துக்களை சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்தக் கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வார்த்தைக்கு வார்த்தை மறுப்பு தெரிவிக்க அனுமதிக்க முடியாது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசவிருக்கிறார்கள். அவர்கள் மறுப்பு தெரிவிக்கலாம். அனைவரும் உட்காருங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே திரு. நாஞ்சிலார் அவர்கள் இந்த மன்றத்திலே முதல் முறையாக பேசுகிறார்கள். அவர்கள் பேச்சிலே நாங்கள் மிகுந்த அக்கரை கொண்டு, மரியாதை கொண்டு கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அவர் பேச்சு தொடங்கிய முறை ஒரு மாதிரியாக இருந்தாலும் கூட நாம் எல்லாம் பெரிதும் மதிக்கின்ற, பாராட்டுகின்ற இந்திய திருநாட்டினுடைய பிரதமர் அவர்களைப் பற்றி பேசுகின்ற நேரத்தில் அவர் நாகரீகமாக பேசினாலும் கூட அவரை தாக்குகின்ற முறையில் அந்தப்பேச்சு அமைந்ததன் காரணத்தால் தான் எங்கள் கட்சியில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக அவரைக் கேட்டுக்கொள்கிறேன், இந்தமாதிரி சர்ச்சைக்குரிய கருத்துக்களைச் சொல்லாமலேயே இந்த நிதிநிலை அறிக்கையிலே அவர்கள் பயன்படுகிற கருத்துக்களைச் சொல்வார்களானால் அவர்கள் விமர்சனம் செய்யட்டும் அல்லது தாக்குதல் செய்யட்டும் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதனை நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். இப்படி எடுத்த எடுப்பிலேயே புதியதாக பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற இந்திய பிரதரைப் பற்றிச் சொல்வது எங்கள் கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு வேதனையைத் தருகிறது என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : நாஞ்சிலாருடைய பேச்சு கன்னிப் பேச்சாக இருந்தாலும், கண்ணியம் உள்ள பேச்சாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சித்தன் அவர்கள் ஒரு சில கருத்துக்களைச் சொல்லி நான் ஏதோ பாரதப் பிரதமரைத் தாக்குகிறேன் என்ற வகையிலே சொன்னார்கள். நான் காங்கிரஸ் கட்சித் தலைவர் இராஜீவ் காந்தி அவர்களைத் தாக்கவில்லை அல்லது குறைசொல்லவில்லை— ஆனால், எனக்கும் பிரதமராக இருக்கின்ற ராஜீவ் காந்திக்கும் இடையே பேசிய பேச்சுக்களைத்தான் இங்கே எடுத்துக் காட்டுகிறேனே தவிர. தயவு செய்து பாரதப் பிரதமரை எங்களிடமிருந்து பிரித்து வீட்டிற்குக் கொண்டு போக வேண்டாமென்று சித்தனாரையும்,* * கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(கூச்சல்—குழப்பம்)

---

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்ற வார்த்தையை நீக்க உத்திரவிடுகிறேன். உறுப்பினர்களுடைய மனதைப் புண்படுத்துகின்ற வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு). அந்த வார்த்தையை நீக்குவதற்கு உத்தரவிட்டாகி விட்டது; நீக்கியாகிவிட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, என்னைப்பற்றி நாஞ்சிலார் சொன்னதைப் பற்றி எனக்கு வருத்தம் இல்லை. அவர் சொன்ன பதம் நல்ல பதம் என்றுதான் கருதுகிறேன். ஆனால் அது பற்றித் தாங்கள் தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு நான் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. எங்கள் கட்சி உறுப்பினர்களை கொஞ்சம் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன் : * * என்பவர் சமுதாயத்திலே அவ்வளவு தாழ்த்தப்பட்டவராகக் கருதப்படுவதாக நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு வார்த்தைகளையும் இணைத்துச் சொன்னதால் தான் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். * * என்ற வார்த்தையை நீக்கி விட்டேன்.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நீங்கள் விரும்புவீர்களேயானால் * * வெளியே அனுப்பிவிடலாம்.

திரு. டி. ஆர் வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கோட்டையை இடித்தற்காக வாக்காளர்கள் என்ற * * * * * மீது அவர்கள் கோபமாக இருப்பதைக் கண்டு நாங்கள் ஆச்சரியப்படவில்லை.

திரு. கி. மனோகரன்: துணைத் தலைவரவர்களே, ஐதராபாத்தில் பேசிய மரியாதைக்குரிய பிரதம அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது கூறியதை, உங்களுடைய அனுமதியோடு அதைப் படித்துக்காட்ட விரும்புகிறேன். State was going with a begging bowl. இதைத் தான், நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு மாநில முதல்வர்கள், அதுவும் காங்கிரஸ் ஆட்சி இல்லாத மாநிலங்களை ஆளுகின்ற முதல்வர்கள் with a begging bowl பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு டெல்லிக்கு வருகிறார்கள் என்ற கருத்தை பாரதப் பிரதமர் பேசலாமா என்பதையும், அப்படி பேசுவது நியாயம் தானா என்பதையும், இன்னும் சொல்லப்போனால், அது நாகரீகமான கருத்துதானா என்பதையும் இந்த அவையின் முடிவிற்கே விட்டுவிடுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கி. மனோகரன்] [1985 ஏப்ரல் 8

ஆனால், பிச்சைப் பாத்திரம் ஏந்துகிற முதலமைச்சர்கள் என்று அவர்கள் கூறுகின்றபொழுது, நான் அவரைப் பார்த்துப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், வாதத்திற்காக பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு காங்கிரஸ் அல்லாத மாநிலங்கள் ஆளுகின்ற முதலமைச்சர்கள் டெல்லிக்குச் செல்கிறார்கள் என்றே எடுத்துக்கொள்வோம், அவர்களை பிச்சைப் பாத்திரங்களை ஏந்த வைத்த ஆள் யார்? அமைப்பு எது என்று தெரிந்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதை விளக்குவதற்கு முன்பு, இன்னொன்றையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி அல்லாத மாநிலங்களின் முதலமைச்சர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு ஆளத் தெரியாது என்றும், ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவழிக்கிறார்கள் என்றும், உருப்படியான திட்டங்களைப் போட அவர்களுக்குத் தெரியவில்லை என்றும் அவர்கள் கருத்து மழை பொழிந்திருக்கிறார்கள்.

எனக்கு இருக்கின்ற வேதனை எல்லாம் இந்த நேரத்தில் மாமன்றம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக நான் தெரிவிக்கிறேன், இன்றைய மைய அரசு உலகவங்கியிடமிருந்தும், இன்டர்நேஷனல் மானிடரி ஃபண்டிடமிருந்தும் மற்றைய பல்வேறுபட்ட நிதி நிறுவனங்களிலிருந்தும் இதுவரை குறுகியகாலத் தவணைக்கடனாக, நீண்டகாலத் தவணைக் கடனாகப் பெற்றிருக்கிற தொகை மட்டும் 25,000 கோடி ரூபாய். நினைத்த நேரத்தில் அவர்களுக்குத் தேவைப்பட்டால் அச்சடித்துக்கொள்வதற்கு நாசிக் ப்ரெஸ் எப்போதும் கதவுகளைத திறந்தே வைத்துக்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், அவர் பேசும்போது இன்னொன்றையும் சொன்னார். ஆந்திரா மாநிலம் இதுவரையில் பெற்றிருக்கிற ஓவர் டிராஃப்ட் 350 கோடி அவர்களுக்கு ஆளத்தெரியுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், ஹெக்டேயைத் தாக்கினார்: என்; டி. ஆர், அவர்களைத் தாக்கினார்; திரிபுரா சக்கரவர்த்தியைத் தாக்கினார்: சிக்கிம் முதலமைச்சரைத் தாக்கினார்: ஆனால் என்ன காரணத்தாலோ நமது மாநில முதலமைச்சர் அந்தத் தாக்குதலிலிருந்து விடுபட்டிருக்கிறார், இவர்களின் பெயர்களை எல்லாம் குறிப்பிட்ட திரு. ராஜிவ் காந்தி அவர்கள் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் பெயரை மட்டும் குறிப்பிடவில்லை.

ஆனால் குறி வைக்கப்படுகிறது என்பதை மட்டும் நான் ஆட்சித் தரப்பிலே இருக்கின்ற அருமை உடன்பிறப்புகளுக்கு இந்த நேரத்தில் தெரிவிக்க மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு 25 ஆயிரம் கோடியிலிருந்து 30 ஆயிரம் கோடி, நாசிக் ப்ரெஸிலே இருந்து இவ்வளவு என்று சொன்னவர் 350 கோடி ரூபாய் ஓவர் டிராஃப்ட் என்று தெரிவித்த கருத்துக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 ஏப்ரல் 8] [திரு. கி. மனோகரன்]

ஓவர் டிராஃப்ட் வாங்குவது என்பது ஒரு பெரிய பாவகாரியம் அல்ல. அது பொருளாதாரம் தெரிந்த, சிறு அரிச்சுவடி தெரிந்த நண்பர்களுக்குத் தெரியும். Overdraft is not a sin. வளருகின்ற நாடுகளானாலும் சரி, வளருகின்ற மாநிலங்களானாலும் சரி ஓவர் டிராஃப்ட் வாங்குவது இயற்கை. ஆனால் இத்தனை மாநிலங்களைப்பற்றிச் சொன்ன அவர் உத்தரபிரதேசம் இவ்வளவு ஓவர் டிராஃப்ட் வாங்கிற்று, ராஜஸ்தான் இவ்வளவு ஓவர் டிராஃப்ட் வாங்கிற்று: மத்தியபிரதேசம் இவ்வளவு ஓவர் டிராஃப்ட் வாங்கிற்று என்பதைப் பற்றிய ஒரு குறிப்பாவது பிரதம அமைச்சர் தெரிவித்தாரா என்றால் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் மிகப்பணிவோடு உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவு செய்கிறார்கள் என்று சொல்கிற மாண்புமிகு பிரதம அமைச்சருக்கு நான் அவரைத் தெரிந்தவன் என்ற முறையில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குக் கொஞ்சம் விளக்கம் தரவேண்டும் இந்த மன்றத்தின் வாயிலாக என்பதையும் இங்கே தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

வாங்காத கடனுக்கு உலகவங்கிக்கு 70 ஆயிரம் ரூபாய் தினசரி கட்டணம் செலுத்தப்படுகிறது. நான் இதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இதனை உங்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன். இரயில்வேக்களுக்கு 280 கோடி ரூபாய் கடன் அளிக்கப்படும் என்று உலகவங்கி உத்தரவாதம் அளித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் கடந்த ஜூலை மாதமே கையெழுத்தாகிவிட்டது. ஆனால் இரயில்வே நிர்வாகம் இன்னும் இந்தக் கடனை வாங்கவில்லை. எனினும் இதற்கு உத்தரவாதக் கடனாக மத்திய அரசு உலகவங்கிக்குத் தினசரி சுமார் 70 ஆயிரம் ரூபாய் அளிக்கவேண்டியிருக்க வேண்டும் என்ற கருத்தைத் தினமணி பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது. ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவழிக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டு வாங்காத கடனுக்குத் தினசரி வட்டியாக 70 ஆயிரம் ரூபாய் கட்டணம் கொடுக்கிறார்களே, இது ஊதாரித்தனத்தின் கீழ் வருகிறதா அல்லது உபகாரத்தின் கீழ் வருகிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிச்சைப் பாத்திரங்களை ஏந்திக்கொண்டு இங்கே வருகிறார்கள் என்று பேசுகின்ற நமது பிரதம அமைச்சருக்கு இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; மத்திய அரசினுடைய பாலிசியைப் பற்றிப் பேசுவது தவறல்ல. ஆனால் சில புள்ளிவிவரங்களைப் பற்றி இங்கே சொல்கிறபோது அதை மறுப்பதற்கு மத்திய அரசின் சார்பிலே இங்கே பிரதிநிதிகள்

இல்லை என்பதால் அதைப்பற்றிக் குறிப்பிடுவது தேவையில்லை. 280 கோடி ரூபாய் கடன் வாங்குகிறார்கள் என்று சொன்னால், அதுபற்றி மறுப்பு விளக்கம் தருவதற்கு இங்கே ஆள் இல்லை (குறுக்கீடுகள்) மாநில சுயாட்சி பற்றிச் சொல்கிறபோது அதைப்பற்றி மறுத்துச் சொல்ல இங்கே வாய்ப்பு இருக்கின்றது.

(முற்பகல் 11-00)

ஆனால் ஒரு துறையிலே உலக வங்கியிலே ரூ. 250 கோடியை வாங்காமல், வட்டி கட்டிக் கொண்டிருக்கிறது என்றால் அதை மறுப்பதற்கு சென்ட்ரல் கவர்மெண்ட்டின் பிரதிநிதி இங்கே இல்லை. (குறுக்கீடுகள்) மத்திய சர்க்காரை எதிர்த்து பேசக் கூடாது என்று சொல்லவில்லை. எந்த அளவுக்கு மத்திய அரசினுடைய பட்ஜெட் இந்த மாநில அரசு பட்ஜெட்டைப் பாதிக்கிறது என்று பேச ஆட்சேபணை இல்லை. ஆனால், குறிப்பிட்ட ஒரு துறையில் இவ்வளவு கோடி ரூபாயை வாங்காத மத்திய அரசு வட்டி கட்டிக் கொண்டிருக்கிறது என்றால், அது உண்மையா, பொய்யா, என்று அதற்கு விளக்கம் சொல்வதற்கு மத்திய அரசு சார்பிலே இங்கே பிரதிநிதி இல்லை. எனவே, அந்த அளவிற்கு ஆழமாக போகாமல் கொள்கையை விவாதிப்பதில் தவறில்லை,

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: துணைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வார்த்தைக்கு வார்த்தை மறுப்பதை விட அடுத்த உறுப்பினர் திரு. சித்தன் பேசும் பொழுது அவர் பதில் சொல்லலாம்.

திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் எனக்கு நெடு நாளைய நண்பர். அவர் எனக்கு ஒத்துழைப்பு தருவார் என்ற நம்பிக்கையில்....

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் இந்த மாமன்றத்திலே நிதி அமைச்சராக இருந்தவர்—நிதி அமைச்சராகப் பொறுப்பேற்று நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தவர்கள். அவர்கள் பேசுகின்றார்கள். மத்திய சர்க்காருக்கு நாசிக்கிலே நோட்டு அடிக்கக்கூடிய அதிகாரம் இருக்கிறது, என்று. நோட்டு அடித்தால் பிரச்னை தீர்ந்து போகுமா என்பதை அவர்கள் விளக்க வேண்டும். நோட்டு அடித்து, தேசத்தினுடைய பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்து விட முடியுமா என்பதை விளக்கினால் நாங்கள் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான்: நாசிக்கிலே நோட்டே அடிக்க மாட்டீர்களா?





திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: நாசிக்கிலே நோட்டு அடித்தால் பிரச்னை தீருமா—பொருளாதாரப் பிரச்னை தீருமா? நிதி அமைச்சராகப் பொறுப்பிலிருந்து, நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்தவர்; நோட்டு அடித்து பிரச்னையைத்தீர்க்க முடியுமா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே விளக்கிக் கொண்டு வருவதெல்லாம் பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக் கொண்டு .... (குறுக்கீடுகள்)

திரு. என். எஸ். வி. சித்தன்: பிச்சைப் பாத்திரம் என்று வார்த்தைகளைத் திருப்பி. திருப்பிச் சொல்லிக் கொண்டு வருகிறார்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: பிச்சைப் பாத்திரம் என்று சொல்லுகிறார், அதைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.

திரு. கி. மனோகரன்: துணைத்தலைவர் அவர்களே, பேசிய பாரதப் பிரதமர் அட்சயப் பாத்திரம் என்று சொல்லி இருந்தால் நான் அதைப் பயன்படுத்தியிருப்பேன். அவர் பிச்சை பாத்திரம் என்று சொன்ன காரணத்தினாலேதான், அது பத்திரிகைகளிலே எல்லாம் வெளியாகியிருக்கிற காரணத்தினால், அதை மாண்புமிகு உறுப்பினர் சுறுசுறுப்புக்குப் பெயர் போன திரு. சித்தன் அவர்கள் படித்திருப்பார் என்ற காரணத்தினால், அவரும் அதை உணரவேண்டுமென்ற நல்லெண்ணத்தில் நான் அதை எடுத்து வைக்கிறேனே தவிர, மற்று அல்ல. அவரை பிச்சை பாத்திரம் ஏந்துபவராகத் துரத்தியது எது? அல்லது எந்த அமைப்பு? யார் என்றுதான் ஆரம்பத்திலே கேட்டேன். அதற்கு விளக்கம் தருகின்ற பொறுப்பு எங்களுக்கு உண்டு.

The Seventh Finance Commission had recommended that 40% of the Central Excise Duty should be transferred to the State. In the last three years the Centre has not touched the Excise Duty on items like petroleum, Iron and Steel Aluminium and Coal but only raised the prices. The entire benefit of this increase in the price goes to the Centre which is the Producer and Seller of the goods.

According to a recent speech of the West Bengal Finance Minister by raising prices instead of Excise Duty the Centre gathered additional revenue to the tune of Rs. 7000 crores to which the States are not entitled. whereas if the Excise Duty has been increased Rs. 3000 crores would come to the States as per the recommendations of the Seventh Finance Commission.

சுருக்கமாக தமிழாக்கம் சொல்கிறேன். நான் கீழே குறிப்பிட்ட அயர்ன், ஸ்டீல், அலுமினியம், கோல் இவைகளின் எக்சைஸ் டியூட்டியை ஏற்றாமல், மாறாக இவைகளின் விலையை உயர்த்துவதன் மூலம், எக்சைஸ் டியூட்டி என்றால் ஷேரபிள் மாநிலத்

திற்கும் உண்டு ; மத்திய அரசிற்கும் உண்டு. பகிர்ந்துகொள்ளக் கூடிய நிதி எக்சைஸ் டியூட்டி. ஆனால் எக்சைஸ் டியூட்டியை ஏற்றாமல் இந்தப் பொருள்களின் விலையை ஏற்றுவதால் அது மொத்தமாக மத்திய அரசிற்குச் செல்லும். அப்படி மத்திய அரசிற்குச் சென்று கொண்டிருக்கிற தொகை மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 7,000 கோடி ரூபாய். விலை ஏற்றம் செய்வதற்கு பதிலாக எக்சைஸ் டியூட்டியை உயர்த்தியிருப்பார்களானால் இந்நேரம் கிடைக்கிற தொகை 3,000 கோடியாக இருந்திருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவர் அவர்களே, விலை ஏறினால் எக்சைஸ் டியூட்டியும் ஆட்டோமாடிக்காக ஏறும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்ல முடியாது. மாநிலத்திற்கு வருமானம் வருவதற்கான வழிகளைப் பற்றி தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் ஏதாவது கருத்து தெரிவிக்க வேண்டுமென்றால் உங்கள் கட்சியிலிருந்து பேசுகிறவர்கள் மூலம் சொல்லலாம்.

திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, நமக்கு கிடைக்க வேண்டிய, மாநிலங்களுக்கு கிடைக்கவேண்டிய பெரிய தொகை அத்தனையும் மத்திய அரசால் கபளீகரம் செய்யப்படு கிறது என்பதை எடுத்து விளக்கிக் காட்டுவதற்காகத் தான் நான் இதைச் சொல்லுகிறேன். அடுத்தாற்போல நான் இன்னொன்றை யும் தெரிவிக்க விரும்புகிறேன். அதையும் நீங்கள் தயவுசெய்து குறிப்பினில் ஏற்றிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

இண்டஸ்ட்ரிஸ் என்ற தலைப்பு ஆரம்பத்தில் ஸ்டேட் லிஸ்டில் இருந்தது. மாநில பட்டியல். ஆனால், Without any amendment to the Constitution, Industries என்பதை யூனியன் லிஸ்ட்டில் அவர்கள் இணைத்துக்கொண்டு அதன்மூலம் 93 சத வீதம் ஆர்கனைசிங் இண்டஸ்ட்ரிஸ் in terms of value output உதாரணத்திற்குச் சொல்கிறேன், Items like Razor blade, paper gum, match sticks, household electrical appliances, cosmetics, soaps, and other toilet requisites, fabrics, foot wears, pressure-cookers, cutleries, steel-furniture, steel-fasteners, hurricane lantern bicycles, dry cells, T.V. sets, agricultural implements have all gone under the Centre's control.

இதற்கு லைசென்ஸ் பெறவேண்டுமென்றால் டெல்லியில் தொங்கிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை யென்ற நிலையை உருவாக்கி விட்டு, பிச்சைப் பாத்திரம் ஏந்திக் கொண்டு வருகிறார்கள் என்று வாதாடுவதிலே, பேசுவதிலே பெரிய அளவில் பொருள் இருக்குமென்று விவரம் புரிந்தவர்கள் நம்பமாட்டார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இப்போது 25 ஆண்டுகாலமாக இன்பிளேஷன் அதாவது பணவீக்கம் பெருகி இருக்கிறது என்றால் அது 428 சதவீதம். 1964-ஆம் ஆண்டு 100 ரூபாய் என்றால் அதன் மதிப்பு இன்றைக்கு எந்த அளவிற்கு குறைந்திருக்கிறது என்றால் 19 ரூபாய் என்ற அளவிற்கு குறைந்திருக்கிறது. இப்படிப்பட்ட இடர்பாடுகளுக்கு இடையில் தான் மாநிலங்கள் இன்றைக்கு புழுங்கிக் கொண்டிருக் கின்றன. செய்வதறியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களைப் பார்க்கும் போது எனக்கு பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் குரல் கொடுக்கிறார் டெல்லியை பார்த்து.

(முற்பகல் 11-10)

என்னுடைய பணிவான வேண்டுகோளை நான் இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். பிளானிங் கமிஷன் என்று ஒரு அமைப்பு இருக்கிறது. அது சூப்பர் காபினெட் அந்தஸ்து என்ற நிலையில் இருந்து செயல்படுகிறது. அந்த நிலையிலே இருந்த அவர்கள் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். எயர் கண்டிஷன் அறையிலே உட்கார்ந்து கொண்டு, படித்துவிட்டோம் என்ற காரணத்திற்காக, எந்த மாநிலத்தினுடைய 'டோப்போகிராபி'யும் தெரியாமல், 'ஜியாகிரபி'யும் தெரியாமல், பூகோள அமைப்பே தெரியாமல், தேவை என்ன என்பது தெரியாமல், மக்களின் அன்றாட நிலைமை பற்றி புரிந்துகொள்ளாமல், தங்களுடைய திறமைக்கு ஏற்ப திட்டங்களைத் தீட்டுவதும், இவ்வளவுதான் இந்த மாநிலத்திற்கு ஒதுக்குவோம் என்று சொல்வதும் முரண்பாடான கருத்துக்கள் என்று நான் பாராளுமன்றத்திலும் சொல்வேன் ; இங்கேயும் சொல்லுகிறேன். அதனால்தான் தெரிவிக்கிறேன். Scrap that Planning Commission. அந்தக் கமிஷன் அங்கே இருப்பதில் பயன் இல்லை. ஏனென்றால் மாநிலங்களுக்கு திட்டக் குழு (பிளானிங் கமிஷன்) இருக்கிறது. அது ஒழுங்காகச் செயல்பட நிதி அமைச்சர் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் 'டூப்ளிக்கேஷன்' வராது. அந்தப் பிளானிங் கமிஷனைப் பொறுத்தவரையில் எனக்கு இருக்கிற அச்சம், கிரான்ட் இன் எய்டு, ரெவின்யூ நம்முடைய தேவைக்கு ஏற்ப கிடைப்பதில்லை. நிதி ஒதுக்கீடு செய்வது ஃபிளான்ஸ் கமிஷன். That is a statutory body. இன்னொரு பிளானிங் கமிஷன் தேவையில்லை. அது தன்னுடைய 'டிஸ்கிரிஷன்' படி ரெக்கமென்டேஷன் தரும், பரிந்துரை தரும். நான் பகிரங்க மாகக் குற்றஞ்சாட்டுகிறேன். அந்தப் பிளானிங் கமிஷன் The Planning Commission itself is a leverage. தங்களுக்கு சாதகமாக சில மாநிலங்களை கையடக்கம் செய்வதற்கு 'டிஸ்கிரிஷனரி கிரான்ட்' என்று சொல்லி, அவர்களுடைய விருப்பப்படி பணம் வழங்குகிறார்கள்; நிதியை பகிர்ந்தளிக்கிறார்கள். இது நமக்கு பெருத்த பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதால் இந்த மன்றத்தில் இந்தக் கருத்தைச் சொல்கிறேன்.

நண்பர்கள் எல்லாம் ரொம்ப வருத்தப்பட்டார்கள். இந்த நாட்டின் பிரதமரைப்பற்றி இப்படிப் பேசலாமா என்று வருத்தப் பட்டார்கள். அவர்களுடைய கவனத்திற்காகச் சொல்கிறேன். ஹைதராபாத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது அவர் சொல்கிறார்—திட்டங்களைத் தீட்டுவது டெல்லி; புரோகிராம் போடுவது டெல்லி; அனைத்தும் செய்வது நாங்கள்; பணம் தருவது நாங்கள்; நீங்கள் இங்கே ஓட்டு போட்டால் உறுப்படியாக இருப்பீர்கள் ஓட்டுப் போடாவிட்டால் அதன் பலனை அறிவீர்கள் என்று தேர்தல் நேரத்தில் ஒரு பிரதம அமைச்சர் மிரட்டுகின்ற பாணியில் பேசுவது விரும்பத்தக்கது அல்ல. நான் பிரதமரைப் பற்றித்தான் சொல்கிறேனே தவிர காங்கிரஸ் கட்சித் தலைவர் கருதுவது போன்று மரியாதைக்குரிய இராஜீவ் காந்தியைப்பற்றி சொல்லவே இல்லை.

இன்னும் சொல்லப் போனால் எனக்கு அவரிடம் தனிப்பட்ட மரியாதை உண்டு. அந்த மரியாதையின் காரணமாகச் சொல் கிறேன். * * * (குறுக்கீடுகள்)

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே நிறைய சொல்வார்கள் என்று எதிர் பார்த்தோம். அவர்கள் மீண்டும் அவர்களுடைய பாணியிலேதான் தொடர்ந்து பேசுகிறார்கள். நாங்கள் எல்லாம் மதிக்கின்ற மரியாதைக்குரிய இந்தியப் பிரதமரைப்பற்றி * * என்று நாசூக்காகச் சொல்கிறார்கள். தயவுசெய்து அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுத் தேர்தலில் மக்கள் ஆதரவைப் பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தியப் பிரதமராக வந்துள்ள ஒருவரைப்பற்றி இப்படிப் பேசுவது பொருத்தமாக இல்லை. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் நல்ல எண்ணத்தில் அந்தக் கருத்தைச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்பு கிறேன். ** ** என்று சொல்லுவது எந்தக் காரணத்தைக் கொண்டும் குற்றமல்ல. எனவே அவைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கக்கூடாது என்று நான் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு). எனது பாணியிலேதான் நான் பேச முடியும். பிறர் பாணியைப் பின்பற்றுவதற்கு நான் தயாராக இல்லை. ஆகவே அவர்கள் தயவு செய்து கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும் என்று நான் சித்தன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





136431

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுத் தேர்தலில் நின்று, பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்று தேர்தலில் ஜெயித்து வந்து இருக்கிறார்கள். எனவே மக்கள் புண்படுகிற மாதிரிப் பேசவேண்டாம்.

திரு. கி. மனோகரன் : அதைத்தான் நான் சொன்னேனே தவிர, அவர்களைப் புண்படுத்தவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதற்குப் பிறகு நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்பு கிறேன். அவர்கள் தொகுதியிலே பேசுகிறபோது ஒரு கருத்தை சொன்னார்கள். அந்தக் கருத்தை ஆட்சிக் கட்சியிலே இருப்பவர்களாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களின் முதல்வர்களாக இருந்தாலும் சரி, நிச்சயமாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். அவர் தெரிவிக்கிறார்....Sales tax must be replaced by excise duty;'' என்று குறிப்பிட்டு இருக்கிறார். சேல்ஸ் டாக்ஸ் என்பது நிதியமைச்சருக்குத் தெரியும். மாநிலங்களுக்கு கிடைத்துவிட்ட காமதேனு. அதை மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளும் என்று ராஜீவ் காந்தி அவர்கள் பன்னிப் பன்னி தெரிவித்து இருக் கிறார்கள். அதை இந்த மன்றத்திலே நான் கடுமையாக எதிர்க் கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், தேசிய அபிவிருத்திக் கூட்டத்திற்கு நானும் மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களும் சென்று இருந்த நேரத்திலே, அப்போது பிரதமராக இருந்த மொரார்ஜி அவர்கள் எழுந்து, ஏற்கனவே. 3 ஐட்டங்களை எடுத்துகொண்டோம், textiles, tobacco and sugar. மேற்கொண்டு சில ஐட்டங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் கருத்து தெரிவித்தபோது, சேல்ஸ் டாக்சை அறவே நீக்கிவிட்டு, எக்சைஸ் டியூட்டியைக் கொண்டு வரலாம் என்று தெரிவித்த நேரத்திலே முதலிலே எழுந்து 'எதிர்ப்புக் குரல்' கொடுத்தவன் நான். உடனடியாக அவர்கள் பெருந்தன்மையோடு எழுந்து, எந்த மாநிலத்திலேயாவது, ஒரு முதலமைச்சர் எதிர்ப் பாரானால், நான் நிச்சயமாக அந்தத் துறைக்கு வரமாட்டேன் என்ற உறுதியை தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்திலே அவர்கள் அளித்தார்கள் என்பதை நான் உங்கள் மூலமாக, இந்த அவையின் உணர்வாக டெல்லிக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஏன் என்றால் நிதியமைச்சர் அவர்கள் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். சேல்ஸ் டாக்சை நாங்கள் விடமாட்டோம் என்று பேசியிருக்கிறார்கள். அதிலே அவர்கள் உறுதியாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஏன் என்றால் நான் பெருமையோடு சொல்கிறேன், பழகியவர்கள் அல்லவா? ஆறடி உயரம், ஆண் அழகன், ஆஜானுபாகு, நடமாடுகின்ற பல்கலைக் கழகம், நல்லவற்றை எல்லாம் தெரிந்து வைத்திருக்கிற, புள்ளிவிவரக் கணக்குகளை வழங்குவதிலே வித்தகர், வல்லவர், அவர்கள் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். நாங்கள் சேல்ஸ் டாக்சை விட்டுவிட மாட்டோம். அதிலே அவர்கள் உறுதியாக இருக்கவேண்டும் என்று நான் குறிப்பிட விரும்பு கிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1985 ஏப்ரல் 8

அதுமட்டுமல்ல, மத்திய சர்க்கார், தந்திருக்கிற அந்த பட்ஜெட் எவ்வளவு பற்றாக்குறையை பற்றிக்கொண்டு இருக்கிறது என்றால், 3,349 கோடி ரூபாயைப் பற்றாக்குறையாக பற்றிக்கொண்டு இருக்கிறது. அந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரையில், 'How are you going :o bridge the gap ? என்று கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லவில்லை. ஆனால் இங்கே நமது நாவலர் அவர்கள் தெரிவித்து இருக்கின்ற பற்றாக்குறை 262·5 கோடி என்று கருதுகிறேன். அது எப்படி நிவர்த்திக்கப் படும் என்று அவர்களே சொல்லி இருக்கிறார்கள். நான் பைனான்ஸ் கமிஷனை நயந்து கேட்டு இருக்கிறோம், நவினமாக கேட்டு இருக்கிறோம், அவர்கள் அதை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு கேட்டு இருக்கிறோம், அதுவும் சேர்த்து, சிக்கன நடவடிக் க மூலம் அந்த சேப்பை பிரிட்ஜ் செய்ய முடியும் என்று அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இவ்வளவு கோடிகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள், எப்படி அதை சமாளிக்கப் போகிறார்கள் என்பதற்கு பதில் இல்லை. ஆனால் உங்களிடம் கேட்டதற்கு, கேட்காமலேயே நீங்கள் சொன்ன பதில், பைனான்ஸ் கமிஷனை நம்பியிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறீர்கள். எங்களது சிக்கன நடவடிக்கைகளின் மூலம், சிக்கனத்தை செயலில் காட்டுவதன் மூலம் அதைச் செய்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் இங்கே இன்னொன்றை தெரிவிக்க விரும்புகிறேன். சிக்கன நடவடிக்கைகள் மூலம் என்று சொல்லுகிற போது, டெல்லியிலே உள்ள அரசு எந்தச் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது என்ற கேள்வியினை ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கே விட்டுவிடுகிறேன். அவர்கள் மன சாட்சியோடு அதை அணுகிப் பார்க்கட்டும் என்று மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

அது மட்டுமல்ல, பாஃரின் எக்ஸ்சேஞ்ச் பொசிஷன் இருக்கிறதே அதில், மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் மிகவும் பலகீனமாக இருக்கிறது என்பதை மேலே இருக்கிறவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த பலகீனத்தை எப்படி போக்குவது என்று தீவிரமான ஆராய்ச்சியிலே அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அரசியல்வாதிகள் எப்பொழுதுமே ஒரு வகையானவர்கள், எப்படிப்பட்டவர்கள் என்பதற்கு நான் விளக்கம் தருகிறபோது இங்கேயிருக்கிற அரசியல்வாதிகள் என்னோடு கோபித்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். என்னையும் உட்பட்டு வேண்டுமானால், நான் சொல்கிற கருத்துக்களில் கூட, நீங்கள் அதை எடுத்துக் கொள்ளலாம்.



1985 ஏப்ரல் 8] [திரு. கி. மனோகரன்]

சர்ச்சிலிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வி. He was asked to define the qualifications necessary to become a politician. ஒரு அரசியல்வாதியாக இருப்பவனுக்கு அடிப்படையான தகுதிகள் என்ன என்று கேட்டார்கள். சர்ச்சில் தெரிவித்த கருத்து. " It is an ability to foretell what is going to happen tomorrow' next week next month and next year.'' நாளைக்கு என்ன நடக்கும் என்று கணித்துச் சொல்கிற திறமை நாளைக்கு, மறுவாரம், அடுத்த மாதம், அடுத்த ஆண்டு என்று கணித்துச் சொல்கிற தகுதி ஒரு அரசியல்வாதிக்கு உண்டு, என்று சொல்லி விட்டு, சர்ச்சில் அடுத்தாற்போல் இன்னொன்றையும் சொன்னார். ....and have the ability to retort and explain why it did not happen.... அதற்குப் பிறகு அவர்களுக்கு இருக்கிற இன்னொரு தகுதி, தான் சொன்னது எல்லாம் ஏன் நடக்கவில்லை என்பதைப் பற்றி விளக்கமாக கணித்துச் சொல்கிற தகுதி என்று குறிப்பிட்டார்கள். அந்தத் தகுதிக்கு உரியவராக நாவலர் அவர்கள் இருக்கிறார் என்று குற்றம் சாட்டமாட்டேன். நாங்களும் அந்தத் தகுதிக்கு உரியவராக இருக்கிறோம் என்று நான் வாதாடவில்லை. ஆகவே மத்திய சர்க்கார் போட்டிருக்கக் கூடிய வரிகள் எந்த அளவிற்கு நம்மை பாதிக்கின்றன என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது யாரும் வருத்தப்படக் கூடாது.

அவர்களுடைய பட்ஜெட்டில் என்ஜினீயரிங் கூட்ஸைப் பொறுத்த வரையில். there is no specific measure to boost the Engineering experts. சாதாரணமாக இப்பொழுது குடிசைகளுக்கு போனால்—முன்னால் எல்லாம் அலுமினியப் பாத்திரங்கள் தாம் இருக்கும், அதைப் பார்த்திருக்கிறோம். எவர்சில்வர் பாத்திரங்கள் எப்போதுமே குடிசையினுள் எட்டிக் கூட பார்க்காது. ஆனால் இப்போது நாம் குடிசைகளில் பாரார்த்தோமானால்—பிளாஸ்டிக் பக்கெட்டுகளும், மற்றும் பிளாஸ்டிக் சம்பந்தமான பாத்திரங்கள் மட்டுமே அங்கே இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், no concession is given to plastic company, அதற்குப் பிறகு காட்டன் யார்ன்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். 25 சதவீதம் வரியை, அந்த டியூட்டியை உயர்த்தியிருக்கிறார்கள். இதன் மூலம் 8 லட்சம் பவர் லூம்ஸ் பாதிக்கப்படப் போகிறது. இன்னும் நான் தெரிவிக்கவிரும்புகிறேன். கிட்டத்தட்ட 28 லட்சம் நெசவாளர்கள் தெருவிலே வந்து நிற்கப்போகிறார்கள், இது நிறைவேற்றப்படுமானால்.

அதற்குப் பிறகு ஸ்டீல் இன்டஸ்ட்ரீஸ். பிக்சட் இன்கம் என்று சொல்வார்களே, அப்படி நிர்ணயமான ஊதியம் பெற்றுக் கொண்டு, கிடைத்ததை வைத்துக் கொண்டு, வாழ்நாளை கடத்திக் கொண்டே கடன் வாங்கியும் வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்களே அந்த பல்வேறு பட்ட மக்களுக்கு தேவையான அடிப்படை சாதனமாக இருப்பது ஸ்டீல். அந்த ஸ்டீலுக்கும், அந்த ஸ்டீலிருந்து உருவாக்கப்படுகிற சாதனங்களுக்கும் 10 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வரை உயர்த்தப்பட்டிருக்கிறது

[திரு. கி. மனோகரன்] [1985 ஏப்ரல் 8

என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். அதற்குப் பிறகு, 'prices of cement, petrol, commercial vehicles' அது உயர்த்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் [குழந்தைகள் எழுத பயன்படுத்துகிற நோட்டு புத்தகங்களுக்கும், நியூஸ்பிரிண்ட் ககிதங்களுக்கும் வரியை உயர்த்தியிருக்கிறகர்கள். ஒரே ஒரு ஆறுதல் என்ன வென்று சொன்னால், வருமான வரியில் 16 ஆயிரமாக இருந்த உச்ச வரம்பை 18 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதை 25 ஆயிரமாக உயர்த்திருப்பார்களேயானால், நடுத்தர வர்க்கத் தினருக்கு அது உதவியாக இருந்திருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த மத்திய அரசின் பட்ஜெட்டிலே சாகசத்தின் சங்கநாதத்தைத் தான் பார்க்கிறோம் என்று சொல்லி, அத்தோடு அந்த பட்ஜெட்டை ஒதுக்கி வைக்கிறேன்.

அதற்கு பிறகு நாவலரிடம் வருகிறேன். நாவலர் அவர்கள் அறிக்கை தயாரித்திருக்கிறார்கள். மெத்த சிரமப்பட்டு அவர்கள் அந்த அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவருக்கு என் நன்றியைத் தெரிவிக்கிற அளவுக்கு எனக்கு உள்ளம் இல்லை. அவர் தயாரித்திருக்கின்ற அந்த பட்ஜெட் இருக்கிறதே — அவர் தமிழுக்கு பெயர் போனவர், வல்லவர்—ஆனால் அவர் தமிழிலே தந்திருக்கிற அறிக்கைகள் அவற்றில் ஒரு சில பகுதி கள் எனக்கு புரிந்துகொள்ள முடியவில்லை. கொஞ்சு தமிழ் பேசுகின்ற தம்பி காளிமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் எனக்கு விளக்குவார்களானால் நான் நன்றி உள்ள வனாக இருப்பேன். நான் படிக்கிறேன். பாரா 12-லே நாவலர் அவர்கள் தந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலேயிருந்து தெரிந்து கொள்ள விரும்புறேன். "தமிழ்நாட்டில், புதிய புதுப்பிக்கத் தக்க எரிசக்தி வாயில்களை மேம்படுத்தவும், அது குறித்து பிரச்சாரம் செய்யவும் அரசு அண்மையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அடுத்தாற் போல் 1985-86 ஆம் ஆண்டிற்கு தொழில்களுக்குத் தேவைப் படக்கூடிய வெப்பச் சக்தியைப் பெற, சூரிய சக்தியைப் பயன் படுத்தலாம் என்பதைப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் சூரிய வெப்ப சக்தி பயன்பாட்டு நடவடிக்கை களுக்கு ரூ. 95 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது, என்று தெரிவித்திருக்கிறார், செய்யவேண்டிய காரியங்களைச் செய்துவிட்டு போவதை விட்டுவிட்டு இந்த வெப்பத்திலே மின் சாரம் எடுக்க முடியும், சூரிய வெளிச்சத்திலிருந்து மின்சாரம் எடுக்க முடியும் என்பதை ஊருக்கு தெரிவிக்க ரூ. 95 இலட்சம் தேவைதானா என்பதை நாவலர் அவர்களைப் பார்த்து கேட்டுக் கொள்கிறேன்.

ரூ. 102.44 கோடி செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங் களை வலுப்படுத்துவதற்கான திட்டம் உலக வங்கியின் மதிப் பீட்டிற்காக அனுப்பப்பட்டு உள்ளது. உலக வங்கியிடமிருந்தும் மத்திய அரசிடமிருந்தும் இசைவு பெற்ற பிறகு, இத் திட்டம்



1985 ஏப்ரல் 8] [திரு. கி. மனோகரன்]

1985-86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித் திருக்கிறார். ஒரு பக்கத்திலே திட்டக் கமிஷன் உதவி வர வில்லை என்று சொல்லியிருக்கிறார். இங்கே சொல்கிறார் ரூ.102 கோடி மத்திய அரசு உதவி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் அதுமட்டுமல்லாமல், உலக வங்கியின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்.

அதற்கு பிறகு பாரா 25ஐ படித்துக்காட்ட விரும்புறேன். நாவலர் விளக்கம் தரவேண்டும். கூட்டுத் துறையில் ரூ. 108 கோடி திட்டச் செலவில் ஆண்டொன்றுக்கு 50,000 டன் லைனியர் ஆல்கையல் பென்ஜின் தயாரிப்பதற்கான பெருந் திட் டத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண் டுள்ளது. இதனால் 300 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அடுத்தாற்போல் 1985—86 ஆம் ஆண்டில் வணிக முறையில் உற் பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படும் மற்றொரு திட்டம் ஆண்டொன்றுக்கு 15,000 டன் நிட்ரோ கிளைசிரின் கொண்ட வெடிமருந்துகளைத் தயாரிக்கும் திட்டம். இதற்கான செலவினை கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரூ. 20·85 கோடி. இதனால் வேலைவாய்ப்பு எத்தனை பேருக்கு கிடைக்கும் என்றால் 540, தயவு செய்து புள்ளி விவரத்தை விளக்கித்தர கேட்டுக்கொள்கிறேன். ரூ. 100 கோடி செலவில் வேலைவாய்ப்பு 300 பேர்களுக்கு. ரூ. 20 கோடி மட்டும் செய்தால் வேலைவாய்ப்பு 540 பேர்களுக்கு கிடைக்கும். இது ஸ்டாட்டஸ்டிகல் எர்ரரா என்பது புரியவில்லை. இதைப் போல் ஏறத்தாழ சொல்லிய அத்தனையும் இந்த பட்ஜெட்டில் முரண்பாடாக இருக்கின்றன.

(முற்பகல் 11-30)

Mark Twain-ஐப் பார்த்துக் கேட்டார்கள், "Will you please define Statistics" என்று. அதற்கு அவர் பதில் சொன்னார். நான் இப்படி அதை விளக்குகிறேன் என்று சொல்லிவிட்டுச் சொன்னார். முதலாவது 'Lie'; அடுத்த கட்டம் 'Utter Lie' உச்ச கட்டம் 'Statistics' என்று சொன்னார். நிதியமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிற Statistics என்பது Mark Twain அவர்களை நினைவுபடுத்துகிறது என்பதை நான் மெத்த வருத் தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், நான் ஆடிட் டர் ஜெனரல் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சரண்டர் சரண்டர் என்றுதான் இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை. 50 லட்ச ரூபாய் இதற்காக என்று ஒரு பக்கத்திலே ஒதுக்கப் பட்டிருக்கிறது, இன்னொரு பக்கத்திலே அது சரண்டர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக சரண்டர் செய்யாத அரசு இருக்கிறது என்று நான் வாதாடத் தயாராக இல்லை ஆனால் எல்லாமே, சரண்டர், சரண்டர் என்று ஆனால் இதிலேயும் சரண்டரா ? நான் இந்த சர்க்காருக்குத் தந்திருக்கிற பெயர் சரண்டர் சர்க்கார். மேற்கொண்டு நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது சரண்டர் சர்க்கார் என்பதை மாற்றி காங்கிரஸ்

[திரு. கி. மனோகரன்] [1985 ஏப்ரல் 8

சர்க்கார் என்ற அளவுக்கு உங்களை உயர்த்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மிக முக்கியமான காரணம், மூன்றாவது முறையும் அதிகப்படியான வாக்குகளை பெற்று முதலமைச்சரின் தனித்தன்மையினாலும், அவருக்கு மக்கள் மத்தியிலே இருக்கிற பிடிப்பு காரணமாகவும் அவரை முதலமைச்சராக ஆக்கிப் பார்த்த காரணத்தினால் நான் தெரிவித்துக் கொள்கிறேன், மக்களின் ஆசைகளை எதிர்பார்ப்புகளை எந்தக் காரணத்தைக்கொண்டும் நீங்கள் சாகடித்து விடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நாவலருக்கு இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் பேசும்போதுகூட நான் குறுக்கிட்டுக் கேட்டேன். ஆமாம், நீங்கள் சொல்வது சரி, மாநில சுயாட்சி என்று நாங்கள் கேட்கிறோம், என்று கேட்டபோது அவர் அதற்குச் சொன்ன பதில், நாங்கள் விட்டுவிடவில்லை, என்பது. நான் உட்கார்ந்த இடத்திலே இருந்து கேட்டேன், அப்படிக் கேட்டிருக்கக் கூடாது அதற்கு அவர் பதில் சொன்னார், அடுத்த பட்ஜெட்டிலே இதை விட வேகமாகவும் வரும் என்று. இந்த பட்ஜெட் என்று சொன்னார். அவர் சமர்ப்பித்த சென்ற ஆண்டு பட்ஜெட்டிலேயே அவர் K. C. Wheare—ஐ மேற்கோள் காட்டினார், அதிலே எழுதப்பட்டிருப்பது இதுதான்.

By the Federal Principle, I mean, the method of dividing powers so that the Central and regional Governments are each within its sphere co-ordinating and independent ; each Government should be limited to its own sphere and within that sphere, should be independent of the other. Neither Central nor regional Government is subordinate to ihe other.'

என்பதை நாவலருக்குத் தெரிவித்து ஒவ்வொரு ஸ்பியரிலும் மாநிலங்கள் தமக்கென தனி அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று சொன்னதோடு வரையறுக்கப்படாத அதிகாரங்கள் யாருக்குப் போகவேண்டும் என்றால் அந்த அதிகாரங்களும் மாநிலங்களுக்குத்தான் இருக்கவேண்டுமென்பதை விரிவாகவும் ஆழமாகவும் பேசியிருக்கிறார்கள். K. C. Wheare அவர்களைத் தொட்டுச் சொன்ன காரணத்தால் நான் நாவலரத் தொட்டுப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே கொஞ்சம் கொஞ்சமாக சுருதி இறங்குவதைப் பார்க்கிறேன். கேட்கப்படுகிறது, எதிர்பார்க்கப்படுகிறது, உத்தேசிக்கப்படுகிறது, நம்பப்படுகிறது, வரும் என்று எதிர்பார்க்கிறோம், ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறோம், எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறதே தவிர உறுதியாக நாங்கள் வாதாடுவோம் என்று சொல்லவில்லை. நான் மோதச் சொல்லவில்லை, மத்திய சர்க்காரைமோத வேண்டிய



1985 ஏப்ரல் 8] [திரு. கி. மனோகரன்]

அவசியம் நமக்கு கிடையாது. ஆனால் வாதாட வேண்டிய இடத்திலே வாதாட வேணடுமா ? வேண்டாமா ? நான் வதாடினேன் நீ பார்த்தாயா என்று சொல்லக்கூடும். நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பிளானிங் கமிஷனிலே முன்னால் முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் சென்றார்கள், வாதாடினார்கள், அவர்கள் கேட்ட தொகையை ஒதுக்குவதற்கு அவர்கள் மறுத்தார்க்ள், உடனே அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டுச் சென்னை வந்தார்கள். அதற்குப் பிறகு அழைத்துக் கொடுத்தார்கள் என்பதை நான் நாவலர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். பரிதாபப் புலம்பலொலியைத் தான் இந்த நிதிநிலை அறிக்கையிலே பார்க்க முடிகிறதே தவிர சங்கநாதத்தை நான் இதிலே பார்க்கமுடியவில்லை. வேண்டுமானால் நாவலர் தனது நீண்ட பேச்சில் பல கருத்துக்களைச் சொல்லக்கூடும். எனது அழுத்தமான கருத்துக்களை நான் இந்த நேரத்திலே அவருக்குச் சொல்லிவிட்டேன். தயவுசெய்து மேற்கொண்டாவது உருப்படியான முறையிலே திட்டங்களைத் தீட்டுங்கள், நீங்கள் தீட்டியதாகச் சொல்லப்பட்ட பல திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. வைகையாற்றை நவீனப்படுத்துகிற திட்டம் என்று அறிவித்தீர்கள், அந்தத் தொகை சரண்டர் செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா ? எத்தனை ஆலைகள் கட்டுவதற்கு என்று பணம் ஒதுக்கப்பட்டது. அந்தப் பணம் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா ? ஆடிட் ரிப்போர்டில் home wcrk இல்லை என்றும் Proper planning இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. காரியங்களை தொலை தூர நோக்கில் செய்யவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

1981-82 ஆம் ஆண்டு, 1982-83 ஆம் ஆண்டு இரண்டையும் அவர் படித்துப் பார்த்தால் அவருக்குத் தெரியும் என்று நான் மனதார நம்புகிறேன். மேற்கொண்டு நான் இந்த அவையில் நேரத்தை எடுக்க விரும்பவில்லை. மாண்புமிகு சித்தன் அவர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவருக்கு வழிவிட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் கடைசியாக ஒன்றை மட்டும் இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இந்த அரசு ஏராளமான வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றது. வாக்குறுதிகள் என்றால் சாதாரணமான வாக்குறுதிகள் அல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொஞ்சம் அவகாசம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் அதிக நேரம் எடுத்ததாகவும் எனக்கு நினைவு இல்லை.

அடுத்து வீட்டுக்கு ஒருவருக்கு வேலை அறிவிப்பு. அறிவிப்புக்குப் பிறகு ஆதாரங்களைத் தேடுகிறீர்களே தவிர ஆதாரங்களை வைத்துக்கொண்டு அறிவிப்புகளை தருவது இல்லை. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தந்தீர்களா ? தந்தால் அதை இந்த மாமன்றத்திற்கு நாவலர் அவர்கள் எடுத்து வைக்கட்டும்.

வறுமை கோட்டுக்கு கீழே இருப்பவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு 2 ரூபாய் கொடுத்தீர்களா? இவர்கள் கையில் இந்த வறுமை கோடு படாத பாடு படுகிறது என்பதை தெரிந்துதான் நாவலர் அவர்களே முன்வந்து ஏழ்மை கோடு என்று அந்த வறுமைக் கோட்டுக்கு பெயர் சூட்டியிருக்கிறார்கள். பெயர் சூட்டுவதற்கு நாவலர் அவர்கள் திறமையாக இருக்கிறார்களே தவிர இதைப் பற்றி எண்ணிப் பார்க்கவில்லை பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாமன்றம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக சொல்ல விரும்புகிறேன். திசை திருப்புகிற பேச்சு நீண்டகாலத்திற்கு எடுபடாது, 7 மாதம் நிரம்பிய கர்ப்பிணிகளுக்கு மாதம் ஒன்றுக்கு-10 வது மாதத்தில் குழந்தை பிறக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்--3 மாதங்களுக்கு 150 ரூபாய், 50 ரூபாய், 50 ரூபாய், 50 ரூபாய் என்ற அளவுக்கு தரப்படும் என்று 2, 3 ஆண்டுகளுக்கு முன்பே இது சொல்லப்பட்டது. இதே மாமன்றத்தில் அப்போது நான் இல்லை, கழக உறுப்பினர்கள் நாவலர் அவர்களைப் பார்த்து கேட்டார்கள், அந்த 50 ரூபாய், 50 ரூபாய், 50 ரூபாய் 7 மாதம் நிரம்பிய கர்ப்பிணிகளுக்கு தரப்பட்டதா? என்று கேட்டதற்கு நாவலர் அவர்கள் சொன்ன பதிலை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். மதுரை மாவட்டத்திலே மேலூர் தொகுதியிலே தொட்டாம்பட்டி என்ற ஊரிலே சென்சஸ் எடுத்துக்கொண்டு இருக்கிறோம் இது நிதி அமைச்சர் அவர்கள் பதில். மேலூரில் சென்சஸ் எடுத்து, தமிழகம் முழுவதும் சென்சஸ் முடித்து எல்லா சென்சஸ்ஸையும் கொண்டு போய் ஒரு ஏர்கண்டிஷன் ரூமில் உட்கார்ந்து கொண்டு அதை ப்ராசஸ் செய்து வருவதற்குள் அந்த குழந்தைகளுக்கு வயது 5 ஆகும். அதற்கு பிறகு அந்த 5 வயது குழந்தைக்கு ரெட்ராஸ்பெக்டிவ் எப்க்ட் மூலம் பணம் பெற முடியாது, நான் நாவலர் அவர்களைக் கேட்கிறேன், நீங்கள் இந்த அறிவிப்பை தந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டில் 7 மாதம் நிரம்பிய கர்ப்பிணிகள் யாருமே உருவாகவில்லையா? ஏன் ஊரை ஏமாற்றுகிறீர்கள்? என்பதற்காக நான் இதைக் கேட்கிறேன். படித்து வேலை அற்று இருப்பவர்களுக்கு 50 ரூபாய் கொடுத்தீர்களா? அதை அவர் எனக்கு தெரிவிக்கவேண்டும். நான் கடைசியாக அவரைப் பார்த்து கேட்கிறேன், உங்கள் ஆட்சியில் ஜனநாயக நிறுவனங்கள் கொச்சைப்படுத்தப் படுகின்றன. உதாரணம் சொல்லவேண்டும் என்றால் ஜூடிசியரி தனக்கு சாதகமான தீர்ப்பை அந்த நீதிபதிகள் வழங்காவிட்டால் அவர்கள் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் வேதனையான செய்தி, ஒரு நீதிபதியின் வீடு தாக்கப்பட்டு இருக்கிறது. கண்காணிப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று கொண்டிருக்கின்றன. அந்த நீதிபதிகள் எல்லோரும் கூடி Are we second grade citizens? என்று கேட்டு இருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, Are we Criminals? என்று கூட கேட்டிருக்கிறார்கள்,





அந்த அளவுக்கு நீதி மன்றங்கள் கொச்சைப் படுத்தப்பட்டிருக்கின்றன. Fourth Estate என்று சொல்லுகின்ற பத்திரிகை உங்களுக்குத் தெரியும். அந்த ஆசிரியர்கள் திட்டமிட்டு தாக்கப்பட்டிருக்கிறார்கள். அலுவலகங்கள் தாக்கப்பட்டு இருக்கின்றன. தினகரன் அலுவலகம் தாக்கப்பட்டது. மாலை முரசு அலுவலகம் தாக்கப்பட்டது. ஆட்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். இத்தனையும் செய்கிறார்கள் தனக்கு சாதகமான செய்தி வரா விட்டால். இப்படிப்பட்ட வன்முறைகளில் ஈடுபடுவதன் மூலம் காரியங்களை சாதித்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு கருதுமானால் இந்த அரசு ஏதோ ஒரு சொர்க்கத்தில் இருக்கிறது என்று மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியில் நாவலர் அவர்களைப் பார்த்து கேட்கிறேன், நான் நிதி அமைச்சராக பணியாற்றியபோது ஒரு நிறுவனத்தை உருவாக்கவேண்டும் என்று திட்டமிட்டு அந்த நிறுவனத்தை உருவாக்கினேன். அந்த நிறுவனத்திற்குப் பெயர் Overseas Manpower Corporation அது இப்போது இருக்கிறதா? பயன்படுகிறதா? வளைகுடா நாடுகளுக்கு நீங்கள் ஆட்களை அனுப்பிக் கொண்டு இருக்கிறீர்களா? அப்படி எத்தனை பேரை அனுப்பியிருக்கிறீர்கள்? அனுப்பவில்லை என்றால் இந்த நிறுவனம் இருக்கிறதா? இருக்கிறது என்றால் இதில் பணியாற்றுகிறார்களா? சம்பளம் தரப்படுகிறதா? ஒன்றுமே வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு சம்பளம் தருவது நியாயம்தானா? முறைதானா? எனக்குத் தெரிய, இந்த நிறுவனம் இயங்குவதாகத் தெரியவில்லை; ஆனால் நிறுவனம் இருப்பதாக நான் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதற்குப் பிறகு, நாவலர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அருள்கூர்ந்து உங்களது வார்த்தை ஜாலங்களோடு உங்களது பதிலை முடிக்காமல், எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டுமென்று நான் மெத்த பணிவன்போடு அவரை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேருக்கு நான் பேசிய பேச்சுக்கள் புண்படக்கூடிய வகையிலே அமைந்திருக்குமேயானால், குற்றவாளி நான் அல்ல என்பதையும் சந்தர்ப்பம் அப்படி என்னை பேச வைத்தது என்பதையும் அவர்களுக்குச் சமாதானமாகச் சொல்லி எந்தக் காரணத்தைக் கொண்டும் அதிலேயிருந்து துளியளவும் நான் இறங்கத் தயாராகவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் என்னை வளர்த்துவிட்டவர், ஆளாக்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதையும், அதுமட்டுமல்ல, எனக்குப் பகுத்தறிவுப் பாலை

ஊட்டியவர் பெரியார் இராமசாமி அவர்கள் என்பதையும் இந்த மாமன்றத்திற்குச் சொல்லி, என்னை இன்றைக்கு இந்த அளவிற்கு உருவாக்கிய பெருமைக்குரியவர் சிற்பி பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதையும் உங்களுக்கெல்லாம் நினைவூட்டி அந்தப் பரம்பரையில் வந்த நான் பணிந்து கிடப்பேன் என்று மட்டும் யாரும் கனவு காணக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப் பத்திலே தெரிவித்து, உங்களுடைய பட்ஜெட் புலம்பலொலி பரிதாபத்தின் புலம்பலொலி என்று தெரிவித்து, அமைகிறேன் வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவரவர்களே, எட்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னாலே மூன்றாவது முறையாகத் தமிழக மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பிலே அணிசெய்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் இந்தப் பொதுத் தேர்தலுக்குப் பின்னாலே கொடுத்திருக்கின்ற இந்த முதல் நிதி நிலை அறிக்கையிலே இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஏறத்தாழ இருபது உறுப்பினர்கள் கலந்து கொண்டு இந்த மாமன்றத்திற்கு வழங்கிய கருத்துக்களை யொட்டி நிறைவுரையாக என்னுடைய கருத்துக்களையும் இந்த மாமன்றத்திற்கு முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னாலே, பொதுவாக இந்த மாமன்றத்திலே பேசுகின்ற நேரத்தில் மைய அரசினுடைய நிதிநிலை அறிக்கையை ஒட்டியும், தங்களுடைய கருத்துக்களை வழங்குவது என்பது இந்த மாமன்றத்தில் கடைபிடித்து வருகின்ற ஒரு மரபு. எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அவர்கள் நீண்ட நெடுநாட்களாக நாடாளுமன்றத்திலே இருந்தவர்கள்; நாடாளுமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் கூடப் பணியாற்றியவர்கள் இந்தியத் திருநாட்டிலே இருக்கின்ற பல்வேறு பணிகளை ஆற்றிய முக்கிய மான அமைச்சர்களோடு மெத்த நெருக்கமான உறவு கொண்ட வர்கள். இப்படி நாடாளுமன்றத்தில் அடிக்கடி விவா தத்திலே பங்கு கொண்ட காரணத்தினாலேயோ என்னவோ அல்லது நாடாளுமன்றத்திற்குச் சென்றிருக்கவேண்டிய அவர் இங்கே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு வந்த காரணத் தினாலேயோ என்னவோ தெரியவில்லை, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையிலே, நாடாளுமன்றத்திலே நிகழ்த்தவேண்டிய உரையின் பெரும் பகுதியினை— முழுக்க முழுக்க என்று சொல்ல மாட்டேன்—பெரும் பகுதியை எடுத்துக்கொண்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக் கையைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் அரசுச் கட்சியிலேயும் சரி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பிலேயும் நாங்கள் சொல்லுகின்ற ஒரு வாதம், இங்கே மைய அரசாங்கத்தினுடைய





நிதிநிலை அறிக்கையைப்பற்றி விமர்சிக்கின்ற உங்களுடைய பணிகளைப்பற்றி நாங்கள் கருத்து வேறுபாடு கொள்ளப் போவதில்லை; ஆனால் வரிக்கு வரி மத்திய அரசாங்கத் தினுடைய நிதிநிலை அறிக்கையை நீங்கள் விமர்சனம் செய்வீர் களேயானால், உங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லு வீர்களேயானால், மத்திய அரசினுடைய சார்பிலே பதில் சொல்வதற்கு இங்கே அமைச்சர் பெருமக்கள் இல்லை.

எனவே, உங்களுக்கு என்று சர்வ வல்லமை வாய்ந்த, எல்லாத் திறமையும் வாய்ந்த, எல்லா துறைகளிலேயும் புகழ் பெற்ற அந்த நாடாளுமன்றத்தில் இரண்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; அந்த இரண்டு பெரும் உறுப்பினர்கள் மத்தியிலே உங்கள் கருத்துக்களைக் சொல்வீர்களேயானால், நாடாளுமன்றத்திலே உங்கள் குரல் ஒலிக்குமேயானால் அதற்குப் பதில் இந்திய தேசீய காங்கிரஸ் கட்சி கொடுக்கும்.

நமது திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர வர்கள் நளினமாகப் பேசக் கூடியவர்கள்; மென்மையாகப் பேசக் கூடியவர்கள்; ஆனால் என்ன காரணத்தினாலோ தெரிய வில்லை, இன்றைக்கு அவருடைய உரையில் சற்றுக் காரம் அதிகமாகவே இருந்தது. அதற்காகக்கூட நான் கவலைபட மாட்டேன்; வருத்தப்பட மாட்டேன். ஆனால், இந்தியாவின் இணையற்ற பிரதமராக, இன்றைக்கு இளைய பிரதமராக, 40 வயதிலேயே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற அந்தத் திருமகனைப்பற்றி அவர்கள் சொன்னதால்தான் எங்களுடைய கவலையைக் காட்டவேண்டிய நிலை ஏற்படுகிறது. நான் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன், இந்திய நாட்டினுடைய பிரதமராக, 16 ஆண்டுக்காலம் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையிலே பணியாற்றி, எதிரிகளாலே நாட்டைக் கூறுபோட நினைக்கின்ற துரோகிகளாலே, காக்கையைப்போல, குருவியைப் போல, உலகத்திலே வேறு எந்த ஜீவனுக்குமே இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான மரணம் ஏற்பட்டு இருக்காது என்கின்ற அளவிற்கு அன்னை இந்திரா காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட நேரத்திலே இந்த இளைய பிரதமர், இந்த இளைய மகன் மீது இந்த நாட்டிடைய சுமை ஏற்பட்டது.

உலகத்திலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்திய நாடு. அந்த நாட்டினுடைய பிரதமராக இளைஞர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்திலே, அவரிடத்திலே பொறுப்பு ஏற்றப் பட்ட நேரத்தில் அவர் அழுதுகொண்டிருக்கவில்லை; கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கவில்லை; வாளாவிருக்கவில்லை; சும்மா இருக்கவில்லை; அன்னையார் அவர்களுடைய அருமைச் சடலம் டெல்லியிலே வீட்டிலே இருந்த நேரத்தில் அவர் டெல்லி தெருக்களில் எல்லாம் சுற்றுப்பயணம் செய்தார், எதற்காக ? இந்த நாட்டிலே துயரம் அபிவிருத்தி அடைந்துவிடக்கூடாது; இந்த நாட்டிலே இருக்கின்ற சிறு

பான்மையோருக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் பாதுகாப்பே இல்லாமல் இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பேற்ற சில மணி நேரத்தில் டெல்லி தெருக்களிலே அவர்கள் வலம் வந்து அந்த மக்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தார்கள், அவ்வாறு பாதுகாப்பு கொடுத்த அந்தப் பெருமகனைப் பற்றி இவ்வளவு கடுமையான வார்த்தைகளைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத்தலைவர் சொல்லியிருக்க வேண்டியதில்லை.

அவர்கள் சொன்னார்கள். அது அவர்களுடைய உரிமை. அது அவருடைய இன்றைய கருத்து. அது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. ஒரு தியாகமும் செய்யாமல் அவர்கள் இந்தப் பதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார் என்று அவரால் எப்படிச் சொல்ல முடிகிறது? இந்த நாட்டிலே சமீபத்தில் தான் பொதுத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. 1952 ஆம் ஆண்டிலே இருந்து இந்த நாட்டிலே நடந்து வருகின்ற பொதுத் தேர்தல்களிலே இந்த 8-வது பொதுத் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி போட்டியிட்டு மொத்தமுள்ள 508 இடங்களில் 401 இடங்களைப்பெற்று அந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதமராகத்தான் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறாரே தவிர நீங்கள் சொன்னது போல் ஏனோதானோ என்று இந்தப் பதவிக்கு அவர் உயர்த்தப் பட்டுவிடவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பாரதி சொன்னாரே, நோக்கும் இடம் எல்லாம் நாமன்றி வேறில்லை, நோக்க நோக்கக் களியாட்டம் என்று அதுபோல நாடாளு மன்றத்திலே நாம் அதைப் பார்த்து மகிழ்கிறோம். நீங்கள்தான் அங்கே போகவில்லையே, 508 இடங்களில் 401 இடங்களை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி பெற்றிருக்கின்றது. அதுமட்டுமல்ல, எங்களுடைய தோழமைக் கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 16 இடங்களை பெற்று அங்கே வந்திருக்கின்றது. நான் உங்களுக்கு இரண்டு இடங்கள்தான் கிடைத்திருக்கின்றன என்று இந்த நேரத்திலே சொல்ல மாட்டேன். உங்களுக்கு கஷ்டமாக இருக்கும். அவர் தன்னுடைய திறமையாலே இந்திய அரசியலில் எந்த தலைவனும் செய்யாத சாதனையைச் செய்திருக்கிறார். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையான ஆண்டுகள் ஆட்சியிலே இருந்திருக்கிறது, மாற்றுக் கட்சியும் வந்திருக்கிறது. ஆனால் இந்தியாவிலே எந்தத் தலைவரும் செய்யமுடியாத ஒரு சாதனையை இளைஞராக இருந்தாலும் நாற்பது வயதிலே செய்து காட்டியிருக்கிறார். நாடாளுமன்றம் கூடியவுடன் அவர் என்ன செய்தார்? கட்சி மாறுகின்ற ஒரு அநாகரீகப் போக்கைக் கட்டுப் படுத்துகின்ற முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து—இவரை பார்த்துச் சொல்லக்கூடாது—உங்களால் எப்படி இப்படி சொல்ல முடிகிறது என்றுதான் புரியவில்லை. நான் இன்னமும் சொல்வேன். ராஜீவ் காந்தி அவர்கள் தலைமையிலே இந்தியா சரித்திரம் படைக்க இருக்கிறது. இந்தியாவில் உள்ள அனைத்து நதிகளையும்



தேசியமயமாக்க இருக்கிறார். கறுப்புப் பணத்தை ஒழிக்காமல் ஓய்மாட்டேன் என்று சொல்லியிருக்கிற அந்த நெஞ்சுறுதி அந்த இளைஞருக்குத்தான் வந்திருக்கிறதே தவிர வேறு யாருக்கும் வரவில்லை. வரிக்கு, வரி இவருடைய பேச்சிற்கு நான் பதில் சொன்னால் என்னுடைய உரையின் பெரும் பகுதி இவருடைய பேச்சிற்கு பதிலாகவே போய்விடும் என்று கருதுகிறேன்.

அவர் சொன்னார். நாடாளுமன்றத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். என்ன காரணத்தாலோ அவருக்கு இப்போது அண்மைக் காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொஞ்சம் பாசம் அதிகமாக இருக்கின்றது. அது எதனால் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருக்கு இப்போதிருக்கின்ற நிலை என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள் அல்லவா? நாவலர் அவர்கள் இன்னும் கொஞ்சம் உரக்கக் குரல் கொடுக்கலாம், நாங்கள் கேட்கிறோம், எதிர் பார்க்கிறோம், காத்திருக்கிறோம் என்றுதானே அவர்கள் சொல்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். நான் இப்போது எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் இருந்த இடத்தில் இவர்கள் ஒரு காலத்திலே நிதி அமைச்சராக இருந்து நிதிநிலை அறிக்கையைக் கொடுத்தார்கள். அப்படி கொடுக்கின்ற நேரத்தில் சொன்னது பற்றி நான் நிதி அமைச்சராக இருந்தபோது இப்படியெல்லாம் சொன்னேன், இப்படி எல்லாம் சவால் விட்டேன், இப்படி எல்லாம் கேட்டேன் என்று அவருடைய வாதத்திற்குத் துணையாக ஏதாவது சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. ஆகவே அங்கே இருந்தால் பேச்சின் தொனி வேறு மாதிரியாக இருக்கிறது; இங்கே வந்துவிட்டதற்குப் பிறகு வேறுவிதமாகப் பேசுகிறார் என்று தான் என்னால் எண்ண முடிகிறது.

அடுத்து மத்திய அரசினுடைய வரிக்கொள்கை பற்றிச் சொன்னார்கள். உருக்கைப் பற்றிச் சொல்கிற நேரத்திலேகூட எக்ஸைஸ் ட்யூட்டியை உயர்த்தாமல் உருக்கின் விலையை உயர்த்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். உற்பத்தி செய்கின்ற செலவு அதிகமாகின்ற நேரத்திலே விலையைக் கூட்டுகின்ற பொறுப்பு இருப்பதன் காரணத்தால்தான் மத்திய அரசு உயர்த்துகிறதே தவிர ஏதோ மத்திய அரசு என்பது நமக்கு சொந்தம் இல்லாத ஒரு அரசுபோல் மாற்றார் அரசுபோல் இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களின் மீது அவர்களுக்குக் கவனம் இல்லை என்று சொல்வது நமக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. நம்மில் இருக்கின்ற மக்கள் வாக்களித்து நமக்காக இருக்கின்ற அரசு இந்தியாவினுடைய பாதுகாப்பை ஏற்றுக் அரசுக்கு நிறைய செலவுகள் இருக்கின்றன. அவற்றைச் சரிக்கட்டுகின்ற முறையில் அரசாங்கம் இன்றைக்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கொண்டிருக்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. அவர்கள் சொல்கிற நேரத்தில் 2,500 கோடி ரூபாய் உலக வங்கிக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது என்றும் நாசிக் அச்சகத்தில் ஏதோ அச்சடிக்கிறார்கள் என்றெல்லாம் அவர்கள் சொன்னார்கள். இது எல்லாம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்ததற்குப் பின்னாலே நடந்துவிட்ட நிகழ்ச்சிகள்போலும், அந்தப் பகுதியிலே அவர்கள் இருக்கும்போது நாடாளுமன்றத்திலே இல்லாத ஒரு நிகழ்ச்சிபோலும் அவர்கள் சொல்கிறார்கள் என்று நான் நிச்சயமாக நம்பமாட்டேன். நாட்டினுடைய பிரதம அமைச்சர் பற்றி அவர்கள் ஒன்று சொன்னார்கள். இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.

இதில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அவர், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரைச் சொல்லவில்லை, பிரதமரைச் சொல்கிறேன் எனறு நாசுக்காகச் சொன்னார்கள். கட்சியினுடைய தலைவராக இருக்கின்றவர்கள், தேர்தலைச் சந்திக்கிற நேரத்திலே, மக்களைச் சந்திக்கிற நேரத்திலே, மக்களுக்கு வாக்குறுதி கொடுக்கிற நேரத்திலே அப்படித்தானே சொல்ல வேண்டும். எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்சிக்கு வர வேண்டாம் என்றா சொல்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலின்பொழுது—நீங்கள் என்ன எல்லாம் சொன்னீர்கள்? நாட்டு மக்கள் மறந்துவிடமாட்டார்கள். அட, அட, அட...தேர்தல் நடந்து முடிந்து ஓட்டு எண்ணுவதற்குள்ளாக, நீங்கள் பண்ணிய ஆர்ப்பாட்டம் இருக்கிறதே, எத்தனை ஊர்களிலே எப்படி எல்லாம் சொல்லி சொல்லி நீங்கள் ரசித்துக் கொண்டிருந்தீர்கள்; நாங்களும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம். ஓட்டு போட்டு முடிந்து இரண்டு மூன்று நாட்களுக்குள், எண்ணி முடியவில்லை, இவர்தான் முதலமைச்சர், இவர் அந்த அமைச்சர் என்று மாலை வாங்கவில்லையா, வேட்டி போடவில்லையா? என்ன ஆர்ப்பாட்டம் எல்லாம் நீங்கள் நடத்தினீர்கள்?

(முற்பகல் 11-50)

இப்பொழுது இருக்கிற அரசு மக்களுடைய வாக்குகளைப் பெற்று இன்றைக்கு இந்தப் பொறுப்பிலே அமர்ந்திருக்கிறது. நான் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், அடுத்த முறை அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அல்லது நாடாளுமன்றத்திலே அவர் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்திலே இந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்வார்களானால், அங்கே பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்கள். நிச்சயமாகப் பதில் கிடைக்கும். அல்லது அதிலே, அவரது திறமையிலே அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால், அவர் விடுக்கின்ற வினாக்களை எல்லாம், ஐயங்களை எல்லாம் அங்கே இருக்கிற தலைமை அமைச்சருக்கோ, நிதி அமைச்சருக்கோ, அவர்கள் எழுதுவார்களானால் நிச்சயமாகப் பதில் கிடைக்கும் என்று மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.





அது மட்டுமல்ல, அவர்கள் உரையை முடிக்கின்ற நேரத்திலே, மத்திய சர்க்கார் நிதிநிலை அறிக்கையைப் பற்றி சொல்கின்ற நேரத்திலே சாகசத்தின் சங்கநாதம் என்று சொன்னார்கள். அதிலே எங்களுக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. சங்கநாதம்தான் அது. முதல் சங்கநாதத்தைக் கேட்டீர்கள். போகப்போக அடுத்து வருகின்ற சங்கநாதங்கள் உங்களுக்குக் கேட்கும். அதிலே, என்.டி.சி. பற்றி எல்லாம் அவர்கள் சொன்னார்கள். தேவைகளையெல்லாம் இந்த அரசின் சார்பிலே நீங்கள் சொல்வீர்களானால் நம்முடைய மாநிலத்திற்குச் சேர வேண்டிய அதிகாரங்கள், சேர வேண்டிய நிதிகள், இவற்றைப் பெறுவதிலே இந்த அரசுக்கு நாங்கள் என்றும் துணையாக இருப்போம். இன்றைக்கு நான் பார்க்கின்றேன், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஒரு இணக்கமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், தயவு செய்து, நீங்கள் ஊடே புகுந்து உறவைக் கெடுத்து விடாதீர்கள். தமிழகத்திற்கு அதிகமான நிதி உதவி வேண்டும், வளர்ச்சித் திட்டங்கள் வேண்டும், தமிழகம் முன்னேற வேண்டுமென்பதிலே இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி நாங்கள் ஒரே கருத்திலே இருக்கிறோம்; நீங்களும் எங்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டு, மாநிலத்திற்குப் பெறவேண்டிய நல்ல பணிகளை, திட்டங்களைப் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சொல்கின்ற நேரத்திலே இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழை, நடுத்தர மக்களை நேரிடையாகப் பாதிக்கின்ற புதிய வரி விதிப்புகள் எதுவுமே இல்லை என்பது நமக்குக் கொஞ்சம் நிம்மதியைக் கொடுக்கிறது. ஆனால், அதே நேரத்திலே தொலைதூர நோக்கோடு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப் படுகிறதா என்று கேட்டால் என்னாலே முழுமையாக ஆம் என்று சொல்ல முடியவில்லை. வருங்கால சந்ததியினர் வளம் பெறுவதற்கு நல்ல பல திட்டங்கள் ஏதேனும் இருக்கின்றனவா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்வேன். எங்களுடைய கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் பற்றி செய்தியாளர்களிடம் பேசுகின்ற நேரத்திலே 'நாட் ப்ரடக்ஷன் ஒரியன்டட்' என்று சொன்னார்கள். அதைப் போலவே வளர்ச்சித் திட்டங்களிலே இன்னும் கொஞ்சம் அக்கறை காட்டியிருப்பார்களானால், அடுத்து வருகின்ற தலைமுறை பாராட்டுகின்ற நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருப்பார்களானால், நிச்சயமாக நாங்கள் பாராட்டி இருப்போம்.

நான் ஒரு தடவை எண்ணிப் பார்க்கிறேன், 1966–67-லே காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபொழுது கொடுத்த நிதிநிலை அறிக்கையிலே தமிழகத்தினுடைய வருமானம் ரூ. 188 கோடி ஆண்டு ஒன்றுக்கு. 1975-76-லே திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மன்றத்திற்கு அளித்த நிதிநிலை அறிக்கை ரூ. 501 கோடி; ஆனால் இன்றைக்கு இந்த ஆண்டு, 1985–86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ரூ. 2,368 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதோடு சில ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த தமிழக அரசினுடைய மொத்த வருமானத்தைவிட பற்றாக்குறை இன்றைக்கு அதிகமாக இருக்கிறது என்பதை நாம் சொல்லியே ஆகவேண்டும்.

நிதிநிலை அறிக்கையிலே ஏழை மக்களைப் பாதிக்கின்ற வரிகள் இல்லாவிட்டாலும், நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திற்குக் கொடுத்ததற்குப் பின்னாலே, நம்முடைய பால் வளத்துறை அமைச்சர் அவர்கள் பால் விலையை உயர்த்தி இருக்கிறார்கள். அதைப்போல் பஸ் கட்டண உயர்வு ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே, ஏழை நடுத்தர மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 150-லிருந்து ரூ. 200 வரை இந்த அறிவிப்புகளாலே பாதகம் ஏற்பட்டிருக்கிறது, சுமை அதிகமாகி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லித்தான் ஆகவேண்டும்.

நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 20 அம்சத் திட்டத்தினைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். இறந்தும் இறவாத புகழோடு வாழ்கின்ற நம்முடைய அருமைத தலைவி இந்திரா காந்தி அவர்கள் நாட்டு மக்களுக்கு வழங்கிய 20 அம்சத் திட்டத்தினைத் தமிழக அரசு முனைப்போடு செயல்படுத்துவதை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களில் 1983-84 ஆம் ஆண்டில் 80-லிருந்து 90 சதவீதம் வரை நிறைவேற்றப்பட்டு இருப்பதாகவும், தமிழகம் இந்தியாவில் முதன்மை இடத்தில் இருப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்றும் சொல்வதைப் பார்க்கிறபோது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதே நேரத்தில் இன்னொன்றையும் தெரிவிப்பதற்கு விட்டுவிட்டேன். கம்யூனிஸ்ட் கட்சி இடதுசாரி கட்சியின் தலைவர் ரமணி அவர்கள் பேசுகிறபோது, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத்தலைவர் என்னென்ன சொன்னார்களோ, அதைவிட அதிகமாக அவர்கள் பாணியிலே சொன்னார்கள். அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் எப்போதுமே மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையையோ அல்லது எந்த நடவடிக்கையையும் குறை சொல்வார்கள். தோழர் ரமணி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். 37 ஆண்டுகாலத்தில் இப்போது இது போன்ற ஒரு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருப்பது பிற்





போக்குத்தனமான அறிக்கை என்று சொன்னார்கள். அப்படியானால் இதற்கு முன்னாலே வந்த அறிக்கைகளை அவர் மறைமுகமாக வரவேற்கிறார் என்று எடுத்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மத்திய பட்ஜெட்டைப் பற்றி சொல்கிறபோது, பணக்காரர்களுக்கு வரிச்சலுகைகளைச் செய்து விட்டதாகவும் அல்லது ஏழை மக்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டதாகவும் கருத்து வருகிறது. இந்த நேரத்தில் பல்கிவாலா அவர்கள் கருத்து சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். மத்திய அரசு கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கை ஏழ்மைக்கும், நேர்மைக்கும், திறமைக்கும், சமூக நலத்திற்கும் ஏற்றதாக அமைந்திருக்கிறது என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை அந்த அளவிற்கு வரவேற்று இருக்கிறார்கள். தொழில் துறையில் பல்வேறு முன்னேற்றங்களைப் பெறுவதற்கு இந்தப் பட்ஜெட் ஊக்கம் தருவதாக அமைந்திருக்கிறது. நேர்மைக்கு ஊக்கம் தருவதாக அமைந்திருக்கிறது இந்த பட்ஜெட் என்று அவர்கள் சொல்லியிருப்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய 1985–86ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் 1102 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, ஏற்கனவே பட்ஜெட் பற்றாக்குறை 264 கோடி இருக்க மேலும் 100 கோடி ரூபாய்க்கு அடிஷனல் புரவிஷன் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 100 கோடி ரூபாய்க்கான வளர்ச்சித் திட்டங்கள் இருக்கிறதா, சமூக நலத்திட்டங்கள் எதுவும் இருக்கிறதா என்று பார்த்தால் 100 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் எதுவும் இல்லை. ஒருவேளை இந்த அரசாங்கம் நடப்பு நிதியாண்டில் இன்ப்ளேஷன் என்று சொல்லக்கூடிய பண வீக்கம் 10 சதவீதம் இருக்குமென்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்திருக்கிறார்களோ என்று நாங்கள் எண்ண வேண்டியிருக்கிறது. நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் விளக்கம் தருவார்கள் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக பணத்தை அடிப்படையாக வைத்துத்தான் திட்டங்கள் தீட்டுவதைப் பார்க்கிறேன். அதாவது பினான்ஷியல் பிளானிங். அந்த முறையில் இல்லாமல் பிஸ்கல் பிளானிங் என்ற முறையில் ஒரு மாற்றம் இருக்க வேண்டும். இந்த ஆண்டில் இவ்வளவு இலக்கை நாம் அடைகிறோம். இவ்வளவு மின்சாரம் பெறுகிறோம்: இத்தனை தொழிற்சாலைகள் மூலமாக இவ்வளவு உற்பத்தியைப் பெறுகிறோம் என்று இருக்குமானால் அது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். அது இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லையென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய அரசு ஒதுக்கப்பட்ட பல்வேறு இனங்களில் பணத்தை செலவழிக்காமல் இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தின்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஏப்ரல் 8

துணைத்தலைவர் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன், ரிப்போர்ட் ஆப் தி காம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் என்பதில் 1982—83ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் 45 இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் 240.60 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை என்ற கருத்தை அவர்கள் சொல்லி இருக்கிறார்கள், தொழு நோய் கட்டுப்படுத்த மத்திய அரசாங்கம் கொடுத்த 47 கோடியே 53 லட்சத்தில் 42.14 லட்சம் பயன்படுத்தாமல் திரும்ப கொடுக்கப்பட்டிருப்பதாக, சரண்டர் செய்யப்பட்டிருப்பதாக அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இதையெல்லாம்விட டானிடா புரா ஜக்ட்டிலே ஒதுக்கப்பட்ட 284.53 லட்சத்தில் 267.56 லட்சம் திரும்ப கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு இனங்களில் 'சர்வீஸ் ட்ரெயினிங் அண்ட் மேன் பவர் டெவலப்மெண்ட், என்பதில் டானிடாவில் அந்தப் பணம் திரும்பகொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மக்களுடைய வளவாழ்விற்கு அடிப்படையாக இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களில்கூட ஒதுக்கப்பட்ட நிதி 111.54 கோடியில் முழுமையாக அந்தப் பணம் திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியவில்லை, சென்னை, குடிநீர் வழங்கல் என்ற இனத்தில் 250 லட்சம் ரூபாய் ஒதுக்கியும் கூட அந்த 250 லட்சமும் திரும்ப கொடுக்கப்பட்டிருக்கிறது. மலேரியா தடுப்புத் திட்டத்திலே மத்திய அரசு கொடுத்த பணம் 38 லட்சம் ரூபாயில் 25.44 லட்சம் திரும்ப கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு இனங்களில் நம்முடைய அரசிற்கு மத்திய அரசு கொடுத்திருக்கிற பணத்தை செலவு செய்யாமல் திரும்ப கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் நம்முடைய மாநில மக்களின் வாழ்வு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு மாநில அரசின்பால் அக்கறை கொண்டு, தமிழக மக்கள்மீது அக்கறை கொண்டு ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களுக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு கொடுத்து வருகிறார்கள். அவைகளை முறையாக பயன்படுத்த வேண்டும். அவைகளை முறையாக செலவழிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மாநில சுயாட்சி பற்றி இந்த மாமன்றத்தில் பல்வேறு காலக்கட்டங்களில் நாம் பேசியிருக்கிறோம். மாநிலங்களின் அதிகாரங்களும், நிதியாதாரங்களும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதாகவும், மாநில அரசு மத்திய அரசினுடைய உதவிகளை பெறும் அளவிற்கு வாய்ப்பை எதிர்பார்க்க வேண்டிய அவசிய நிலை ஏற்படுகிறது என்றும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.



1985 ஏப்ரல் 8] [திரு. என். எஸ். வி. சித்தன்]

(நண்பகல் 12-00)

தன்னாட்சி உரிமைகளும், அதிகாரங்களும், நிதிப்பங்கீடுகளும் மாநிலங்களுக்கு விரைவில் அளிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அதிகாரங்களோடு நிதிப்பிரச்சனைப் போன்றவை இணைக்கப்பட்டது இன்று நேற்று அல்ல 30, 35 ஆண்டுகளுக்கு மேலாகிறது, என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். வளர்ந்து வரும் தேவைக்கேற்ப என்னஎன்ன அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுக்கலாம் என்பது பற்றி ஆராயத்தான் சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இதே அதிகாரத்தை வைத்துக்கொண்டுதான், காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது, தமிழ் நாட்டில் பல்வேறு சாதனைகளை எட்ட முடிந்தது. இன்றைக்குக் கூட காங்கிரஸ் ஆட்சி இருக்கிற பல மாநிலங்களில் பல சாதனைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் மத்திய அரசின் தயவை எதிர்பார்க்கிற நாம் உள்ளாட்சி மன்றங்களுக்கு கூடுதல் அதிகாரம் கொடுப்பது பற்றி 2, 3 நாட்களுக்கு முன்னால் இங்கே பேசியிருக்கிறோம். மத்திய அரசால் அமைக்கப்பட்டிருக்கிற சர்க்காரியா கமிஷன் மத்திய மாநில உறவு பற்றி மட்டுமல்ல, உள்ளாட்சிமன்ற நிதி வாயில்கள் பற்றியும் கருத்து கூறும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதுபற்றியும் பரிசீலிப்பதால் நிச்சயமாக நல்லமுறையில் நாட்டு மக்களுக்கு பலன் கிடைக்கும். உள்ளாட்சி மன்றங்கள் நல்லமுறையில் செயல்பட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளாட்சிமன்றங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிற அதே நேரத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் செப்டம்பர் மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே தேர்தலை மீண்டும் ஒத்திபோடுகின்ற நிலைமை இல்லாமல் செப்டம்பர் மாதத்தில் நிச்சயமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்தாமல் இனியும் ஒத்திப்போடுவது எந்த வகையிலும் நியாயம் இலலை. உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்தாத காரணத்தால் சட்டமன்றத்திற்கும் அரசுக்கும் அவப்பெயர் வருகிறது. பொதுத் தேர்தலை நடத்துவதற்கு முன்னால் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்தியிருந்தால் நம்முடைய அணி இன்னும் பல இடங்களில் வெற்றி பெற்றிருக்கும் என்பது எங்களுடைய கருத்து. எனவே, உள்ளாட்சித் தேர்தலை விரைவிலே நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

இலங்கைப் பிரச்சனைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சனைக்கு விரைவில் நன்முறையில் தீர்வு

காண மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்துவதன் மூலம் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்துவருகிறது என்று மிகப்பொறுப்போடு சொல்லியிருக்கிறார்க்ள். மத்திய அரசு தலையிட்டு இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிறுத்த முன்வரும் என்று மாநில அரசு நம்புகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அனைத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில் அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு எடுத்து வருகிறது என்று தெளிவாக சொல்லியிருக்கிறார்கள்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கு அளிக்கப்படும் இன்னல்கள் குறித்து பல்வேறு காலகட்டங்களில் எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கிறோம். தமிழர்களுக்கு எதிராக இலங்கை இராணுவத்தின் வெறிச்செயல் உள்ளபடியே சகித்துக்கொள்ள முடியாததாக இருக்கிறது, அவர்களுடைய வெறியாட்டத்தைக் கேட்டு நெஞ்சம் குமுறுகிறது; நாடி நரம்புகள் முறுக்கேறி வெடிக்கின்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்றால் அதை யாரும் அனுமதிக்க மாட்டார்கள். பாரதப் பிரதமர் அவர்களும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அனுமதிக்க மாட்டோம்; இப்படிப்பட்ட வெறியாட்டம் நிறுத்தப்பட வேண்டுமென்று Front line பத்திரிகைக்கு பேட்டியளிக்கும்போது கூறியிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்ற ஒரே கருத்தில்தான் அனைவரும் இருக்கிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நமக்கும் இதிலே சிறிது கருத்து வேறுபாடு இருக்கிறது. இந்தப் பிரச்சனையில் அக்கறை கொண்டிருக்கிற எதிர்க்கட்சிக்காரர்களுக்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற முறையில் நான் சொல்லவில்லை: இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நம்பூதிரிபாட் அவர்கள் கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறேன். நிலைமையை மேலும் மோசமாகச் செய்கின்ற கருத்துக்களை தெரிவிக்காமல் இருக்க வேண்டுமென்று தமிழ் நாட்டுக்காரர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள். தங்கள் கருத்துக்களை மத்திய அரசுக்கு எழுதி அனுப்பாமல் வெளியிலே சொல்வது சரியல்ல என்று இ.எம்.எஸ், நம்பூதிரிபாட் அவர்கள் திருச்சியில் தெரிவித்ததாக தினமணி பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

இலங்கையில் இருக்கிற தமிழர்கள் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும், தமிழர்கள் காக்கப்பட வேண்டும், அதை மத்திய அரசு செய்யும் என்று திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினரைக் கேட்டுக்கொள்வது நம்முடைய கருத்துக்கள், ஆலோசனைகள் இலங்கைத் தமிழர் நலனுக்குத் துணையாக இருக்க வேண்டுமே தவிர நம்முடைய பேச்சினால் அல்லல்படும் இலங்கைத் தமிழர்களுக்கு மேலும் பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான்.





இன்னொன்றையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி, இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை பற்றி பேசியிருக்கிறார்கள். அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும், இந்தியப் பிரதமர் அவர்களையும் ஏனைய மத்திய அமைச்சர்களையும் கலந்து பேச, தூதுக் குழுவாகச் செல்லயிருப்பதாக அறிகிறேன். ஆகவே, இந்த நேரத்தில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இதற்கு துணையாக இருந்து, முதலமைச்சர் கரத்தை வலுப்படுத்தி, மாநில அரசு தூதுக்குழுவில் பங்குபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கூட குறிப்பாகவும், சிறப்பாகவும், இந்த மன்றத்திலே தமிழகத்தினுடைய முதலமைச்சராகவும், 5, 6 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே இருந்தவரும், பிறகு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவருமான, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தக் குழுவிலே சேர்ந்து டெல்லிக்கு போகவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கேயிருந்து அவர்கள் கருத்துக்களைச் சொல்வதைவிட, இந்த தூதுக் குழுவிலே அங்கம் வகித்து டெல்லி போய்ச் சொல்வாரானால், உரிய இடத்திலே கருத்துக்களைச் சொல்வாரானால், அதற்கான பதில் கிடைக்கும்.
இன்னும் முனைப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதிலே நாம் எல்லோரும் ஒரே அணியிலே இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அங்கேபோய் பேசினால். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே இலங்கைப் பிரச்சனைக்கு ஏற்பட்ட நிலை பற்றியும், இன்றுள்ள நிலை பற்றியும் அவர்கள் எடுத்துச்சொல்வார்களானால், அங்கே பதில் கிடைக்கும். மத்திய அரசும் தக்க நடவடிக்கையை எடுத்துக்கொண்டு இருக்கிறது, ஆனால் எடுக்கின்ற நடவடிக்கைகளைச் சொல்ல முடியாது. ராஜ தந்திரம் என்ற முறையில் மத்திய அரசாங்கம் எந்த நடவடிக்கை எடுத்தாலும், அதைச் சொல்ல முடியாது, இந்தப் பிரச்சனையை மக்கள் முன்னாலே வைத்து, மக்கள் மத்தியிலே தங்களுடைய செல்வாக்கை அதிகரிக்கவேண்டும் என்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே தி.மு. கழகத்தை நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், அமைதிப் பூங்காவாக இருக்கின்ற தமிழகத்தை இந்தப் பிரச்சனையை முன்னாலே வைத்து, தயவுசெய்து அமளிக்காடாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக்சொள்கிறேன். மாணவர்களைத் தூண்டி விடுவதும் பிரிவினை உணர்ச்சி மனப்பான்மையை மறைவாகச் சுட்டுவதும் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு ஆகாது. எனவே அந்த வழியிலே தி.மு.கழகம் செல்லவேண்டாம் என்று சொல்லி, மத்திய அரசும், மாநில அரசும் எடுக்கின்ற முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய மாநில அரசுகள் இந்தப் பிரச்சனையில் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றுதான் மக்கள் தீர்ப்பளித்து இருக்கிறார்கள். தமிழகத்திலே அண்மையில் தடைபெற்ற தேர்தலிலே

தாங்கள் போட்டியிட்ட அணியில், அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம், 133 இடங்களையும், இந்திய தேசிய காங்கிரஸ் 63 இடங்களையும், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் 2 இடங்களையும் பெற்று இருக்கிறது. ஆகவே 234 இடங்களில் இந்த அணியினர் 198 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த அரசும், மத்திய அரசும் இலங்கைத் தமிழர் பிரச்சனையிலே உரிய நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையில்தான் வாக்களித்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். தி.மு.சழகம் இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய நிதிநிலை அறிக்கையில் எனக்கு இருக்கிற வருத்தம் 62 பக்கங்களுக்கு மேலாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே படித்திருக்கிறார்கள். தன்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு பக்கத்திலேகூட வறட்சியைப் பற்றிச் சொல்லவில்லை என்பது எனக்கு ஆதங்கமாக இருக்கிறது. ஆனால் அவர்கள் வறட்சியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், எந்த இடத்திலே தெரியுமா? ‘1984—85ஆம் ஆண்டிலே தென்மேற்கு பருவமழை போதுமான அளவில் பெய்தபோதிலும், வடகிழக்கு பருவ மழை போதிய அளவில் இல்லை, எனினும் பல இடர்பாடுகள் இருந்தபோதிலும்..’ என்று சொல்லிவிட்டு, வேளாண்மைப் பெருக்கத்திற்கு நான் இன்னும் போதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, இந்த அரசாங்கம் வறட்சியைப்பற்றி குறிப்பிடவில்லை என்பதை நான் சொல்லியாக வேண்டும். இன்றைக்கு தமிழகம் கடுமையாக வறட்சியை எதிர்நோக்கி இருக்கிறது. என்றால் குடிநீர் பஞ்சம் தானாக வந்துவிடுகிறது. குடிநீர் பற்றாக்குறை இப்போதே மோசமாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னாலே, இந்த மன்றத்திலே ஆளுநர் உரைக்குப் பின்னாலே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். இப்போவே மோசமாக இருக்கிறது என்று சொன்னால், வருகின்ற காலங்களில் இன்னும் கடுமையாக இருக்கும். காரணம் கோடைக்காலமாக இருப்பதால், எனவே குடிநீர்ப் பிரச்சனை இன்னும் மிக மோசமாக இருக்கும், நான் இன்னும் சொல்வேன். கைப்பம்புகளைப் போட்டு இருக்கிறார்கள் ஊராட்சி ஒன்றியங்களில். ஒரு ஒன்றியத்திலே சணக்கு எடுக்கச்சொன்னோம். மொத்தம் இருக்கின்ற கைப்பம்புகளிலே பாதிக்குமேலே பழுதடைந்து இருக்கின்றன. இந்த அரசாங்கத்திற்கு வருகின்ற கணக்குகள் தவறான கணக்குகள். ஆகவே இப்போது நிலைமை மோசமாக இருப்பதால், வருகின்ற காலங்களில் குடிநீர் பிரச்னை சமாளிக்கின்ற வகையில், இப்போது இருக்கின்ற கைப்பம்புகளை விசைப்பம்புகளை சீர் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேநேரத்தில் ஆண்டுக்காண்டு வறட்சி வந்து கொண்டு இருக்கிறது. தமிழகத்திலே ஏதாவது ஒரு மாவட்டத்திலே வந்துகொண்டு இருக்கிறது. வெள்ளம் வருகிறதோ, இல்லையோ வறட்சி வந்துகொண்டு இருக்கிறது. அப்படி என்று சொன்னால், ‘‘மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்’’ என்று சொல்வார்கள், அதைப்போல, இதற்காக ஒரு பேஸ்டு புரோகிராம் என்ற வகையில் ஏன் திட்டம் தீட்டக்கூடாது என்று நான் கேட்கிறேன். நேச்சுரல் கலாமிட்டிஸ்க்கு ஒரு ஹைபவர் கமிட்டி போட்டு ஒரு நிரந்தரமான தீர்வுகாண்கின்ற வகையில்: ஒரு தொலைதூர நோக்கத்தில், ஏன் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற வினாவை என்னால் எழுப்பாமல் இருக்க முடியவில்லை. அந்த முறையில் இந்த அரசாங்கம் செயல்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

குடிநீர் வடிகால் வாரியத்திலே இந்த ஆழ்துளைக் கிணறுகளைக் போடக்கூடிய ரிக்குள் இருக்கின்றன. போதுமான அளவிற்கு இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆனால் அந்த ரிக்குகள் எல்லாம் சரியாக பராமரிக்கப் படாமல் இருக்கின்ற காரணத்தால், அவைகள் ஆண்டுதோறும் பயன்படுத்தப் முடியவில்லை. எனவே வறட்சி வருகின்ற காலத்திலே தனியார்களுக்கு இந்த ஆழ்குழாய்களைப் போடுகின்ற அந்த உரிமை பொறுப்பு வழங்கப்படுகிறது, என்று கேள்விப்படுகிறேன். அந்த மாதிரி இல்லாமல், நம்முடைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே, தேவைப்படுமானால், ரிக்குகளை சரியான முறையில் வாங்கி, ஆண்டுதோறும் அந்தப் பணியைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு வாரியத்தின் நிர்வாக இயக்குநர் பொறியாளராக இல்லை எ றும், தனியார் நிறுவனங்களில் பணம் கொடுத்து ஆலோசனைகளைப் பெறுவதாகச் சொல்கிறார்கள். உதாரணமாக கிரிலோஸ்கர் கன்சல்டன்சி, பர்கூசான் கன்சல்டன்சி, டாடா கன்சல்டன்சி என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

ஒரு தனிப்பட்ட நிறுவனத்திற்கு பல லட்சம் ரூபாயை கொடுத்து நாம் ஆலோசனைகளை வாங்குவோமேயானால், அவர்கள் அவர்களுடைய நிறுவனத்தில் தயாராகிற கருவிகளை பயன்படுத்துவதற்குத்தான் ஆலோசனைகளை சொல்வார்கள். ஆகவே இந்த அரசாங்கம் அதை எண்ணிப் பார்த்து வருங்காலத்தில் அதைத் தடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் இன்னும் ஒன்றைக் கேள்விப் படுகிறேன். வாரியம் தோன்றியது முதல் இன்று வரை, ஆயுள் காப்பீட்டுக் கழகம்—அது இந்திய பேரரசின் நிறுவனம்—யூனிசெப், டேனிடா போன்ற தமிழக அரசின் நிறுவனங்களுக்கு உரிய கணக்குகளே இல்லையாம், கையிருப்புப் பொருள்களுக்கு உரிய சேமிப்பு கிடங்குகள் இல்லை என்றும், இருப்பு கணக்குகளும் சரியாக இல்லை என்றும் அவர்கள்

சொல்லுகிறார்கள். 1984-85 ஆம் ஆண்டின் குறியீட்டிலே 25 சதவீதத்தைக் கூட எட்ட முடியவில்லை என்றும் எனக்கு தகவல்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்பார் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக மின் உற்பத்தியை பொறுத்த அளவிலே தமிழகம் இன்றைக்கும் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. 1967-க்கு முன்னாலே மின் உற்பத்தியிலே இருந்த தீவிரம் குறைக்கப்பட்ட காரணத்தாலேயும், தகுந்த நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலேயும் தமிழகம் மின் உற்பத்தியில் இந்த நிலையில் இருக்கிறது. ஆனால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதி அறிக்கையிலே சொல்கிற நோத்திலே 1985–86 ஆம் ஆண்டிலே நிதி ஒதுக்கீட்டில், 237 கோடியிலிருந்து 326 கோடியாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றியும் நான் கேள்விபட்ட ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், நம்முடைய மின்சார வாரியத்திற்கு அதன் திட்டங்களுக்சாக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக, அண்மைக் காலத்திலே செலவிடப்படவில்லை என்று.

1983-84 ஆம் ஆண்டு பைனல் மாடிஃபைடு அப்பிரோப்பிரியேஷனிலேக் கூட சில விவரங்களை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அது சரியில்லை என்றால், தெரிவிப்பார்களேயானால், அல்லது அதற்கு விளக்கம் கொடுப்பார்களேயானால், நான் ஏற்றுக்கொள்கிறேன். அதிலே காடம்பாறை நீர்த்தேக்கத் திட்டத்திற்காக 28 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அது செலவிடும்போது 17½ கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். குந்தா மின் திட்டத்தில் கூட 2 கோடியே 83 லட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, வெறும் 83 லட்சத்து 98 ஆயிரமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பார்ஸன் ஸ்கீம் மின் திட்டத்தில் கூட 2 கோடி ரூபாய் ஒதுக்கியதில் வெறும் 5 ஆயிரம் தான் செலவிடப்பட்டது என்று சொல்லுகிறார்கள். மைக்ரோ அலைகளைத் தயாரிக்கும், பைகாரா மற்றும் லோயர் பவானி திட்டத்திற்கென்று, 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அதிலே வெறும் 40 ஆயிரம்தான் செலவழிக்கப்பட்டதாக எனக்கு விவரங்கள் வந்திருக்கின்றன.

இதுபோன்று பல்வேறு இடங்களிலே இன்னும் குறிப்பாக மேட்டூர் தெர்மல் ஸ்கீம் கூட 38 கோடி ரூபாயை ஒதுக்கி அதில் 32 கோடி ரூபாயைத்தான் செலவழித்திருக்கிறது என்றும்; அது போல மேட்டூர் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம், கேஸ் டர்பைன் போன்ற பணிகளுக்கு 18 கோடி ரூபாயை ஒதுக்கி, 74 ஆயிரம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது என்கிற அளவுக்கு விவரங்களை எனக்கு கொடுத்திருக்கிறார்கள். இன்வெஸ்டிகேஷன் மற்றும் ரிசர்ச் என்று சொல்லப்படுகிற அதிலே கூட 1 கோடியே 63 லட்சம் ரூபாய்



ஒதுக்கப்பட்டு, ஒரு கோடி ரூபாயைத்தான் செலவிட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆக 224 கோடி ஒதுக்கியதில் 145 கோடி ரூபாய்தான் இந்த இனங்களுக்காக செலவிடப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் எனக்கு வந்திருக்கின்றன....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பொதுவாக நிதி பற்றாக்குறை. அதனால்தான் அந்த திட்டங்களுக்கு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருக்கிற நிதியை வைத்து, நமக்கு ஏராளமாக மின் உற்பத்தி தரக்கூடிய ஒரு திட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்கிற அளவிலே மேட்டூர் புனல் மின் திட்டத்திற்கு, அவ்வளவு நிதியும் ஒதுக்கப்பட்டு அந்த திட்டத்தில் செலவிடப்பட்டு வருகிறது. சான்றாக காடம்பாரை நீரேற்று மின் திட்டம் செயல்படுத்தப்படுவதன் மூலமாக நமக்கு மின் உற்பத்தி ஒன்றும் வராது. இந்த பீக் அவர்ஸுக்கு வேண்டுமானால் பயன்படுத்தலாமே தவிர, அவெய்லபிலிட்டி வராது. ஆகவே இருந்த நிதியை வைத்து மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு, குறிப்பிடத்தக்க அளவிற்கு செலவு செய்திருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பற்றாக்குறையை வைத்து, இந்த இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு இனத்திற்கு, அதாவது மேட்டூர் தெர்மல் ஸ்டேஷனுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மின்சாரத்திற்கு பற்றாக்குறை இருக்கிற நேரத்திலே, அரசாங்கம் வேறு இனங்களிலிருந்தாவது எடுத்து இதற்கு ஒதுக்கியிருக்க வேண்டுமே தவிர, பணப்பற்றாக் குறையை காரணம் காட்டி, அதை வேறு இடத்திற்கு ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வது சரியா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே நிதி வேண்டுமானால் வேறு இடத்திலேயிருந்து அதிகமாக எடுத்திருக்க வேண்டும். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் நாங்கள் ஒதுக்கியது இவ்வளவுதான், ஆனால் தமிழகத்திலே மின்சாரத்தை அதிகப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தை கருத்திலே கொண்டு இத்தனை கோடி ரூபாயை அதிகமாகச் செலவழித்திருக்கிறோம் என்று சொல்லியிருப்பார்களேயானால், அவர்களை நான் பாராட்டுவேன். என்னுடைய ஆதங்கம் எல்லாம் ஒதுக்கப்பட்ட நிதிகளும் குறைக்கப்பட்டிருக்கிறது. முழுமையாக அவைகள் அந்த திட்டங்களுக்கு செலவிடப்படவில்லை என்பது தான்.

அந்த முறையிலே பார்க்கிறபோது, வருகிற காலத்தில் அதிகமாக நிதியை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பெரும் தலைவர் காமராசர் தமிழக முதலமைச்சராக இருந்த காலத்திலே தனியார்களுக்கு மின்சாரம் தயாரிக்கும் அனுமதியைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை, தம்முடைய கருத்திலே கொண்டிருந்தார்கள். சர்வதேச தொழிலதிபராக இருந்த திரு. ஏ. ஆர். முதலியார் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்து அதன் மூலமாக உற்பத்தி

செய்கிற மின்சாரத்திலே 75 சதவீதம் தனியார்களுக்கும், 25 சதவீதம் அரசுக்கும் கொடுக்க வேண்டுமென்ற அளவிலேயும், அந்த திட்டங்களை அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழ், கண்டிரோலின் கீழ் செய்யவேண்டுமென்றும் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டதாக நான் அறிகிறேன்.

அது காலாகாலத்தில் செயல்படுத்தப்பட்டிருக்குமேயானால் இன்றைக்கு தமிழகத்தில் இந்த அளவுக்கு மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்காது என்று நான் சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்தில் மின் வாரியத்திற்கு வரியாக, மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து 8 கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள், இன்றைக்கு அந்த 8 கோடி ரூபாயும் 11 கோடி ரூபாயாக, வட்டி வரி எல்லாம் சேர்ந்து வந்திருக்கும். இவ்வளவு ரூபாயை இன்னமும் அரசாங்கம் பாக்கியாக வைத்திருப்பது முறையாக இல்லை. நாம் சாதாரண விவசாயப் பெரு மக்களை, நடுத்தர மக்களை எல்லாம் வருத்தி வரி வசூலிக்கக்கூடிய நேரத்தில் இவ்வளவு கோடி ரூபாயை விட்டு வைத்திருப்பது முறையாக இருக்காது. அதை பலமுறை நானே இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன். அரசாங்கம் அந்த பாக்கியை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களை பொறுத்தளவிலே எதிர்காலத் திட்டங்களை மனதிலே கொண்டு தொலைதூர நோக்கோடு திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. நம்முடைய நிதி அமைச்சர் தன்னுடைய அறிக்கையிலே தொழிலைப்பற்றி சொல்லுகின்ற நேரத்திலே ரூ. 108 கோடி செலவிலே 300 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அடிப்படையில் லைனியர் ஆல்கையல் பென்ஜின் என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும், ரூ. 20.85 கோடி 540 பேர்களுக்கு நிட்ரோ கிளைசிரின் கொண்ட வெடி மருந்து தயாரிக்கும் திட்டம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் எண்ணிப் பார்க்கிறேன். ஏறக்குறைய ரூ. 130 கோடி செலவில் 840 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற திட்டங்கள்தான் சொல்ல முடிகிறது. இதே பணத்தை செலவழித்து தொழிலைப் பெருக்குகின்ற, தொழில் வளர்ச்சி அடைகின்ற பல திட்டங்களை அரசாங்கம் உருவாக்கலாமே. நம்முடைய திட்டங்கள் கூட்டுத் துறையிலே தயாரிக்கப்படுகின்ற திட்டங்கள். நாம் பாதி அவர்கள் பாதி. பணம் நாம் பாதி போடுகிறோம். நிர்வாகம் அவர்கள் கையிலே இருக்கும். நிர்வாகத்தை அவர்கள் கையிலே கொடுத்தால் அவர்கள் லாபமா காட்டப் போகிறார்கள். அவர்களிடம் அத்தனை கண்ட்ரோலும் இருக்கும். ஆக வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட புதியத் திட்டங்களைத் துவங்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய தொழில் அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு





மத்திய அரசாங்கத்திடம் நல்ல உறவு இருப்பதாகச் சொல்கிறார்கள். இனிமேலாவது தொழில் துறையில் அதிகமாக அக்கரை காட்டுகின்ற விதத்தில் நல்ல திட்டங்களை நாட்டு மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையில் புதியத் திட்டங்கள் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். 42 ஆம் பக்கத்திலே நிதியமைச்சர் சொல்கிறார்கள். அரசு ரப்பர் மேம்பாட்டுக் கழகம் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் அமைக்கப்பட்டது. மூன்று மாத காலத்திற்குள் 2 கோடி ரூபாய் லாபம் ஈட்டப்பட்டதாகச் சொல்கிறார். இந்த நிறுவனம் ரப்பரை உற்பத்தி செய்து விற்கின்றது. பல காலங்களில் இந்தப் பக்கத்திலே இருந்து அல்ல, அந்தப் பக்கத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். குமரி மாவட்டத்தில்தான் ரப்பர் விளைகின்ற காரணத்தினால் பெரிய தொழிற்சாலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று. ஒரு தொழிற்சாலையும் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டதாக அறிகிறேன். உற்பத்தி தொடங்கியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 4,785 எக்டேரில் இந்த ஆண்டிலே ரப்பர் தொழிலுக்கு அரசாங்கம் கையகப்படுத்தியதாகச் சொல்கிறார்கள். குமரி மாவட்டத்தில் ரப்பரை அடிபபடையாகக் கொண்டு புதிய பல திட்டங்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். அரசுத் துறையிலே அரசுக்குச் சொந்தமான காடுகளிலிருந்து வருகின்ற ரப்பரை எல்லாம், அரசு தொழிற்சாலை ஏற்று தமிழகத்தின் வளர்ச்சியை பெருக்குகின்ற முயற்சியை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

சமையல் எண்ணெயினுடைய வரிப் பிரச்சனையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். இது எல்லாத் தரப்பிலும் பயன்படுத்துகின்ற எடிபில் ஆயில் என்று இருப்பதால் தமிழகத்திலே பலமுனை வரி வீதத்தில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் மஸ்டர் ஆயிலுக்கு வரி இல்லை. இங்கு 10% வரி என்று சொல்வது, லக்சுரி கூட்ஸ்—பணக்காரர்கள் உபயோகிக்கின்ற விலை உயர்ந்த பொருள்களுக்குப் போடப்படுகின்ற வரியைப் போல் இந்த பல முனை வரி இருக்கிறது. இது சில்லரை வியாபாரிகளுக்கும், உபயோகப்படுத்துகின்றவர்களுக்கும் தொல்லையாக இருப்பதால் அரசாங்கம் இந்த வரியை ரத்துச் செய்வது பொறுத்தமாக இருக்கும். 1–10–84 ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்படும், இறால், நண்டு, தவளை போன்ற பொருள்களுக்கு அரசாங்கம் கொள்முதல் வரி விதித்து இருக்கிறது. மத்திய அரசாங்கமே 1–4–76-ம் ஆண்டு முதல் வரி விலக்கு அளித்த வேளையிலே, உலக சந்தையிலே நமது மீனவர்கள் போட்டி போடுகின்ற அளவுக்கு போட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது 5% பல முனை வரி வெல்லத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிறது. வெல்லத்தைப் பற்றி சொல்ல வேண்டுமானால் ஒரு பெரிய சரித்திரத்தையே சொல்லவேண்டி

இருக்கிறது. இந்த வெல்லம் மட்டும் எந்த அரசாங்கம் ஆட்சியிலே இருந்தாலும் கூட அவர்கள் பார்வையிலிருந்து தப்புவது இல்லை. வரி விலக்கு, வருகிறது. ஒரு முனை வரி வருகிறது, வரி உயர்த்தப்படுகிறது. பல முனை வரியாக உயர்த்தப்படுகிறது. இது நம்முடைய தமிழகத்தில் ஒரு குடிசைத் தொழிலாக இருக்கின்ற ஒன்று. முதன் முதலாக 1956 ஆம் ஆண்டு இதற்கு வரி விதிக்கப்பட்டது. பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது 1958 ஆம் ஆண்டு இதற்கு பூரண வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள்.

1-1-68 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு பல முனை வரியிலே கொண்டுவரப்பட்டது. 18-10-69-ல் 5% ஒரு முனை வரியாக மீண்டும் மாற்றப்பட்டது. 18-8-77-ல் மீண்டும் 3% பல முனை வரியாக மாற்றப்பட்டிருக்கிறது. 2-5-82-லே 5% பல முனை வரியாக உயர்த்தப்பட்டு இருப்பதால் வெல்லம் அழுகும் பொருளாக இருப்பதால் 15 நாட்களுக்குள் அது கெட்டுப் போகக்கூடிய காரணத்தினாலே இந்த பல முனை வரியினை அரசாங்கம் ஒரு முனை வரியாக மாற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

நாட்டிலே உற்பத்தியாகிற மொத்த வெல்லத்திலே 40% உ.பி.யிலே உற்பத்தியாகிறது. அங்கே அதற்கு வரி கிடையாது. மராட்டியத்திலே 14% உற்பத்தியாகிறது, அங்கே அதற்கு வரியில்லை, மேற்கு வங்கம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலே அதற்கு வரியில்லை. கர்நாடகத்திலே அதற்கு 2% தான் வரி, ஆந்திரத்திலே 2% வரி, ஆனால் தமிழகத்திலே தான் அதற்கு 5% வரியாக இருக்கிறது. சாதாரண மக்கள் பயன்படுத்துகிற இதனுடைய விலையேற்றத்தின் காரணமாக அவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. பலமுனையாக்கப்பட்டவற்றிற்கு வரி குறைந்து இருக்கிறது. எனவே, பரீட்சார்த்தமாக ஒரு ஆண்டிற்கு, இதற்கு ஒருமுனை வரியாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரி மாநிலத்திலே பலமுனை வரிகளை வணிகர்களுக்கு ஒழிக்கப்பட்டு ஒருமுனை வரியாக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கமும் பல முனை வரிகளை ஒழித்துவிட்டு ஒருமுனை வரியாக்கவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கிறது. ஆகவே பல பொருட்களுக்கு பலமுனை வரிகளை எடுத்துவிட்டு ஒருமுனை வரியாக விதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு விஷயத்தை நான் சொல்லாமல் இருக்க முடியாது. சென்னையிலே குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. காங்கிரஸ் கட்சிக்காரர்களின் கொள்கை குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற வகையிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.





குதிரைப் பந்தயத்திலே பல்வேறு மோசடிகள் நடைபெறுகின்றன. பல கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வந்தும்கூட அந்த கிளப் நட்டத்தில் ஓடுகிறது என்று சொல்கிறார்கள். அந்த வருமானத்திலிருந்து அரசாங்கத்திற்கு ஒரு அம்மன் காசுகூட வருவது கிடையாது. அன்றைய தினம் பேசிய காந்தி காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள். பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்திலே 3 லட்ச ரூபாய் வரி போடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் தமிழகத்திலே வரியே கிடையாது. குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய லட்சியம். ஆனால் அதுவரையில் அதற்கு ஒரு தடங்கல் இருக்கிறபோது அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பணத்தை அங்கே இருக்கிறவர்கள் கூட்டாகப் பங்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். எந்தத் தகுதியும் இல்லாத ஒரு அதிகாரிக்கு அங்கே 2½ லட்ச ரூபாய் சம்பளம் தரப்படுகிறது என்றால்—எனக்குத் தெரிந்த வரையில் இந்தியக் குடியரசுத் தலைவருக்குக்கூட அவ்வளவு சம்பளம் இல்லை—அங்கேயுள்ள பெரிய அதிகாரிகள் 4, 5 பேர்களுக்கு 1 லட்சம் ரூபாய் என்று சம்பளம் தருகிற நிலைமை இருக்கிறது. இந்தியாவிலே உள்ள எந்தப் பகுதியிலாவது ரேஸ் நடந்தாலும்கூட அங்கே இருக்கிறவர்களுக்கு படி கிடைக்கிறது. பள்ளிக்கூடம் கூட அந்த அளவுக்கு நாட்கள் நடப்பதில்லை, வருடத்திற்கு 250 நாட்கள் அவர்களுக்குப் படி கொடுக்கப்படுகிறது. குதிரைப் பந்தயத்திலே மோசடிகள் நடைபெறுகின்றன. ஆகவே அரசாங்கம் ஒரு குழுவை அமைத்து சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவாக இருந்தாலும் பரவாயில்லை, அங்கே என்ன நடக்கிறது என்பதை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை கொடுக்குமாறு செய்யவேண்டும். ஆகவே ஏதாவது ஒரு அறிவிப்பை நிதியமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அண்மையில் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இந்தியாவிலேயே மகத்தான சாதனை புரிந்தவர்களில் ஒருவர் எம். ஏ. எம். ராமசாமி செட்டியார். அவரைப்பற்றி ஒரு வெள்ளைக்கார ஜாக்கி ஏதோ அவதூறாக, மரியாதைக் குறைவாகப் பேசிவிட்டார் என்றும் அதுபற்றி ரேஸ் கிளப் மன்னித்து விட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. உலகத்திலே உள்ள கின்னஸ் புத்தகத்திலே இந்தியாவைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றவர்கள் இரண்டே இரண்டு பேர்கள்தான், ஒருவர் கவாஸ்கர், இன்னொருவர் எம்.ஏ.எம். ராமசாமி செட்டியார், பெரிய சாதனையை அவர் நிகழ்த்தியிருக்கிறார். தமிழ் மண்ணில் பிறந்த ஒரு தமிழனை வெள்ளையன் அவதூறாகப் பேசியிருக்கிறான் என்றால் மன்னித்துவிடுவது மட்டும் போதாது, அரசாங்கம் அதைப் பற்றி அவர்களிடம் ஒரு அறிக்கை கேட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அரசாங்கம் ரேஸ் கிளப் கொடுத்த தகவலைப் பெற்று நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு வேதனையான செய்தியையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். கிராமிய கூட்டுறவுச் சங்கம் ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு 4,500 ரூபாய் கொடுக்கிறது. 1,000 ரூபாய் மானியமாகவும், 3,500 ரூபாய் வட்டியில்லாத கடனாகவும் கொடுக்கிறது 1978ஆம் ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. தேர்தல் நேரத்திலே நான் கிராமப்புறங்களிலே சென்றபோதுகூட இந்தத் திட்டத்தைப் பார்த்து நல்ல திட்டம் என்று புகழ்ந்து விட்டு வந்தேன். கிராம மக்களுக்கு அது நல்ல வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. ஆனால் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களிலே மதுரை மாவட்டத்திலே 3 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டு அவர்கள் சங்கத்திற்குப் பத்திரங்கள் எல்லாம் பதிந்து கொடுத்து கடன்பெறுகிற சூழ்நிலையில் அரசாங்கம் கடன் தர இயலாது என்று அறிவித்து இருக்கிறது, என்று எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். 200 ரூபாய் அளவுக்கு அந்த ஏழை ஆதிதிராவிடர்கள் செலவழித்து பிறகு கடன் இல்லை என்று சொன்னால் எப்படி அது சரியாக இருக்கும் என்று தெரியவில்லை. தமிழகம் முழுவதும் இதைப் போல 25 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த 25 ஆயிரம் பேருக்கு உடனடியாக கடன் வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும். அதைப்போல இந்தத் திட்டம் தொடர்ந்த திட்டமாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கிராமப் புறத்தில் இருக்கிறவர்களுக்கு இது நல்ல வரப்பிரசாதமாக இருக்கின்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து செயலாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குடும்ப நலத் திட்டத்திலே அறுவை சிகிச்சையிலே தமிழகம் முதலிடத்தில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். ஆனால் இந்த அறுவை சிகிச்சையைப் பொறுத்த வரையில் வேறு மாநிலங்களில் இல்லாத ஒரு நிலை தமிழகத்தில் பின்பற்றப்படுகிறது. உள்ளாட்சி மன்றங்களில் இருக்கிற அலுவலர்களை பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிற ஸ்டாப்புகள் தான் இந்த அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடிக்கின்ற முறை தமிழகத்தில் மட்டும்தான் இருப்பதாக நான் கேள்விப் படுகிறேன். வேறு மாநிலங்களில் இந்த மாதிரி இல்லை. உள்ளாட்சித் துறையில் இருக்கின்ற அலுவலர்கள் கிராம வளர்ச்சியில் அக்கறை செலுத்துவதை விட்டுவிட்டு அந்த பணியில் இருக்கிறவர்களை எங்கே போய் இருக்கிறார்கள் என்று கேட்டால் குடும்ப கட்டுப் பாட்டுக்கு அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடிக்கப் போய் இருக்கிறார்கள் என்று சொல்லும் நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இந்த அளவில் அவர்கள் மன நிம்மதி அற்ற நிலையில் அவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிற காரணத்தால் பல பொது நலப்பணிகள் இன்றைக்கு முடங்கியிருக்கின்றன. ஆகவே, நான் இன்றைக்கு கேட்டுக் கொள்கிறேன், இந்த அறுவை சிகிச்சையில் தமிழகம் முன்னணியில் இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த துறையில் இருப்பவர்கள் அந்தப் பணியைச்





செய்ய வேண்டுமே தவிர வேறு துறையில் இருப்பவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தச் செய்வது என்ற முறையை அரசாங்கம் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

மதுரை மாவட்டத்தில் பிறமலைக் கள்ளர் என்ற ஒரு சமுதாயம் இருக்கின்றது. வெள்ளைக்காரன் ஆட்சியில் இருந்த காலத்தில் அந்த சமுதாயத்தில் பிறந்தவர்கள் எல்லாம் வயது வந்த ஆண்கள் எல்லாம் இரவு நேரம் வந்தால் போலீஸ் ஸ்டேஷனில் போய் படுக்க வேண்டும். வீட்டில் இருக்கக் கூடாது. புதியதாக திருமணம் செய்து கொண்டாலும் சரி, திருமண வயதில் இருந்தாலும் சரி அவர்கள் அங்கே போய் படுத்துக் கொள்ள வேண்டும். அப்படி ஒரு அநாகரீகமான சட்டம் வெள்ளைக்காரன் காலத்தில் இருந்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததற்கு பின்னால்தான் அந்தச் சட்டம் எடுக்கப்பட்டது. கை ரேகைச் சட்டம் என்று சொல்லுவார்கள். அதை குற்றப் பரம்பரையில் பிரிக்கப்பட்ட சமுதாயம் என்பார்கள். அதற்குப் பின்னால் வந்த அரசுகள் இந்த பிறமலைக் கள்ளர்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு சீரமைப்புத் திட்டங்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக அந்த பிறமலைக்கள்ளர் சீரமைப்புத் திட்டம் இன்றைக்கு தேய்ந்து கொண்டே இருக்கிறது. அந்த சமுதாய முன்னேற்றத்திற்கு மாடு வாங்க, ஆடு வாங்க, பம்புசெட்டு வாங்க, கிணறு வெட்ட, வீடு கட்ட போன்ற பல நல்ல திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு அதற்கான நிதி ஒதுக்கப்படாமல் வெறும் அதிகாரிகள் மட்டும் இருந்துக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அரசாங்கம் இந்த சமுதாய முன்னேற்றத்திற்கு இதுபோன்ற வேறு சமுதாயம் இருக்குமானால் அந்த சமுதாயங்களின் முன்னேற்றத்திற்கும் நிதியை தாராளமாக வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தேசீய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் நமக்கு நிதி கொடுக்கிறது. அந்த நிதியை நாம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக செலவழித்துக்கொண்டு வருகிறோம். பல இனங்களில். ஆனால் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மரம் வளர்ப்பதற்கு பணம் ஒதுக்குகிறோம். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு தேசீயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 10 அல்லது 15 லட்சம் ரூபாய் ஒதுக்குகிறோம் என்று சொன்னால் 10 சதவீதம் மரம் வைப்பதற்கு செடி வளர்ப்பதற்கு நம்முடைய அரசு ஒதுக்குகிறது. ஆனால் அப்படி ஒதுக்குகிற பணம் முறையாக செலவிடுகிறதா என்று பார்க்க வேண்டும். நாட்டில் எத்தனை லட்சம் மரங்கள் இன்றைக்கு நிழல் தருகின்றன அல்லது பயன்படுகின்றன என்று பார்த்தால் அந்த கணக்கு நமக்கு உற்சாகம் ஊட்டுவதாக இருக்காது என்று கருதுகிறேன். ஒரு திட்டத்திலே ஆண்டு ஒன்றுக்கு 10 அல்லது 15 லட்சம் செடிகள் நட வேண்டும். 7, 8 ஆண்டுகள் என்று சொன்னால் பல கோடிக் கணக்கான, பல லட்சக் கணக்கான மரங்கள் இன்றைக்கு

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஏப்ரல் 8

வளர்ந்து இருக்க வேண்டும். அதிலே ஒரு செடிக்கு கிட்டத்தட்ட 15 ரூபாய் என்று செலவிடப்படுகிறது. ஆனால் இந்தப் பணம் பெரும்பாலும் தவறானவைகளுக்கு, அல்லது ஊழல்கள் செய்வதற்கு துணையாக இருக்கிறதே தவிர இந்த இனத்திற்கு பயன் பட்டதாக தெரியவில்லை. ஆகவே அந்த இனத்திற்கு முறையாக செம்மையாக செயல் படுத்த வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அலுவலர்களைப் பொறுத்தவரையில், தமிழக அரசில் பல ஆண்டு காலமாக பதவி உயர்வு இல்லாமல் இருந்து கொண்டு இருக்கிறார்கள். பல துறைகளிலே பல அதிகாரிகளை நாம் சொல்லமுடியும். 20 ஆண்டு 25 ஆண்டு காலம் ஒரே பணியில் இருக்கின்ற காரணத்தால் பதவி உயர்வு இல்லாமல் இருக்கிற காரணத்தால் இன்றைக்கு அலுவலர்கள் மத்தியிலே இருக்கின்ற மன சோர்வு சஞ்சலத்தை நான் சொல்லியாகவேண்டும். அரசு நல்ல திட்டங்களை வகுத்து அவர்கள் பதவி உயர்வதற்கான பல வளர்ச்சித் திட்டங்களை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இன்னொரு கொடுமை பதவி இறக்கம், மத்திய அரசிலே கூட அந்த பழக்கம் இல்லை. தமிழ் நாடு அரசிலே ஒருவரை ஒரு பதவிக்கு உயர்த்தி ஆனால் சில வாரங்களில் சில மாதங்களில் பதவி இறக்கம் செய்வது இது கொடுமையான பழக்கம். 20, 25 ஆண்டு காலம் காத்து இருந்து பதவி உயர்வு கிடைத்து மீண்டும் பதவி இறக்கம் செய்கிற முறை கொடுமையான பழக்கம். ஒரு முறை பதவி உயர்வு ஒருவர் பெற்று விடுவார்களானால் என்ன காரணத்தாலும் அவருக்கு பதவி இறக்கம் இருக்கக்கூடாது என்கிற அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசு தேர்தல் அறிக்கையிலே அரசு அலுவலர்களுக்கு புரபஷனல் டாக்ஸ் திரும்பப் பெறப்படும் என்ற ஒரு இனம் சேர்க்கப்பட்டதாக நான் அறிகிறேன். ஆனால் இதை இந்த நிதிநிலை அறிக்கையில் அந்த புரபசனல் டாக்ஸ் ரத்து செய்வதற்கான அறிவிப்பு இல்லை. அதுபோல் அரசு ஊழியர்களுக்கு லீவ் டிராவல் கன்செஷன் அதில் ஒரு பயணத்திற்கு இருக்கிறது. போய் வருவதற்கு பயணச் சலுகை அதில் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்து, மதுரை மாவட்டத்திலே பாண்டிய ராஜபுரம் சர்க்கரை ஆலை இருக்கிறது. இந்தச் சர்க்கரை ஆலை முன்பு தனியாருக்கு சொந்தமாக இருந்தது. அப்பொழுது அது முறையாகச் செயல்படாததன் காரணமாக அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. தனியார் நிறுவனமாக இருந்தபொழுது, விவசாயிகள் வங்கிகளிடமிருந்து வாங்கிய கடனை இவர்கள். செலுத்துவதாகச் சொல்லி, அந்தக் கரும்பை ஆலைக்குக் கொடுத்தவர்களிடமிருந்து



1985 ஏப்ரல் 8] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பணத்தைப் பெற்றுக் கொண்டது. பிறகு அந்த ஆலை அதிபர்கள் அந்த வங்கிக்குப் பணத்தைக் கொடுக்காத காரணத்தாலே இன்னும் பாக்கியாக இருக்கிறது. தனியாரும் இப்படி கொடுக்கவில்லை, அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகும் அந்தத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக்கு இந்தப் பணம் போகாத காரணத்தாலே இன்னமும் அவர்கள் விவசாயிகளிடம் பணத்தைக் கேட்கின்ற நிலைமை இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். உடனடியாக அந்தப் பணம் சம்பந்தப்பட்ட வங்கிக்கு அரசாங்கத்தாலே செலுத்தப்பட வேண்டும், இனியும், வங்கிகளிலே இருக்கின்றவர்கள் தனிப்பட்ட விவசாயிகளிடம் கேட்பது முறை அல்ல, ஏனென்றால் விவசாயிகள் தங்களுக்கு இருக்கின்ற சிரமங்களுக்கு மத்தியிலே, பணத்தைக் கொடுத்ததற்குப் பிறகு, வங்கிகளுக்குப் போகாமல் இருப்பது முறையாகாது. எனவே, அரசாங்கம் இதில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகப் பெருமக்களைப் பொறுத்தவரையில், இந்தத் தியாக பரம்பரை இன்றைக்கு அருகி வருகின்ற பரம்பரையாக இருக்கிறது, கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வருகிறது. நம்முடைய அரசாங்கம், அந்தத் தியாகத்தைச் செய்தவர்களுடைய தியாகத்தைக் கருத்திலேகொண்டு அவர்களுக்கு வழங்குகின்ற சலுகைகளைக் கொடுக்கின்ற நேரத்திலே, இன்றைக்கு 150 ரூபாய்களை இந்த அரசாங்கம் கொடுக்கிறது என்று நான் கருதுகிறேன்—இதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தை இன்றைக்கு நம்முடைய அரசு நிறைவேற்றி வருகிறது. ஆனால், இன்றைக்குச் சத்துணவுத் திட்டத்திலே பல முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, காய்கறி கூட்டுறவு சொஸைட்டி என்ற ஒரு சங்கத்தை ஆரம்பித்திருக்கிறோம், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும். இது தேவையில்லாத ஒன்று. இப்படிக் காய்கறிச் சங்கம் என்று வைத்து, அதிலே சிலரைப் பொறுப்பிலே போட்டுக்கொண்டு, அதன் மூலம் பல தவறுகள் நடைபெறுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. என்னாலே சொல்லவும் முடியும். தனிப்பட்ட முறையிலேகூடச் சொல்ல முடியும். பின்னாலே சொல்கிறேன். ஆகவே, இந்தக் காய்கறிக் கூட்டுறவுச் சங்கம் என்பது, இந்தச் சத்துணவு வழங்குகின்றவர்களுக்கு சுமையாக இருக்கிறது, அதிகமாகப் பணச் செலவு இருக்கின்ற காரணத்தினாலே இந்தக் காய்கறி சொசைட்டிகளை நடத்துவது தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டம் நல்லமுறையிலே நடைபெறுவதற்கு உயர்மட்ட ஆணைக் குழு ஒன்றை அரசாங்கம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்

கொள்கிறேன். ஒரு பொருளாதார வல்லுநர், ஒரு மருத்துவ வல்லுனர் நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு உயர் மட்டக் குழு வைஅமைத்து, இந்தச் சத்துணவுத் திட்டம் உள்ளபடியே சத்துணவுத் திட்டமாக, ஏழை எளிய மாணவர்களுக்குக் கிடைக்கின்ற அளவிற்கு இந்தத் திட்டத்தைந் செயல்படுத்துகின்ற அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். நம்முடைய தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டிலே ஒரு தனியார் நிறுவனத்திற்கு, இரும்புக் கம்பிகள் கொடுப்பதற்காக ஒரு டென்டர் வாங்கியிருக்கிறார்கள். 1,140 மெட்ரிக் டன் ஸ்டீல் கொடுப்பதற்காக, 44,23,595 ரூபாய்க்கு டெண்டர் கோரப்பட்டு, அமர் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்கிறார்கள், அந்த நிறுவனத்திற்கு அந்த டென்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த இரும்புக் கம்பிகள் 31-3-80 ஆம் தேதிக்குள் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் கொடுக்கவில்லை. கொடுக்காமலேயே இந்தக் காலக் கெடுவை நீட்டிக்க வேண்டுமென்று அவர்கள் இந்த வாரியத்திற்கு மனுச் செய்கிறார்கள். காலம் நீட்டித்துக் கொடுக்கப்படுகிறது. 31-3-80-லேயிருந்து 30-4-80-க்கு நீட்டித்துக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அப்பொழுதும் கொடுக்கவில்லை. மீண்டும், 31-7-80, 30-9-80, 31-12-80 என்று இப்படிப் பல நிலைகளிலே அவர்களுக்கு அந்த இரும்பு கொடுப்பதற்கான காலக்கெடு நீட்டித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு நீட்டித்துக் கொடுத்தும்கூட, அந்தநிறுவனம்கொடுத்திருக்கிறது என்னவென்று பார்த்தால் 20சதவீதம் கூடக் கொடுக்கவில்லை. இப்படி 20 சதவீதம்கூட டென்டர் எடுத்துக்கொண்ட அளவிற்குக் கொடுக்காத காரணத்தால், இன்றைக்குத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். ஏன் இப்படித் தேவை இல்லாத அளவிற்குக் காலக்கெடு நீட்டித்துக் கொடுக்கப்பட்டது என்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்திற்கு நஷ்டம் வருவதோடுகூட, இந்த வீடுகள் உரிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டிருக்கமேயானால், குறைந்த செலவிலே கட்டி முடிக்கப்பட்டு இருக்கும், இங்கே வீடு இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு அந்த வீட்டைப் பயன்படுத்தி இருக்கமுடியும் எனவே, இப்படி முறையற்ற முறையில் கால நீட்டிப்பு கொடுத்தவர்களின் மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிறுவனத்தின்மீதும் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் அவர் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முடிப்பதற்கு முன்னாலே ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தேர்தலுக்கு முன்னாலே சொன்னார்கள், அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம்



தேதிக்குப் பின்னாலே தமிழகத்திலே பூரண மதுவிலக்கு இருக்கும் என்று அவர்கள் சொன்னதாக எனக்கு நினைவு இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே அப்படிப்பட்ட அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்தோம். தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் — முன்பு எப்படி மதுவிலக்கு அமலில் இருந்த காலத்தில் மகிழ்ச்சியாக இருந்தார்களோ அதைப்போல, ஏழை எளிய மக்கள், அடித்தளத்திலே இருக்கின்ற மக்கள் இந்தக் குடியினாலே கெட்டுப் போகக் கூடாது, சீரழிந்துப் போகக் கூடாது என்று எண்ணுகின்ற கொள்கையினை உடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள். ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள், வேறு மாநிலங்களை இதற்கு உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது. தமிழகம் வழிகாட்டியாக இருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், வேறு மாநிலங்களிலே ஏற்கனவே திறந்திருக்கிறார்கள், நாம் மூடி இருப்பதை திறந்திருக்கிறோம். ஆகையினாலே இதற்கு வழிகாட்டியாக இருக்கின்ற அளவிற்கு அந்த அறிவிப்பை அவர்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்கிறேன்.

ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே, சாராயத்திற்கு வரியைக் கூட்டியிருக்கிறார்கள். அவர்கள், 6 சதவீதத்திலிருந்து 25சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதிலும்கூட, நம்முடைய நிதியமைச்சரவர்கள் பேசிய விதத்திலே, ''விற்பனையாளர்களின் ஆதாய விகிதம், நியாயமான அளவிற்கும் அதிகமாகவே இருப்பதால்'' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, அந்த விற்பனையாளர்களுக்கு ஆதாய விகிதம் அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் மறைமுகமாக ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அது தான் இங்கே சொல்லப்பட்ட குற்றச்சாட்டு.

ஆகவே இங்கே வரி அரசாங்கத்திற்கு வருவதற்காகத்தான் இதைப் போட்டிருக்கிறார்கள் என்பது சரியான உதாரணமாக இருக்காது. எனவே நிச்சயமாக அரசாங்கம் பூரண மதுவிலக்கினைக் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவருவற்குத் துணையாக நாங்கள் இருப்போம். அப்படிப்பட்ட அந்த நிலைமையை, முதலமைச்சர் அவர்களின் ஆசையை இந்த நிதிநிலை அறிக்கையிலேயே அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கை வரைக்கும் காத்துக் கொண்டிருக்காமல், இப்போதே அமலுக்குக் கொண்டுவரவேண்டும், எனவே அந்த வகையில் பூரண மதுவிலக்கை அமலாக்கவேண்டும் என்று வற்புறுத்தி என்னுடைய உரையை நிறைவாக்குகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985 86-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற பொது விவாதத்தில் 73 உறுப்பினர்கள் 7 நாட்களாகத் தங்களுடைய கருத்துக்களை 21½ மணிநேரம் இங்கே தங்களுடைய உரையிலே எடுத்து வைத்தார்கள். நிதிநிலை அறிக்கையை உள்ளன்புடன், உவகைப் பெருக்குடன் போற்றியும், பாராட்டியும், வரவேற்றும்

தங்களுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்க முன் வந்துள்ள உறுப்பினர் அனைவருக்கும் உளங்கனிந்த நன்றியைச் சொல்வதில் நான் பூரிப்பையும பெருமையையும் கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள், குறிக்கோள்கள், சாதனைகள், திட்டங்கள் ஆகியவற்றில் பெரும் பாலானவற்றை ஏற்று மேலும் சிறந்த வளமும் நல்ல வாழவும் இந்த நாடு தொடர்ந்து பெறவேண்டும் என்பதற்கான முறையில் சீரிய பரிந்துரைகள் பலவற்றையும வழங்கியுள்ள எதிர் தரப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் பலருக்கும் என்னுடைய மகிழ்ச்சிகரமான பாராட்டுதல்களையும் நான் இந்த வாய்ப்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை முழு மனத்தோடு வரவேற்க முன் வராவிட்டாலும் நிதிநிலை அறிக்கையின் அடிப்படையில் களையப்படவேண்டிய குறைபாடுகள் பற்றியும் செய்து முடிக்கப் படவேண்டிய நிலைப்பாடுகள் பற்றியும் காட்டிக்காட்டிய உறுப்பினர்களின் உணர்வுகளுக்கு உரிய முறையில் மதிப் பளிக்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவுமே இல்லே, இது ஏமாற்றத்தைத் தருகிறது என்று சொல்லிவிட்டு ஏதேதோ சொல்லியவர்களுக்கு நான் எதுவும் கூறுவதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்

இந்த ஆட்சியின் மீது காழ்ப்புணர்ச்சியின்றி நடுநிலையில் நின்று ஆராய்ந்து நிதிநிலை அறிக்கையின் பெரும்பாலான கருத்துக்களை வரவேற்று ஆதரவு தந்துள்ள பல ஏடுகளுக்கும் கூட என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் புதிய வரி விதிப்புக்கள் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அவை ஏழை எளிய மக்களை அதிகம் பாதிக்காத வகையில் அமைந்திருப்பது நிம்மதியை அளிக்கிறது என்றும் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு எல்லோராலும் நேசிக்கப்படும் திரு. எம். ஜி. ஆர் அவர்களின் மூன்றாவது தொடர் ஆட்சியில் முதல் பட்ஜெட் நல்ல அடிப் படையில் கண்ணீருக்கு இடம் இன்றி வந்திருப்பதை எல்லோருமே பாராட்டுகிறார்கள் என்றும் தமிழகத்தின் இந்த ஆண்டு பட்ஜெட்டில் உடனடியாக மக்கள் நலத் திட்டங்கள் மேலும் வளமாகப் பண ஒதுக்கீடு என்ற அடிப்படையில் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளதை அறிவார்ந்த தன்னலத்தோடு ஏழை எளிய மக்கள் நிச்சயமாக வரவேற்பு செய்வார்கள் என்றும், இந்த பட்ஜெட்டின் மக்கள் நல விஸ்தரிப்புத் திட்டங்கள் அனைத்துமே குறை கூற முடியாதவை' குறிப்பிட்டுச் சொல்லி, இது வீண் செலவு என்று எந்த அரசியல் கட்சியும் எந்த ஒரு திட்டத்தை எதிர்க்க இயலாது இப்படி யாருமே எதிர்க்க முடியாமல் வரவேற்றுத் தீரவேண்டிய திட்டங்களை உருவாக்குவது அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்படுகின்ற உயர்ந்த நல்ல காரியம் என்றும் தமிழக





பட்ஜெட் மக்களின் துயர் துடைக்க நினைக்கும் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் திட்டங்களை உருவாக்கும் வகையில் அமைந்திருக் கிறது என்றும் இது ஏழைகளை வாழவைக்கும் பட்ஜெட் என்றும் திரு. எம். ஜி. ஆர். அரசின் இந்த பட்ஜெட் நல்ல பண்பு நலன் களை நேரடியாக நடைமுறைப்படுத்தும் தன்மையின் கீழ் திட்டங்களை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது என்றும் ஏடுகள் பாராட்டியிருக்கின்றன.

(பிற்பகல் 12-40)

எம். ஜி. ஆர். அரசு முன்னேற்ற வழியில் சிறந்த முறையில் ஏறு நடை போடுகிறது என்பதை பட்ஜெட் தெரிவிக்கிறது என்றும் தமிழ்நாடு அரசு கல்வி, கிராமப்புறங்களில் குடிநீர் வசதி செய்தல், பால்வளத் திட்டங்களைப் பெருக்குதல், கிராமங் களை எல்லாம் மின்சார மயமாக்குதல், விசை பம்ப் செட்களை விரிவாக்குதல் போன்ற மிகச் சிறந்த சாதனைகளைப் புரிந்திருக் கின்றன என்றும் பல ஏடுகள் எடுத்துத் தெரிவிப்பது எனக்கு ஓரளவுக்கு மன ஆறுதல் தருவதாகவே அமைந்திருக்கிறது. ஆனாலுங்கூட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் குறை சொல்ல வேண்டாம் என்றோ, குற்றங்களைச் சுட்டிக் காட்ட வேண்டாம் என்றோ நான் சொல்லவில்லை. அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்லத்தான் வேண்டும், குற்றங்களைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும், குறைகளை எடுத்துச் சொன் னால்தான் எங்கெங்கே என்னென்ன நியாயமான, நேர்மையான குறைகள் இருக்கின்றன என்று கண்டு அவற்றைத் துறைகளின் மூலமாகவும் அதிகாரிகளின் வாயிலாகவும் அலுவலர்களின் மூலமாகவும் அகற்றுவதற்கான முயற்சியை அமைச்சரவையிலே இருக்கிற அமைச்சர்கள் மேற்கொள்ளவும் முடியும். எங்களை அறியாமல் துறைத் தலைவர்களையும் அறியாமல், துறையினுடைய மேல்நிலையிலுள்ள உறுப்பினர்களையும் அறியாமல் சில பல குற்றங்கள் துறையினுடைய பல்வேறு இடங்களிலும் நிகழவும் கூடும். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே எடுத்துச் சொல்கின்றபொழுது அதுபற்றிய குறிப்புகளை, அந்த அந்தத் துறையினர் குறிப்பு எடுத்து வைத்துக் கொண்டு அதற்கான சமாதானம் சொல்லித் தீரவேண்டும். குற்றங்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல் கின்றபொழுது, எந்த குற்றம் எந்தச் சூழ்நிலையில் நடந்தது, யாரால் நடந்தது எப்படி நடந்தது என்று எங்களைப் போன்ற அமைச்சர்கள் விளக்கங்கள் கேட்கும்போது அதற்கு உருவான பதிலை அவர்கள் தர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த வகைக்குக் குற்றங்கள் கூற வேண்டாம் அல்லது குறைகள் சொல்ல வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை அதைச் சொல்லத்தான் வேண்டும்.

அதிலே உண்மை இருக்கவேண்டும், அதிலே நியாயம் இருக்க வேண்டும். இந்த அரசின்மீது களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற முழு நோக்கத்தோடு சொல்லப்படுமேயானால் தெளிவுதான்

வெற்றி பெறும், உண்மைதான் பின்னால் வெற்றி பெறுமே தவிர புனைந்து கூறப்பட்ட நிலைமைகள் எடுபடாது என்பதை நாம் நடைமுறை வாழ்க்கையிலே தெளிவாக கண்டு கொண்டு வந்திருக்கிறோம்.

எங்களைப் பாராட்ட வேண்டுமென்றுகூட நாங்கள் எதிர் பார்க்க வில்லை, பாராட்டுவதும் பாராட்டாததும் அவரவர்களு டைய பண்பு, நலன்களைப் பொறுத்தது. ஆகவே, பாராட்ட வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. லாலி பாட வேண்டுமென்றும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் பாராட்டுவோம், அல்லது லாலி பாடுவோம் என்று எதிர்பார்க்க வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த ஒரு உறுப்பினர் கூட இங்கே சுட்டிக்காட்டினார். உள்ளபடியே, நீங்கள் பாராட்ட வேண்டுமேன்று நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை, எதிர்பார்க்கவும் மாட்டோம், எதிர் பார்க்கவும் முடியாது, எதிர்பார்க்கவும் கூடாது. ஆனாலுங்கூட இந்த நிதிநிலை அறிக்கையைக் கேலி செய்தும் கிண்டல் செய்தும் பல்வேறு பெயரிட்டு இந்த பட்ஜெட்டை அழைத்திருக்கிறார்கள். அதையும் நகைச்சுவை யாகத்தான் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதையும் பல் வேறு வகையிலே எடுத்துச் சொல்கின்றபொழுது பலரும் பேசியதை நான் கவனித்த போழுது இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி எடுத்துச் சொல்கின்றபொழுது இந்த அறிக்கையை ஏமாற்றும் பட்ஜெட் என்றும் மக்களை ஏமாற்றுவதற்காகவே முழுமுதல் நோக்கத்தை அடிப் படையாகக் கொண்டு இந்த படஜெட்டைத் தீட்டி உங்கள் முன்னால் கொண்டு வந்து வைத்திருக்கிறோம் என்றும் எதுவுமே இல்லாத பட்ஜெட் என்றும், திட்டம் இல்லாத பட்ஜெட் என்றும் தண்டனை தரும் பட்ஜெட் என்றும் வார்த்தைஜால பட்ஜெட் என்றும் கையாலாகாத்தனத்தைக் காட்டும் பட்ஜெட் என்றும் பரிதாபகரமான புலம்பல் பட்ஜெட் என்றும் தங்கள், தங்கள் இயல்புக்கு ஏற்ப, இங்கே பலரும் பெயரிட்டு அழைத்திருக்கிறார் கள். எனக்கு அதெல்லாம் நகைச்சுவைதான். மல்லிகை மலரை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் மணக்குமே தவிர, வேறு பெயரிட்டார்கள் என்பதற்காக அதன் மணம் போய் விடாது. அதைப் போல இந்த நிதிநிலை அறிக்கையில் யார் எதைச் சொன்னாலும், எப்படிச் சொன்னாலும், இந்த நிதிநிலை அறிக்கையின் செயலாக்கம் எவ்வகையிலும் கெட்டுப்போகாது சிறப்பாக அமையும், செம்மையாக நடைபெறும், மக்களின் அன்பையும் தயவையும் தொடர்ந்து பெறும் என்ற நம்பிக்கை யினுடைய அடிப்படையிலேதான் இந்த நிதிநிலை அறிக்கையை எடுத்து வைத்திருக்கிறோம்.

அவையின் முன், நாட்டு மக்களுக்குத் தெளிவு பயக்க வேண்டு மென்பதற்காகவே, பல்வேறு விளக்கங்களை நாம் எடுத்துத் தந்திருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும்



பொதுவாக நாட்டினுடைய நிலைமையை எடுத்துச் சொன்ன தோடு மட்டுமல்லாமல், மத்திய அரசினுடைய நிலைமையை, மாநில அரசினுடைய நிலைமையை, இந்த மன்றத்திலே இருப் பவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் தெரிந்து கொள்ள வேண்டு மென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலும் பலரும் கருத்துக்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மத்திய அரசு அதிகாரமும் ஆதிக்கமும் அவர்களுடைய நிதி நிலை அறிக்கையின்மூலம் ஏற்பட்ட விளைவும் எந்த அளவு மாநிலங்களைப் பாதிக்கின்றன என்றும் எப்படிப்பட்ட சீர்திருத்த நிலைமைகள் மத்திய அரசுபெற வேண்டுமென்ற அடிப்படையிலும் பல உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கருத்துக்களை நாம் வரவேற்க கடமைப்பட்டி ருக்கிறோம். பொதுவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நாட்டிலே என்னென்ன பொது நிலைமைகள், வளம் பெறவும், வசதி பெறவும், வாய்ப்புகள் பெறவும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதற்கான காரணகாரிய விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் சொல்லி இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அதற்கு பிறகு தங்கள் தங்கள் தொகுதியிலே இன்னின்னவை நடைபெற வேண்டும், நீண்டகாலமாக இந்தக் குறைபாடுகள் இருந்து கொண்டு வருகின்றன. சேர, சோழ, பாண்டியர் காலத்திலிருந்து, முகலாயர் காலத்திலிருந்து, நாயக்கர் கள் காலத்திலிருந்து, மகாராஷ்டிரர் காலத்திலிருந்து இந்தக் குறைபாடுகள் எல்லாம் இருந்து கொண்டு வருகின்றன. அவை களை எல்லாம் தீர்க்க வேண்டுமென்ற வகையில் பெரும்பாலான தொகுதிகளில் வாழ்கின்றவர்கள் அத்தனைபேரும், எங்கள் தொகுதிக்கு வேளாண்மை கல்லூரி ஒன்று கட்டாயம் வேண்டும், ஒரு பொறியில் கல்லூரி வேண்டும், கால்நடைக் கல்லூரி வேண்டும், பெரிய மருத்துவமனை வேண்டும், மருந்தகங்கள் மருத்துவமனையாக மாற்றப்பட வேண்டுமென்ற வகையில் கேட்டி ருக்கிறார்கள். கேட்க வேண்டியது தான்.

ஆனால் கேட்க வேண்டியதை கேட்கக் கூடாது என்று எடுத்துச் சொல்வதற்கில்லை கேட்பதற்கும், எவ்வளவு முடியும் இந்த ஆண்டு பட்ஜெட்டிலே என்பதற்கும் வேறுபாடு உண்டு. அதன் அடிப்படை யில் எவ்வளவு இயலும் என்பதையும் நாம் பார்க்கவேண்டும். ஆகவே கேட்கக்கூடாது என்பதில்லை. கேட்க வேண்டியதை எல்லாம் கேட்டு வைத்தால் தான் என்றைக்காவது ஒருநாளைக்கு அவற்றை நிறை வேற்றுவதற்கான வழிவகை அரசுக்கு ஏற்படும். அந்தவகையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் கள் 73 பேர்கள் பேசியதிலே வைத்து பார்த்தால், இவர்கள் எல்லாம் எடுத்துச்சொன்னப் பணிகளை நிறைவேற்ற வேண்டு மானால் நான் இன்னொரு 2,500 சில்லறை கோடி ஒதுக்கி பற்றாக்குறை பட்ஜெட்டாகத்தான் சொல்லி இருக்கவேண்டும். நல்லவேளையாக 234 உறுப்பினர்களும் பேசாமல் இருந்தார்கள் என்பதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி. 234 உறுப்பினர்களும் பேசத் தொடங்கி, தங்கள் தங்கள் தொகுதிகளின் நலன்களைப் பற்றி

பேசியிருப்பார்களானால் கிட்டத்தட்ட 6,000 கோடிக்காவது இவர்களுடைய எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பதற்கு பற்றாக் குறை நிதிநிலை அறிக்கை வைக்க வேண்டியிருந்திருக்கும். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு"

என்று கூட ஒரு உறுப்பினர் சுட்டிக்காட்டினார். நீங்கள் எல்லாம் எவ்வளவு தான் செவிகைப்ப எடுத்துச் சொன்னாலும், அதைக் சொற்பொறுக்கிற அளவிற்கு தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் அதைத் தாங்கிக் கொண்டு வந்ததின் காரணமாகத் தான் இந்த அரசு மூன்றாவது முறையாக தங்கியுள்ளது கவிகையின் கீழ், கவிகையின் கீழ் என்பதை தெளிவுபடுத்திக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் பேசுகிற போது குறிப்பிட்டார்கள். நான் இந்த நிதிநிலை அறிக்கையில் வார்த்தை ஜாலம் செய்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே வார்த்தை ஜாலம் செய்வதில் என்னைவிட வல்லவர் நாஞ்சிலார்தான் என்பதை நாடே நன்கு அறியும். ஆகவே சொற்களை எப்படி எப்படியெல்லாம் பேசவேண்டுமென்பதில் திறமைமிக்கவர் அவர் என்பதை நானே ஒப்புக்கொள்கிறேன். எனக்கு ஜாலம் செய்கிற வித்தை வராது. என்ன தோன்றுகிறதோ அதைத்தான் நான் சொல்வேன். அதிலே பெயர் பெற்றவர் அவரே தவிர நான் அல்ல. இன்றைய பேச்சிலே கூட எவ்வளவு வார்த்தை ஜாலங்களை ஆரம்பத்திலிருந்து, கடைசி வரையில் செய்தார் என்பதை நான் நன்றாக எடுத்துச் சொல்லலாம். நானும் அவரும் ஒரே சாலையில் மாணவர்கள். அவர்கள் எடுத்துச் சொன்ன பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் வழியிலும், பேரறிஞர் அண்ணாவின் வழியிலும்தான் என்னைப் போன்றவர்களும், இந்த அவையிலே இருக்கிற பெரும்பாலானவர்களும் வந்திருக்கிறார்கள். ஆகவே அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியை பின்பற்றித்தான் நாம் நடக்கிறோம். அண்ணா அவர்கள் சொன்னார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, கனிவு வேண்டும், துணிவு வேண்டும், பணிவும் வேண்டுமென்றுதான் சொன்னார்கள். அந்தக் கனிவு, துணிவு, பணிவு ஆகிய பண்புகளை கடைப்பிடித்துதான் எங்களைப் போன்றவர்கள் பணியாற்றி வருகிறோம் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரண பட்ஜெட்டை எடுத்துச் சொல்கிறபோது நடந்து முடிந்தவைகளை, சென்ற ஆண்டு நாம் திட்டம் போட்டோம், திட்டம் போட்டவைகளை இன்னென்னவற்றை செய்து முடித்தோம்; இன்னென்ன நிறைவேற்றப்பட்டன; இவை இவை



நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன; இவை இவை இன்னென்ன காலக் கட்டத்தில் நிறைவேற்றப்படும். இதற்காக இவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்போது ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று இவைகளையெல்லாம் திட்டவட்டமாக, தெளிவாக நாம் நிதிநிலை அறிக்கைப் பார்த்து எடுத்துச் சொல்கிற கருத்துக்கள் என்ற அடிப்படையில் நாம் எடுத்துத் தெரிவிக்கிறோம். சாதாரணமாக எதிர்காலத்தின் திட்டங்கள் என்று வருகிறபோது நாம் இந்த ஆண்டு திட்டத்திலே இதை இதை செய்திருக்கிறோம். இவை இவைக்கு திட்டமிட்டுள்ளோம்; அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றெல்லாம் எடுத்துத் தெரிவிக்கிறோம். அப்படி நிதிநிலை ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதைதான் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். பல ஒதுக்கீடுகளை திரும்பச் செலுத்துகிற நிலைமை ஏற்பட்டிருக்கின்றன என்ற நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். எந்த ஆண்டு பட்ஜெட்டைப் பார்த்தாலும் இது இருக்கும். அதற்காகத்தான் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியே இருக்கிறது.

(பிற்பகல் 12-50)

ஆக, நிதியைத் திருப்பிச் செலுத்துவோம் என்ற கணக்கைவிட எந்த எந்த செலவுக்கு எவ்வளவு ஒதுக்கினோம்; ஒதுக்கியதைவிட எவ்வளவு கூடுதலாகச் செலவழித்திருக்கிறோம் என்பதை எல்லாம் வைத்துதான் ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்திலே சொல்கிறோம். 'ஆக்சுவல்ஸ்' என்று பார்க்கும்போது, சென்ற ஆண்டு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அதைவிட பல மடங்கு அதிகமாகச் செலவிடப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். நாம் ஒதுக்கீடு செய்ததைவிட கூடுதலாகச் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டதால்தான் முதல் துணை மானியக் கோரிக்கை, இரண்டாவது துணை மானியக் கோரிக்கை, மூன்றாவது துணை மானியக் கோரிக்கை என்று ஆண்டு முடிவதற்குள்ளாக பல துணை மானியக் கோரிக்கைகளை அவை முன் வைக்க வேண்டியிருக்கிறது.

சில இனங்களிலே திருப்பிச் செலுத்தக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்றால் அது இந்த ஆட்சியில் மட்டுமல்ல; வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே இருக்கிறது; காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, பொதுக்கணக்குக் குழுத் தலைவர் என்ற முறையில் இதைக் கேட்டேன். அதைத்தான் இப்போது நீங்கள் கேட்கிறீர்கள். இப்படி நீங்கள் கேட்பதற்கும் நாங்கள் கேட்பதற்கும் ஆடிட் ரிப்போர்ட்தான் காரணம். அது அல்லாமல் நாங்களும் கண்டுபிடிக்கவில்லை; நீங்களும் கண்டுபிடிக்கவில்லை. ஆடிட்டில் கண்டுபிடித்துச் சொல்கிறார்கள், அதைக் கேட்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 8

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவர்கள் கண்டுபிடித்துச் சொன்ன பின்னால் ஏன் திருப்பிச் செலுத்தப்பட்டது என்று அக்கவுண்டன்ட் ஜெனரல் முன்னால் பொதுக் கணக்குக் குழுவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விசாரிக்கிறார்கள். அங்கே அவர்கள் அதற்கான காரணத்தைச் சொல்லித்தான் தீரவேண்டும். அவர்கள் சொல்லுகின்ற காரணத்தைக் கணக்குக் குழு ஏற்றுக்கொள்ள வேண்டும். தவறு இருந்தால் சுட்டிக்காட்டும். இன்ன இடத்தில் இன்ன தவறு என்று கண்டிக்கும். அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். யார் மீது தவறு என்று சுட்டிக்காட்டப்படுகிறதோ அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதைச் சொன்னால் செய்யலாம். ஆக இந்த நிலை இப்போது புதிதாக ஏற்பட்டதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கேச் சொன்னார்கள். நடைபெற்றுள்ளதைச் சொல்கிறோம், சிலவற்றை நாம் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. நம்பவேண்டியிருக்கிறது, எதிர்பார்க்கிறோம், நம்புகிறோம் என்ற சொற்கள் ஒரு நிதிநிலை அறிக்கையில் இடம் பெறுவது இயல்பான ஒன்று. அது எங்களுக்கு என்று தனியாக வந்தது அல்ல. யார் இந்த இடத்தில் உட்கார்ந்தாலும் அதைத்தான் சொல்வார்கள், எந்தக்காலத்தில் உட்கார்ந்து இருந்தாலும் அதைத்தான் சொல்வார்கள்.

நான் நிதிநிலை அறிக்கையைப் படித்து முடிக்கும்போது, 'மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆழ்ந்த அறிவோடும், தெளிந்த சிந்தனையோடும், தூய நோக்கத்தோடும், பண்பட்ட மாண்போடும் எடுத்துரைக்கும் கருத்துக்கள் நாட்டை வளப்படுத்தவும் மக்களுக்கு நலம் பயக்கவும் பேருதவி புரியும் என்று கருதுகிறேன்' என்றுதான் சொல்ல முடியுமே தவிர எல்லோரும் திட்டவட்டமாக இப்படித்தான் இருப்பார்கள் என்று நம்பி, நான் எப்படி எடுத்துச்சொல்ல முடியும்?

அது மட்டுமல்ல, 'மாண்புமிகு உறுப்பினர்களின் அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் அவையின் புகழை நிலைநாட்டவும் விவாதம் பயன்பட அமையவும் பெரிதும் உதவி புரியும் என்று எதிர்பார்க்கின்றேன்' என்று சொல்வதைத் தவிர இப்படித்தான் இருக்க வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லமுடியாது.

அடுத்து சொல்ல வேண்டுமென்றால், 7-வது நிதிக் குழுவில் நாம் கொஞ்சம் வஞ்சிக்கப்பட்டோம். 8-வது நிதிக் குழு வகுத்திருக்கிற 'ஃபார்முலா'வினால் மேலும் நமக்கு கேடு ஏற்படும். ஆக, மத்திய அரசு இப்படி வகுத்துத் தருவது விரும்பத்தக்கதாக இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அதிகார வரம்பை நாம் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்திய



1985 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அரசுக்கு என்று ஒரு மாநிலம் கிடையாது, மக்கள் கிடையாது. 22 மாநிலங்களிலும்தான் மக்கள். இந்த 22 மாநிலங்களும் சேர்ந்தது மத்திய அரசு. ஆக, நடைமுறையில் எப்படி இருந்தால் நல்லது என்று உலக அளவில் காண்கிறோம். விரைவாக மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டு, மக்களுக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய வாய்ப்பு வசதிகள் மாநில அரசிடம் இருப்பதால், அது அமெரிக்காவாகட்டும் அல்லது ரஷியாவாகட்டும் அல்லது கானடா ஆகட்டும் அல்லது சுவிச்சர்லாந்து ஆகட்டும் அல்லது வேறு பல நாடுகள் ஆகட்டும், அந்த நிலைமை மாநிலங்களுக்கு இருப்பதால், அதற்கு ஏற்ற வகையில் அதிகாரங்கள் வந்தால் இந்தியா மேலும் பொலிவு பெறும், வலிவு பெறும், வளம் பெறும் என்று எடுத்துச் சொல்கிறோமே தவிர தேவையில்லாமல் நம்மிடம் அதிகாரத்தை வைத்துக்கொள்வதற்காக அல்ல.

ஆக, மாநில அரசு இப்படி அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கேட்கும்போது அதைப்போன்று உள்ளாட்சி மன்றங்களுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி கொடுப்பதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அது பற்றி எல்லோரும் உட்கார்ந்து பேசுவோம். இன்னின்ன அதிகாரங்களை உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுத்தால் அவை வளம் பெறும், வசதி பெறும் என்று சொன்னால் அதைச் செய்யலாம். அங்கேயும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் வருகிறார்கள். இந்த அளவுக்கு அங்கேயும் சிக்கல் இருக்கும் என்று சொல்வதில் தவறு இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட 'முதலிலே இதை நீங்கள் கொடுத்தால் பிறகு நாங்கள் அதைக் கொடுக்க ஏற்பாடு செய்வோம்' என்றுதான் சொன்னார்கள். அந்த அடிப்படையில் ஏன் சொல்கிறேன் என்றால், நாம் எதிர்பார்க்கிறோம் என்று சொன்னால், இந்த 8-வது நிதிக் குழு சொல்லியிருப்பதை நாம் மாற்ற வேண்டும் என்று விரும்புகிறோம். திரும்பத் திரும்ப எழுதுகிறோம், வற்புறுத்துகிறோம். இதிலே முக்கியமான மாநிலங்கள் பெறவேண்டிய நன்மைகளைப் பெற முடியாமல் இருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 25 சதவீதம் மக்களுடைய அடிப்படையில் ஒதுக்கிவிட்டு, 75 சதவீதம் பிற்பட்ட நிலைமை என்பதற்காக ஒதுக்கிவிடுகிறார்கள். இந்த வாய்ப்பாடு சரியாக இல்லை, நன்றாக பணியாற்றுகிற மாநிலங்களுக்கு நீதி வழங்கியதாக ஆகாது, ஆகவே குடும்ப நல திட்டத்தைப் பேணி, தங்களுடைய வசதி வாய்ப்புகளை இழந்து கொண்டு இருக்கிற மாநிலங்களுக்கு, அது பரிசாக ஆகாது என்ற காரணத்தை எடுத்துச் சொல்லுகின்ற போதுதான் நாம் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டு வருவது இந்த நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு செய்கிறபோது, 1951-ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைக் கணக்கை அடிப்படையாக வைத்துதான் நீங்கள் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமே தவிர, அதற்கு முன்னால் மக்கள் எண்ணிக்கையை குறைப்பதும், குறைக்காமல் இருப்பதும், அந்தந்த

மாநிலத்தினுடைய பொறுப்புக்கு விடும்போது மக்கள் எண்ணிக்கையைக் குறைத்து, 1951 ஆம் ஆண்டு, முதல் அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த காலத்திலேயே இருக்குமானால் நம்முடைய மாநிலம் மக்கள் எண்ணிக்கையை குறைப்போம், நமக்குக் கிடைக்கின்ற ஈவையும் பெறுவோம், அந்தத் தெரிவினுடைய அடிப்படையிலே நாம் மக்கள் எண்ணிக்கையைக் குறைத்ததன் காரணமாக நமக்கு ஏற்பட்ட நன்மை என்று நாம் வாதாடுவதற்கு உண்டு என்ற சாரணத்தால், அவ்வப்போது இருக்கிற, மக்கள் எண்ணிக்கையை வைத்துக்கொள்ளக் கூடாது, 1951 ஆம் ஆண்டு எண்ணிக்கையை அடிப்படையாக, வைத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோதும் இந்தக்கொள்கையை வற்புறுத்தி வந்தது. இப்போதும் அது தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. என்றாலும் கடைசியில் அவர்கள் ஏற்றுக்கொண்டது, 81-ஐ எடுத்துக்கொள்ளாமல் 71-ஐ ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அதிலே ஒன்றிரண்டு வகைகளில் தான் எடுத்துக்கொள்கிறார்கள், பல வகைகளில் எடுக்க மறுக்கிறார்கள். இந்த குடும்ப நலத் திட்டத்தை நாம் நிறைவேற்றி வந்ததன் காரணமாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், 41 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை இருந்தது. மக்களுடைய எண்ணிக்கையை குறைத்ததன் விளைவாக அகில இந்திய அளவிலே மறுபடியும் கணக்கிடுகின்றபோது, 2 உறுப்பினர்கள் போய்விட்டார்கள். 39 ஆக வந்து நின்றார்கள். மறுபடியும் ஒரு கணக்கை மத்திய அரசு செய்தால், மேற்கொண்டு, 1, 2 குறைவதற்குத்தான் வழி ஏற்படுமே தவிர, ஆகவேதான் கொடுத்த அந்த அளவு அப்படியே இருக்க வேண்டும், அவரவர்களுடைய சாமர்த்தியத்திற்கு மதிப்பு அளிக்கவேண்டும் என்பதைத்தான் திரும்பத் திரும்ப நாம் வாதாடி வருகிறோம். ஆகவேதான் எதிர்பார்க்கிறோம் என்று சொன்னோம்.

இந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே கூட்டம் நடக்கிறபோது இந்தக் கொள்கைக்கு ஆதரவு தரவேண்டும் என்று நாம் அல்ல, கர்நாடகம், மகாராஷ்டிரம், பஞ்சாப், ஹரியானா போன்ற முக்கியமான மாநிலங்கள் எல்லாம் இந்தப் புதிய வாய்ப்பாட்டின் மூலமாக, பார்முலா மூலமாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன. நாம் சொல்வது, 25 சதவீதம் மக்களுக்கு ஒதுக்குங்கள், 12½ சதவீதம் ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைக் கணக்கு எடுத்து ஒதுக்குங்கள். 12½ சதவீதம் அந்தந்த மாநிலங்களில் இருக்கின்ற மக்களுடைய பணிகள் ஆற்றுவதிலே, ரிசோர்சஸ் அன்ட் ஆக்மென்டேஷன் என்று சொல்கிற அளவிற்கு அந்த நிதி ஆதாயங்களைத் தேடுவதிலே முயற்சி செய்கிற அந்தத் தன்மைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்றும் 25 சதவீதம் எல்லாவற்றிலும் சேர்த்து இருக்கிற சூழ்நிலைகளை வைத்துக் கொடுங்கள் என்றும் அப்படிப் பிரித்துக் கொடுப்பதன் மூலமாக, அப்படிப் பிரித்துக் கொடுத்தால் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நமக்கு





350 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைப்பதற்கு வழி இருக்கிறது என்ற காரணத்தால்தான் எதிர்பார்க்கிறோம் என்றும், நம்புகிறோம் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். யார் இருந்தாலும் செய்யவேண்டியதுதான்.

மாண்புமிகு தி. மு. கழகத்தைச் சேர்ந்த துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள், இந்த அறிக்கையிலே பெரும்பகுதி எதிர்பார்க்கப்பட்டது, எதிர்பார்த்தோம், எதிர்பார்க்கிறோம், நம்புகிறோம், உத்தேசித்து இருக்கிறோம், உத்தேசிக்கப்பட்டது என்று. ஆனால் எதிர்பார்க்கப்பட்டது, எதிர்பார்த்தோம், எதிர்பார்க்கப்படுகிறது, எதிர்பார்க்கலாம், உத்தேசிக்கப்பட்டது, உத்தேசிக்கப்படுகிறது, உத்தேசித்துள்ளோம், நம்பினோம், நம்புகிறோம், நம்பலாம், நம்பப்படுகிறது எண்ணப்பட்டது, அரசு எண்ணியுள்ளது, கருதியுள்ளோம், கருதப்பட்டது, கருதப்படுகிறது, பரிசீலிக்க இருக்கிறோம், செயல்படலாம் என்று இருக்கிறோம், முயற்சிகள் மேற்கொள்ளப்படும், கவனம் செலுத்தி இருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் நிதியமைச்சராக இருக்கும்போதே, அவர்கள் முதல் 5 ஆண்டுகளிலே, 1977–78-லே 38 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள். 1978–79-லே 36 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள். 79–80-ல் 33 இடங்களிலே பயன்படுத்தி இருக்கிறார்கள். எனவே வந்து யார் உட்கார்ந்தாலும் இதைத்தான் செய்ய வேண்டுமே தவிர, ஆகவே வேறு வழியில்லை என்பதற்காகத்தான் (கரவொலி) இதைக் சுட்டிக்காட்டுகிறோமே தவிர, நாமாக ஒரு உத்தேசமாக எடுத்துச் சொல்லவில்லை. அப்படித்தான் சொல்ல முடியும், அதற்கு முன்னாலேயும் அப்படித்தான். சிலவற்றை நாம் எதிர்பார்க்கத்தான் முடியும், சிலவற்றை நாம் கருதத்தான் முடியும். அவர்கள் எடுத்துச் சொல்லியது மாதிரி எல்லோருடைய ஒத்துழைப்பு இருந்தால், நாம் அதிக அதிகாரங்களைப் பெறவும், நியாயமான தன்மைகளைப் பெறவும், நாம் கருதுகிறோம். இந்த மாநிலம் வளர்ச்சி அடையவில்லை, தொழில் முயற்சியிலே உயரவில்லை, வாழ்க்கைத் தரத்திலே உயரவில்லை; இந்த மாநிலத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குற்றம் சாட்டுகின்ற அளவில் இந்த அரசுக்கு குற்றம் சாட்டவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–00)

ஆனால் திட்டக்குழுவும் மத்திய அரசும் என்ன கருதுகிறது. இந்த மாநிலம் வளர்ந்த மாநிலங்களில் ஒன்று. இந்த மாநிலம் சம்மைப்படுத்தப்பட்ட வளர்கிற மாநிலங்களில் ஒன்று. தனி நபர் வருமானத்தை பெருக்கிஇருக்கிற மாநிலங்களில் ஒன்று. ஆகவே உங்களுக்கு உதவி அதிகமாகக் கிடையாது என்று சொல்கிறபோது, இந்த மாநிலம் குறைந்த இயற்கை வசதிகளை வைத்துக்கொண்டு, குறைந்த இயற்கை வளங்களை வைத்துக் கொண்டு, குறைந்த கனிமங்களை வைத்துக்கொண்டு தொடர்ந்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 8

செய்து வருகிற முயற்சிகளின் காரணமாக ஓரளவிற்கு நாம் ஈடு கட்டுகிற அளவுக்கு, மேற்கு வங்காளத்தோடு, குஜராத்தோடு, மகாராஷ்டிரத்தோடு, பஞ்சாப் மற்றும் அரியானா போன்ற மாநிலங்களோடும், நம்முடைய பக்கத்திலே இருக்கிற ஆந்திரம், கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு சமமாக ஈடுகட்டுகிற அளவுக்கு நாம் வளர்ந்துக் கொண்டிருக்கிறோம், என்பதை திட்டக்குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஆனால் இங்கே வளரவில்லை வளரவில்லை என்று பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பற்றாக்குறை பட்ஜெட்டைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இந்தியாவிலே இருக்கிற ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலும் கிட்டத்தட்ட இந்த ஆண்டு பற்றாக்குறை வரவு-செலவு திட்டத்தைத்தான் வைத்திருக்கிறது. மைய அரசு 3439 கோடிக்கு வைத்த வரலாற்றை நமது மாண்பு மிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்களும், இன்னும் மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அதை ஈடு கட்ட வேண்டிய பெரும் பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் எப்படி இருந்தாலும், அவைகளை சுலபமாக ஈடுகட்டுவதற்கான வழிவகைகளும் மத்திய அரசுக்கு அமைந்திருக்கிறது.

ஆனால் இவ்வளவு ரூபாய் புழங்குகிறபோது இவ்வளவு நோட்டு அடிக்கலாம் என்று ஒரு கணக்கு இருந்தது. அந்தக் கணக்கு இரண்டு மடங்காகி, மூன்று மடங்காகி, நான்கு மடங்காகி, ஐந்து மடங்காகி, ஆறு மடங்கானாலும் அடிக்கலாம் என்கிற நிலை வருகிறபோதுதான், இன்ஃபிளேஷன் வருகிறது. அவர்களே சுட்டிக் காட்டியது மாதிரி 1960 வருஷம் ஒரு ரூபாய்க்கு இருந்த மதிப்பு இப்போது 19 காசுக்கு வந்துவிட்டது என்று சொன்னால் அந்த அளவிற்கு, ரூபாயினுடைய மதிப்பு குறைகிற அளவிற்கு, கீழே வருகிறபோது, டாலருடைய மதிப்பு முன்பு ஒரு டாலருக்கு 6 ரூபாய் என்று இருந்தது, இப்போது கிட்டத்தட்ட 13, 14 ரூபாய் என்ற அளவுக்கு வந்துவிட்டது. டாலருடைய மதிப்பு உயர்ந்துவிட்டது. நம்முடைய ரூபாயின் மதிப்பு குறைந்து வருவதற்கு காரணம் பற்றாக்குறை பட்ஜெட். சென்ற ஆண்டு இரண்டாயிரத்துச் சில்லரை கோடியாக இருந்தது, இந்த ஆண்டு மூன்றாயிரத்துச் சில்லரையாக பற்றாக்குறை வந்துவிட்டது. இப்படி இந்த ஆண்டு மூன்றாயிரத்துச் சில்லரை கோடி என்று பற்றாக்குறை வருகிறபோது, வேறு வழியே இல்லாவிட்டால், இப்படிப்பட்ட பற்றாக்குறையை ஈடுசெய்ய பல நடவடிக்கைகள் எடுப்பதோடு கூட, நாசிக்கிலும் கொஞ்சம் அடித்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட பணம் வருகிறபோதுதான் இன்பிளேஷன் வருகிறது அதைத்தான் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள்.

அந்த வகையிலே பார்க்கிறபோது கர்நாடகம் 341 கோடியே 60 லட்சம் ரூபாய் இந்த ஆண்டு பற்றாக்குறை, ஆந்திரம் 257 கோடியே 74 லட்சம், பக்கத்திலே இருக்கிற கேரளம் 178 கோடியே 94 லட்சம் நம்முடைய தமிழ்நாடு 179 கோடியே 33 லட்சம்



1985 ஏப்ரல் 8] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

மொத்தமாக சென்ற ஆண்டினுடைய கடைசி, இந்த ஆண்டினுடைய ஆரம்ப நிலையோடு கணக்கிட்டு, இந்த ஆண்டினுடைய இறுதியில் எப்படி இருப்போம் என்று பார்க்கிறபோது கர்நாடகத்தைப் பொறுத்த வரையில் 623 கோடியே 81 லட்சம் பற்றாக்குறையாகும். ஆந்திரா 456 கோடியே 74 லட்சமும், கேரளா 426 கோடியே 30 லட்சமும் பற்றாக்குறை ஏற்படும் என்பதைப் பார்க்கிறபோது, தெற்கு மாநிலங்களான இந்த 4ம் எடுத்துக் கொள்வோமேயானால் கூட, தமிழகத்தினுடைய நிதி நிலை-வரவு-செலவு 264 கோடியே 20 லட்சம் பற்றாக்குறை இருக்கும் என்று கூறத்தக்க அளவுக்குத்தான் நாம் நம்முடைய நிதிநிலை அறிக்கையை உருவாக்கியிருக்கிறோம்.

மேலும் தமிழகத்தினுடைய திட்ட அளவை எடுத்துக்கொண்டாலும்கூட, நம்முடைய சக்திக்கு மேலாக, கூடுதலாகத்தான் செலவழித்து வந்திருக்கிறோம். நம்முடைய கடுமையான, கொடுமையான வறட்சி நிலைமை இரண்டாண்டுகளாக, 1982–83, 1983–84 ஆகிய இரண்டாண்டுகளில் இருந்தது. அதற்காக நாம் நாடெங்கிலும் பல பணிகளைக் செய்ய வேண்டிய நிலை இருந்தது. இப்படிப்பட்ட கடுமையான காலத்திலும்கூட நம்முடைய மாநிலத்திலே திட்டச் செலவை எந்த வகையிலும் குறைக்கவில்லை, குறையவில்லை என்பது மட்டுமல்லாமல், திட்ட வளர்ச்சிக்காக செலவழிக்கையில் அதிகமாகவே செலவழித்திருக்கிறோமே தவிர, குறைந்த அளவு நாம் செலவழிக்கவில்லை. 3150 கோடி ரூபாய் 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்கு நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை என்று சொன்னால், மூன்றாயிரத்து அறுநூற்று சொச்சம் ரூபாயை செலவழித்து, கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாகவே செலவழித்து, சாதனையை கூடுதலாக்கி காட்டியிருக்கிறோமே தவிர, வளர்ச்சி திட்டங்களில் முயற்சிகளை எந்தக் காலத்திலும், கடுமையான வறட்சி காலத்திலும்கூட குறைக்கவில்லை, அந்த முயற்சியிலிருந்து பின்வாங்கவில்லை.

ஆனால் சில பல மாநிலங்களில் ஒதுக்கப்பட்ட தொகையிலே பாதியளவு கூட, முக்கால்வாசி அளவு கூட, அரையே அரைக்கால் வாசி அளவு கூட ஏன் கால்வாசி அளவுகூட செலவழித்து திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற பாங்குகளை எல்லாம் மற்ற இடங்களில் நாம் காண்கிறோம். இந்த திட்டங்களைப் பொறுத்தவரையில் கூட, கேரளம் இந்த ஆண்டுக்கு அதாவது 1985–86 ஆம் ஆண்டுக்கு, ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தினுடைய முதல் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை 355 கோடி. கர்நாடகம் 859 கோடி. ஆந்திரா 1044 கோடி. நாம் 1102 கோடி. நமக்கு அவர்கள் ஒதுக்கியது 1002 கோடி. என்றாலும் 100 கோடியை கூடுதலாக ஒதுக்கினால்தான், திட்ட வளர்ச்சியின் நன்மைகள் தமிழகத்திற்கு முழுமையாக வரும் என்று 1102 கோடியை நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறோம்.

உறுப்பினர்கள் சொல்வது மாதிரி இதிலே 100 கோடியை குறைத்திருப்போமேயானால், நம்முடைய பற்றாக்குறை 264 கோடி என்று இருப்பது 164 கோடி வந்திருக்கும். ஆனால் எப்படியும் சமாளித்து விடலாம் என்ற கருத்திலேதான், திட்டச் செலவு, வளர்ச்சி செலவு ஆகியவைகளைக் கண்டு, அவர்கள் ஒதுக்கியது 1002 கோடி ரூபாய்தான் என்றாலும், நாம் 1102 கோடி ரூபாய்க்கு போட்டோம்.

இதோடு செலவீட்டை ஒப்பிடும்போது, 1985–1986–ம் ஆண்டு பற்றாக்குறையினுடைய சதவிகித அளவை நாம் கணக்கிடும்போது பார்த்தாலும் கூட தமிழகம்தான் மிகவும் குறைந்த அளவில் இருக்கிறது. நான்கு மாநிலங்களுடைய சதவிகித அளவை பார்த்தாலும் கூட கர்நாடகம் 39.7 சதவிகிதம், கேரளம் 36 சதவிகிதம், ஆந்திரம் 24.7 சதவிகிதம். தமிழ் நாடுதான் மிகவும் குறைந்த 16.2 சதவிகிதம். இந்த குறைந்த அளவுக்குத்தான் நம்முடைய பற்றாக் குறையும், இன்று ஒதுக்கீட்டினுடைய அளவோடு கணக்கிடும் போது இருக்கின்ற பாங்கை நாம் காண்கிறோம். மைய அரசினுடைய திட்ட உதவி நமக்கு கூடுதலாகக் கிடைக்கும், கிடைக்க வேண்டும். அதற்கான தன்மைகளை நாம் பெற வேண்டும் என்று கருதுகிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் சொல்லியதுபோலவும், மற்ற உறுப்பினர்களும், சுட்டிக்காட்டியதைப் போலவும் விற்பனை வரியை பொறுத்த வரையில், அதுதான் மாநில அரசுக்கு, கூடுதலான வருமானத்தை தந்து மாநில அரசினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுகின்றது என்று இதை கொண்டுவந்தபோதே சொன்னார்கள். அப்போது நிதி அமைச்சராக இருந்த கோபால் ரெட்டி அவர்கள் இதனை காமதேனு என்று சொன்னார்கள்,

ஆகவேதான் கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற அளவுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு வரி இதுதான் என்று அவரே சொல்லுகிற அளவிற்கு முதன் முதலில் இராஜாஜி காலத்தில் இந்த வரியைக் கொண்டுவந்தபோது சொன்னார்கள். இப்போதும் அதிகமான வருமானம் கிடைக்கின்ற வரியாக இருக்கிறது. அதை வைத்துக் கொண்டுதான் ஓரளவிற்கு, மத்திய அரசு நமக்கு குறைத்துக் கொடுத்தாலும்கூட நாம் நம்முடைய பணிகளை நிறைவேற்றத்தக்க அளவில் இருக்கிறோம். ஏற்கனவே அவர்கள் சொன்ன மாதிரி மூன்று பொருள்களை மத்திய அரசு எடுத்து கொண்டதால், சென்ற ஆண்டே நான் குறிப்பிட்டுக் காட்டினேன். நமக்கு கூடுதலாக ரூ. 125 கோடி அல்லது ரூ. 130 கோடி ஒரு ஆண்டிற்கு இழப்பு ஏற்படுகிறது, மூன்று முக்கிய வரிகளை மத்திய அரசு எடுத்துக் கொண்டதால் அந்த விற்பனை வரி நம்மிடத்திலே இருக்குமானால் நமக்கு ரூ. 125 கோடி கிடைத்திருக்கும். கிடைத்திருந்தால் இன்னும் பல திட்டங்களை பல தொகுதிகளுக்கு நிறைவேற்றுவதற்கு நமக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். மேற்கொண்டு நான்கு பொருள்களை எடுக்கலாமா அல்லது எல்லா பொருள்களையும் எடுக்கலாமா என்று வருகின்றபோது அவர்கள் சொல்லுகிறமாதிரி 'ஏந்திச் செல்கின்ற பாத்திரம் சின்னதாக இருந்தால் போதாது



அண்டா, குண்டான் எடுத்து போகிற மாதிரி வருமே தவிர, பாத்திரமாக எடுத்து போக வேண்டிய நிலைமை ஏற்படாது. ஆகவே தான் கொடுத்துவிட்டு வாங்க வேண்டிய அத்தகைய தன்மைகள் இல்லாமல், மாநில அரசுடைய பொறுப்பு ஏற்பட்டதன் காரணமாக இப்படி நியாயத்தின் அடிப்படையில், கொடுக்கப்பட வேண்டியவைகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் அடிக்கடி வற்புறுத்தி சொல்லி வருகிறோம்.

அது மட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சியை நோக்கி நாம் செல்லவில்லை என்றும், நாம் நாளுக்குநாள் மாநிலத்தை கீழ் நிலைக்கு கொண்டு செல்கின்றோம் என்ற அளவிற்கு கருத்துக்களை பரவலாக பல உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்தார்கள். ஆனால் இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த நிலையிலிருந்து இந்த ஏழு, எட்டு ஆண்டு காலத்திலே நாம் ஆண்டுக்கு ஆண்டு இக்கட்டான நெருக்கடியில், வளர்ச்சியினுடைய தன்மையின் அடிப்படையில் வளர்ச்சியைக் காட்டிக்கொண்டு வருகிறோமே தவிர எதிலும் குறைப்பாட்டை வைக்கின்ற நிலைமையில் இல்லை, எல்லாத் துறைகளையும் கவனிக்க வேண்டும், சமமாக கவனிக்க வேண்டும், சமூக நீதி எல்லாத் துறைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படையாக வைத்து பல்வேறு துறைகளுக்கும் செலவிடுகின்ற வகையில் எல்லாத் துறைகளுக்கும், எப்போதும் போல், எல்லா ஆட்சிக் காலத்திலும் இருந்ததைப் போல், அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம்.

1976–77–லே ரு. 141 கோடி கல்விக்காக செலவழிக்கப்பட்ட இடத்தில் இன்றைக்கு ரு. 468 கோடி செலவிடுகின்ற அளவிற்கு ஏழாண்டு காலத்தில் கல்வித்துறையை நகர்த்திக்கொண்டு வந்திருக்கிறோமே தவிர விழுந்துபடவில்லை. மருத்துவத்திற்கு ரூ. 47 கோடியாக இருந்தது ரு. 123 கோடி அளவுக்கு வளர்ச்சியை நோக்கி வந்திருக்கிறது. பொது சுகாதாரம் ரூ. 18 கோடியாக இருந்தது இன்றைக்கு ரு. 146 கோடி அளவிற்கு வருகை தந்திருக்கிறது. இப்படி ஒவ்வொன்றையும் சொல்வோமானால் நீங்கள் இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து தெளிவாகத் தெரிந்துக்கொள்ள முடியும். வேளாண்மைக்காக ரு. 22 கோடி செலவழித்த இடத்தில் இன்றைக்கு ரு. 98 கோடி செலவழிக்கின்ற அளவிற்கு இருக்கிறோம். கால் நடைக்கு 8½ கோடி செலவழித்தோம். இன்றைக்கு ரூ. 27 கோடி செலவழிக்கிறோம். இன்டஸ்ட்ரீஸ் என்று எடுத்துச் சொல்லுகின்ற வகையில்கூட ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டையும் பார்த்தோமானால் ஆரம்ப காலத்தில் ரு. 1 கோடி, 1½ கோடி, 2 கோடி, 3 கோடி, 4 கோடி, 5 கோடி என்றுதான் தொழில் வளர்ச்சி, பொதுத்துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை, கூட்டு துறை, பெரும் தொழில், நடுத்தரத் தொழில், சிறுதொழில் வங்கிகள் கொடுக்கின்ற கடன், நிதி நிறுவனங்கள் தருகின்ற கடன், சிப்காட், சிட்கோ போன்றவைகள் தருகின்ற உதவி அத்தனையும் வைத்துக் கொண்டுதான் ஒரு மாநிலம் தன்னுடைய தொழில் வளர்ச்சியைக் காண வேண்டுமே தவிர பட்ஜெட்டைப் பொறுத்த வரையில்

பார்ப்போமானால் தொழில் இலாக்காவை நகர்த்துவதற்கு, ஓரள விற்கு பங்கீட்டு மூலதனம் எடுக்கின்ற அளவிற்குத்தான் நிதி ஒதுக் கீடு இருக்கிறதே தவிர வேறு அல்ல. எந்த ஒரு காலத்திலே இண்டஸ்டரீஸ் தலைப்பின் கீழே ரு. 200 கோடி ஒதுக்கினார்கள். நாங்களே அதனைக் குறைத்துவிட்டு 7 கோடி 8 கோடிக்கு நிறுத் தியிருக்கிறோம்? எந்தக் காலத்திலும், எல்லோருடைய முயற்சியும் ஒன்று சேர்ந்தால்தான் தொழிலை உயர்ந்த நிலைக்கு கொண்டுவர முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மற்றொன்றை குறிப்பிட விரும்புகிறேன். இப்போது மத்திய அரசினுடைய தன்மைகளை நாம் எடுத்துச் சொல்லுகின்றபோது பேதம் காண்பிக்கின்றது என்று அல்ல, சரியாகவோ, தவறா கவோ ஒரு தடவை காங்கிரஸ் சட்சி டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரே தெளிவாக சொல்லியிருக்கிறார். அதை நான் உணர்த்த ஆசைப் படுகிறேன். India—i.e. Bharath—i.e. Uttar Pradesh என்று சொன்னார். இந்தியா, அதாவது பாரதம், அதாவது உ. பி. என்ற நிலைமையிலே காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்று காங்கிரஸ் உறுப்பினர் திரு. டி.டி.கே. அவர்களே சொல்லவேண்டிய ஒரு கட்டம் இருந்தது. அவரே சொல்லுகிறபோது நாங்கள் சொல்லாமல் இருப்போமா? என்பதை காங்கிரஸ் உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 1-10)

அதற்கான காரணத்தை நான் சொல்கிறேன். இப்போது இருக்கிற சூழ்நிலைகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால், 5. 6 நாட்களுக்கு முன்னால் மத்திய அரசாங்கத்தினுடைய மக்சளவை யிலே நிதித் துறை இணையமைச்சர் 1985—86க்கான பங்கீட்டு முறைப் பற்றி சொல்லுகிறபோது 7806 கோடியே 86 லட்சம் ஒதுக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே உத்திரபிரதேசத் திற்கு 1176 கோடியே 92 லட்ச ரூபாய் கிடைக்கிறது, பீகார் மாநிலத்திற்கு 820 கோடியே 68 லட்ச ரூபாய் கிடைக்கிறது. மேற்கு வங்கத்திற்கு 784 கோடி ரூபாயும், மத்திய பிரதேசத்திற்கு 574 கோடி ரூபுாயும், ஆந்திர பிரதேசத்திற்கு 552 கோடி ரூபாயும் மராட்டியத்திற்கு 474 கோடியும் தமிழ்நாட்டிற்கு 465 கோடி ரூபாயும் என்ற அளவுக்கு கிட்டதட்ட மக்கள் அமைப்புகள், மக்களுடைய அளவுகள் இவைகளை வைத்துக் கணக்கிடுகிறபோது பீகார், குஜராத், மராட்டியம், தமிழ்நாடு முதலிய மாநிலங்கள் இருக்கின்றன. கொஞ்சம் குறைந்த அளவுக்கு கர்நாடகம் மக்கள் எண்ணிக்கையையும் மற்றவற்றையும் சமமாக எண்ணப்படவேண்டிய ஒன்று. உத்திரப் பிரதேசம் மக்கள் தொகையைப் பொறுத்தவரையிலே இரண்டு மடங்கு அதிகமான மக்கள் தொகையைக் கொண்டது. ஆகவே நமக்கு ஐந்து கோடி என்றால் அவர்களுக்கு பத்து கோடி என்ற அளவிலே வரும். ஆனால் உத்திரப் பிரதேசத்திற்குக் கொடுத்திருப்பது 1176 கோடி ரூபாய் என்றால் தமிழகத்திற்கு 465 கோடி ரூபாய்தான். ஆகவே





கிடைக்கவேண்டிய அளவுக்குக்கூட கிடைக்காமல் இருக்கிறநிலைமை தான் இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும் என்பதுதான் நாம் சொல்கிற நிலைமை. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்ன முறை கடைப்பிடிக்கப்பட்டதோ அதே முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதே முறை கடைப்பிடிக்கப்படுமானால் குறைந்தது இன்னும் 350 கோடியாவது நமக்கு கூடுதலாக வந்திருக்கும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையை அப்படியே மாற்றமே இல்லாமல் வைத்துக் கொண்டால், அதையே வைத்துக் கொண்டால் நமக்கு 350 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும். ஆனால் எட்டாவது நிதிக்கமிஷன் அதைக் கடைப்பிடிக்காததன் காரணமாக நமக்கு அவ்வளவு கிடைக்க வாய்ப்பில்லாமல் போய் விட்டது. உள்ளபடியே திறமையற்றோர்களுக்கு சோம்பேறியாக இருப்பவர்களுக்கு திட்டமிடாதவர்களுக்கு பிற்பட்டவர்கள் என்ற தன்மையிலே தருகிறபோதுதான் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் வருகின்றன. இந்தியா ஒன்று என்று வருகிறபோது பிற் பட்ட மாநிலங்களை வாழவைக்க வளரவைக்க வேண்டும், வேண் டாமென்று நான் சொல்லவில்லை. நியாயத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் பங்கீடு செய்து விட்டு பிற்பட்ட மாநிலங் களுக்கு என்று தனியாக 1000 சோடி அல்லது 1500 கோடி ரூபாயை ஒதுக்குங்கள், மிகுதியை நியாயத்தின் அடிப்படையிலே எல்லா மாநிலங்களுக்கும் ஒதுக்கித் தாருங்கள். பிற்பட்ட மாநிலங்களுக்குத் தனியாக ஒதுக்குவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லிவிட்டோம். அப்போதுதான் பிற்பட்ட மாநிலங்கள் மற்ற மாநிலங்களோடு ஈடு கொடுத்து வளர்ந்து இந்தியா ஒன்று என்ற அளவுக்கு இருக்கும் என்பதிலே நமக்கு எந்தவிதமான ஆட் சேபணையும் இல்லை. நான் புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினாலும் நேரம் இடம் தராத காரணத்தி னாலே அவற்றையெல்லாம் விட்டு விடுகிறேன்.

அடுத்து, திட்டப் பணிகளை நிறைவேற்றுகிற முறைகளைப் பார்க்கிறபோது நான் உதாரணத்திற்கு ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1—வது ஐந்தாண்டு திட்டத்திலிருந்து 6—வது திட்டம் வரையில் தனிநபர் திட்ட முதலீடு பெர் கேப்பிட்டா— தனி நபருக்கு இந்தத் திட்டத்தில் எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்ற கணக்கை எடுத்துப்பார்த்தால்—1—வது ஐந்தாண்டு திட்டத்திலிருந்து 6—வது ஐந்தாண்டு திட்டம் வரை தனி நபர் திட்ட முதலீடு தமிழ்நாட்டில் 27 மடங்கு உயர்ந்து இருக்கிறது. 1—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1 மடங்கு என்று இருந்தது இப்போது 27 மடங்காக உயர்ந்து இருக்கிறது. ஆனால் மத்திய அரசின் தனி நபர் திட்ட உதவி தொகை எப்படி வந்திருக் கிறது என்றால் 12 மடங்குதான் உயர்ந்து இருக்கிறது. ஆக நம்முடைய திட்ட தொகை 27 மடங்கு உயர்ந்து இருக்கிறது. ஆனால் மத்திய அரசின் உதவி 12 மடங்கு தான் உயர்ந்து இருக்கிறது. நம்முடைய மாநிலம் எந்த அளவுக்கு பாதித்து இருக்கிறது? எவவளவு நிதி ஆதாரம் நமக்கு கிடைக்க வேண் டும் என்பதை பார்க்க வேண்டும்,

அது மட்டும் அல்ல, ஆண்டுக்கு ஆண்டு நாம் வஞ்சிக்கப்பட்டு வருகிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சாதாரணமாக நீங்கள் பார்ப்பீர்களானால் 1—வது ஐந்தாண்டு திட்டத்தில் நாம் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியது 50 சதவீதம், மத்திய அரசு ஒதுக்கியது 50 சதவீதம். பிறகு 3—வது ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய அரசு 50 சதவீதம், நாம் 50 சதவீதம். 4—வது ஐந்தாண்டுத் திட்டத்திலே—ஆண்டு திட்டம் என்று இடையில் வந்த காரணத்தால் 1966லிருந்து 1969 வரை மத்திய அரசு 40 சதவீதமும் நம்முடைய பங்கு 60 சதவீதமாக இருக்கிறது. அதற்கு பிறகு 4—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 26 சதவீதம் மத்திய அரசின் பங்கு, நம்முடைய பங்கு கிட்டத்தட்ட 74 சதவீதம். 5—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 26½ சதவீதம் தான் மத்திய அரசின் பங்கு. 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்கள் தந்து இருப்பது 21 சதவீதம் தான். நம்முடைய பங்கு 79 சதவீதம் என்று பார்க்கிறபோது, இந்த ரேஷியோ மாறிக்கொண்டு வருவதன் காரணமாக அதுவும் பணம் அதிகமாக ஏறிக்கொண்டு இருக்கிற அளவுக்கு இது ஏறவில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 3 ஆயிரத்துச் சில்லரை கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 93 ஆயிரம் கோடிக்கு போட்டார்கள். 7—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1 லட்சத்து 80 ஆயிரம் கோடிக்கு திட்டங்கள் திட்டமிடப்பட்டிருக்கிறது. அது இன்னும் முடிவுக்கு வரவில்லை. இன்றைக்கு அதிகமான பணம் ஒதுக்குகின்ற நேரத்தில் நமக்கு 21 சதவீதம் தான் வருகிறது என்று சொன்னால், குறைந்த அளவில் பணம் இருந்து திட்டம் போட்டபோது 50 சதவீதம் மாநிலத்திற்குத் தந்தார்கள். அதே கணக்கில் இப்போது வந்திருக்குமானால் நமக்கு அதிகமாக வந்திருக்கும்.

மற்றும் இன்று பொதுக் கடன்கள் வாங்குகிறார்கள். பொதுக்கடன் எழுப்புகிற உரிமை மத்திய அரசுக்கு உண்டு. அதற்கு அனுமதி தருகிற உரிமை மத்திய அரசுக்கு உண்டு. எல்லா வங்கிகள் மூலம் பொதுக்கடன்கள் எழுப்புகிறார்கள், அப்படி எழுப்புகிற கடன்களில் கூட 1—வது ஐந்தாண்டு திட்டத்தில் எழுப்பிய கடனில் மாநிலங்களுக்கு எல்லாவற்றிற்கும் சேர்த்துக் கொடுத்தது 76 சதவீதம், மொத்தமாக மத்திய அரசு எழுப்பி அவர்கள் ஓரளவுக்கு வைத்துக்கொண்டு மீதியை எல்லா மாநிலங்களுக்கும் பகிர்ந்து தருகிறார்கள். 1-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்களுக்கு எல்லாம் சேர்த்து 76 சதவீதம் தந்து, மீதி 24 சதவீதத்தை மத்திய அரசு எடுத்துக் கொண்டது. ஒவ்வொரு ஐந்தாண்டு பற்றி நான் சொல்லவில்லை. 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன நிலை என்றால் மாநிலங்களுக்கு எல்லாம் சேர்த்துக் கொடுத்தது மொத்தத்தில் வாங்கிய பொதுக்கடனில் 23 சதவீதம் தான். மத்திய அரசு 77 சதவீதத்தை வைத்துக்கொண்டது. இவவாறு அவர்கள் வைத்துக்கொண்டு செலவழிப்பதால் நாம் எண்ணுகின்ற காரியங்களை





முறையோடு நிறைவேற்ற முடியவில்லை, என்பதை திரும்ப திரும்ப நாம் வற்புறுத்தி கூறிக்கொண்டு வருகிறோம். அது மட்டும் அல்ல, நமக்கு 9 சதவீதம் கிடைத்தது 1971—72ல், 7½ சதவீதம் 1980-81லே, ஐந்தே முக்கால் சதவீதம் 1982-83லே. இந்த நிலைமைகளை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மற்றும் புதிய திட்டங்கள் என்று சொல்லுகிறபோது ஒரு புதிய திட்டமும் இல்லை என்று சொல்லுகிறபோது நீங்கள் எல்லாம் தெளிவுபெற வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே அடுக்காக வைக்கப்பட்டு இருக்கக்கூடிய புத்தகங்களில் இவ்வளவு பெரிய புத்தகத்தை போட்டு கொடுத்து இருக்கிறோம். அதிலே புதிய திட்டங்கள் என்ன என்ற பட்டியலை கொடுத்து இருக்கிறோம். இந்த ஆண்டு மட்டும் என்ன என்ன புதிய திட்டங்கள் என்றும் ஏற்கனவே இருக்கிற நடைமுறையில் இருந்து வருகிற திட்டங்களை விரிவாக்கம் செய்கின்ற திட்டங்கள் மட்டும் அல்லாமல் புதியதாக எடுத்துக்கொள்ளப்படுகிற, நடைமுறைக்கு கொண்டு வரப்படுகின்ற திட்டங்கள் என்று இதிலே 54 கோடி ரூபாய்க்கு போட்டு இருக்கிறோம் என்பதை தெளிவுபடுத்திக் காட்டியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-20)

ஆனால் இந்தப் புத்தகத்தையும் வாங்கி வைத்துக்கொண்டு, ஒரு திட்டமும் இல்லை, ஒரு திட்டமும் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுதான் வியப்புக்குரிய ஒன்றாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, மின்துறைக்குத்தான் அதிகமாக நிதி ஒதுக்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள். மின்துறைக்குத்தான் அதிக சலுகை தரவேண்டும். ஏனென்றால், மின்துறை வளர்கின்ற ஒரு சூழ்நிலையையொட்டித்தான்....

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, புதிய திட்டங்கள் பற்றிய புத்தகம் இருக்கிறது. இதை உறுப்பினர்கள் ஒருவேளை படித்தார்களோ, படிக்கவில்லையோ என்ற சந்தேகத்தைக் கூட எழுப்பினார்கள். புதிய திட்டம் என்று சொன்னால், ஹெவி இன்டஸ்ட்ரீஸ்: இந்து பத்திரிகை கூட சுட்டிக் காட்டியது ஹெவி இன்டஸ்ட்ரீஸ் மூலமாக எட்டு சர்க்கரை ஆலைகள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று இருக்கிறதே தவிர, அதுபற்றிய திட்டங்கள் உண்டா? கன ரகத் தொழிற்சாலை பற்றிய திட்டங்களுக்கு நீங்கள் ஒதுக்கியிருக்கிற தொகை இந்தப் புத்தகத்தில் இருக்கிறதா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பத்து சர்க்கரை ஆலைகள், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தமிழ்நாட்டில் வரவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அது, எதிர்பார்க்கப்படுவதற்குக் காரணம், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் முடிவாகவில்லை. ஆனால் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏழாயிரம் கோடி அளவிற்கு

நாம் கேட்கலாம் என்ற அளவிற்கு நாம் எல்லாத் துறைகளையும் வைத்துக் கணக்கிட்டு, சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையிலும் பத்து வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். பத்து வர வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்; வரும் என்று இன்றைக்கு நான் சொல்லமுடியாது. முப்பதாம் தேதி தான் நாங்களெல்லாம் போகிறோம்; திட்டக்குழு அமைச்சரோடு பேச; அதற்குப்பிறகு தேசீய வளர்ச்சிக் கூட்டத்தைப் பிரதமர் கூட்டியதற்குப் பிறகு திட்டவட்டமாக, தெளிவாக, இவ்வளவு என்று சொன்னதற்குப் பிறகு தான் வரும். வருகின்ற பொழுது அப்பொழுது சொல்லுகின்றபொழுது இது வரும் என்று நான் சொல்வேன். ஆகவே, ஏழாவது ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளே இந்த பத்து சர்க்கரை ஆலைகளும் அந்தத் துறைகளிலே வரவேண்டுமென்ற அளவிற்கு நாம் ஓரளவிற்கு டென்டேட்டிவாகத் திட்டம் வகுத்து வைத்திருக்கிறோம். இந்தத் திட்டம் இன்னும் முடிவு பெறவில்லை. முடிவு பெறாததன் காரணத்தினாலேதான், எதிர்பார்க்கப்படுகிறது, கருதப்படுகிறது என்ற சொற்களை நாங்கள் பிரயோகப்படுத்தியிருக்கிறோம்.

மின் துறையைப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்களும் குறிப்பிட்டார்கள். நம்முடைய நாட்டினுடைய, வளர்ச்சியினுடைய தன்மைக்கு குந்தகமாக இருப்பதே போதுமான அளவிற்கு நமக்கு மின் சக்தி கிடைக்காததுதான். நம்முடைய மாநிலம் எவ்வளவு மின் சக்தி உண்டோ அவ்வளவையும் பயன்படுத்தி வருகிறது. இன்னும் எவ்வளவு இங்கிருந்து வருமோ அதையெல்லாம் பயன்படுத்திக்கொள்ள கூறுபாடு உண்டு. நாம் கேரளாவிலிருந்து — அங்கே உபரி வருகிறது— வாங்குகிறோம்; கர்நாடகத்திலே உபரி கிடைக்கிறது, வாங்குறோம். ஆந்திராவிலே உபரி கிடைக்கிறது; வாங்குகிறோம். நாம் வாங்குகிற நிலமைகளில் — பற்றாக்குறையில் இருக்கிறோமே தவிர நாம் அதிகம் உற்பத்தியாக்கி பிறருக்குத் தருகின்ற அளவிற்கு உபரி ஆகின்ற நிலைமை இல்லை. நம்முடைய தேவை இன்னும் அதிகமாக இருக்கிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலே கூட போதுமான அளவிற்கு நமக்குக் கிடைக்குமா என்கின்ற அளவிற்கு ஐயப்பாடும் இருக்கிறது. ஆகவேதான், தனியார் துறையிலே தனியாக வந்து மின் உற்பத்தி நிலையம் அனல் மின் நிலையம் வைக்க முன் வந்தாலும் கூட அவர்களுக்கு நாங்கள் அனுமதி அளிக்கிறோம் என்று மாநில அரசு அளவிலே நாம் ஒப்புக்கொண்டு இருக்கிறோம். மத்திய அரசு இன்னும் அதற்கு ஒப்புதல் தரவில்லை. ஒப்புதல் தந்துவிட்டால் கோயம்புத்தூரைப் பொறுத்து, ஆவடியைப் பொறுத்து, அம்பத்தூரைப் பொறுத்து, மதுரையைப் பொறுத்து அல்லது இராணிப்பேட்டையைப் பொறுத்து ஒசூரைப் பொறுத்து, தனி மின் நிலையம் வைத்து உங்களுக்கு நீங்கள் பயன் படுத்திக் கொள்ளுங்கள். உற்பத்தியாகிற மின்சாரத்தை நாங்கள் மற்றைய சிறு தொழில்களுக்கும். கடைகளுக்கும், வியாபாரத்திற்கும்,



காமர்ஸ் அண்ட் இன்டஸ்ட்ரீஸ், ட்ரேடு ஆகியவைகளுக்குத் தருவதற்கும், வீட்டுவசதிகளுக்கும், மற்றவைகளுக்கும் பயன்படுத்துவோம் என்று கூட நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

இந்த ஆண்டுகூட—நூறு கோடி ரூபாய் சென்ற ஆண்டைவிட மின் உற்பத்திக்காக -- 326 கோடியை நாம் ஒதுக்கியிருக்கிறோம். தூத்துக்குடியில் புதிய தொழில் மையம் வருகிறது என்ற அளவிற்கு இந்த ஆண்டு கொண்டு வருவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம்.

ஏற்கனவே பல்வேறு திட்டங்கள், 108 கோடி ரூபாய்த் திட்டச் செலவில் லைனியர் ஆல்கையல் பென்ஜின் தயாரிக்கும் திட்டம் என்று சொன்னால், அதிலே 300 பேருக்குத்தானே வேலை கிடைக்கிறது என்றார்கள். இது அரசாங்கமே செலவழிக்கிற பணம் அல்ல, இது கூட்டுத் திட்டம். ஆனால், மூலப்பொருட்கள் எதையும் உருவாக்குவதாக இருந்தாலும் அதிலே எடுத்துக்கொள்ளப்படுகின்ற ஆட்கள் குறைவாகத்தான் இருப்பார்கள். இப்பொழுது அணு மின் நிலையம் என்றால், 600 கோடி, 700 கோடி என்று செலவழித்தாலும் அதிலே வேலை செய்கின்ற ஆட்களின் எண்ணிக்கையை பார்த்தோமேயானால் குறைவாகத்தான் இருப்பார்கள். ஆனால், ஏராளமான தொழில்களை வளர்க்கக்கூடிய மூலப்பொருட்களை உருவாக்கக்கூடிய ஒரு பெரும் தொழிற்சாலையிலே முதலீடு அதிகமாகவும், அதிலே வேலை செய்யக்கூடியவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் தான் இருப்பார்கள். ஆனால் இதனுடைய ப்ராடக்ட் வெளியே வந்ததற்குப் பிறகு, இதைப் பயன்படுத்தித் துவங்குகின்ற தொழிற்சாலைகள், சிறு சிறு தொழிற்சாலைகள் பல்லாயிரக் கணக்கிலே வரக்கூடும். அந்தப் பல்லாயிரக் கணக்கிலே வரக்கூடிய தொழிற்சாலைகளிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கின்ற வாய்ப்பு ஏற்படக்கூடும்.

இத்தகைய சூழ்நிலைகளின் அடிப்படையிலே பெரும் தொழில்கள் என்று நீங்கள் எதை எடுத்துக்கொண்டாலும் கூட, இப்பொழுது எழுநூற்றுச் சில்லரை கோடி, ஆயிரத்துச் சில்லரை கோடி போட்டிருக்கின்ற பிலாய் சம்பெனி, துர்காபூர் கம்பெனியையெல்லாம் பார்த்தீர்களேயானாலும் அதிலே வேலை செய்யக்கூடியவர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டு, அதற்குச் செலவழித்த பணத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சாதாரணமாகக் குடிசைத் தொழில்களிலே வேலை செய்கின்றவர்களின் எண்ணிக்கையையும் வைப்போமேயானால் இது அதிகமாக இருக்கும். இங்கே கூட இருக்கின்ற மின்சார விசிறிகளை எல்லாம் எடுத்துவிட்டு ஆளுக்கொரு விசிறி மட்டையைக் கொடுத்து ஒவ்வொருவருக்கும் நின்று ஒவ்வொருவர் வீசிக்கொண்டிருக்கவேண்டும் என்று விட்டால் ரொம்ப அதிகமான அளவுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கத்தான் செய்யும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் மூலப்பொருள் உற்பத்தி ஆகின்ற எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் ஆட்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். சிறு

தொழில்கள் விரிவடையும்போது அதனுடைய எண்ணிக்கை அதிகமாகும். அந்த அடிப்படையில்தான் பல்வேறு பணிகளை ஆற்றிக்கொண்டு வருகிறோம் என்பதையும் இந்த வாய்ப்பிலே குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நமக்குக் கனிவளங்கள் குறைவு. பீகார், ஒரிஸ்ஸா, ராஜஸ்தான் மத்திய பிரதேசம் உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்களில் இருக்கின்ற அளவுக்கு கனிவளங்கள் நம்முடைய நாட்டிலே இல்லை. சற்றுக்குறைவுதான். நம்முடைய நாட்டிலே லிக்னைட் இருக்கிறது. பழுப்பு நிலக்கரி இருக்கிறது. மங்கனீசு இருக்கிறது. மாங்னஸைட் இருக்கிறது: யுரேனியம் குளோரியம் கொஞ்சம் தூத்துக்குடி கடற்கரைப்பகுதியில் மணவாளக்குறிச்சி பக்கத்தில் இருக்கிறது. இவ்வாறு ஓரளவுக்கு இருக்கின்றதே தவிர பெரும் தொழில் வளங்கள் என்று சொல்கிற அளவுக்கு பெருமளவில் கனிவளங்கள் நம்முடைய நாட்டிலே இல்லை. இருந்தாலும் கூட அந்த நிலமைகளை எல்லாம் குறிப்பிட்டுப் பார்க்கின்றபோது அகில இந்திய தொழில் வளர்ச்சியினை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் வளர்ச்சியின் சதவீதம் 1977—லே 6.8 சதவீதம் அகில இந்தியாவில் இருந்தபோது நம்முடைய தமிழகத்தின் வளர்ச்சி சதவீதம் 14.72 ஆக இருந்திருக்கிறது. 1979—ல் 1.2 ஆக இந்தியாவின் தொழில் வளர்ச்சி இருந்தபோது தமிழகத்தின் வளர்ச்சி 5.7 சதவீதமாக இருந்தது. அப்படி உயர்ந்துதான் இருந்திருக்கின்றது. 1980—லே .7 சதவீதம் என்ற அளவுக்குத்தான் அகில இந்தியாவின் சதவீதம் வளர்ச்சி இருந்தபோது தமிழகத்தில் மட்டும் 5.7 சதவீதம் வளர்ச்சி இருந்தது. 1981—லே அகில இந்திய வளர்ச்சி 4.2 சதவீதம் என்றிருந்தபோது தமிழகத்தில் 5.8 சதவீதம் இருந்தது.

இப்படி அகில இந்திய சதவீதத்தை விட நாம் ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்துதான் வந்திருக்கிறோமே தவிர பின்வாங்கிவிட்டோம் என்று கருதுவதற்கான நிலமைகள் இல்லை. பெருந்தொழில், நடுத்தரத் தொழில்கள் என்பதைப் பொறுத்த வரையில் 1977—ல் 2570 என்ற இடத்தில் இருந்தது. 7 ஆண்டுக் காலத்தில் அந்த லார்ஜ் ஸ்கேல், மீடியம் ஸ்கேல் என்று சொல்லப் படுகின்றவைகளைப் பொறுத்தவரையில் 11920 என்ற அளவுக்கு வளர்ந்து கொண்டுதான் வந்திருக்கின்றது. எந்த ஒரு மாநிலத்திலும் அத்தனை தொழில்களிலும் அரசே மூலதனம் இடுவதில்லை. பம்பாய் வளர்ந்திருக்கின்றது என்றால் டாட்டா, பிர்லா அங்கே இருக்கிறார்கள். அண்மையில் கணக்கு வந்தது டாட்டாவுக்கு சொத்து மட்டும் ஆயிரத்து இருநூற்றுச் சில்லரைக்கோடி. பிர்லாவும் கிட்டத்தட்ட அந்த ஆயிரத்து இருநூற்றுச் சில்லரைக்கோடியை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிற நிலைதான் இருக்கின்றது. அவர்கள் தொழிற்சாலை முழுவதையும் அந்தப்பகுதியிலே வைக்கிறார்கள். தனியார்களுடைய முதலீடு, வங்கிகள் தருகின்ற முதலீடு' கூட்டுறவுத் துறை, கூட்டுத்துறை எல்லாம் சேர்ந்துதான் ஒவ்வொரு





மாநிலத்தினுடைய நிலைமைகள் வருகின்றது. அப்படி பார்க்கின்றபோது 11920 பெருந்தொழிற்சாலைகள் நமக்கு வந்திருக்கின்றன. என்று சொன்னால் நாம் தொழலில் பின் தங்கி விட்டோம் என்ற பொருள் இல்லை. சிறு தொழில்களை செய்ய ஊக்குவிப்பதில் இந்த அரசு, புரட்சித் தலைவரின் தலைமையின் கீழ் வந்ததற்குப்பிறகு எந்த வகையிலும் சோடைபோகவில்லை என்பதை இந்த மன்றமும் உணர வேண்டும். இந்த மன்றத்திற்கு நான் அறிவிப்பதன் மூலமாக நாட்டுக்கு நான் உணர்த்த விரும்புகிறேன்.

31—3—1978 நிலவரப்படி அதாவது 1978—ஆம் ஆண்டு மார்ச் 31—ஆம் தேதி நிலவரப்படி சிறு தொழில்கள் 18,789 என்ற இடத்தில் இருந்த நாம் இந்த ஆண்டு பிப்ரவரித் திங்கள் நிலவரப்படி அதாவது 28—2—1985 நிலவரப்படி 58,131 என்ற இடத்திற்கு நாம் வளர்ந்திருக்கிறோம். இப்படி பதிவு செய்யப்பட்ட நிலையில் உள்ள சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் 18 ஆயிரத்துத் சில்லரை என்று நிலையிலிருந்து 58,131 என்ற அளவுக்கு வந்திருக்கிறோம் என்றால் அடுத்த ஆண்டு இன்னும் இதை அதிகப்படுத்துவதற்கான ஊக்கமும், ஆக்கமும் தருகிற அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிகளின் விளைவால் ஏற்படும் வங்கிகள் கடன் என்ற தன்மையையும் வைத்து சுய வேலை வாய்ப்புத் திட்டங்களையும் பயன் படுத்தி எல்லா வங்கிகளையும் பயன்படுத்தி அதன்மூலமாக மேலும் ஊக்கப்படுத்துகிற நிலையில் நாம் வளர்ந்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் கூட 1977—78—ல் 7 கோடியே 69 இலட்சமாக இருந்தது. 1981—84—ல் 134.62 கோடிக்குக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொன்னால் தமிழகம் எந்த அளவுக்கு ஊக்கம் தந்து வளர்த்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறியலாம். மற்றொன்றையும் நான் கூறுகிறேன். இங்கே பலபேர் சொல்கிறார்கள். நாம் பதினான்காவது இடத்துக்குப் போய்விட்டோம், 19-வது இடத்திற்கு போய்விட்டோம், 16-வது இடத்திற்குப் போய்விட்டோம் என்றெல்லாம் எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு தன்மையில் நாம் 19-வது இடத்திற்குப் போய்இருக்கிறோம். அதாவது அல்ஃபபெட்டிக் ஆர்டர் என்ற அடிப்படையில் நாம் 19-வது இடத்தில் இருக்கிறோம். அதற்குப்பிறகு திரிபுரா, உத்திரபிரதேசம், வெஸ்ட் பெங்கால் எல்லாம் வருகிறது. எனவே இந்த ஒன்றில்தான் நாம் 19-வது இடத்திலே இருக்கிறோமே தவிர மற்ற வகைகளைப் பார்த்தால்......

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கருத்துக்களை மட்டும் எதற்காக நான் சொல்ல விரும்புகிறேன் என்றால், நமக்கு இயற்கை வளங்கள் இல்லாத நிலையில், நமக்குப் பல்வேறு இடர்ப்பாடுகள் இருந்தாலும், மனித சக்தியை Man power அறிவுத் திறனை, ஆற்றல் திறனை (intelligence and talent) பயன் படுத்தி நாம் ஈடுபடுகிற அளவுக்குத் தமிழகம் வளர்ந்து கொண்டு வருகிறது என்பதற்காகத்தான் இவ்வளவும் நான் சொல்கிறேன். அகில இந்தியாவிலும் டெக்னிஷியன்ஸ் உருவாக்கித் தருவதிலும் நாம் தான் முன்னணியிலே இருக்கிறோம் என்பதையும் நம் முடைய மாநிலத்திலேயிருந்து உருவாகிச் செல்கின்ற டெக்னிஷியன்ஸ், தொழில்நுட்ப வினைஞர்கள், இன்றைக்கு போபாலிலும் சரி, ரூர்க்கேலாவிலும் சரி, துர்காபூரிலும் சரி, எந்த இடத்திலே நீங்கள் போய் பார்த்தாலும்கூட, அங்கே யிருக்கிற தொழில்நுட்ப வினைஞர்கள், திறமையாளர்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்திலேயிருந்து சென்றவர்களாகத்தானிருப் பார்கள். நம்மிடத்திலே அறிவுத்திறன், ஆற்றல் இருக்கிறது. நமக்கு முதலீடு செய்கிற திறன் மட்டும் வளர்ந்தால், அதற்கு உதவி மத்திய அரசு செய்யுமேயானால் மற்ற வகைகளிலும் கிடைக்குமேயானால், இதைவிட அதிகமாகக் கூடும் என்பதற் காகத்தான் சொல்கிறேன்.

அமைப்பு ரீதியில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையிலே இந்தியாவில் இருப்பதிலே நாம் மூன்றாவது இடத்திலே இருக்கிறோம். முதல் இடத்திலே மகாராஷ்டிரம். அங்கே 9,88,000 பேர்கள்—ஆர்கனைஸ்ட் லேபர். மேற்கு வங்காளம் இரண்டாவது இடத்திலே வருகிறது, 7,56,000 பேர்கள், தமிழ்நாடு மூன்றாவது இடத்திலே வருகிறது, 6,39,000 பேர்கள், மற்ற ஊர்கள் எல்லாம் இதற்குப் பின்னால்தான் வருகின்றனவே தவிர, நாம் அமைப்பு ரீதியிலே பணியாற்றுகிற தொழிலாளர் களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தவரை மூன்றாவது இடத் திலே இருக்கின்ற நிலைமையைக் காண்கிறோம்.

அது மட்டுமல்லாமல், மாநில வருமானம் (ஸ்டேட் இன்கம்) என்று எடுத்துக் கொள்வோமானால், 1977–78–ல் ரூ. 4,710 கோடி இதிலே நான் சொல்கிற அவ்வளவு கணக்கும் ரிசர்வ் வங்கி கொடுத்திருக்கிற லிஸ்ட்படி வந்திருக்கிறது. ரிசர்வ் வங்கி தந்த கணக்குப்படி மாநிலத்தினுடைய மொத்த வருமானம் 1977–78–ல் ரூ. 4,710 கோடி. 1983–84–ல் ரூ. 6802 கோடி, 1984–85-ல் கணக்கு இன்னும் வரவில்லை. 1983–84–ல் ரூ. 6,802 கோடி என்பது வளர்ச்சியைக் காட்டுகிற அறிகுறியா, வீழ்ச்சியைக் காட்டுகிற அறிகுறியா ?



தனி நபர் வருமானம், பெர் காப்பிட்டா இன்கம், 1977–78-ல் ரூ. 1,017 ஆக இருந்தது தமிழகத்தில். ஒவ்வொருவருக்கும் தனி நபர் வருமானம் ரூ. 1,017. 1983–84ல் ரூ. 1,376 தனி நபர் வருமானம்.

தொழில் உற்பத்திக் குறியீட்டுப் புள்ளி,

Indez on Industrial Production

என்ற கணக்கை எடுத்துப் பார்த்தால், 1977–78–ல் 143.1 ஆக இருந்த தமிழ்நாடு, 1983–84–ல் 239.9 ஆக உயர்ந்திருக்கிறதே தவிர குறையவில்லை. மின்சார உற்பத்தியை எடுத்துக்கொண் டால், 1977–78–ல் 493 கோடி நாம் உற்பத்தியாக்கினோம். 1983–84ல் 693 கோடி யூனிட் உற்பத்திக்குப் பயன்படுகிற அளவுக்கு, தமிழகம் 493 கோடியிலிருந்து 200 கோடி யூனிட் உயர்ந்திருக்கிறது என்றால், 7 ஆண்டுக்காலத்திலே அதிகமாக்கித் தருகின்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறோமே தவிர வீழ்ந்துவிட வில்லை.

எல்லா துறைகளிலும் மொத்த தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் ஆன்னார்கனைஸ்ட் லேபர் என்று வருகிறபொழுது 1977–78–ல் 1 கோடியே 76 இலட்சம் பேர்கள். இன்றைய நிலை யில் 2 கோடியே 9 இலட்சம் பேர்கள் இந்தத் துறையிலே வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் வங்கிகளுடைய கிளைகளை எடுத்துக் கொண் டாலும் கடன் கொடுத்து, ஊக்குவித்து, குறைந்த அளவுக்கு, வட்டி கொடுத்து, ஊக்குவித்து வருகின்ற அளவுக்குப் பல்வேறு துறைகளிலே செய்கின்ற அளவுக்கு, 1977–78–ல் 2,382 வங்கிகள் கிளைகள் இருந்த இடத்தில் இப்பொழுது 3,624 வங்கிக் கிளைகள் சிற்றூர், பேரூர்கள்தோறும் தோன்றியிருக்கின்றன என்றால் அந்த அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று பொருள்.

அது மட்டுமல்லாமல் மோட்டார் வாகனங்களை எடுத்துக் கொண்டாலும், போக்குவரத்து, டிரான்ஸ்போர்ட்டேஷன், சரக்குகள் அனுப்புவது, மற்றவைகளை அனுப்புவது என்ற கணக்கை எடுத்துக்கொண்டாலும் 31–3-1978 கணக்குப்படி 2,21,195 மோட்டார் வாகனங்கள் இருந்த இடத்தில் 31–3–1983ல் 4,27,030 வாகனங்களாக வளர்ந்திருக்கின்றன என்றால் எந்த அளவுக்குச் சரக்குகள் நகர்கின்றன, என்பது தெரியும். சரக்குகள் நகர்கின்றன என்றால் தொழில் உற்பத்திப் பெருகுகிறது என்று பொருள்.

கிட்டத்தட்ட ரூ. 200 கோடிக்கு மேலாக இருந்த விற்பனை வரி இப்பொழுது கிட்டத்தட்ட ரூ. 900 கோடியை எட்டுகிறது என்று சொன்னால், விற்பனை வரியினுடைய அளவைக்கூட நாம் ஆண்டுக்காண்டு வளர்த்தவில்லை. கொஞ்சம்தான் அதிகரித் தோம். இருந்தாலும் அவ்வளவு தொழில்கள் உற்பத்தியினால்,

வியாபாரம் நடப்பதனால். வரி செலுத்துவதனால்—அவர்கள் கொடுத்த கணக்கை மட்டும்தான் நான் சொல்கிறேனே தவிர, நாம் வாங்கின கணக்கை மட்டும்தான் நான் சொல்கிறேனே தவிர; வர வேண்டிய கணக்கையெல்லாம் கூட நான் சொல்லவில்லை அந்தக் கணக்கின் அடிப்படையில் வைத்து பார்த்தால் மிகச் சிறப்பாக நாம் அறியலாம். இப்படி கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் கூட நாம் வளர்ச்சியுற்றிருக்கிறோம். 1977–78ல் 15 கோடி உற்பத்தி செய்து, 17 கோடி விற்பனை செய்த இடத்தில், 1984–85ல் 90 கோடி உற்பத்தி செய்து 96 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்கு விற்பனை செய்கிற அளவிற்கு அந்தத் துறையில் நாம் வளர்ந்திருக்கிறோம். மறுபடியும் மத்திய அரசின் தன்மைக்கு வருவதற்கு காரணம், தொழில் சாலைகளை ஏற்படுத்த வேண்டும்; நாம் முதலீடு செய்யவில்லை, அதிகம் ஒதுக்கினால் என்ன என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் 1977–78-ல் பீகாரில் மட்டும் மத்திய அரசு இன்வெஸ்ட்மெண்ட் செய்தது 2,825 கோடி. மத்திய பிரதேசத்தில் 1,793 கோடி. மேற்கு வங்கத்தில் 1,058 கோடி. மகாராஷ்டிரத்தில் 909 கோடி. ஒரிசாவில் 654 கோடி. குஜ்ராத்தில் 627 கோடி. தமிழ் நாட்டிலே ஏழாவது இடத்தில் 563 கோடியில் நாம் நிற்கிறபோது நம்மை ஒத்த மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற பீகாரில் 2,815 கோடி ஒதுக்குகிற போது தான் இங்கே கொஞ்சம் அதிகமாக ஒதுக்கினால் என்ன? அதிலே நியாயம் வேண்டுமென்று கேட்கிறோம்.

இப்படி 1982–83-ல் நாம் ஒன்பதாவது இடத்திற்கே போய் விட்டோம். இப்போது என்னவென்றால் பீகாரில் 4,692 கோடி இன்வெஸ்ட்மெண்ட செய்திருக்கிறார்கள். அதிலே பாதியாவது நமக்கு இங்கே கொடுத்தால் அதிலே எவ்வளவு தொழிற்சாலைகளை வைக்கலாம் ? எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கலாம் ? வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதையும் பார்க்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். கேரளத்திலும், தமிழகத்திலும், மகாராஷ்டிரத்திலும் அதிகமாகத் தான் இருக்கும். மேற்கு வங்கத்திலும் அதிகமாகத் தான் இருக்கும். காரணம் என்னவென்றால் இங்கேயெல்லாம் படிக்கிறவர்கள் அதிகம், எஜூகேஷன் அதிகம். இங்கேயெல்லாம் கிராஜூவேட்ஸ் அதிகம். எஸ். எஸ். எல். சி. தாண்டுகிறவர்கள் அதிகம். ஆசவே வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருப்பவர்களின் பட்டியல் கணக்கு அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தப் போக்கு படிக்கிறவர்கள் பகுதியில் தான் அதிகமாக காணக்கூடும். எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேன்சில் பதிவு செய்கிற போது கேரளா அதிகமாக வருகிறது. தமிழ் நாட்டில் அதிகமாக வருகிறது. மேற்கு வங்காளத்தில் அதிகமாக வருகிறது என்றால் அதற்செல்லாம் காரணம் படித்தவர்களுடைய எண்ணிக்கை ஆண்டிற்காண்டு வளர்வதுதான். அதனால்தான் அந்த நிலை ஏற்படுகிறது.





4,692 கோடி ரூபாய் பீகாருக்கு ஒதுக்குகிற நிலையில் 1982-83-ம் ஆண்டின் கணக்குப்படி பார்த்தால் நம்முடைய மாநிலத்தில் 1,332 கோடி தான். இப்போது நெய்வேலியில் ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். அது வந்தால் நல்லதுதான். ஒரு திட்டம் நாலாயிரத்துச் சில்லறை கோடி ரூபாய்க்கு போட்டிருப்பதாக நாம் அண்மையில் பத்திரிகையில் பார்த்தோம். இங்கேயிருந்து போட்டு அனுப்பியிருக்கிறார்கள் என்றும், இந்த நாலாயிரத்துச் சில்லறை கோடி ரூபாய்த் திட்டத்தை ஏற்று இங்கே கொண்டு வந்தால் மூலத்தொழில்களைச் செய்யவும், துணைத் தொழில்களைச் செய்யவும், நெய்வேலியிலிருந்து கடலூர் வரையிலும், நெய்வேலியிலிருந்து விருத்தாசலம் வரையிலும் கூட ஏராளமான தொழில்களை வைக்க வசதி ஏற்படும். நெய்வேலி புராஜெக்ட் அனுப்பியிருக்கிற திட்டம் நமக்கு வருமேயானால் அதிக நன்மை ஏற்படும் என்பதையும் இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே தொழிற்சாலையில் மூலதனம் செய்வதிலே கூட நாம் ஓரளவிற்கு பற்றாக்குறை மாநிலமாக இருந்தாலும் ஆறாவது இடத்திலே இருக்கிறோம். கொடுக்கபபட்ட மொத்த சம்பளம், வேஜஸ் கணக்கை எடுத்தாலும் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. நேரமில்லாத காரணத்தால் நான் புள்ளி விவரத்திற்கு போக விரும்பவில்லை. மகாராஷ்டிரம் முதல் இடம். மேற்கு வங்கம் இரண்டாவது இடம். தமிழ் நாடு மூன்றாவது இடம். ஆகவே எமாலுமெண்ட்ஸ் கணக்கை எடுத்து பார்த்தாலும் மகாராஷ்டிரா முதல் இடம், மேற்கு வங்கம் இரண்டாவது இடம், தமிழ் நாடு மூன்றாவது இடம். வெளிப்படுத்திய உற்பத்தியின் மதிப்பளவு, வேல்யு ஆப் அவுட்புட்ஸ் கணக்கை எடுத்துப்பார்த்தால் மகாராஷ்டிரா முதல் இடம், குஜராத் இரண்டாவது இடம், தமிழ் நாடு மூன்றாவது இடம்.

மூலப்பொருள்களுக்கும் உற்பத்திப் பொருள்களுக்கும் இடையில் ஏற்பட்ட கூடுதல் மதிப்பு—வேல்யூ ஆர்டர்—கணக்கை எடுத்துப் பார்த்தால் மகாராஷ்டிரா முதல் இடம், மேற்கு வங்காளம் இரண்டாவது இடம், தமிழ் நாடு மூன்றாவது இடம், குஜராத் நான்காவது இடம், உத்திரபிரதேசம் ஐந்தாவது இடம். கூடுதல் மதிப்பளவிலே பேர்கேபிட்டா வேல்யூ என்று எடுத்துக் கொண்டால் மகாராஷ்டிரா முதல் இடம், குஜராத் இரண்டாவது இடம், ஹரியானா மூன்றாவது இடம், தமிழ் நாடு நான்காவது இடம், மேற்கு வங்காளம் ஐந்தாவது இடம். ஆகவே மொத்த உற்பத்தியின் மதிப்பை எடுத்துக்கொண்டாலும், 'இண்டஸ்ட்ரியல் புரடக்ஷன்' சணக்கை எடுத்துக்கொண்டாலும் மகாராஷ்டிரா முதல் இடம், உத்தர பிரதேசம் இரண்டாவது இடம், தமிழ் நாடு மூன்றாவது இடம். மேற்கு வங்காளம் நான்காவது இடம், குஜராத் ஐந்தாவது இடம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 8

வங்கிக் கடன் அளிக்கப்பட்ட பழுதுபட்ட சிக்மில்ஸ்ஸை எடுத்துக்கொண்டாலும் அதிகமான அளவு சிக்மில்ஸ் இருப்பது மேற்கு வங்காளம்தான். அங்கே 108 இண்டஸ்ட்ரிஸ் இருக்கின்றன. இரண்டாவது மகாராஷ்டிரம் 92; உத்தரபிரதேசம் 54, மூன்றாவது இடம்; குஜராத் 42, நான்காவது இடம். தமிழ்நாடு 40, நம் மாநிலத்தில் 40 சிக்மில்கள் இருக்கின்றன. இன்றைக்கு நிலுவையில் உள்ள கொடுக்கப்பட்ட கடன், அவற்றை பிழைக்க வைக்க கொடுத்து திரும்ப வரவேண்டியது தமிழகத்தைப் பொறுத்தவரையில் 228 கோடி, மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில் 424 கோடி, மகாராஷ்டிரம் 405 கோடி, உத்திரப்பிரதேசத்தில் 227 கோடி, குஜராத்தில் 152 கோடி என்ற அளவுக்கு இருக்கிறது. அதைப்போன்று வழங்கப்பட்ட தொழில் உரிமம்பெற்றதில் மகாராஷ்டிரம் 334லைசென்ஸ் பெற்றிருக்கிறது. அடுத்து உத்திரப்பிரதேசம் 218, குஜராத் 187, நாம் 4-வது இடத்தில் இருக்கிறோம் ; 175 லைசென்ஸ் பெற்றிருக்கிறோம். இப்படி பல்வேறு நிலைமைகளைத் தொடர்ந்து அடுக்கிக்கொண்டே போக முடியும்.

(பிற்பகல் 1-40)

தொழில் துறையில் 'இன்சென்டிவ்' வழங்குவது பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு 'நோ இன்டஸ்ட்ரி டிஸ்டிரிக்ட்' அதாவது தொழிற்சாலையே இல்லாத மாவட்டமாக இருந்தால், அந்த மாவட்டத்தில் தொழில் தொடங்கினால், 25 சதவீதம் சலுகை தரும். அது தவிர, குறிப்பிட்ட வேறுசில இடங்களுக்கு 15 சதவீதம் தரும். 25 சதவீதம் சலுகை என்பது 'ஏ' பிரிவு, 15 சதவீதம் சலுகை என்பது 'பி' பிரிவு, அவை தவிர 'சி' பிரிவு இடங்களுக்கு 10 சதவீதம் உதவி தரும். நம்முடைய மாநிலத்தில் 'ஏ' பிரிவே இல்லை, மத்திய அரசு 'ஏ' பிரிவு இருப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை. நோ இன்டஸ்ட்ரி டிஸ்ட்ரிக்ட் என்று மொத்தம் 87 மாவட்டங்களை எடுத்துக்கொண்டார்கள். தமிழ்நாட்டில் எந்த ஒரு மாவட்டமும் நோ இன்டஸ்ட்ரி டிஸ்டிரிக்டாக இல்லை. எல்லா மாவட்டங்களிலும் ஏதாவது ஒரு தொழிற்சாலை இருக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டில் 'ஏ' பிரிவு இல்லை. ஆக அவர்கள் தேர்வு செய்யப்பட்ட 87 மாவட்டங்களும் பிற மாநிலங்களில் உள்ளவை. நம்முடைய மாநிலத்தில் இருப்பது 'பி' பிரிவு, 'சி' பிரிவு தான். இந்தப் பிரிவுகளுக்கு மட்டும் தொழிற்சாலைகளை உருவாக்குவதில் இன்சென்டிவ் கிடைக்கிறது. இந்த இன்சென்டிவைப் பெறுவதில், அகில இந்தியாவில் முக்கியமாக 8 மாநிலங்கள் இடம் பெறுகின்றன. அவற்றில் முதலிடம் வகிப்பது தமிழ்நாடுதான் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். 13,7 சதவீதம் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. குஜராத் 9,8 சதவீதம்; ஆந்திரா 9.4 சதவீதம்; மகாராஷ்டிரா 7.6 சதவீதம்; கர்நாடகம் 7.5 சதவீதம்; பஞ்சாப் 4.4 சதவீதம்;



1985 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அரியானா 3.1 சதவீதம்; மேற்குவங்கம் 1.8 சதவீதம் என்ற அளவில் பெற்றிருக்கின்றன. தமிழ்நாடு 13.7 சதவீதம் பெற்று முன்னணியில் இருக்கிறது. மத்திய அரசு கொடுப்பதைப் பயன்படுத்தத் தவறிவிட்டோம் என்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு. சித்தன் உட்பட பலர் சொன்னார்கள். அவர்கள் கொடுப்பதைப் பயன்படுத்துவதில் நாம் தவறவில்லை, எதை எதை எந்த அளவுக்குப் பயன்படுத்தியிருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் நான் இந்த புள்ளி விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

நம்முடைய மாநிலம் இன்னும் எது எதில் முன்னணியில் நிற்கிறது, முதலிடம் பெற்றிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். பம்புசெட் உற்பத்தியில் அகில இந்தியாவில் 46 சதவீதத்தை தமிழ்நாடு பெற்று, முதலிடம் வகிக்கிறது. மற்ற எல்லா மாநிலங்களும் சேர்ந்து 54 சதவீதம் பெற்றிருக்கின்றன. அதைப்போல டீசல் எஞ்சின் உற்பத்தியில் 35 சதவீதம் பெற்றிருக்கிறோம். தட்டச்சுப் பொறி (டைப் ரைட்டர்ஸ்) உற்பத்தியில் 42 சதவீதம் பெற்றிருக்கிறோம், சைக்கிள் உற்பத்தியில் 16.2 சதவீதம் நம்முடைய மாநிலம் பெற்றிருக்கிறது. ட்ராக்டர் உற்பத்தியில் 12.2 சதவீதம்; சிமின்ட் உற்பத்தியில் 15.8 சதவீதம் நம்முடைய மாநிலம் பெற்றிருக்கிறது. அதைப்போன்று சர்க்கரை உற்பத்தியில் 9 சதவீதம், தேயிலை உற்பத்தியில் 12.9 சதவீதம் பெற்றிருக்கிறோம். பருத்தி நூல் உற்பத்தியில் அகில இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களில் 25.4 சதவீதத்தைப் பெற்று மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் நாம் இருக்கிறோம். ஆக, எந்த அளவுக்கு நாம் அக்கரை காட்டுகிறோம் என்பதற்காக இந்த புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டுகிறேன். (குறுக்கீடு) வறுமைக்கோடு என்கிறபோது "Line of poverty; line of destitution; line of severe destitution" என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த லைன் ஆஃப் பாவர்ட்டி என்பதைத்தான் வறுமைக்கோடு, வறுமைக் கோடு என்று தவறாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் அதை ஏழ்மைக்கோடு என்று இப்போது மாற்றியிருக்கிறோம். லைன் ஆஃப் பாவர்ட்டியைப் பொறுத்த மட்டில் தமிழ்நாட்டில் 52 சதவீதம் இருக்கிறது. ஆல் இந்தியா ஆவரேஜ் 49. அதை விட நாம் கூடுதலாக இருக்கிறோம். இன்னும் நமக்குக் கீழே ஏழு மாநிலங்கள் இருக்கின்றன. நமக்கு மேலே சில மாநிலங்கள் இருக்கின்றன. நம்மைவிட மிகவும் மோசமாக ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே 7 மாநிலங்கள் இருக்கின்றன. மிக, மிகக் குறைந்த அளவு வருவது 14 சதவீதம். அது அரியானா. அரியானாவில் 14 சதவீதம் இருக்கிறது, நம்முடைய மாநிலத்தில் 52 சதவீதம் இருக்கிறது. ஆகையால் இந்த ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் கணக்கில் ஒரு குழப்பம் வேண்டாம்.

வறுமையைப் (டெஸ்டிடியூஷன்) பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் 8 சதவீதம் இருக்கிறது. சிவியர் டெஸ்டிடியூஷன் —கடுமையான வறுமைக் கோட்டிற்குக்—கீழே இருப்பவர்கள் 11 சதவீதம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, ஒரு விளக்கம். பாவர்ட்டி லைன் என்று சொல்லும்போது, ஒரு பொருளாதார நிபுணர் கட்டுரையை அண்மையில் நான் படித்தேன், கிராமப் புறங்களில் இருக்கிறார்கள் மாத வருமானம் 60 ரூபாய்க்குக் கீழும், சென்னை போன்ற நகரப் புறங்களில் இருக்கிறவர்கள் மாத வருமானம் 75 ரூபாய்க்குக் கீழும் இருப்பதுதான் பாவர்ட்டி லைன் என்று அந்தக் கட்டுரையில் சொல்லியிருக்கிறார். இங்கே நம்முடைய நாவலர் அவர்கள் மூன்று பிரிவுகளைச் சொல்கிறார்கள். அதைப்பற்றி விளக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் சொல்லியது ஏழ்மைக் கோட்டைப் பற்றி மட்டும் தான், அதற்கு 60, 69 ரூபாய் என்று ஒரு கணக்கை வைத்திருக்கிறார்கள். அந்த ஏழ்மைக் கோட்டுக்கு கீழ் இருக்கிற கணக்கிலே எல்லாம் கூட, ரிசர்வ் பேங்க் கணக்கு ஒன்று. பிளானிங் கமிஷன் கணக்கு ஒன்று, மற்ற எக்சானாமிஸ்ட்கள், பொருளாதார வல்லுநர்கள் கொடுக்கின்ற கணக்கு கொஞ்சம் கொஞ்சம் மாறுபடுகிறது. ஒவ்வொருவரும் ஒரு கணக்கை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் சொல்வது மாதிரி 60 ரூபாய், 69 ரூபாய் என்று ஏதோ ஒரு கணக்கை வைத்திருக்கிறார்கள். ஏழ்மைக் கோடு கணக்குதான் அது, வறுமைக்கோட்டில் கணக்கைத்தான் பர்சன்டேஜ்ஜைத்தான் நான் சொன்னேன., ஆனால் வறுமைக்கோடு, கடுமையான வறுமைக்கோடு என்ற கணக்கை புள்ளி விவரங்கள் வைத்துப் பார்த்தால்தான் அது தெரியும். ஆனால் நம்முடைய வேளாண்மைத் துறையில் நாம் வளர்ச்சியிலே தான் வந்திருக்கிறோம். 1976–77–லே இடையிலே வறட்சி வெள்ளம் ஏற்பட்ட போது கொஞ்சம் சரிவு ஏற்பட்டாலும், நன்றாக சூழ்நிலை இருக்கிற நிலையில் 1976–77–ல் 42.42 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகிறது. 1983–84–ல் 44.48 லட்சம் டன். இந்த ஆண்டு 1984–85–ல் 50.50 லட்சம் டன் உற்பத்தியாகிற அளவிற்கு வந்திருக்கிறது. அதைத்தான் உணவு அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டார்கள். கிட்டத்தட்ட 7 லட்சம் டன் கையிருப்பிலே வைத்திருக்கிற அளவிற்கு நிலைமையிருக்கிறது என்பதால்தான் எந்தத் தகராறும் ஏற்படவில்லை என்று நாம் சொல்லி இருக்கிறோம். வறட்சிக்கு என்று ஏன் ஒரு பக்கம் ஒதுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கேட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை வராமல் இருந்ததன் காரணமாகத்தான் (குறுக்கீடு), குடிநீரைப் பொறுத்தவரையிலும் வந்திருக்கிறதே தவிர, கடுமையான வறட்சி நிலை என்று வரவில்லை. குறைந்து கொண்டு வருகிறது. தட்டுப்பாடு ஏறபட்டு இருக்கிறதே தவிர, வறட்சி என்பது வேறு, தட்டுப்பாடு என்பது வேறு, அதற்கு ஒரு கட்டுப்பாடு செய்யவேண்டும் என்பது வேறு, ஆகவே இப்போது கூட சேலம் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் போன்ற பகுதிகளில் மழை பெய்து இருப்பதாக கணக்கு வருகிறது. வறட்சி





என்று வந்தாலும்—அதற்குத் தகுந்தாற்போல் நாம் சாதாரணமாக இல்லை—இந்த நிலை நீடித்து, மே–ஜூன் மாதங்களில் கடுமையாக நிலை ஏற்பட்டாலும், என்ன என்ன செய்யவேண்டும், அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கவேண்டும் என்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலேயும் கேட்டு இருக்கிறோம். இருக்கின்ற ஆழ்துளைக் கிணறுகளை எல்லாம் செம்மைப் படுத்த வேண்டியது, புதிய ஆழ்துளைக் கிணறுகளைப் போட்டால் தண்ணீர் வரும் என்றால், அதற்கு ஏற்பாடு செய்வது, அல்லது ஆழ்துளைக் கிணறுகளைப் போட்டாலும் கூட தண்ணீர் வராது என்றால், தண்ணீர் இருக்கிற இடத்திலிருந்து லாரிகள் மூலமாக கொண்டு வந்து மக்களுக்கு வினியோகிக்க ஒரு திட்டம் போட்டு, அதற்கு எல்லாம் எவ்வளவு செலவாகும் என்பதை எல்லாம் வைத்து, ஓரளவு பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். அதிலே எச்சரிக்கையாக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தத் தன்மைகள் ஏற்படவில்லை என்புதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காலம் அதிகமாகிவிட்டது, எடுத்துச்சொல்ல வேண்டிய கருத்துக்கள் ஏராளமாக இருந்தாலும். ஏராளமான வாய்ப்புகள் அவர்களுக்கு வருகின்றன. அப்போது சொல்லலாம் என்று கருதுகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் அப்போது எழுப்பியதற்கு எல்லாம் நான் விடை அளிக்கிறேன் என்று சொல்கிறேன். அதற்கு பல விடைகளை நான் எழுதி வைத்திருந்தாலும் கூட, காலம் இடம் தரவில்லை, ஆனால் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியவர்களை எல்லாம் விசாரித்து அறிந்து அவர்கள் மீது சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகளை விசாரித்து அறிந்து அதைப்பற்றி விசாரணை செய்வதற்காக ஒரு உட்குழு அமைச்சரவையிலே அமைக்கப்பட்டது. அது சரியாக வருமா, அது பொருந்துமா ? என்றெல்லாம் கூட மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்திலே அதுபற்றி முடிவு எடுத்தார்கள். பொதுவாழ்விலே ஈடுபட்டவர்களாகிய சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அமைச்சர்கள், பொது ஊழியர்களாக உள்ள அமைச்சர்கள், ஆகியோர்கள் மீது எவரேனும் புகார் கூற விரும்பினால், அவர்கள் அந்தப் புகாரை. தயக்கம் இன்றி, தைரியமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வகை செய்யவேண்டும், அதற்கு ஒரு அமைப்பு வேண்டும் என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்

படையில் தான் அமைச்சரவையினுடைய துணைக் குழு அமைக்கப்பட்டது. அதுவே விசாரித்து அறியும் என்றல்ல. அது விசாரித்து அறிந்ததற்குப் பிறகு முறைப்படி, அது லஞ்ச ஒழிப்பு துறை, காவல்துறை, புலன் ஆய்வுத் துறை அரசால் நியமிக்கப் படும் விசாரணை அமைப்பு ஆகியவைகளுக்கு அனுப்பி வைத்துத்தான் செய்யவேண்டும் என்று ஒரு முடிவு எடுத்தது. அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் கொண்டுவரப் பட்டதே தவிர, யாரையும் தனிப்பட்ட முறையிலே பழிவாங்கவேண்டும் என்பதில்லை. எல்லோருக்கும் சேர்த்துத் தான், அப்படிப்பட்ட ஒரு குறைபாடு இருக்கவேண்டாம் என்பதற்காகத்தான் அந்த உட்குழு அமைக்கப்பட்டது.

(பிற்பகல் 1–50)

அதற்கு ஒரு எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது. அது பற்றிய பிரச்னைகளை பலரும் கிளப்பினார்கள். எல்லோரும் கிளப்பி னார்கள். அப்படி ஒரு உட்குழு அமைக்கப்பட்டதே தவிர, அதற்குப் பிறகு அது எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபட வில்லை. ஆக அதற்கு எதிர்ப்பும் தெரிவித்து பலபேர் அதில் பிரச்னைகளையும், சிக்கல்களையும் ஏற்படுத்திவிட்டதன் காரண மாக, நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அதைக்கொண்டு வந்திருந்தாலும், இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்ட பிறகு ஏற் கெனவே இருக்கிற வாய்ப்புகளே போதும் என்ற கருத்து பல பேரிடம் நிலவுகிற காரணத்தாலும், இந்த உட்குழுவை கைவிட்டு விடுவது என்ற முடிவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். ஆகவே அந்த திட்டக் குழு இனிமேல் செயல்படாது. அதற்கான அறிவிப்பு முறையாக சட்டரீதியாக வெளிவரும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் கொண்டு வந்ததன் நோக்கம், நல்ல எண்ணத்துற்காகத்தான் கொண்டு வரப்பட்டதே தவிர, யாரை யும் தனிப்பட்ட முறையில் பாதிக்கவேண்டும் என்பதற்காக அல்ல. அதில் சிக்கல்களும், பிரச்னைகளும் கொண்டு வந்ததன் காரணமாக, இந்தச் சிக்கல்களும் வேண்டாம், பிரச்னைகளும் வேண்டாம், எதிர்ப்புக்கு இடம் கொடுக்கவேண்டாம் என்ற முறையில், அதைக் கைவிடுவது என்ற முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ளவிரும்புகிறேன். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : அடிக்கடி குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். விளக்கம் பெறுவதற்காகத்தான் கேட் கிறேன். நம்முடைய நாராயணசாமி அவர்கள் சட்ட அமைச்சராக இருந்தபோது ஏற்கெனவே பப்ளிக்மென் கிரிமினல் மிஸ் கான்டக்ட் ஆக்ட் கொண்டுவந்தபோது, வெங்கடாத்திரி கமிஷன், இந்தச் சட்டத்தின் அடிப்படையில் இருப்பதையெல்லாம் கலைத்துவிட்டு, கான்பிரஹன்சிவ் ஆக்ட் மே பி பிராட் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த கேபினேட்





சப்-கமிட்டியை நீங்கள் கலைத்து விட்டதற்காக மகிழ்ச்சி, ஆனாலும், அந்த புரோபோஸ்ட் ஆக்ட் என்ற முறையில், பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் தவறு செய்தால், அவர்கள் மந்திரியாகவே இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும். யாராக இருந்தாலும் அவர்கள் மீது புகார் கொடுக்கலாம். அப்படி கொடுக்கிற புகார்களை அந்தக் கமிஷன் விசாரிக்கலாம். தவறுகள் செய்திருந்தால் தண்டிக்கப்படுவார்கள். புகார் கொடுத்தவர் பொய் புகார் கொடுத்திருந்தால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று சட்டம் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அந்த சப்-கமிட்டியை கலைக் கிற அதே நேரத்தில் நீங்கள் கொடுத்த வாக்குறுதியின்படி இந்தச் சட்டம் மீண்டும் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இதை என்னுடைய கவனத் திற்கு இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஆராய்ந்து வேறு ஒரு வாய்ப்பு ஏற்படும்போது, அதனுடைய நிலைமையை நான் விளக்குவேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் பல்வேறு கருத்துக்கள் இருந் தாலும், மானியக்கோரிக்கைகள் வரும்போது அந்தந்த அமைச்சர்கள் அந்தந்த துறையைப் பற்றி, விளக்க மாக எடுத்துச் சொல்வதற்கு ஒவ்வொரு அமைச்சருக்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலேதான் அவர்கள் பல்வேறு பிரச்னைகளுக்கும் பதிலை எடுத்துச் சொல்வார்கள். கூடுமான வரையில் பொதுவாக இருக்கிற பிரச்னைகளைப் பற்றியெல்லாம் நான் சொல்லியிருக்கிறேன். அதிலும் குறிப்பாக கூட்டுறவுத் தன்மைகள் மற்றும் மற்றவைகளைப் பற்றி எடுத்து பேச வேண் டும் என்று நான் கருதினாலும், நேரம் இல்லை. ஒன்றை மட் டும் சொல்லிவிடுகிறேன். கூட்டுறவுத் துறையில் ஒரு காலத்தில் நம்முடைய மாநிலம் இரண்டாவது இடத்தில் இருந்தது. மிகச் சிறந்த இடத்தில் இருந்தது, மகாராஷ்டிரமும், தமிழகமும் மிக முன்னணியில் இருந்தன. அப்போது நாட்டிலே எவ்வளவோ வேலைகளை மிகச் சிறப்பாக செய்து வந்தோம். நில வல வங்கிகள் மூலமாகவும் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் எவ் வளவோ பணிகளை நாம் சிறப்பாக ஆற்றி வந்தோம். ஆனால் வேறுபல மாநிலங்கள் தற்போது அதற்கான முயற்சிகளை எடுத்து வெற்றியும் பெற்று, இப்போது மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

கூட்டுறவு கடன்களையும், நில வள வங்கிக் கடன்களையும் வசூலிப்பதில் இன்றைக்கு கேரளம் முன்னணியில் இருக்கிறது. மகாராஷ்டிரம் முன் அணிக்கு வந்திருக்கிறது. மேற்கு வங்காளத் திலும் நடவடிக்கைகள் எடுத்து நல்லதொரு நிலைமைக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் 98 சதவீதம் வரையில்— 1959ஆம் வருஷத்தில் 98 சதவீதம் அளவுக்கு வசூலில் திறமை பெற்றிருந்த தமிழகத்தின் கூட்டுறவுத்துறை இப்போது 26 சத வீதம் வசூல் செய்துக்கொண்டிருக்கிறது. இப்படி 75 சதவீதத்

திற்கு மேல் வசூல் ஆகாமல் இருக்கிற நிலமைகளை பார்க்கிற போது, அதனால் நம்முடைய மாநிலம் எவ்வளவு கேடுறும் என் பதையும், வாங்கிய கடனை திருப்பி அளிக்க வேண்டும் என்ற உணர்வை நாட்டு மக்களுக்கு, நாடெங்கிலும் பரப்புகிற ஒரு இயக்கத்தில் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், எங்களோடு சேர்ந்து பணியாற்றினால்தான், இந்த நாட்டிலே ஏழை எளியவர் களாக இருக்கிற விவசாயிகள் ஓரளவிற்கு வளர்ச்சி அடைவதற் கான வழிவகைகள் ஏற்படும், என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன். விரைவில் இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவேண்டிய பணங்கள் எல்லாம் வராவிட்டால்—இன்றைக்கு வர வேண்டிய பணங்களை ரிசர்வ் வங்கி தருகிறது. பொதுமக்கள் கொடுக்கிற டெப்பாசிட் பணம், கூட்டுறவு வங்கிகள் சரியாக இயங்கவில்லை என்று டெப்பாசிட் போடுவதை மக்கள் நிறுத்திவிடுவார்களே யானால் கூட்டுறவு இயக்கமே நின்றுவிடும்.

மத்திய ரிசர்வ் வங்கி நாம் எவ்வளவு கடன் தொகை திருப்பி வசூலித்தோமோ, அந்த வசூல் கணக்கின் அடிப்படையில்தான் தருகிறார்கள். அப்படி பார்க்கிறபோது ஆண்டுக்கு ஆண்டு அவர்கள் கொடுக்கிற தொகை குறைந்துக்கொண்டே வருகிறது. ஒரு காலத்திலே கிட்டத்தட்ட 123 கோடி அளவிற்கு கடன் கொடுத்த தமிழகம், இப்போது இந்த ஆண்டு 21 கோடிதான் கடன் கொடுக்க முடிகிறது. அவ்வளவுதான் ரிசர்வ் வங்கி அனு மதித்து இருக்கிறது. இதற்கும் கீழே போகுமானால், ஏழை களுக்குத்தான் கஷ்டம். இதில் விரிவாக பேச நேரம் இல்லை என்றாலும், இவைகளையெல்லாம் நீங்கள் உணர வேண்டும் என்பதற்காகத்தான் திரும்ப திரும்ப எடுத்துச்சொல்கிறேன்.

ரிசர்வ் வங்கி 7 சதவீதம் வட்டியில் கொடுத்தால், $\frac{1}{3}$ சதவீதத் திலே மாநில வங்கிகள், மாவட்ட மத்திய வங்கிக்கு தருகிறது. மத்திய வங்கி $8\frac{3}{4}$ சதவீதத்திலே கிரெடிட் சொசைட்டிக்கு தரு கிறது. கிரெடிட் சொசைட்டி $11\frac{1}{2}$ சதவீதத்திற்கு சிறு விவசாயி களுக்கும், $12\frac{1}{3}$ சதவீதத்திற்கு பெரிய விவசாயீகளுக்கும் தரு கிறது. விவசாயிகள் வாழ வேண்டும் என்பதற்காக நாம் இவ் வளவு கஷ்டப்பட்டு ரிசர்வ் வங்கியிடம் கடன் வாங்கி, நாமும் கையை விட்டுக் கொடுத்து வருகிறோம். மற்ற வெளி வங்கி களில் எல்லாம் 18 சதவீதம் 19 சதவீதம் தொழிற்சாலைகளுக் கும், மற்றவர்களுக்கும் தருகிறார்கள். விவசாயிகளுக்கு தரு வது $11\frac{1}{3}$ சதவீதத்தில்தான். ஆக கூட்டுறவு சங்கம் கடன் கொடுக்கிற வாய்ப்பை இழக்கச் செய்து விட்டால், சம்பளம் கொடுக்கிற நிலையே இல்லாமல் செய்துவிட்டால், அது வேலை செய்யும் நிலையையே இல்லால் செய்துவிட்டால், மக்களிடத் திலே ஒரு அவநம்பிக்கை ஏற்பட்டு, பிக்சட் டெப்பாசிட்டை போடுவதைக் கூட விட்டுவிட்டால் பிறகு எங்கே போக வேண்டு மென்றால், தேசிய வங்கிக்குத்தான் போகவேண்டும். தேசீய வங்கிக்கு போனால் விவசாயிகள் 14 சதவீதத்திற்கு தான் கடன் வாங்க வேண்டும். கடன் வாங்கினா லும் தள்ளுபடி கிடையாது. கொடுத்துத்தான் தீர வேண்டும். அல்லது தனி லேவாதேவிக்காரர்களிடம் தான் போக



வேண்டும். அப்படி போனால் 36 சதவீதம் வட்டிக் கொடுத்து கடன் வாங்க வேண்டும். இன்றைக்கு என்ன வேடிக்கை என்று கேட்டால், தஞ்சாவூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், கும்பகோணம் மத்திய வங்கி, புதுக்கோட்டை மத்திய வங்கி இரண்டிலும் 90 சதவீதம் வரைக்கும் வசூல் ஆகவில்லை. அங்கே வசதி உடையவர்கள்தான் பாக்கி வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, இயற்கை சீற்றத் தால் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. எப்படி நிலவள வங்கியிலே வட்டியை தள்ளுபடி செய்தார்களோ, அதைப்போல மீண்டும் அரசு பரிசீலனை செய்து இந்த வட்டியை தள்ளுபடி செய்வதற்கு கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கி இருக்கின்ற விவசாயிகளுக்கு மறு பரிசீலனை செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே பஞ்சம் வருவதும், வெள்ளம் வருவதும், வறட்சி வருவதும் உலகம் தோன்றிய சாலத்திலிருந்து இருக்கிறது. 12 ஆண்டுகாலம் பஞ்சம் என்று சொல்வார்கள். கார்காலத்து பஞ்சம் என்று சொல்வார்கள். நம்மைவிட கடுமையான பஞ்சம் மேற்கு வங்கா ளத்தில். நம்மைவிட கடுமையான பஞ்சம் பீகாரில், நம்மைவிட கடுமையான பஞ்சம் உத்திரப்பிரதேசத்தில் நம்மைவிட கடுமையான பஞ்சம் பிற மாநிலங்களில் அங்கெல்லாம் இருக்கும்போது தள்ளுபடி செய்வது எளிது. நான் முதலிலேயே சொன்னேன். ரிசர்வ் வங்கிப் பணம். மக்கள் கட்டுகின்ற டெபாசிட் பணம் யார் பணத்தை யார் தள்ளறது? அரசாங்கத்தின் பணத்தை எடுத்துக் கொடுத்து அவர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்து விட்டு நாம் தள்ளினோ மானால் நீங்கள் வளர்ச்சித் திட்டங்கள் வேண்டும், தொழிற் சாலை தாருங்கள் என்று கேட்கிறீர்கள். நான் எந்த இடத்தில் இருந்தது என்று சொன்னேன்? தமிழக வங்கி முதல் இடத்தில் இருந்தது, 95% 96% வறட்சி பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கொடுத் தது. வாங்கிய கடனை திருப்பித் தருவதில்லை என்று நிலை வரும்போது நிலவள வங்கியிடமிருந்து டிராக்டர் வாங்கி வட்டியையும், அசலையும் திருப்பிச் செலுத்தாமல் வாட கைக்கு விட்டு பணத்தை சம்பாதித்துக்கொண்டு இருக்கின்ற புள்ளிவிவரங்களை வைத்திருக்கிறேன். நேரம் இல்லை. நீங்கள் தாங்க மாட்டீர்கள் என்பதற்காக அவற்றையெல்லாம் சொல்லா மல் விடுகிறேன். நான் கேட்டுக்கொள்வது (குறுக்கீடு) வெள்ளம் வரும்போது வெள்ளம் என்கிறீர்கள். இந்த வருடம் சொல்லியிருக் கிறேன். ஏராளமாக விளைந்திருக்கிறது என்று. இப்பவும் முடியாது தான்என்றைக்கும் முடியாது. உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்களவும் மிஞ்சாது என்பது ஆயிரம் வருடத்து பழமொழி. எப்போது மிஞ்சும் என்று சொன்னோம்? ஆயிரம் வருடமாகவே மிஞ்சாது, இப்பவும் மிஞ்சாது. அந்த வங்கியெல்லாம் இருக்க ணுமா? வேண்டாமா? என்று முடிவுசெய்து எல்லாவற்றையும் மூடிவிடலாம் என்று முடிவுசெய்தால் அவரவர்கள் இஷ்டப்படி எங்கேயாவது கடன் வாங்கட்டும் எப்படியாவது பிழைத்துக் கொள்ளட்டும் என்று விடலாம். வாங்கின கடனை திருப்பி

அளிக்கவேண்டும் என்ற உணர்வு வேண்டும். எதற்காகச் சொல்கிறேன் என்றால் போலீசை வைத்து இன்றைக்கு வசூல் செய்கின்ற ஒரு சூழ்நிலை கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையை வைத்து வசூலிக்கலாம், எந்த நடவடிக்கையும் எடுத்து வசூலிக்கலாம் என்று மேற்கு வங்காளம் உத்திரவு இட்டிருக்கிறது. ஏனென்றால் இந்தப் பணத்தை எக்காரணம் கொண்டும் விட்டு விடக் கூடாது என்று. கேரளத்தில் எல்லா அரசியல் கட்சியும் உடன்பாட்டிற்கு வந்து, கம்யூனிஸ்ட் அரசு இருந்தபோது தொடர்ந்து இதை எக்காரணங்கொண்டும் விட்டுவிடக்கூடாதுஎன்று சொல்லி எல்லோரும் ஒத்துழைப்புத்தருவதன் காரணமாக கடுமையான நடவடிக்கை எடுக்கிறார்கள். நாங்கள் அந்த கடுமையான நடவடிக்கைக்கு போகவேண்டாம், போகவேண்டாம் விட்டுவிடுங்கள் என்று சொல்லி ஆளுங்கட்சி உறுப்பினர்களும், மற்ற உறுப்பினர்களும், வட்டியைத் தள்ளு, தண்ட வட்டியைத் தள்ளு என்று கேட்கிறார்கள், தள்ளிவிடுவது சுலபம். ஆனால் இன்னும் 10 ஆண்டுக்காலம் கழித்து எந்த நிலைக்கு போகும் என்று அச்சம் இருப்பதால் பல கூட்டுறவு வங்கியிலே, சம்பளமே போடமுடியாமல், வேய்ஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ் நாங்கள் தந்து கொண்டிருக்கிறோம். ரூ. 10 கோடி, 11 கோடி, 8 கோடி, 7 கோடி என்று அரசாங்கம் தந்துக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் செய்தால் மக்களுடைய வரிப் பணம் தான் போகிறது. இதையெல்லாம் சிந்திக்க வேண்டுமென்றுதானே தவிர, தனிப்பட்ட, ஏழை எளிய பாட்டாளிகள் வசதியற்றவர்கள் போன்றவர்களுக்கு சலுகைகள் காட்டுவதில் தவறு இல்லை. நான் மாண்புமிகு உறுப்பினர் சிவஞானத்திற்கு தனியாக கூப்பிட்டு வைத்து கணக்குத் தருகிறேன். தஞ்சை மாவட்டம் அவருக்கும் தெரியும் எனக்கும் தெரியும். கொடுக்கக்கூடியவர்கள் கொடுக்காமல் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு பட்டியல் தருகிறேன். அந்த வங்கிகளிடம் வாங்கித் தருகிறேன் என்று சொல்லி, இதற்குமேலும் பல பொதுப் பிரச்சினைகள் இருந்தாலும்கூட மானியக் கோரிக்கைகள் வரும் போது பலரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவிப்பார்கள் என்று சொல்லி, எது வேண்டுமானாலும் சொல்லுங்கள் அரசாங்கத்தினுடைய குறைகளைச் சொல்லுங்கள், குற்றங்களைச் சொல்லுங்கள், இந்த மாநிலம் வளர வேண்டும் மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும் என்பதற்கு உறுதுணையான நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்வார்களேயனால் எங்களுக்கும் பயன்படும் என்று கூறி இதிலே கலந்துகொண்டவர்கள் அத்தனை பேர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (19-4-85) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப் [illegible]

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

எதுவுமில்லை.

136431